


- ஏழாம் தூதனின் கட்டுரைகள்

# புதுச்சிருஷ்டியின் இலக்கு

*(புதுச்சிருஷ்டி அடைய வேண்டிய இலக்குத் தொடர்பாக சகோ. ரசல் அவர்களினால் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளின் தொகுப்பு மற்றும் மொழியாக்கம்)*

“கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.” (பிலிப்பியர் 3:14)



| வ. எண். | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | ரீப்பிரிண்ட்ஸ் கட்டுரைகள் | 4 |
| 2. | பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள் | 75 |
| 3. | பாஸ்டர் ரசல் அவர்களின் கட்டுரை | 87 |
| 4. | கவிதைகள் | 92 |

R2753

## இலக்கை நோக்கித் தொடருதல்

**பிலிப்பியர் 3:13, 14**

நாடப்படுவதற்கும், அடையப்படுவதற்குமான குறிப்பிட்ட இலக்கையோ அல்லது பரிசையோ குறித்துப் பெயர்ச்சபைகளில் உள்ளவர்கள் தெளிவாய் அறிந்திருக்கவில்லை. கற்பனை பண்ணப்பட்ட நித்தியத்திற்குரிய சித்திரவதையின் பயத்தினாலும், நடுக்கத்தினாலும், பயங்கரத்தினாலும் பெரும்பான்மையினர் தொட்டில் முதல் கல்லறை வரையிலும் பயந்து ஓடிக்கொண்டிருக்கின்றனர். மீதமான கர்த்தருடைய ஜனங்களோ, தெய்வீக வார்த்தையின் மூலமாக பரிசுத்த ஆவியின் வழியாக, தங்கள் புரிந்துகொள்ளுதலின் கண்கள் திறக்கப் பெற்றவர்களாக, இந்தச் சுவிசேஷயுகத்தில், தெரிந்தெடுக்கப்பட்ட சபைக்கு முன்னதாகத் தேவன் முன்வைத்துள்ள மாபெரும் பரிசைப் பற்றிய காட்சியைச் சற்றுக் காணமுடிந்தவர்களாய் இருக்கின்றனர். மாம்சீக கண்கள் கண்டிராததும், செவிகள் கேட்டிராததும், மனுஷனுடைய இருதயத்தில் தோன்றியிராததும், தேவனால் தம்முடைய ஆவியின் மூலம் சபைக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான இந்த மகிமையான காட்சியினால் சபை பேரார்வம் அடைவதில் ஆச்சரியம் அடைவதற்கு ஒன்றுமில்லை. இன்னுமாக இவர்கள் பரிசை அடைவதற்கான இலக்கைக் காட்டிலும், பரிசின்மேல் அதிகம் கவனம் காட்டினாலும் ஆச்சரியமடைவதற்கு ஒன்றுமில்லை.

இவர்கள் பேரார்வத்தினாலும், தெய்வீக அன்பு பற்றின மதிப்புணர்வினாலும் நிரம்பிக் காணப்படுவதினால், இவர்கள் நித்தியமான சித்திரவதைக் குறித்தப் பயத்தை இழந்துள்ளனர்; மேலும் இந்த உபதேசம், தேவனுடையதாய் இராமல், சாத்தானுடையதாய் இருக்கின்றது என்றும், பரிசுத்த ஆவியின் மூலம் வராமல், மனுஷனிடமிருந்து வருகின்றது என்றும், வேதவாக்கியங்களில் இடம்பெறும் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்ட போதனைகளாய் இராமல், இருண்ட யுகத்தின் போதனைகளாய் இருக்கின்றது என்றும் அறிந்துவிட்டனர். மேலும் தேவனுடைய குணலட்சணம் மற்றும் திட்டத்திற்கு எதிரான இந்தத் தூஷணத்திற்கு ஆதரவளிப்பது போன்று தோற்றமளிக்கும் சில வேதவாக்கியங்கள் உவமைகளாகவும், அடையாள வார்த்தைகளாகவும், மறைபொருட்களாகவும் இருந்தது என்றும், அவ்வேதவாக்கியங்களுக்கான இந்தத் தவறான வியாக்கியானங்களானது பொதுவான சில வேத மொழியாக்கங்களில் ஏறக்குறைய பூசிமெழுகப்பட்டுள்ளது என்றும் கூட இவர்கள் அறிந்துவிட்டனர்.

இந்தச் சபை வகுப்பார், "பரிசுக்காக ஓடுவதை" குறித்துச் சிந்திப்பதும், பேசுவதும் இயல்பே மற்றும் பரிசை நோக்கி ஓடாமல், இலக்கை நோக்கியே ஓட வேண்டும் என்றும், பரிசானது நாம் அடைவதற்கு அப்பாற்பட்டது என்றும், ஆகவேதான் அப்போஸ்தலன் "நான் இலக்கை நோக்கித் தொடருகிறேன்" என்று குறிப்பிடுகின்றார் என்றுமுள்ள உண்மைகளை அதிகம் கவனிக்கத் தவறிவிடுவதும் இயல்பே. தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கெனத் தேவன் வைத்துள்ள, குணலட்சணத்திற்கான இலக்கை அடைகின்றவர்கள், பரிசை அடைவார்கள்; குணலட்சணத்திற்கான இலக்கினை அடைய தவறுகின்றவர்கள், பரிசை அடையமாட்டார்கள். ஆகவே முதலாவதாக அடையப்பட வேண்டிய "இலக்கினை" மறந்து (அ) புறக்கணித்து (அ) அலட்சியம் பண்ணி, பரிசுக்காக ஓடுவது என்பது மிக அபாயமான தவறாகக் காணப்படும்.

"ஜெயம்கொள்பவர்களெனத்" தெய்வீக அங்கீகரிப்பை அடைவதற்கும், "நல்லது" என்ற கர்த்தருடைய சத்தத்தைக் கேட்பதற்கும் வேண்டி, நாம் குணலட்சணத்திற்கென்றுள்ள ஒரு குறிப்பிட்ட இலக்கை அல்லது தரநிலையை அடைவது அவசியம் என்ற கருத்தானது, அநேகருக்குப் பிரம்மிப்பாக

இருக்கும். அநேகர் கிறிஸ்தவனுடைய ஓட்டம் என்பது, வெளியரங்கமான பாவத்தைத் தவிர்ப்பது மாத்திரமே என்ற எண்ணம் கொண்டிருக்கின்றனர்; இன்னும் சிலர் மறைவான குற்றங்களையும்கூடத் தவிர்ப்பது என்பதே கிறிஸ்தவனின் ஓட்டம் என்ற எண்ணம் கொண்டுள்ளனர்; இன்னும் சிலர், இன்னும் சற்று அதிகப்படியாகச் சென்று, தற்கால ஜீவியத்தின் அநேக நன்மைகளைத் தியாகம் பண்ண வேண்டும் என்று எண்ணம் கொண்டுள்ளனர்; இன்னும் சிலர், இன்னும் சற்று அதிகப்படியாகச் சென்று, சீஷயத்துவத்திற்கான பரீட்சை என்பது கர்த்தருக்கு முழுமையாய்த் தங்களை ஒப்புக்கொடுப்பதும், நமது தலையாகிய கர்த்தருடைய சித்தத்திற்கென்று பூமிக்குரிய ஜீவனையும், அதன் நன்மைகள் யாவையும் முழுமையாய்ப் பலிசெலுத்துவதுமாகும் என்று அதிகமாகவே புரிந்துள்ளனர்; ஆயினும் அநேகமாக யாருமே - நம்முடைய பலிசெலுத்துதல்கள், அனுபவங்கள், சுயத்தை வெறுத்தல்கள் யாவும் இறுதியில், தேவன் தெரிந்துகொள்ளப்பட்ட சபைக்கு வைத்துள்ள குணலட்சணத்திற்கான "இலக்கிற்கு" நம்மைக் கொண்டுவந்து நிறுத்தும், இல்லையேல் கிறிஸ்துவுடன் ஆயிர வருட இராஜ்யத்தில் உடன் சுதந்திரத்துவத்திற்கான பரிசை அடைய முடியாது என்று சிந்தித்துப் பார்க்கவே இல்லை. கல்வாரியில் வைத்து நமது கர்த்தர் மரித்துக்கொண்டிருக்கும் கள்வனிடம் கொண்ட சம்பாஷணைக் குறித்த தவறுதலான விளக்கமே, குணலட்சணத்திற்கான "இலக்கு" குறித்து அல்லது நிர்ணயிக்கப்பட்ட தரநிலைக் குறித்துப் பார்க்கத் தவறுவதற்கு வழிவகுத்தது.

தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு அளிக்கப்படவிருக்கும் மாபெரும் ஆசீர்வாதங்களுக்கும், கனங்களுக்கும் தகுதியானவர்கள் யார் என்று தேவன் தீர்மானிப்பதற்கும், கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாகுவதற்கும், அவருடைய ஆயிர வருட இராஜ்யத்தில் பங்கடைவதற்கும் தகுதியானவர்கள் யார் என்று தேவன் தீர்மானிப்பதற்கும், "கனத்தையும், மகிமையையும், அழியாமையையும் தேடுகின்றவர்களில்" உண்மையுள்ளவர்கள் யார் என்று தேவன் தீர்மானிப்பதற்கும், "அழைக்கப்பட்டவர்களும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், உண்மையுள்ளவர்களும்" எனக் காணப்படுபவர்கள் யார் என்று தேவன் தீர்மானிப்பதற்கும், அவர் சில தரநிலையை (அ) பரிட்சையைக்கொண்டிருப்பது என்பது நியாயமான கருத்தாகவே இருக்கின்றது. இப்படியாக ஓர் இலக்கு இருக்கின்றது என்றும், வாஞ்சிக்கப்பட்ட பரிசை அடைவதற்கான நம்பிக்கையில் ஓடுகின்ற அனைவரும், அந்த இலக்கை நோக்கியே ஓட வேண்டும் என்றும், அந்த இலக்கினை அடைய வேண்டும் இல்லையேல் பரிசை இழக்க நேரிடும் என்றும் அப்போஸ்தலர் நம்முடைய ஆதார வசனத்தில் தெளிவாகக் கூறுகின்றார். மேலும் இந்தத் தரநிலையின் அடிப்படையில்தான் அப்போஸ்தலனும் தன்னை அளந்து பார்க்கின்றார்/ மதிப்பீடு செய்கின்றார் என்றும் நாம் பார்க்கின்றோம்; இன்னுமாக இவ்வசனத்தின் வார்த்தைகளை, தான் எழுதும் வேளையில், தான் இன்னமும் குணலட்சண-வளர்ச்சிக்கான அந்த இலக்கினை அல்லது தரநிலையினை எட்டிடவில்லை என்றும் குறிப்பிடுகின்றார். இப்படியான அப்போஸ்தலனுடைய வார்த்தைகளைப் பார்க்கும்பொழுது, இந்த ஓட்டப்பந்தயத்தில் ஓடிக்கொண்டிருக்கும் அனைவரின் இருதயங்களும், தாங்கள் ஓடி அடைய வேண்டிய இந்த இலக்கினைத் தெளிவாகப் பார்க்க வேண்டும் என்ற வாஞ்சையினால் விழிக்கின்றன; நம் அனைவரையும் அதிக பொறுமையுடனும், அதிக விடாமுயற்சியுடனும் ஓடுவதற்குத் தூண்டிவிடுகின்றது; இன்னுமாக நமக்கு முன்பாக நம்முடைய தேவனாகிய கர்த்தர் வைத்துள்ள பிரம்மாண்டமான இலக்கினை நோக்கின, நம்முடைய முன்னேற்றத்தினை நாளுக்கு நாள் கவனிக்கத்தக்கதாகவும் நம்மைத் தூண்டுகின்றது.

அப்போஸ்தலன் தன்னுடைய மனதில் ஓட்டப்பந்தய வீரர்களைக்குறித்துச் சிந்தனைக் கொண்டிருந்ததை நம்மால் கவனிக்க முடிகின்றது, மேலும் அவர் விவரித்துள்ளவைகளில் ஆழமான அர்த்தம் இருப்பதையும் நம்மால் காண முடிகின்றது: (1) ஓட்டப்பந்தய வீரர்கள், பந்தய சாலைக்குள் முறையாய்ப் பிரவேசிக்க வேண்டும்; இதுபோலவே நாமும் ஒரே வாசல் மூலமாக, அதாவது நம்மை

மீட்டுக்கொண்டு, தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமான்களாக்கிட்ட விலையேறப்பெற்ற இரத்தத்தின் மீதான விசுவாசத்தின் மூலமாகவே முறையாய்ப் பந்தய சாலைக்குள் பிரவேசிக்க வேண்டும். (2) பந்தய சாலைக்குள் வருபவர்கள், ஓட்ட பந்தய வீரர்களென முறையாய்ப் பதிவு பண்ணப்பட்டவர்களாய் இருக்க வேண்டும்; இவர்கள் தங்களுடைய நோக்கத்தை உறுதியாய்த் தெரிவிக்க வேண்டும், இல்லையேல் இவர்கள் பந்தயத்தில் இருக்க முடியாது; இப்படியாகவே நம்முடைய விஷயத்திலும்கூட ஆகும்; "விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டும்", இந்த ஓட்டப்பந்தயம் மற்றும் இதற்கான பரிசு தொடர்புடைய நமக்கான சிலாக்கியங்கள் குறித்துத் தகவல் அறிந்தும் உள்ள நிலைமையில், நாம் நமது நோக்கத்தைக்குறித்து அறிக்கைச் செய்வது - அதாவது கர்த்தரோடு ஓர் உடன்படிக்கைப் பண்ணுவது என்பது நம் மீதான கடமையாக இருக்கின்றது; இப்படி முறையாய்ப் பந்தயத்திற்குள் பிரவேசிப்பது - அதாவது பூமிக்குரிய கிறிஸ்தவ சபைகளின் பதிவேடுகளில் இல்லாமல், மாறாக ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் - "பரலோகத்தில் நம் பேரெழுதப்பெற்றவர்களாய்க்" காணப்படுவது என்பது நம் மீதான கடமையாக இருக்கின்றது. (எபிரெயர் 12:23).

ஓட்டப்பந்தய வீரர்களுக்குப் பரிசும்கூட அளிக்கப்படுகின்றது; ஆனால் இவர்கள் ஓடும் பந்தய சாலையில் இவர்கள் பார்க்கத்தக்கதாகப் பரிசு எங்கும் தொங்கவிடப்படுவதில்லை; இவர்கள் பரிசை நோக்கியல்ல, இலக்கினை நோக்கியே ஓட வேண்டும். கால்-மைல் தூர இலக்கும், அரை-மைல் தூர இலக்கும், முக்கால்-மைல் தூர இலக்கும் மற்றும் ஓட்டத்தின் இறுதியில் முழு ஒரு மைல் தூர இலக்கும் காணப்படுகின்றது; ஓடுகிறவர்களில் ஒவ்வொருவனும் தான், வழியில் வரும் ஒவ்வொரு இலக்கையும் கடந்துவருவதை கவனித்து, தன்னில் உற்சாகம்கொண்டு, பின்னர் இறுதியில் கடைசி இலக்கை, அதாவது பரிசிற்கான இலக்கினை அடைவது வரையிலும் இப்படியாகவே கவனித்தும், தன்னை உற்சாகப்படுத்திக்கொண்டும் ஓடிவருகின்றான். இப்படியாக வழிகளில் தாண்டிவரும் இலக்கினை அவன் கவனித்துக்கொள்வதும், தரநிலையுடன் தன்னுடைய முன்னேற்றத்தைக் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வதும், அவனுக்கு மிகுந்த கிரியா ஊக்கியாகவும் - அவன் விரைந்து ஓடுகையில் அவனுக்கு ஊக்கமாகவும் - அவன் மெதுவாக ஓடி பின்தங்கியிருப்பானானால் அவனுக்கு நினைப்பூட்டுதலாகவும் அமைகின்றது. இப்படியாகவே தேவனுடைய குமாரனுடன், அதாவது மகிமையின் கர்த்தருடன் உடன்சுதந்திரம் என்று தேவன் வாக்களித்திருக்கும் மாபெரும் பரிசைப் பெற்றுத்தரும், அந்த இலக்கினை நோக்கி, இடுக்கமான வழியில் ஓடிக்கொண்டிருக்கும் கிறிஸ்தவ ஓட்டப்பந்தய வீரனுக்கும் காணப்படுகின்றது. நம்முடைய வழியில் நாம் கடந்துவந்துள்ள இலக்கினை நாம் கவனிக்கும் போதும், நம்முடைய வளர்ச்சியைக்குறித்து நாம் உணர்ந்துகொள்ளும் போதும் நமக்கு உற்சாகம் ஏற்படுகின்றது. நாம் பரிசிற்கான இலக்கினை, அதாவது பரிசைப் பெற்றுத் தரும் இலக்கினை நெருங்கி, நெருங்கிக் கிட்ட வரும்போது நமக்கு உற்சாகம் ஏற்படுகின்றது. தன்னுடைய ஓட்டத்தில் அஜாக்கிரதையாகவும், அலட்சியமாகவும், மெத்தனமாகவும் காணப்பட்டால், தன் சார்பிலான சொந்த அலட்சியமே, மெத்தனமே, கவனமற்ற போக்கே, தான் பரிசை இழந்துபோவதற்குக் காரணமாகிவிடும் என்று அறியும் "அறிவைக்காட்டிலும்," வேறு எதுவும் ஒருவனுக்குப் பெரிய அளவிலான உந்துதலாய் இராது.

## நம்முடைய தேவனால், நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள குணலட்சணத்திற்கான இந்த மாபெரும் இலக்கு எது?

இது பல்வேறு பெயர்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று நாம் பதிலளிக்கின்றோம்; உதாரணத்திற்கு "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்"(மத்தேயு 5:48) என்று நமது கர்த்தர் இயேசு கூறினபோது அந்த

இலக்கினையே அவர் குறிப்பிட்டார். "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும்பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (உரோமர் 8:29) என்று அப்போஸ்தலன் கூறினபோது, அதே இலக்கானது குறிப்பிடப்படுகின்றது. இந்த இரண்டு வசனங்களும் வார்த்தைகளில் வித்தியாசப்பட்டாலும், இவை இரண்டும் பொருள் விஷயத்தில் ஒன்றே. "மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்"; "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது" (உரோமர் 8:4; 13:10) என்று அப்போஸ்தலன் கூறுகையில் அதே இலக்கானது மறுபடியுமாகக் குறிப்பிடப்படுகின்றது. இப்படியாகத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் காணப்பட வேண்டிய கிறிஸ்தவனுக்கான குணலட்சணத்தினுடைய இலக்கானது, எவைகளை உள்ளடக்கியிருக்கின்றது என்பதற்கான விளக்கத்தை நாம் பெற்றிருக்கின்றோம்; அது தெய்வீகத்தன்மை/தேவனுக்கு ஒத்த சாயல், கிறிஸ்துவுக்கு ஒத்த சாயல், அன்பு ஆகும். பரிசுத்தமுள்ளவர்களும், தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுமான கர்த்தருடைய ஜனங்கள், தேவன் கொண்டிருப்பதும், நமது கர்த்தர் இயேசுவினால் வெளிப்படுத்தப்பட்டதுமான அன்பின் தன்மைகளை அல்லது அதே குணங்களை அடைய வேண்டும் என்பதே அவசியமாய் உள்ளது.

"சுபாவத்தின்படி கோபாக்கினையின் பிள்ளைகளாக" நாம் இருக்க, நாமும் தேவன் அன்பு செய்வது போன்றும், கிறிஸ்து அன்பு செய்வது போன்றும் அன்பு செய்யத்தக்கதாக, இவ்வளவு உயர்வான தரத்தினை (அ) குணலட்சணத்தினுடைய இலக்கினை எப்படி அடையக்கூடும்? என உங்களில் சிலர் கேட்கலாம். மாம்சத்தின் விஷயத்தில் இந்த உயர்வான அளவுகோலை எட்டிவிடலாம் என ஒருபோதும் எதிர்பார்க்க வேண்டாம் என்று நாம் பதிலளிக்கின்றோம், காரணம் நாம் இந்த அழிந்துபோகும் சரீரங்களில் காணப்பட்டு, மாம்சத்தின் மூளையைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்குள் காணப்படுவது வரையிலும், விழுகையின் காரணமாகவும், ஆறாயிர வருடங்களாகச் சரீரத்திலும், மனதிலும், ஒழுக்கத்திலும் ஏற்பட்ட சீரழிவின் காரணமாகவும், நம்முடைய இனத்தை முற்றிலுமாய் ஆட்டுவிக்கும் சுயநலத்தினால் நாம் எதிர்க்கப்பட்டுக்கொண்டே இருப்போம்.

பூரணமான அன்பாகிய இந்த இலக்கை அடைவது என்பது, இருதயத்தில், சித்தத்தில், புதிய சித்தத்தில், அதாவது "மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனால்" பரிசுத்த ஆவியின் மூலம் ஜெநிப்பிக்கப்பட்ட புதிய சித்தத்தில் அடையப்பெறுகின்ற ஒரு காரியமாகவே இருக்கின்றது. இன்னுமாக நமது கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்பக் கட்டங்களிலேயே, புதிய மனமானது இந்தத் தரநிலையை எட்டிவிடும் என்றும் நாம் எதிர்பார்க்கக்கூடாது. புதிய மனமானது, தேவனுடைய வார்த்தைகளில் உள்ள மகாமேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்களின் மூலமாக தேவனால் ஏவப்படுகின்றதாக இருப்பினும், இதுவே நம்முடைய சொந்த சித்தமாக இருப்பினும் இது, இதன் கருவியும், வழியுமாகிய மனித மூளையினால் எல்லைக்குட்படுத்தப்படுகின்றது. ஆகவேதான் புதிய மனமானது தொடர்ந்து மாம்சத்திற்கு எதிராக யுத்தம் பண்ணிக்கொண்டே இருக்க வேண்டும் என்றும், புதிய மனதின் வெற்றி என்பது மாம்சத்தின் சாவு என்றும், இந்தப் புதிதாய் ஜெநிப்பிக்கப்பட்ட சிந்தையானது, உயிர்த்தெழுதலினுடைய மாற்றத்தின்போது அதற்கே உரிய ஆவிக்குரிய சரீரத்தைப் பெற்றுக்கொள்வது வரையிலும், இந்தப் புதிய மனம் உண்மையாகப் பூரணமடைய முடியாது என்றும் அப்போஸ்தலன் நமக்குத் தெரிவிக்கின்றார். ஆனால் முதலாம் உயிர்த்தெழுதலில் ஆவிக்குரிய ஒரு சரீரத்தைப் பெற்றுக்கொள்வது என்பது பரிசைப் பெற்றுக்கொள்வதாகக் காணப்படும் என்பதினால், புதிய மனமானது இந்த அழிவுக்குரிய சரீரத்தில் (அ) மண்பாண்டத்தில் காணப்படும் போதுதான் இலக்கினை நோக்கின ஓட்டமும், இலக்கினை அடைவதும் நிறைவேற்றப்பட வேண்டும் (2 கொரிந்தியர் 5:2-4).

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், புதிய மனமானது வளர வேண்டும், விருத்தியாக வேண்டும். அப்போஸ்தலன் புத்திமதி கூறுவதுபோன்று, நாம் புதிய சிருஷ்டிகளென, கிருபையிலும், அறிவிலும், தேவனுடைய அன்பிலும் வளர வேண்டும்; இந்த வளர்ச்சியானது, மேலே விவரிக்கப்பட்டுள்ள ஓட்டப்பந்தயத்தின் காரியத்திற்கு இணையாய் இருக்கின்றது. பரிசை அடைய வேண்டுமெனில், இலக்கினை நாம் அடைவது வரையிலும், நாம் நாளுக்குநாள், வாரத்திற்கு வாரம், வருடத்திற்கு வருடம் இலக்கை நோக்கி, நெருங்கி, நெருங்கி ஓட வேண்டும். காலம் ஒரு பொருட்டல்ல, ஏனெனில் சிலர் நீண்ட காலம் ஓட்டம் ஓடியும், ஆவியின் கிருபைகளின் மொத்த சாரமாகிய அன்பு எனும் இலக்கின் வளர்ச்சியில், குறைவான வளர்ச்சியையே பெற்றிருக்கின்றனர் என்பதை நாம் அறிவோம்.

இன்னும் சிலர், இடுக்கமான வழியில் குறைவான வருடங்கள் ஓடியிருந்த போதிலும், மிகுந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளதையும் நாம் அறிவோம்; இவர்கள் கிருபைமேல் கிருபை, அறிவின்மேல் அறிவு, மகிமையின்மேல் மகிமை அடைந்து, வேகமாக இலக்கினை நெருங்குவதையும் நாம் கண்டிருக்கின்றோம். இன்னும் நமது சிறப்பான மனித கணிப்பின்படி பார்க்கையில் சிலர் இலக்கினை எட்டியும் இருக்கின்றனர்; இவர்களில் சிலர் மிக வேகமாக அடைந்துள்ளனர் என்பதையும் நாம் அறிவோம்.

இந்தப் பாடத்தைத் தெளிவாய்ப் புரிந்துகொள்ளத்தக்கதாக, நம்முடைய இருதயங்களில் இந்த அன்பு எனும் பண்பு எவ்வளவு சிறியதான ஆரம்பத்தைக்கொண்டிருந்தது என்பதை நாம் கவனிக்கலாம்; இப்படியாகப் பார்க்கும் விஷயங்களுடன் அநேகர் தங்களுடைய சொந்த அனுபவங்களை ஒப்பிட்டுப் பார்க்கையில், தங்களுடைய குணலட்சணத்தில் பெரிய வளர்ச்சிகளைக் கண்டுபிடிப்பார்கள் என்றும், வழியில் உள்ள ஒவ்வொரு கால்-மைல் தூர இலக்கினை ஒன்றனபின் ஒன்றாகத் தாங்கள் கடந்து வந்திருப்பதையும் கண்டுபிடிப்பார்கள் என்றும், தாங்கள் இன்னமும் பரிசிற்கான இலக்கினை ஏற்கெனவே அடையவில்லையெனில், தாங்கள் வேகமாக நெருங்கிக்கொண்டிருக்கின்றனர் என்பதையும் கண்டுபிடிப்பார்கள் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம்.

(1) நம்முடைய கிறிஸ்தவ அனுபவத்தின் ஆரம்பத்தில், அப்போஸ்தலர் கூறுவது போன்று, நாம் முதலாவதாகத் தேவனை அன்புகூராமல், "அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தவராக" காணப்பட்டார்; அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்ததே நம்மை அவர்பால் கவர்ந்த காரியமாக இருக்கின்றது (1 யோவான் 4:19). இவ்வளவு பெரிய விலைக்கொடுத்து நம்மை மீட்குமளவிற்கும், நமக்கு இத்தனை பெரிதான இரட்சிப்பினை அருளும் அளவுக்கும், தேவன் நம்மை இவ்வளவாய் அன்புகூர்ந்தப்படியால். . . . இதற்குக் கைமாறாக நாம் செய்யும் காரியம் சிறியதே என்றும், அவ்வன்பிற்குப் பிரதிபலனாக அவரை அன்பு செய்வதும், அவருக்கு ஊழியஞ்செய்வதும் நம்முடைய கடமையாக இருக்கின்றது என்றும் ஒருவகையான நீதியின் உணர்வானது நம்மிடத்தில் தெரிவித்ததாய் இருந்தது. இப்படியாக ஆரம்பித்த அன்பை நாம் கடமை-அன்பு என்று அழைக்கின்றோம். இப்பொழுது நாம் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்திருக்கும் காரணத்தினால், மேலானதாகவும், குணலட்சணத்தில் அதிகம் முன்னேற்றம் அடைந்ததாகவும் காணப்படும் இன்றுள்ள தேவனுக்கான நம்முடைய அன்பிலுள்ள அநேகம் அம்சங்கள், ஆம்பத்தில் நம்மிடத்தில் காணப்பட்ட இந்தக் கடமை-அன்பில் காணப்படாமல்தான் இருந்தது. "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது (பிரதி அன்பை எங்களிலிருந்து வெளிக்கொணர்கின்றது); ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் (தெய்வீகத்தீர்ப்பின், சாபத்தின் கீழ்) மரித்தார்கள் என்றும்; (இயேசுவினுடைய மீட்பின் மீதான விசுவாசத்தின் காரணமாய் நீதிமானாக்கப்பட்டவர்களாகிய) பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்" (2 கொரிந்தியர் 5:14, 15) என்று கூறுகையில்

இந்தக் கடமை அன்பைக்குறித்துதான், அப்போஸ்தலன் பேசுவதாகத் தோன்றுகின்றது. அன்பு செய்ய வேண்டும் என்கிற இந்த அன்பானது அல்லது கடமை-அன்பானது, தேவனிடத்திலுள்ள நம்முடைய அன்பின் முதலாம் மற்றும் இயல்பான/முதிராத மற்றும் எளிமையான வளர்ச்சியாகவும் - பூரண அன்பை நோக்கின ஓட்டத்திலுள்ள நம்முடைய ஆரம்பக்கட்டமாகவும் இருக்கின்றது.

(2) இப்படியாக நாம் கடமை அன்பைச் செயல்படுத்திக்கொண்டிருக்கையில், நாம் பாவத்தைத் தவிர்ப்பதன் மூலமாக மாத்திரமல்லாமல், இன்னுமாக அவருக்காகவும், சத்தியத்திற்காகவும், அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படியும் விஷயத்தில், கடமை அன்பிற்குக் கீழ்ப்படியும் விஷயத்தில், நமது பூமிக்குரிய நலன்களையும், உரிமைகளையும் பலிச்செலுத்துவதன் மூலமாயும் தேவனுக்கு நாம் கீழ்ப்படிய நாடிக்கொண்டிருக்கையில், நம்முடைய இருதயங்களில், நீதியின் கொள்கைகளுக்கான ஒரு மதிப்புணர்வைக் காணத்துவங்குகின்றோம்; நாம் நீதி-நியாயத்தை, இரக்கத்தை, அன்பை விரும்ப ஆரம்பித்தோம்; அதுவும் ஆரம்பத்தில் அன்பின் ஆர்வத்தினால் விரும்ப ஆரம்பிக்காமல், மாறாக தெய்வீகக் குணலட்சணம், திட்டம் மற்றும் பிரமாணத்தினுடைய மகிமையான பண்புகளின் மீதான மரியாதையின் நிமித்தம், நீதியை விரும்ப ஆரம்பித்தோம். இதுவே நம்முடைய முதலாவது கால்-மைல் தூர இலக்காகும்; அதாவது நீதியின் கொள்கைகளின் மீதான அன்பாகும்.

(3) தெய்வீகமானவரில் பூரணமாய்க் காணப்படுகிறதும் மற்றும் நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்களுக்கு, தெய்வீகமானவரை வெளிப்படுத்துகிறதுமான தெய்வீகக் குணலட்சணம் மற்றும் நீதியின் கொள்கையின் இந்த அம்சங்களை நாம் அதிகமதிகமாய்க் கற்றுக்கொள்ளும் போது, அந்த அளவுக்குத்தக்கதாக (கடமையின் அடிப்படையில் இல்லாமல், கொள்கையின் அடிப்படையிலான) தேவன் பேரிலான உண்மையான அன்பானது, நம்முடைய இருதயங்களுக்குள் கடந்துவருகின்றது. இங்கு நாம் ஓட்டப்பந்தயத்தில் இரண்டாம் கால்-மைல் தூர இலக்கினை, அதாவது தேவனுடைய குணலட்சணத்தை அன்புகூருவது எனும் இலக்கினை அடைகின்றோம். தேவனுடைய குணங்களின் நீளத்தையும், அகலத்தையும், உயரத்தையும், ஆழத்தையும் நாம் இன்னமும் உணர்ந்துகொள்ளவில்லை என்றபோதிலும், நாம் தேவனை, உண்மையான விதத்தில் அன்புகூர ஆரம்பிக்கின்றோம்; அதாவது அவர் நமக்கு என்ன செய்துள்ளார் என்பதை உணர்ந்துகொண்டதினால் மாத்திரமல்லாமல், விசேஷமாக அவர் யார் என்று உணர்ந்துகொண்டதினாலும், அவருடைய குணலட்சணத்தை உணர்ந்துகொண்டதினாலும் நாம் அவரை அன்புகூர ஆரம்பிக்கின்றோம்.

(4) தேவனே அனைத்துக் கிருபைகளுக்கும், பண்புகளுக்கும் பிரதிநிதியாக இருக்கின்றார் என்பதினாலும், அனைத்து உண்மைக்கும் பிரதிநிதியாக இருக்கின்றார் என்பதினாலும், நீதிக்குப் பிரதிநிதியாக இருக்கின்றார் என்பதினாலும், அனைத்து அநீதிக்கும், அநியாயத்திற்கும் எதிரானவர் என்பதினாலும், தேவன் பேரில் நமக்கு ஏற்பட்ட அன்பானது, நம்முடைய சக மனுஷர்கள் மத்தியிலும், நம்முடைய சொந்த குணலட்சணங்களின் விஷயத்திலும் இந்தக் கொள்கைகளை நாடுவதற்கும், பின்பற்றுவதற்கும் ஏதுவாக நம்மை வழிநடத்துகின்றது. நாம் சத்தியத்தையும், உண்மையையும், உயர்வான குணலட்சணத்தையும் எங்கெல்லாம் கண்டு, அதை அன்புகூர ஆரம்பித்தோமோ, இவைகளில் சில மனுக்குலத்திடத்திலுங்கூடப் புள்ளிகளாகவும், மெல்லிய தடயங்களாகவும் இருப்பதைக் கண்டுபிடித்தோம்; தேவனுடைய பிரமாணமானது, பிதாவாகிய ஆதாமின் இருதயத்தில் எழுதப்பட்டிருந்தது என்பதையும், அது ஆதாமின் பிள்ளைகளுடைய இருதயங்களிலிருந்தும், மனசாட்சியிலிருந்தும் பெரிதளவில் அழிக்கப்பட்டிருந்த போதிலும், முற்றிலுமாக அழிக்கப்படவில்லை என்பதையும் நாம் கண்டோம்; கடந்த 18 நூற்றாண்டுகளாகக் கிறிஸ்தவ மார்க்கத்தினுடைய செல்வாக்கின் கீழ், ஓரளவுக்கு இந்தப் பூரணமான பிரமாணத்தினுடைய சில அம்சங்கள், மனுஷர்கள் மத்தியில் மங்கலாகத் தென்படவே செய்கின்றது என்பதையும் நாம் கண்டோம்.

ஆனால் இந்த நீதியின் கொள்கையின் மீது பெருகிக்கொண்டு வரும் அன்பினைப் பெற்றிருக்கும் நிலைமையில், நாம் சுற்றி ஏறெடுத்துப் பார்த்தபோது - சுபாவத்தின்படியான மனுஷரில் எதுவும் திருப்திகரமாக இருக்கவில்லை; இன்னுமாக தேவபக்தியாய் இருக்கின்றார்கள் என்றும், இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறவர்கள் என்றும் தங்களை அறிக்கைப்பண்ணிக் கொள்கின்றவர்களிலும் எதுவும் திருப்திகரமாக இருக்கவில்லை. இவர்கள் எல்லோரும் நம்மைப் போலவே பூரணத்திலும், தேவனுடைய மகிமையின் பிரதிபலிப்பிலும் குறைவுப்பட்டிருப்பவர்கள் என அறிந்துகொண்டோம். ஆனால் நீதியின் கொள்கைகளுக்கான அன்பு நம்முடைய இருதயங்களில் அதிகமதிகமாய்க் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தபடியால், நாம் பெருமூச்சுவிட்டுத் தவிக்கும் சிருஷ்டிகள் அனைத்தின் மீது அனுதாபத்தைக் காட்டுவதற்கும், "சகோதரரை அன்புகூருவதற்கும்" கற்றுக்கொண்டோம்; ஏனெனில் நம்மை ஜெநிப்பித்த தேவனாலும், சத்தியத்தின் ஆவியினாலும் இந்தச் சகோதர சகோதரிகளும் ஏவப்படுகின்றார்கள் என்பதை அறிந்து, உணர்ந்துகொள்கின்றோம்; இந்தச் சகோதர சகோதரிகளில் சிலர், கடமை-அன்பை மாத்திரம் பெற்றிருப்பவர்களாக, நாம் முன்பு போராடினது போன்று, போராடுவதைக் காண்கின்றோம்; இன்னும் சிலர் கடமை அன்பைக்கடந்து, நீதியின் கொள்கைகளை உணர்ந்துகொண்டு, அக்கொள்கைகளை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்து, இந்த நீதியின் கொள்கைகளின் பிரதிபலிப்பாய் இருக்கும் தேவனை அன்புகூருகிறவர்களாக ஆகியுள்ளனர். இந்தச் சகோதர சகோதரிகள் படிப்படியாகத் தெய்வீகத் தரநிலைக்கு நெருங்கிக்கொண்டிருக்கின்றார்கள், அதாவது இலக்கை நோக்கி தொடர்ந்து ஓடிக்கொண்டிருக்கின்றனர் என்று நாம் உணர்ந்த போது, இவர்களிடத்திலும், மேலும் பாவம், பெலவீனம், எதிராளியானவன் மற்றும் அவனுடைய தந்திரங்களுக்கு எதிரான இவர்களுடைய யுத்தத்திலும் நமக்கு அக்கறை ஏற்பட்டது. நாம் இடுக்கமான வழியில் முன்னேறிச் செல்வதற்கு நாடுமளவுக்குத்தக்கதாக, சக சகோதர சகோதரிகளின் நன்மைக்கடுத்த விஷயங்களிலும், அவர்கள் ஜெயங்கொள்ளும் விஷயங்களிலும் அதிகமதிகமாய் அக்கறை காட்டுபவர்களாய் இருந்தோம். சகோதரருக்கான இந்த அன்பை, நாம் ஆரம்பத்தில் பெற்றிருக்கவில்லை; இந்த அன்பின் வளர்ச்சி என்பது, இலக்கினை நோக்கின நம்முடைய ஓட்டத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்; இப்படியான அன்பை அடைவது என்பது மூன்றாம் கால்-மைல் தூர இலக்கினை அடைவதாக இருக்கும். சகோதரருக்கான இந்த அன்பு என்பது "சகோதரருக்காகத் தங்களுடைய ஜீவனையே ஒப்புக்கொடுக்க விரும்பும்" கட்டத்தை எட்டிடும், மாபெரும் முன்னேற்றத்தை அடைந்தாலும், இது நாம் ஓடிக்கொண்டிருக்கும் இலக்கை முழுமையாய் அடைந்ததாக இருக்காது (1 யோவான் 3:16).

(5) "பரிசை அடைவதற்கான இலக்கு" என்பது, அன்பில் அடைய வேண்டிய இன்னும் மேன்மையான நிலையாகும்; நம்முடைய சத்துருக்களைச் சிநேகிக்கும் அன்புதான் மிக உயர்வான அன்பின் நிலை என்று வேதவாக்கியங்கள் நமக்குச் சுட்டிக்காட்டுகின்றன; நம்முடைய சத்துருக்களைச் சிநேகிப்பது என்பது, சத்துருக்களைக் குறித்து ஒருபக்கத்தில் தீமையாய் எண்ணிக்கொண்டும், அதேசமயம் அவர்களை இன்னொருபக்கம் சகித்துக் கொண்டும், அவர்களுக்கு நாம் பதிலுக்குப்பதில் பாதிப்பு ஏற்படுத்தாமல் இருப்பதும் மாத்திரமாக இல்லை; மாறாக இதையும் தாண்டி, நம்முடைய கிரியைகளில் மாத்திரமல்லாமல், நம்முடைய வார்த்தைகளிலும், நம்முடைய எண்ணங்களிலும், நம்முடைய உணர்வுகளிலும், சகல கோபத்தையும், குரோதத்தையும், பகைமையையும், பொறாமையையும், வாக்குவாதத்தையும் முழுமையாய்ப் புறம்பே கழித்துப்போடுவது என்பதே சத்துருக்களைச் சிநேகிப்பதாகும். இது நம்முடைய இருதயங்களில், அன்பானது முற்றிலும் ஜெயம்கொண்ட நிலையைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது; அதாவது நாம் தேவனைப் பிரதானமாய் அன்புகூர்ந்து, அவருடைய குணலட்சணத்தில் விளங்கும் கொள்கை மீதான அன்பின் நிமித்தம் அவருக்கான ஊழியத்தில்

பலியாகுவதை விரும்புவது மாத்திரமல்லாமல், சகோதரர்களுக்காக நாம் கொண்ட அன்பானது, அவர்களது உணர்வுகள் மற்றும் நலன்களின் விஷயத்தில் நம்மைக் கவனமாய் இருக்கச் செய்ததோடு, அவர்கள் பொருட்டு நம்முடைய ஜீவியங்களை ஒப்புக்கொடுப்பதற்கும், அவர்களைத் தீமையினின்று விடுவிப்பதற்கும் அல்லது அவர்களுடைய பாதையில் இடறலின் கல்லைப் போடுவதைத் தவிர்ப்பதற்கும் நம்மை ஆயத்தமாய் இருக்க பண்ணினது மாத்திரமல்லாமல், இதோடுகூட ஒவ்வொரு அறிவுள்ள சிருஷ்டியை நாம் அன்புகூரத்தக்கதாகவும், வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் சகல மனுஷருக்கு நன்மைச் செய்வதிலும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கு நன்மைச் செய்யத்தக்கதாகவும் தேவனுக்கான அன்பு, நம்முடைய இருதயங்களில் முழுமையாய் ஊற்றப்பட்டிருக்கும் (கலாத்தியர் 6:10).

ஆனால் அதற்கென்று நீதியின் உருவமாக இருக்கும் கர்த்தரிடத்திலும், கிறிஸ்துவின் மூலமாய்த் தங்களில் நிறைவேற்றப்பட்ட நியாயப்பிரமாணத்தினுடைய நீதியையும், அன்பையும் அடைய நாடும் சகோதரரிடத்திலும் நாம் கொண்டிருக்கும் அதே விதமான அன்பைத்தான், நாம் உலகத்தாரிடத்திலும் கொண்டிருக்க வேண்டும் என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. உலகத்தாரிடத்தில் அனுதாபமான அன்பைக்கொண்டிருக்க வேண்டும்; அதாவது தேவன்தாமே மனுக்குலத்தின் உலகத்திடம் செலுத்தும் இரக்கத்தையே நாமும் செலுத்த வேண்டும். "உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" (1 யோவான் 2:15) என்று அப்போஸ்தலன் கண்டிக்கிற விதத்தில், நாம் உலகத்தை அன்புகூர வேண்டும் என்ற அர்த்தமும் இல்லை. "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்" (யோவான் 3:16) என்று வசனத்தில் சுட்டிக்காண்பிக்கப்படும் நிலையையே உலகத்தின் விஷயத்தில் நாம் அடைய வேண்டும். உலகமானது சீரழிவிலிருந்தும், பாவத்திலிருந்தும், பரிசுத்தத்திற்கும், தூய்மைக்கும், நீதிக்கும் உயர்த்தப்படுவதில் மாத்திரம் மகிழ்ச்சிகொள்ளாமல், இம்மாதிரியாக உயர்த்தப்படும் விஷயத்தில் வாய்ப்புக் கிடைக்கும் பட்சத்தில் ஒத்துழைப்பதிலும் - அதாவது தேவனுடைய அன்பையும், அவருடைய யுகத்திற்கடுத்த திட்டம் நிறைவேறுவதையும் எதிர்பார்த்துக்கொண்டு மாத்திரம் இருக்காமல், தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பார் மூலமாக ஆயிர வருட யுகத்தில் ஒவ்வொரு சிருஷ்டியினிடத்திலும் கடந்துவரும் என்று வாக்களிக்கப்பட்டுள்ள ஆசீர்வாதம் தொடர்புடைய அவருடைய திட்டத்தில், அவருடன் ஒத்துழைப்பதிலும் மகிழ்ச்சிகொள்ளும் தன்மையுடையதே உலகத்தின் மீதான அன்பாகும். இந்தப் பூரணமான அன்பும், மற்றக் குணலட்சணங்களும், சத்துருக்களிடத்திலும்கூட, அதாவது நம்மைக் காயப்படுத்துகிறவர் களிடத்திலும்கூட, அதாவது கிறிஸ்துவின் நிமித்தமாகவும், நீதியின் நிமித்தமாகவும் நம்மைக்குறித்துத் தீமையாய்ப் பேசுகிறவர்களிடத்திலும்கூடச் செயல்படுத்தப்படுவது என்பதே ஓட்டத்தின் நான்காம்-மைல் தூர இலக்காகும், அதாவது பரிசிற்கான இலக்காகும்.

இலக்கினை நோக்கின நம்முடைய ஓட்டத்திலுள்ள வளர்ச்சியில் காணப்படும் இந்தப் பல்வேறு படிகளை நாம் கவனிக்க வேண்டும் என்றபோதிலும், நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவெனில் . . . இந்த உதாரணம் மிகத் துல்லியமாகப் பொருந்துகிறதில்லை, மாறாக இப்படியான வளர்ச்சியில் வரிசை என்பது இருப்பினும் அவை குறிப்பிடத்தக்க விதத்தில் நம் அனுபவங்களில் தெரிகிறதில்லை என்பதாகும். . ..இதில் கடமை அன்பானது படிப்படியாக உயர் வகையான அன்பிற்கு வழிநடத்துகிறபோதிலும், அந்தக் கடமை-அன்பானது இறுதிபரியந்தம் தொடர்கிறதாகவே இருக்கின்றது. இந்த ஓட்டத்தில் ஓடுபவர்கள் மாம்சத்தின்படி பார்க்கப்படாமல், புதிய சிருஷ்டிகளாக, ஆவியின்படி, மனதின்படி, சிந்தையின்படி, நோக்கத்தின்படியே பார்க்கப்படுகின்றனர் என்பது தேவனுடைய கிருபையான ஏற்பாட்டின் பாகமாக இருக்கின்றது. நம்முடைய இருதயத்தில் நிரம்பியுள்ள உண்மையான அன்பின் ஆவியினுடைய நிரூபணத்தை ஒவ்வொரு கிரியையும், ஒவ்வொரு வார்த்தையும் கொடுக்கத்தக்கதாக, நம்மால்

ஒருபோதும் மாம்சத்தில், பூரணமான அன்பின் இந்தப் பிரம்மாண்டமான இலக்கினை அடைய முடியாது. சிலருக்கு மற்றவர்களைக் காட்டிலும் மாம்சத்தில் அதிகமான பெலவீனங்களும், குறைவுகளும் காணப்படுகின்றன; ஆகவே தங்களுடைய இருதயத்தின் உண்மையான உணர்வுகளை முழுமையாகவும், சீராகவும் வெளிப்படுத்துவதற்கு மற்றவர்களைவிட இயலாமையில் காணப்படுவர். ஆனால் தேவன் இருதயத்தைக் காண்பார்; இந்த ஓட்டத்தில் ஓடுவது இருதயம் என்றே அவர் காண்கின்றார். சுவிசேஷத்தில் நமக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள இந்த இலக்கை, அதாவது நம்முடைய சத்துருக்களைச் சிநேகிக்கும், பூரணமான அன்பினுடைய இந்த இலக்கை இருதயமே அடைய வேண்டும்; "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்."

இப்பொழுது நாம் இந்தப் பூரணமான அன்பே, பரிசை அடைவதற்கான இலக்கு என்று தெளிவாய்க் காண்கின்றபடியால், நம்முடைய அனுதின ஜீவியங்களில் நாம் நாடுவதற்குரிய ஒன்றைக் கண்டிருக்கின்றோம்; அதாவது தேவனுடைய கிருபையினால் நம்மால் அடையப்படக்கூடியதும், இராஜ்யத்தில் பங்கு பெறத் தகுதியானவர்கள் என நாம் கருதப்பட வேண்டுமானால் நம்மால் அடையப்பட வேண்டியதுமான ஒரு நிலையை இங்குக் கண்டுகொண்டோம். கிறிஸ்துவின் மணவாட்டியினுடைய அங்கங்களைத் தேவன் மனம்போன போக்கில்/தன்னிச்சையாகத் தெரிந்தெடுக்காமல், உணர்ச்சி வசப்பட்டுத் தெரிந்தெடுக்காமல், மாறாக குணலட்சணத்தின் அடிப்படையிலும், இருதய வளர்ச்சியின் அடிப்படையிலும்தான் தெரிந்தெடுக்கின்றார்; தம்முடைய குமாரனுக்கு ஒப்பான சாயலை அடைகின்றவர்களை, அதாவது பிதாவுக்குப் பிரியமானதாகவும், ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாகவும் இருக்கும் இந்தத் தரநிலையை, அதாவது பரிசிற்கான இந்த இலக்கினை அடைகிறவர்களையே அவர் தேர்ந்தெடுக்கின்றார்; இப்படியான இலக்கினை அடைந்தவர்கள் மாத்திரமே, நமது கர்த்தருடன் உடன் சுதந்திரத்துவத்தை அடைவதற்கு உறுதியாய் நம்பிக்கைக்கொள்ளலாம். இந்த ஓட்டத்தில் ஓடும் ஒவ்வொரு நபரும் "பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபிரெயர் 12:1) என்றுள்ள அப்போஸ்தலனின் புத்திமதியைப் பின்பற்றுவது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது; இவரே நாம் ஜெயங்கொள்வதற்குக் கிருபைத் தந்து, தம்முடைய வார்த்தையின் மூலமாகவும், தம்முடைய வழிநடத்துதல்கள் மூலமாகவும், ஓட்டத்தின் முடிவு பரியந்தம் நம்மைக் காத்துக்கொள்வார்.

பந்தய சாலையில் ஓடும் ஒவ்வொருவனும், இடுக்கமான வழியில் அடைந்துள்ள முன்னேற்றத்தின் விஷயத்தில் மற்றவர்களைப் பரிசோதித்துப் பார்க்காமல், தன்னையே சோதித்துப் பார்க்க வேண்டும்; ஏனெனில் ஒவ்வொருவனும் கர்த்தரைத் தவிர, மற்றவர்களைக் காட்டிலும் தன்னுடைய சொந்த இருதயத்தின் நிலைமையையும், சொந்த மாம்சத்தின் பெலவீனத்தையும் நன்கு அறிந்தவனாக இருப்பான். ஒவ்வொருவனும் ஓட்டப்பந்தயத்தில் எந்த இடத்தில் தான் காணப்படுகின்றான் என்பதைக் கவனித்துப் பார்த்து, தான் ஓட்டத்தில் காணப்படுகிறதற்காகக் களிகூருவானாக; இன்னுமாக இப்படியாக இந்த ஓட்டத்தில் ஓடுவதற்கு அழைக்கப்பட்டிருப்பதும், இந்த ஓட்டத்திற்குள் பிரவேசிக்கிறதற்குச் சிலாக்கியம் அடைந்திருப்பதும் மாபெரும் சிலாக்கியம் என எண்ணக்கடவன். நாம் ஒருவேளை முதலாம் கால்-மைல் தூர இலக்கினைக் கடந்திருக்கின்றோம் என்பதைக் கண்டுபிடிப்போமானால் களிகூர்ந்து, இன்னும் முன்னோக்கித் தொடருவோமாக. ஒருவேளை நாம் இரண்டாம் கால்-மைல் தூர இலக்கினைக் கடந்திருக்கின்றோம் என்று கண்டுகொள்வோமானால், இன்னும் அதிகமாய்க் களிகூருவோமாக, ஆனால் ஓடுவதில் தளர்வு/சோம்பல் காண்பிக்க வேண்டாம். ஒருவேளை நாம் மூன்றாம் கால்-மைல் தூர இலக்கினையும் கடந்திருக்கின்றோம் எனக் கண்டுகொள்வோமானால் நாம் இன்னமும் அதிகமாய்க்

களிகூர்ந்து, ஊக்கமாய் முன்னேறுவோமாக; ஒருவேளை நாம் சத்துருக்களையும் உள்ளடக்கி அன்புகூரும், பூரணமான அன்பாகிய, நான்காம் இலக்கினை அடைந்துவிட்டோமானால், நாம் மிகுந்த சந்தோஷமடைய வேண்டியதே. நாம் உண்மையுள்ளவர்களாகக் காணப்பட்டால், பரிசு நமக்குரியதேயாகும். ஆனால் அப்போஸ்தலர் கூறுவது போன்று, "அனைத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்க வேண்டும்," சகல ஆயுதவர்க்கங்களுடன் நிற்க வேண்டும்; மாபெரும் மேற்பார்வையாளர், பலன்களை அளிப்பவர், "நல்லது உத்தமும், உண்மையும் உள்ள ஊழியக்காரனே; உன்னுடைய எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி" என்று நம்மிடம் கூறிடுவதற்கு முன்னதாக, நம்மை இலக்கிலிருந்து திசைத்திருப்பத்தக்கதாக பந்தய சாலையில் கடந்து வந்த சோதனைகள் போன்று, இலக்கினை எட்டிய பிற்பாடும் நம்மீது வரும் பல்வேறு பரீட்சைகளிலும் நாம் நிற்க வேண்டும் (எபேசியர் 6:13-17).

பூரண அன்பின் இலக்கினை அடைந்தவர்கள், தொடர்ந்து தங்களைக் கர்த்தருடைய ஊழியத்திலும், தங்களுடைய ஜீவியத்தைச் சகோதரருக்கான ஊழியத்தில் ஒப்புக்கொடுப்பதிலும், ஈடுபடுத்திக்கொண்டிருப்பது இன்றியமையாததாக இருக்கின்றது, ஏனெனில் காண்கின்ற தன்னுடைய சகோதரனை அன்புகூராதவன், தான் காணாத தேவனை அன்புகூருவதாக, எப்படிச் சான்று பகர முடியும்? (1 யோவான் 4:20). இவர்கள் தேவன் மற்றும் நீதியின் கொள்கைகளுக்கான பிரதிநிதியாக மாத்திரம் நிற்காமல், மாறாக கர்த்தருக்குள் பலமாய் இருப்பவர்களின் பிரதிநிதியாகவும், அவருடைய வல்லமையின் சத்துவத்திலும், அவருடைய வார்த்தையின் மீதான விசுவாசத்திலும் நின்று, பந்தய சாலையில் ஓடும் மற்றவர்களும் "இலக்கினை" அடையத்தக்கதாக மற்றவர்களையும் உற்சாகப்படுத்துவதில் ஆயத்தமாயும், விருப்பம் உள்ளவர்களாயும், திறமைமிக்கவர்களாயும் நிற்க வேண்டும். "ஆகையால், நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார். ஆகிலும் நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக. சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்" (பிலிப்பியர் 3:15-17).

---

R5080

## உறுதியான குணலட்சணம் எனும் இலக்கு

"சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்."
(பிலிப்பியர் 3:13, 14)

அடையப்பெறுவதற்கும், பிடித்துக்கொள்வதற்கும், உரிமையாக்கிக்கொள்வதற்கும் பாத்திரமாய் இருக்கும் பந்தயப்பொருள் ஒன்றினை அடைவதற்கான தன்னுடைய வாய்ப்பினைக் குறித்த தன்னுடைய முழுமையான புரிந்துகொள்ளுதலைப் பரிசுத்த பவுல் அடிகளார், பிலிப்பியர்களுக்கான தன்னுடைய

நிருபத்தில் தெரியப்படுத்துகின்றார். எதற்காக இந்த மாபெரும் அப்போஸ்தலன் நாடி ஓடினார்? அவர் எதை அப்போது இன்னமும் அடைந்திருக்கவில்லை? அவர் வெல்லும்படியாக ஓடிக்கொண்டிருக்கும் அக்காரியத்தினை, பந்தயப்பொருள் என்று கூறியுள்ளார்.

"பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்கான இலக்கினை" நாம் இரண்டு கண்ணோட்டங்களிலிருந்து காணலாம் மற்றும் அவை இரண்டுமே சரிதான். ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், இந்த இலக்கு என்பது தேவனுடைய பிரியமான குமாரனுக்கொத்த இருதய நிலையை, நோக்கத்தில் பரிபூரணத்தினை, நீதிக்காயும், தேவனுக்காயும், கிறிஸ்துவின் சகோதரருக்காயும், உலகத்தாருக்காயும், நம்முடைய சத்துருக்களுக்காகவுங்கூட உள்ள அன்பில் பரிபூரணத்தினைக் குறிக்கின்றதாய் இருக்கும். இந்தமட்டிலுமான குணலட்சணத்தின் வளர்ச்சி அளவானது நம்முடைய கிறிஸ்தவ அனுபவங்களில் கூடுமானமட்டும் சீக்கிரமாகவே அடையப்பெற வேண்டும் மற்றும் இதை அடைந்த பிற்பாடு, நாம் எப்போது மரித்தாலும், முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவதற்குப் பாத்திரவான்களாகத் தேவனால் கருதப்படும் வண்ணமாக வளர்ச்சி அளவு காணப்பட வேண்டும்.

இன்னொரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், "பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்கான அந்த இலக்கு" என்பது, நம்முடைய கர்த்தருக்கொத்த குணலட்சணத்தில் உறுதியடைதலைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்துவுக்கு ஒத்த இருதய நிலையினை அடைந்த பிற்பாடு, நாம் அதில் உறுதியாய்க் காணப்பட வேண்டும் மற்றும் கர்த்தர் நம்மீது வர அனுமதிக்கின்றதான சோதனைகள் அனைத்திலும், நம்முடைய சொந்த பலத்தில் இல்லாமல், மாறாக நம்முடைய மீட்பரின் பலத்தில் நாம் ஜெயம்கொண்டவர்களாக அவரால் கருதப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்ளப்பட வேண்டும். "குணலட்சண வளர்ச்சி" எனும் இலக்கை நாம் அடைவது போன்று, "உறுதியடைந்த குணலட்சணம்" எனும் இந்த இலக்கானது, நமது கிறிஸ்தவ அனுபவங்களின் ஆரம்பக்காலங்களிலேயே அடையப்படுகிறதில்லை. நமது ஓட்டத்தினுடைய இறுதிவரை நல்லப் போராட்டம் போராடுவதன் மூலம், நீதியின் கொள்கைகளுக்கான, தேவனுக்கான, சகோதர சகோதரிகளுக்கான, நம்முடைய சத்துருக்களுக்கான அன்பில், நம் குணலட்சணங்களை நாம் உறுதியடையப் பண்ணுகின்றோம். இவ்விதமாய் உண்மையுள்ளவர்களாய்க் காணப்படுவோமானால், நாம் மகிமை, கனம் மற்றும் அழியாமைக்கான பரிசினை வெல்வோம்.

## அர்ப்பணமல்ல, பூரணமாகுதலே இலக்காய் இருக்கின்றது

நம்முடைய அர்ப்பணிப்பை, இலக்கு என்று எண்ணக்கூடாது; ஏனெனில் நமக்கான பரீட்சைகளும், நமக்கான சோதனைகளும் நம்முடைய அர்ப்பணிப்பிற்குப் பின்தான் வருகின்றதே ஒழிய, அர்ப்பணிப்பிற்கு முன்பல்ல. ஒருவன் தன்னை அர்ப்பணம் பண்ணியுள்ளான் என்பதினால் இலக்கில் காணப்பட முடியாது; மாறாக ஒருவன் சோதனையைச் சகித்தவனாகவும், இவ்வாறாக தன் அர்ப்பணிப்பு இருதயத்திலிருந்து வந்துள்ள ஒன்று என்றும், தேவனுக்கடுத்த ஊழியங்களின் விஷயத்தில் தன் அர்ப்பணிப்பில் தான் நேர்மையுள்ளவனாய் இருக்கின்றான் என்றும் நிரூபிப்பவனாகவும் காணப்படுவதினாலேயே ஒருவனால் இலக்கில் காணப்பட முடியும். அர்ப்பணம்பண்ணின அடுத்த கணமே, இலக்கு அடையப்படுகின்றது என்று நாம் கற்பனை பண்ணிக்கொள்ள முடியாது. குணலட்சணத்தில் ஒரு குறிப்பிட்ட அளவு வளர்ச்சி அடையப்பட வேண்டும்; தேவன் அந்நபரை நித்திய ஜீவனுக்குப் பாத்திரவானாய் எண்ணத்தக்கதாக, குணலட்சணத்தில் ஏதோ ஓர் இலக்குக் காணப்பட வேண்டும்.

குணலட்சணத்தின் விஷயத்திலுள்ள தேவனுடைய அளவுகோலாகிய பூரணமானது, எந்த ஒரு ஜீவதளத்திலும் காணப்படும் யாரொருவர் மீதும் அவர் வர அனுமதிக்கின்றதான சோதனைகள் எவைகளாய் இருப்பினும், அவைகளின் கீழ் நேர்மை மற்றும் கீழ்ப்படிதல் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டும். இந்தச் சோதனைகளை ஜெயம் கொண்டு கடந்துவராத யாரொருவரும், நித்திய ஜீவன் எனும் பரிசினைப் பெற்றுக்கொள்வதில்லை. சபையானவள் "மகிமை, கனம் மற்றும் அழியாமையை" - அவளது கர்த்தரோடு உடன் சுதந்தரத்தை - அடைவதற்குப் பாத்திரமாய்க் காணப்படுவதற்கு வேண்டி, சுவிசேஷ யுகம் முழுவதிலும் சோதனையின் கீழ்க் காணப்படுகின்றாள் என்று நாம் உணர்ந்துகொள்கின்றோம் (உரோமர் 8:17).

மேசியாவின் யுகம் முழுவதிலும், உலகமானது "கிறிஸ்துவினால்" சோதிக்கப்படும் என்றும், இந்தச் சோதனைகளைக் கடந்து வந்த பிற்பாடும், அவர்கள் நித்திய ஜீவன் எனும் வெகுமானத்தைப் பெற்றுக்கொள்வதில்லை - அதாவது கிறிஸ்துவினுடைய ஆளுகையின் இறுதியில் கொஞ்சம் காலம் சாத்தான் அவிழ்த்துவிடப்படுவதன் வாயிலாக உலகத்தாரை, "தேவன்" சோதித்து நிரூபிப்பதற்கு முன்னதாக, அவர்கள் நித்திய ஜீவன் எனும் வெகுமானத்தைப் பெற்றுக்கொள்வதில்லை என்றும் வேதவாக்கியங்களிலிருந்து நாம் அறிந்துகொள்கின்றோம். (1 கொரிந்தியர் 15:24; வெளிப்படுத்தல் 20:7-10). உலகமானது இப்படிக் கிறிஸ்துவினாலும், தேவனாலும் - இருவராலும் சோதிக்கப்படப்போகின்றது எனும் உண்மையானது, எந்த ஒரு ஜீவதளத்திலும் - அவருக்கு நேர்மையாயும், கீழ்ப்படிதலுள்ளவர்களாயும் காணப்படும் யாவராலும் குணலட்சணத்தின் விஷயத்தில் அடைந்தாக வேண்டிய ஓர் அளவுகோலினை/தரநிலையினை அல்லது இலக்கினைத் தேவன் கொண்டிருக்கின்றார் எனும் கருத்தினை உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

மேசியாவினுடைய ஆளுகையின்போது உலகத்தாரால் அடையப்பட வேண்டிய குணலட்சணத்தின் இந்த இலக்குக் குறித்து, பரிசுத்த பவுல் அடிகளால் நம்முடைய ஆதார வசனத்தில் பேசப்படவில்லை என்றாலும், மனுக்குலத்தாரும் அடைய வேண்டிய இத்தகைய குணலட்சண-இலக்கு இருக்கின்றது என்பது விளங்குகின்றது. அக்காலங்களில் இலக்கினை அடைபவர்கள் மனுஷீக தளத்தில், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். ஆனால் அப்போஸ்தலனால் குறிப்பிடப்படும் இலக்கினை அடைபவர்களுக்குத் திவ்விய தளத்தில் நித்திய ஜீவன் வழங்கப்படும்.

## உறுதியடைந்த குணலட்சணம் எனும் இலக்கு

இலக்கை அடைந்த சிறந்த மாதிரியாக அப்போஸ்தலன் திகழ்கின்றார். நாம் புரிந்திருக்கிறவரை, அவர் எந்நேரத்திலும் மரிப்பதற்கு ஆயத்தமாயிருந்தார்; ஆகையால் குணலட்சணத்தின்-வளர்ச்சி எனும் இந்த இலக்கானது, அவரால் அடையப்பெறாமல் இருக்கவில்லை. அவர் இன்னமும் பந்தயப்பொருளை அடையவில்லை மற்றும் அவரது மறுரூபமாகுதல் வரும் வரையிலும், அவரால் அதை அடைய முடியாது. "அவரை அன்புகூருகிறவர்களுக்கென்று" தேவன் வைத்து வைத்திருந்த யாவையும் தேவன் தனக்குத் தருவார் என்ற நம்பிக்கையில், அப்போஸ்தலன் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருந்தார் (1 கொரிந்தியர் 2:9). மரணம் சம்பவிப்பதற்குச் சற்று முன்புதான் குணலட்சண-வளர்ச்சி எனும் இந்த இலக்கினை தான் அடையப்போவதாக அப்போஸ்தலன் கூறினார் என்று நாம் எடுத்துக்கொள்ள முடியாது. இது அர்த்தமற்றக் கருத்தாகும்.

நமது கர்த்தராகிய இயேசு தம்முடைய அர்ப்பணிப்பினுடைய காலப்பகுதியில் பூரண குணலட்சணம் எனும் இலக்கில் காணப்பட்டவராய் இருந்தார்; மற்றும் அவர் தம்மை இலக்கிலேயே

காத்துக்கொண்டவராய் இருந்தார். எந்தவொரு நேரத்திலும் அவர் ஒரு பலியாக ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவராய் இருந்தார். அவர் தம் ஜீவனை அர்ப்பணிப்பதும், அதைத் தமக்கென்று எடுக்காமல் இருப்பதும்தான் அவர் பங்காய் இருந்தது. அவருக்கான பிதாவினுடைய வேளை வருவது வரையிலும், யூதர்கள் அவர் மீது கைப்போடாத வண்ணம் காரியங்களை ஒழுங்குப்படுத்துவது பிதாவின் பங்காய் இருந்தது. அவர் செய்துவந்த எல்லாக் காரியங்களிலும், அவர் தம்மைப் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தவராய் இருந்தார். தமக்கான "பாத்திரத்தைக் குறித்துக்" கூறுகையில், அது பிதாவினால் தமக்கு ஆயத்தம்பண்ணப்பட்ட ஒன்று என்று நமது கர்த்தர் கூறினார் (யோவான் 18:11).

ஒருவேளை நமது கர்த்தர் தமது மரணத்திற்கான நேரத்தையும், விதத்தையும் அவர் தாமே தீர்மானித்திருந்திருப்பாரானால், அப்போது அவர்தான் பாத்திரத்தை ஊற்றினவராய் இருந்திருப்பார். ஒருவேளை யூதர்கள்தான் இவ்விஷயங்களைத் தீர்மானித்திருந்திருப்பார்களானால், அப்பொழுது அவர்கள்தான் பாத்திரத்தை ஊற்றினவர்களாக இருந்திருப்பார்கள். ஆனால் நமது கர்த்தரும் சரி, யூதர்களும் சரி இவைகளைத் தீர்மானித்திடவில்லை; ஏனெனில் காலமும், விதமும் தீர்க்கத்தரிசிகளினால் முன்னறிவிக்கப்பட்டிருந்தது. நமது கர்த்தர் பாத்திரத்தை எடுத்தார் மற்றும் அதைத் தமக்கான பிதாவின் ஏற்பாடாக ஏற்றுக்கொண்டார். பிதாவின் வழிநடத்துதலானது ஒருவேளை ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே கர்த்தரை, அவரது மரணத்திற்கு நேராய் வழிநடத்தியிருக்குமாயின், ஒருவேளை வெகு முன்பே கர்த்தர் சிலுவையில் அறையப்பட வேண்டும் என்று பிதாவின் சித்தம் காணப்பட்டிருக்குமானால் . . . இப்படி இருந்தாலும்கூடக் கர்த்தருக்கு அதில் சம்மதமே. "அவர் பட்டப் பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்" (எபிரெயர் 5:8; 2:10).

யோர்தானில் நமது கர்த்தர் பரிபூரணராகவும், பூரண அர்ப்பணிப்பைப் பண்ணினவராகவும் காணப்பட்டது, பரிசுத்த ஆவியினுடைய இறங்கிவருதல் மூலமாயும், தேவனுடைய சத்தத்தின் வாயிலாகவும் காண்பிக்கப்பட்டது (மத்தேயு 3:16, 17). அவர் பரிபூரண சரீரத்தையும் பெற்றிருந்தார் - அது பூமிக்குரிய சரீரமாயிருந்தது - அதிலே புதுச்சிருஷ்டி செயல்பட்டது. ஆனால் அவரது கீழ்ப்படிதலானது பரீட்சிக்கப்பட வேண்டும் - மரணம் வரையிலுமான அவரது நேர்மை பரீட்சிக்கப்பட வேண்டும். எந்த அளவிலான சோதனைகளுக்கு நமது கர்த்தர் உட்படுத்தப்பட்டாலும், அது பிதாவினுடைய ஞானத்தின்படி சரியான அளவாகும். நமது கர்த்தர் தம்முடைய அர்ப்பணிப்பைத் தொடர்ந்து வந்த எந்தவொரு காலப்பகுதியில் மரித்திருந்தாலும், அவர் ஜெயம்கொண்டவராகவேதான் இருந்திருப்பார். நமது கர்த்தர் உண்மையில் மரித்த காலப்பகுதிக்கும் முன்பாக உள்ள ஒரு காலப்பகுதியில் ஒருவேளை சீக்கிரமாகவே மரித்திருந்திருப்பாரானால், அப்படி மரித்த காரியமானது, நமது கர்த்தருடைய உண்மைத்தன்மை மற்றும் நேர்மை விஷயத்தில் நிரூபணங்களை அவரிடம் பிதா அதிகம் எதிர்ப்பார்க்கவில்லை என்பதாக இருந்திருக்கும்.

## நமது கர்த்தர் அர்ப்பணிப்பின்போது ஜெயம்கொண்டவராய் இருந்தார்

"நமது கர்த்தர் தம்மை அர்ப்பணித்தபோது, அவர் புதுச்சிருஷ்டியாக ஜெயம்கொண்டவராய் இருந்தார் என்று சொல்வது சரியா?" என்று யாரேனும் கேட்கலாம்.

ஆம்! என்பதே எங்கள் பதிலாய் இருக்கின்றது. ஜெயம்கொண்டவர் என்பவர் வென்றவர் ஆவார். எனினும் இவ்வார்த்தையானது ஒரு மனுஷன் ஜெயமடைவதில் முடிவடைந்துவிட்டார் என்று குறிக்காது; ஏனெனில் "அவர் அவர்களை வெற்றிமேல் வெற்றியடையப்பண்ணுவார்" என்றும் நாம் சிலசமயம் சொல்வதுண்டு. இப்படியே நமது கர்த்தருடைய விஷயத்திலாகும். அவர் மரணபரியந்தம் ஜெயங்கொள்வதில் உண்மையுள்ளவராய்த் தொடர்ந்தார்; ஆனால் அவர் அப்போது (அர்ப்பணத்தின்போது) மரணபரியந்தம்

ஜெயம்கொண்டவர் என்பதாகக் கருதப்படவில்லை. பிதாவுக்கும், மனிதனாக இருந்த நமது கர்த்தருக்கும் இடையில் மத்தியஸ்தர் யாரும் இருக்கவில்லை மற்றும் ஒருவேளை தேவனுடைய சித்தத்தினின்று விலகும் பட்சத்தில், புதுச்சிருஷ்டியாகிய அவருக்குப் பரிந்து பேச யாருமில்லை; அவருக்கான மூடுதலாக வஸ்திரமும் ஏதுமில்லை; தேவ சித்தத்தினின்று சிறு திசைமாறுதல்கூட அவருக்கு இரண்டாம் மரணத்தைக் கொண்டுவருகின்றதாய் இருந்திருக்கும்.

நமது கர்த்தர் தம்முடைய அர்ப்பணத்தின்போது, அதாவது தம் மாம்சத்தின் மீது முதலாம் மாபெரும் ஜெயத்தினை அடைந்தபோது அவர் ஜெயம்கொண்டவராய்க் காணப்பட்டார் என்பதற்கு வேதவாக்கியங்கள் இரண்டு நிழல்களை நமக்குத் தருகின்றதாய் இருக்கின்றது. அவைகளில் முதலாவதாகிய பாவநிவாரண நாளில் காளை கொல்லப்படுதலானது, நமது கர்த்தர் தம்மை யோர்தானில் அர்ப்பணித்தத் தருணத்தின்போது, அவரது மனுஷீகம் மரித்ததை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது (லேவியராகமம் 16:11). அங்கு அவர் ஒரு வெற்றியினை அடைந்தவராக இருந்து, மேலும் தமது ஓட்டத்தினுடைய இறுதி பரியந்தம் ஜெயம் கொள்பவராய்த் தொடர்ந்துகொண்டிருந்தார்.

இரண்டாம் நிழல் வெளிப்படுத்தல் 5:2-7-ஆம் வசனங்களில் காணப்படுகின்றது. இங்கு நமது கர்த்தர் புதிதாய் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினால் அடையாளப்படுத்தப்படுகின்றார். இந்தப் புதிதாய் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்பது தம் ஓட்டத்தை முடிக்கையில், மரித்த அவரைக் குறிக்காமல், மாறாக தம் அர்ப்பணத்தின்போது, தம் ஓட்டத்தைத் துவங்கினபோதுள்ள அவரைக் குறிக்கின்றதாய் இருக்கின்றது. "புஸ்தகத்தைத் திறக்கவும், அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார்?" என்ற சத்தத்தை யோவான் கேட்டார். யோவான் இதனால் மிகவும் அழுதார் என்று நாம் வாசிக்கின்றோம். "அப்பொழுது மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: நீ அழவேண்டாம்; இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும், தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார் என்றான். அப்பொழுது இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஓர் ஆட்டுக்குட்டி சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன்; அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது; அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம். அந்த ஆட்டுக்குட்டியானவர் வந்து, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார்" (வெளிப்படுத்தல் 5:5-7). தெய்வீகத் திட்டத்தினை தம் வசத்தில் பெற்றுக்கொள்ளும் கனத்திற்குப் பாத்திரவானாக, நமது கர்த்தர் மாத்திரமே காணப்பட்டார். புதிதாய் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானது புஸ்தகத்தைத் திறப்பதை யோவான் நோக்கிப் பார்த்தார் என்றும்கூட நாம் வாசிக்கின்றோம் (வெளிப்படுத்தல் 6).

நமது கர்த்தர் தமது அர்ப்பணத்திற்குள் பிரவேசித்த பிற்பாடு, அவர்தாம் அந்தப் புதிதாய் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாய்க் காணப்பட்டார். அப்போது பிதா யுகங்களுக்கடுத்த மகாபெரும் தெய்வீகத் திட்டம் பற்றின புஸ்தகச் சுருளினை அவர் கரங்களில் கொடுத்திட்டார்; அந்தப் புஸ்தகச் சுருளானது உள்ளும், புறமுமாக எழுதப்பட்டிருந்தது. வெளியில் எழுதப்பட்டிருந்தவைகளை அவரால் ஏற்கெனவே வாசிக்க முடிந்தது. ஆனால் ஆவிக்குரிய காரியங்கள் பற்றியதான தகவல்கள் காணப்பட்டதான உள்புறமானது முத்திரையிடப்பட்டிருந்தது.

நமது கர்த்தர் தம்முடைய ஞானஸ்நானத்திற்குப் பின்னர், தண்ணீரிலிருந்து வெளியே வந்தவுடனே, அவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டார் மற்றும் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்ள துவங்கினார். "வானம் (பரம காரியங்கள்) அவருக்குத் திறக்கப்பட்டது." அவர்

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகக் கருதப்பட்ட சமயமானது, புஸ்தகச் சுருள் அவருக்குக் கொடுக்கப்பட்ட தருணமானது, அவரது அர்ப்பணிப்பின் தருணமாய்க் காணப்பட்டது.

## கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தல் - முதலாம் நிபந்தனையாகும்; பொறுமையோடே சகித்துத் தொடர்தல் - இரண்டாம் நிபந்தனையாகும்

குணலட்சணத்தினுடைய வளர்ச்சி மற்றும் அது உறுதியடைதலின் காரியத்தினுடைய நல்லதொரு விளக்கமானது குயவனுடைய வேலையின் மூலம் கிடைக்கின்றது. முதலாவதாக அவர் சரியான வகை களிமண்ணைத் தெரிந்தெடுக்க வேண்டும்; ஏனெனில் சிலவகை களிமண் மிகவும் கரடுமுரடான பாத்திரங்களை உருவாக்கிடும்; வேறு சில வகைகளோ காயவைக்கப்படும்போது விரிசல்/கீறல் அடைகின்றன அல்லது சிதைந்துபோகின்றன மற்றும் வேறு சில வகைகள் கடுமையான சூட்டினைத் தாங்கிக்கொள்வதில்லை. சரியான வகை களிமண்ணைத் தெரிந்தெடுத்த பிற்பாடு, அம்மண்ணானது குயவன் பயன்படுத்தத்தக்கதான பக்குவமான நிலைக்கு வரும்வரைக் குயவனால் - பொடியாக்கப்படுதல், கலக்கப்படுதல் மற்றும் ஈரமாக்கப்படுதல் எனும் அநேக செயல் முறைகளுக்கு அம்மண்ணானது உட்படுத்தப்படுகின்றது. பிற்பாடு விரும்பிய பாத்திர வடிவத்திற்கு அது வனைந்தெடுக்கப்படுகின்றது. கவனமாய்ப் பாத்திரமானது வடிவமைக்கப்பட்டு, காயவைக்கப்படுகின்றது. பின்னர் அது சூளையில் வைக்கப்பட்டு, இரண்டு அல்லது மூன்று பகல்கள் மற்றும் இரவுகளுக்குக் கடுமையாய்ச் சூடேற்றப்படுகின்றது. சூளையிலிருந்து வெளியே எடுக்கப்படுவதற்கு முன்னதாக, அது சூடு தணிய நெடுநேரம் தேவைப்படுகின்றதாய் இருக்கின்றது. ஆனாலும்கூட அது மேல்பூச்சிற்குள் முக்கி எடுக்கப்படாதது வரையிலும், அது நுண்துளைகளுள்ள ஒழுகலான பாத்திரமாகவும், பயன்படுத்த முடியாத பாத்திரமாகவுந்தான் காணப்படும்.

மீண்டுமாக அது மேல்பூச்சிற்கான சூளையின் சூட்டிற்கு உட்படுத்தப்படுகின்றது; இது மேல்பூச்சினை உருகப்பண்ணுவதோடு, அந்த மேல்பூச்சை மேற்பரப்பு முழுவதிலும் பளப்பளப்பான மேல்பூச்சாக்கி, பாத்திரத்தை வழுவழுப்பாகவும், அழகாகவும் ஆக்குகின்றது. ஒருவேளை பாத்திரமானது பீங்கானிலானது எனில், சிங்காரிப்பினால் கண்களுக்கு இன்னும் அதிக கவர்ச்சியானதாக்கிட, இந்தவொரு கட்டத்தில்தான் அலங்காரமும், முலாம் பூசுதலும் செய்யப்பட வேண்டும் மற்றும் பாத்திரமானது மறுபடியுமாக மூன்றாம் முறை சுடப்படுவதற்கென்று சூளைக்குள் வைக்கப்பட வேண்டும். முன்புள்ள நெருப்புகள் அனைத்திலும் தாங்கி நின்ற சில பாத்திரங்கள் இந்த ஒரு கட்டத்தில் தாங்கி நிற்பதில்லை மற்றும் குப்பையில் வீசப்படுகின்றது. ஆனால் ஒருவேளை கடைசி சோதனையில் பாத்திரமானது வெற்றிகரமாய்க் கடக்குமானால், அது எதற்கென்று வடிவமைக்கப்பட்டதோ, அதற்குப் பயன்பட ஆயத்தமாகின்றதாய் இருக்கும்.

இப்படியாகவே நம் கர்த்தர் விஷயத்திலும் காணப்பட்டது. அவர் பரிபூரண மனுஷனாக மாத்திரம் காணப்படாமல், அவரது சொந்த சித்தமும், பிதாவின் சித்தத்திற்கு முழுமையாய்க் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுக்கப்பட்டிருந்தது. சோதனைகள் வந்தபோது, எவ்வித விலகிச் செல்லுதலோ, எவ்வித நேர்மையின்மையோ, எவ்வித வளைந்துகொடுத்தல்களோ இருக்கவில்லை. அவர் சரியான வகைக் களிமண்ணாய்க் காணப்பட்டார். அவரது இருதயம் (மனம்) ஏற்ற வகையாயிருந்தது. இப்படியாகவே நம் விஷயத்திலும்கூட இருக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படத் தகுதியானவர்களாகவும், மகா வெகுமானத்தினைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரவான்களாகவும் இருப்பவர்கள் அவரது குணலட்சணத்திற்கு ஒத்த நிலையில் இது விஷயத்தில் காணப்படுவார்கள்; அவர்கள் தேவ சித்தத்திற்கு நேர்மையாய்க் காணப்படுவார்கள். பிதாவின் சித்தத்தை உறுதிப்படுத்திடுவதற்கும், அதைச் செய்வதற்கும் மாத்திரம்

இவர்கள் பிரயாசம் எடுக்காமல், இன்னுமாக அந்தச் சித்தத்திற்கு எல்லா விதத்திலும் இருதயத்தில் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்தவர்களாய் இருப்பார்கள். அவர்கள் குடிக்க வேண்டிய "பாத்திரமானது," நமது கர்த்தர் குடித்த அதே பாத்திரமாகும் மற்றும் அதை முழுவதுமாய் அவர்கள் பருகிட வேண்டும்.

அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றிடுவதற்கு முதலாவதாக நாம் குணலட்சண-வளர்ச்சி எனும் அந்த இலக்கினை அடைந்தாக வேண்டும்; மற்றும் அனைத்தையும் செய்து முடித்த பிற்பாடு, நாம் அதிலேயே நிற்க வேண்டும். மரணத்தின் தருவாயில்தான் தகுதியான குணலட்சண-வளர்ச்சி எனும் இலக்கினை ஒருவர் அடைவார் என்று நாம் சிந்திப்பது சரியல்ல எனும் கருத்தினை மறுபடியுமாக இங்குக் கூறுவது நலமே. குணலட்சணமானது முடிந்த மட்டும் சீக்கிரமாய் அடையப்பட வேண்டும். "இலக்கு" என்று அழைக்கப்படுகின்ற இந்தக் குணலட்சண-வளர்ச்சியினை அடைந்த பிற்பாடு, நாம் உண்மையுள்ளவர்களாய் நிற்க வேண்டும் மற்றும் உலகம், மாம்சம், பிசாசின் எதிர்ப்புகளினால் இலக்கினின்று தள்ளப்பட்டுப் போய்விடக்கூடாது. பரிசினை வெல்வதற்கு முன்னதாக இத்தகைய எதிர்ப்புகள் அனைத்தும் சகிக்கப்பட வேண்டும். அங்கீகரிக்கப்படக்கூடிய நிலைமையிலும், கர்த்தரால் பயன்படுத்தப்பட்ட நிலைமையிலும் காணப்படும் உயர்பண்புடையவர்களில் சிலர், கடுமையான சில அனுபவங்கள் வாயிலாகக் கடந்து போகப்பண்ணப்பட்டதால்தான், இலக்கை வந்தடைந்தவர்களாய் இருந்துள்ளனர்.

## எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது

அப்போஸ்தலனின் கருத்துப் பின்வருமாறு இருப்பது போன்றுள்ளது: அதென்னவெனில், நடத்தை மற்றும் குணலட்சண-வளர்ச்சி விஷயத்தில் தேவன் நிர்ணயித்துள்ள ஒரு குறிப்பிட்ட எல்லைக்கோடு உள்ளது; மேலும் அது ஓட்டத்திலிருக்கும் அனைவருக்கும் ஒன்றுபோல் உள்ளது. கிறிஸ்துவின் ஜீவியமே விதியாகும் / பிரமாணமாகும். நாம் இலக்கை அடைந்து, பரிசினை அடைய வேண்டுமானால், நாம் இந்தக் கோட்டை அல்லது விதியை அல்லது இலக்கினைப் பின்பற்றிட வேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் ஒரே மனதினை அல்லது சித்தத்தினைக் கொண்டவராய் இருந்தார். "ஒன்றையே செய்கிறேன்" என்று அவர் கூறியுள்ளார். அவர் இருமனமுள்ள மனுஷனல்ல; ஒரு சமயம் கர்த்தருக்கு ஊழியம் புரிய வேண்டுமென்றும், இன்னொரு சமயம் தனக்கே ஊழியம் புரிய வேண்டுமென்றும், பின்னர் எதிராளி முதலானவர்களுக்கு ஊழியம் புரிய வேண்டுமென்றும் அவர் எண்ணிக்கொண்டிருக்கவில்லை. தன்னுடைய தாலந்துகள் அனைத்தும் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று கொடுத்திட வேண்டும் எனும் திவ்விய கோரிக்கையினை அவர் ஏற்றுக்கொண்டிருந்தார். தேவன் பண்ணியுள்ளதான மாபெரும் வாக்குத்தத்தத்தினை அவர் தன் மனதிற்கு முன்பாகக் கொண்டிருந்தார். அவரைப் பொறுத்தமட்டில், வாழ்க்கையில் அவருக்கு ஒரேயொரு காரியமே இருந்தது.

சுவிசேஷயுகத்தில் தேவன் ஒரு விசேஷித்த அழைப்பைக் கொடுத்திருக்கின்றார் என்றும், அந்த அழைப்பினை ஏற்றுக்கொண்டுள்ளவர்களுக்கு அருமையானவைகள் குறித்த "மகாமேன்மையும், அருமையுமான வாக்குத்தத்தங்கள்" காணப்படுகின்றன என்றும் வேதவாக்கியங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. அழைப்பினை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும், இந்த வாக்குத்தத்தங்களை அடையத்தக்கதாக, ஜீவியத்தின் அற்ப காரியங்கள் அனைத்தையும் நடைமுறையில் மறந்துவிட வேண்டும். பரிசை வெல்வதற்கு ஒரு வழியுண்டு - அது தேவனிடம் உண்மையினையும், கீழ்ப்படிதலையும், நேர்மையினையும் வெளிப்படுத்துவதன் மூலமாகும். தாலந்தல்ல, "குணலட்சணமே" நம்மை ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்களாக்குகின்றது. நமக்கு இருப்பது போன்று அல்லது நமக்கு

இருப்பதைவிடச் சிறந்த அறிவாற்றல்களைத் தேவனால் யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்க முடியும். சரீர பலம் அல்லது சரீர சகிப்புத்தன்மையின் காரணமாகத் தேவன் யாருக்கும் இராஜ்யத்தில் இடம் அருளுவதில்லை. உலகப்பிரகாரமான வளங்கள் அல்லது மனுஷர் நிமித்தமான கனங்கள் அல்லது ஐசுவரியங்கள் காரணமாய்த் தேவன் யாரையும் இராஜ்யத்தில் அனுமதிப்பதில்லை.

## ஓட்டப்பந்தயத்தின் நிபந்தனைகள்

அப்படியானால் தேவன் எதைத் தேடுகின்றார்? அவர் எதற்காக நம்மை அழைத்திருக்கின்றார்? "மகிமைக்கும், காருண்யத்திற்கும்" தேவன் நம்மை அழைத்துள்ளதாக அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுகின்றார் (2 பேதுரு 1:3). ஓட்டத்தில் ஓடுகிறவர்களிடத்தில் தேவன் சில காரியங்களை எதிர்ப்பார்க்கின்றார். யாரும் பெருமைகொள்ளக்கூடாது என்றும், தாழ்மையை உடையவர்களாய் இருக்க வேண்டுமென்றும் தேவன் எதிர்ப்பார்க்கின்றார். மனதின் விஷயத்தில் பெலவீனமானவர்களாகவும், ஊசலாடுகிறவர்களாகவும் காணப்படும் யாரையும் தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் இராஜ்யத்தில் ஒருவராய் அவர் பெற்றிருப்பதில்லை. ஒருவன் பலமான அறிவாற்றல் பெற்றிராமல் இருக்கலாம், ஆனாலும் தான் பலமான சித்தம்கொண்டவனாக, உறுதியான தீர்மானம்கொண்டவனாக இருப்பதாகவும், பரிசினைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஜீவியத்தின் காரியங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு இருப்பதாகவும், அவன் தன்னைத் தேவனுக்கு வெளிப்படுத்திட வேண்டும். அவன் தன் நேர்மையினையும் தேவனுக்கு நிரூபித்திட வேண்டும். அவன் மகிமையை நாடுகிறவனாக மாத்திரம் இராமல், தேவனிடத்திலான தன் பொறுப்புகளை அவன் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும் மற்றும் மதித்துணர்ந்திட வேண்டும்.

நேர்மை என்பது குணலட்சணத்திற்கான மாபெரும் பரீட்சைகளில் ஒன்றாகும் - தேவனுக்கும், அவரது வார்த்தைக்கும் நேர்மையாய் இருத்தல் வேண்டும்; கொள்கைகளுக்கு நேர்மையாய் இருத்தல் வேண்டும். என்ன நடந்திட்டாலும் கிறிஸ்தவன் தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஒப்புக்கொடுத்திருக்க வேண்டும்; உண்மையுள்ளவனாய், நேர்மையுள்ளவனாய் இருக்க வேண்டும். இத்தகையவர்களுக்கே, தேவன் ஜெயங்கொள்பவர்களுக்கு வாக்களித்துள்ள மகா ஆசீர்வாதங்களைக் கொடுப்பார் என்று நாம் எதிர்ப்பார்க்கலாம். ஆகையால் தேவனுக்கு ஊழியஞ்செய்யத்தக்கதாகவும், பிதாவைப் பிரியப்படுத்தத்தக்கதாகவும், இவ்விதமாய் அவரது குமாரனோடு உடன்சுதந்தரத்துவம் எனும் இந்த மகிமையான வெகுமானத்தை அடையத்தக்கதாகவும், அப்போஸ்தலன் மற்ற அனைத்தையும் துறந்தது சரியே என்று நாம் காண்கின்றோம்.

## தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும்

அர்ப்பணம் பண்ணுபவர்கள் அனைவருக்குமல்ல, மாறாக தேவன் யாருடைய அர்ப்பணிப்பை எல்லாம் ஏற்றுக்கொள்கின்றாரோ, புதுச்சிருஷ்டிகாளகும்படிக்கு அவர் யாரையெல்லாம் தம் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கின்றாரோ - அவர்கள் மரிப்பதற்கு முன்னதாக உறுதியான குணலட்சணம் எனும் இந்த இலக்கினை அடைவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வார்கள். இவர்கள் முழுமையான பரீட்சையைப் பெற்றுக்கொள்வார்கள் (எபிரெயர் 12:6). இந்த வாக்குத்தத்தமானது - நமது கர்த்தருக்கொத்த குணலட்சணத்தினுடைய வளர்ச்சியில் அவர்களை வளர்த்துவதற்கு அவசியமான சோதனைகளையும், துன்பங்களையும் அவர்கள் பெற்றுக்கொள்வார்கள் என்றும், அவர்களின் இந்த அனுபவங்கள் எதுவும் இந்த வளர்ச்சியினைத் தடைப்பண்ணுவதில்லை என்றும் உறுதியளிக்கின்றதாய்

இருக்கின்றது. கிறிஸ்துவுக்கொத்த குணலட்சண-வளர்ச்சியினை அடைவதற்கான முழு வாய்ப்பினையும் அவர்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாகத் தேவன் பார்த்துக்கொள்வார். பாவத்திற்கு நேராய் விரும்பியும், துணிந்தும் திரும்புபவர்கள், இரண்டாம் மரணத்திற்குள்ளாக விழுவார்கள். மற்றவர்கள் ஆசாரிய வகுப்பினின்று, திரள்கூட்டத்திற்குள்ளாக வீழ்ந்துபோவார்கள்; இவர்களுக்கும்கூடத் தேவனுக்குத் தங்கள் நேர்மையினை வெளிப்படுத்துவதற்குப் போதுமான காலம் தேவை.

தம்முடைய அர்ப்பணத்தின்போது, நமது கர்த்தர் தம்முடைய பரிபூரணத்தின் காரணமாக, இலக்கில் காணப்பட்டார். நம்முடைய அர்ப்பணிப்பின்போது நாம் இலக்கில் காணப்படுகிறதில்லை; ஏனெனில் நாம் அபூரணர்களாவோம். ஆனால் நாம் கர்த்தருடைய சித்தத்தைச் செய்ய விரும்புகின்றோம்; அந்தச் சித்தத்திற்குத் தெரிந்து, விரும்பிக் கீழ்ப்படியத்தக்கதாக, அந்தச் சித்தம் என்ன என்று உறுதிப்படுத்திடுவதற்கு நாம் நம்மையே ஒப்புக்கொடுத்திருக்கின்றோம். நமக்கு இருப்பதுபோன்று, நமது கர்த்தருடைய விஷயத்தில், அவர் ஜெயங்கொள்ளத்தக்கதாக அவருக்கு எந்த அபூரணங்களும் இருக்கவில்லை. அவரது அர்ப்பணிப்பின்போது, அவர் தம்மை அன்புகூருவதுபோன்று தம் அயலானை அன்புகூர்ந்தார் மற்றும் தம்முடைய முழு இருதயத்தோடு தேவனை அவர் அன்புகூர்ந்தார்.

நாம் நம்மை அர்ப்பணம் பண்ணினபோது, இப்படிச் செய்வதற்கு நாம் ஒப்புக்கொண்டோம்; ஆனால் இப்படிச் செய்வதன் அர்த்தமென்ன என்பதை அப்போது நாம் அறியாமல் இருந்தோம்; அதாவது பரிசுத்த பேதுரு மறுரூப மலையினுடைய காட்சியின்போது, தான் பேசுவது இன்னது என்று அறியாமல்: "ஆண்டவரே, நாம் இங்கே இருக்கிறது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு கூடாரமுமாக, மூன்று கூடாரங்களைப் போடுவோம்" என்று பேசினது போன்றதாகும் (மத்தேயு 17:4). இராஜ்யத்தில் இயேசுவினுடைய வலது பாரிசத்திலும், இடது பாரிசத்திலும் உட்காரும்படி தங்களை அனுமதித்திட வேண்டுமென்று இயேசுவிடம் கேட்டுக்கொண்ட அந்த இரண்டு அப்போஸ்தலர்களும், தாங்கள் கேட்பது இன்னது என்று அறியாதிருந்தார்கள். "நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்கும் தெரியவில்லை" என்று நமது கர்த்தர் அவர்களிடம் கூறினார் (மத்தேயு 20:22).

நம்முடைய அர்ப்பணிப்பின்போது, நாம் என்ன செய்கிறோம் என்பதை முழுதும் புரிந்துகொள்ளாமல் நாம் இருந்தபடியால், இலக்கை அடைவதற்கும் நாம் அதிகமாய் ஓட வேண்டியிருந்தது. இப்படிச் செய்வதற்கு நமது கர்த்தருக்கு அவசியமில்லாதிருந்தது; ஏனெனில் அவர் பூரணர் ஆவார். அர்ப்பணத்தின்போது, அவர் பூரண குணலட்சணம் எனும் இலக்கில் காணப்பட்டபடியால், அவர் ஒருவேளை இதற்குப் பிற்பாடு எந்தவொரு காலப்பகுதியிலாகிலும் மரித்திருந்திருப்பாரானால், அவர் பிதாவிடமிருந்து வெகுமானம் பெற்றுக்கொண்டிருந்திருப்பார்; அவரைக் குறித்துப் பிதா: "இவர் என் நேசகுமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்" என்று கூறினார் (மத்தேயு 3:17). பிதாவினால் வாக்களிக்கப்பட்டிருந்த வெகுமானத்திற்குப் பாத்திரமான குணலட்சணத்தின் இலக்கில்தான் தம்முடைய ஞானஸ்நானத்தின்போது, நமது கர்த்தர் காணப்பட்டிருந்திருக்கின்றார் மற்றும் அந்த இலக்கையே நாமும் அடைந்தாக வேண்டும் -அதாவது மகிமையின் தளத்திலோ அல்லது மற்றத் தளத்திலோ நித்தியமான ஜீவனை நாம் அடைவதற்கு முன்னதாக, நாமும் அடைந்தாக வேண்டும்.

பெந்தெகொஸ்தே நாளிற்குப் பின்னர் வெகு சீக்கிரத்தில் இரத்த சாட்சி மரணம் அடைந்திட்ட ஸ்தேவான், மனப்பாங்கில் கர்த்தருக்கு அருகாமையான நிலையில் ஜீவித்திருந்திருக்க வேண்டும்; ஏனெனில் இவரும் நாத்தானியேல் போன்று கபடற்ற "உத்தம இஸ்ரயேலனாய்" இருந்தார். இத்தகைய

மனிதர்களுக்குத் தேவனுடைய சத்தியம் கடந்து வந்த காரியமானது, இவர்களது இருதய மனப்பான்மையைப் பொறுத்தமட்டில், இவர்கள் தங்கள் உபாத்தியராகிய நியாயப்பிரமாணத்தின் கீழ்க் கர்த்தருக்கு வெகு அருகாமையில் காணப்பட்டிருந்தனர் என்பதைக் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது; இதனால் இவர்கள் கிறிஸ்துவிடம் கொண்டுவரப்பட்டபோது, இவர்கள் அவரிடமிருந்து சீக்கிரம் கற்றுக்கொண்டவர்களாய் இருந்தனர். இப்படியாகவே இப்பொழுதுள்ள நம் விஷயத்திலாகும். சரி எது, தவறு எது, சத்தியம் எது, தப்பறை எது என்பவை குறித்து நாம் இயல்பாய்ப் பயிற்றுவிக்கப்பட்டுள்ள காரியங்களில் காணப்படும் வித்தியாசத்தினால், நமது கர்த்தருக்கொத்த குணலட்சணத்தை அடையவும், இப்படியாக நித்திய ஜீவனுக்குப் பாத்திரமானவர்கள் என்று நிரூபிக்கப்படவும் ஒவ்வொருவருக்கும் எத்தனை காலம் எடுத்துக்கொள்ளும் என்று நம்மால் சொல்ல முடியாது.

## கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுங்கள்

கர்த்தருடைய ஜனங்கள் தங்களை அர்ப்பணம் பண்ணுகையிலும், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுகையிலும், அவர்கள் இராஜ்யத்திற்கு ஆயத்தமானவர்களாய்க் காணப்படாமல், மாறாக வளரும்படிக்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றனர் என்று நாம் கருத்துத் தெரிவித்திருந்தோம். இதுவுமல்லாமல் தேவனுடைய ஜனங்கள் அவர்களுடைய அர்ப்பணிப்பின்போது - அவர்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தருணத்தின்போது, பூரணர்களாகக் கருதப்படும் ஒரு கண்ணோட்டமும் இருக்கின்றதல்லவா என்று கேட்கின்றீர்களா? நம்முடைய பதில் . . . ஆம்! அவர்கள் அப்படியாகக் கருதப்படுகின்றனர், ஆனால் அவர்கள் அப்படியாக உண்மையில் இல்லை என்பதேயாகும். அவர்களது பலியினைத் தேவன் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக, மாம்சமானது பூரணமானதாகக் கருதப்படுகின்றது.

ஆனால் இத்தருணத்தின்போது புதுச்சிருஷ்டி கிறிஸ்துவில் பாலகர்களாக மாத்திரமே காணப்படுகின்றது மற்றும் பூரண புருஷனுடைய நிலையினை இன்னமும் அடைந்திடவில்லை. ஆகையால் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பிரவேசிப்பதற்கும், அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, "கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளுகிறதற்குமான" அவசியம் காணப்படுகின்றது. அர்ப்பணிப்பிற்குப் பின்னர், பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டதற்குப் பின்னர் நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ளத் துவங்குகின்றோம். பாலகர் குழந்தையாய் வளருகின்றது மற்றும் குழந்தை புருஷனாகுகின்றது (எபேசியர் 4:14, 13). தேவனுடைய பிள்ளை இராஜ்யத்திற்குத் தகுதியாகிடுவதற்கு முன்னதாக, கிறிஸ்துவாக வளர்ந்திடும் வேலை அவசியமானதாகும். கிறிஸ்துவில் குழந்தைக்கும், இராஜ்யத்திற்குத் தகுதியான ஒருவருக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவெனில் - இராஜ்யத்திற்குத் தகுதியானவன் என்பவன், சோதிக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, ஜெயம்கொண்டவன் என்று தன்னை நிரூபிக்கின்றவனாய் இருப்பதேயாகும்.

நமது கர்த்தர் இயேசு யோர்தானில் காணப்பட்ட போது, அவர் ஜெயம்கொண்டவராக இருந்தார் (எபிரெயர் 10:9). அவர் பூரணராய் இருந்தார் மற்றும் நாம் அர்ப்பணம் பண்ணினபோது நம்முடைய ஓட்டம் தொடர்பாக நாம் உணர்ந்து புரிந்திருந்தவைகளைக் காட்டிலும் இயேசு பூரணராய் இருந்தபடியால் அதிகமான புரிந்துகொள்ளுதலை உடையவராய் இருந்தார். அவர் நம்மிடம்: "பயப்படாதே சிறுமந்தையே;" "திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்" என்று கூறுகின்றார் (லூக்கா 12:38; யோவான் 16:33).

நமது கர்த்தருடைய விஷயத்தில் அவர் தம்மை அர்ப்பணித்த தருணத்தில் ஜெயம்கொண்டவராய் இருந்தபோதிலும், அவர் தம் ஓட்டத்தினை முடிப்பதற்கு முன்புவரையிலும் - உயர்வாய் உயர்த்தப்படுவதற்குரிய பாத்திரமான தம்முடைய நிலைமையை அவர் நிரூபிப்பதற்கு முன்புவரையிலும்,

அவர் உண்மையில் திவ்விய சுபாவமாகிய பரிசினை வெல்லவில்லை; மேலும் கீழ்ப்படிதலுக்கான பரீட்சைகளைச் சிலுவையின் மரணபரியந்தம் பிதா தொடர்ந்திட்டார் என்று நாம் அறிவோம். இவைகளுக்குப் பின்பே நமது கர்த்தர் ஜெயம்கொண்டவரென முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டார் மற்றும் பிதாவோடு அவருடைய சிங்காசனத்தில் உட்காரும்படிக்குக் கர்த்தருக்கு அருள் செய்யப்பட்டது.

## இலக்கில் நிலைநிற்பதே மகா பரீட்சையாகும்

பூரணத்தினைப் பெற்றிருத்தல் என்பது, ஒருவர் இலக்கில் காணப்படுகின்றார் என்பதாகும்; உதாரணத்திற்கு ஆதாம் ஆவார். ஒருவரால் இலக்கையடைய முடியுமா என்பது பரீட்சையாய் இராமல், இலக்கில் நிலைநிற்க ஒருவரால் கூடுமா என்பதே பரீட்சையாகும் - "சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும்" (எபேசியர் 6:13). தேவன் எல்லா விதத்திலும் அங்கீகரிக்கக்கூடியதான குணலட்சணம் எனும் இலக்கினை நாம் அடைகையில், பின்னர் அதிலே நிலைத்திருக்கக்கடவோம். நமது கர்த்தர் உலகத்திற்கு வந்தபோது, அவர் பூரணராக, நேர்மையானவராக, இலக்கில் காணப்பட்டவராக இருந்தார் - தேவனுடைய அளவுகோலாகிய பூரணத்தில் காணப்பட்டார். பாவிகளால் அவருக்கு விரோதமாய்ச் செய்யப்பட்ட விபரீதங்களினால் அவர் இலக்கினின்று விலகிடுவாரா அல்லது இல்லையா என்பதே நிரூபிக்கப்பட வேண்டும். ஆனால் இந்தப் பரீட்சைகளில் எதுவும், இலக்கிலேயே நிலைநிற்க வேண்டுமென்ற அவரது தீர்மானத்தை அவர் புறந்தள்ளத்தக்கதாக அவரை வழிநடத்திடவில்லை. இப்படியாகவே, நம்மால் கூடுமானமட்டும் செய்யப்பட வேண்டும்.

தேவனிடத்திலோ அல்லது தேவதூதர்களிடத்திலோ அல்லது மனுஷர்களிடத்திலோ அல்லது புதுச்சிருஷ்டிகளிடத்திலோ வெளிப்படும் தேவனுடைய ஆவி ஒன்றே. பெரும்பான்மையான மனுஷர்களிடத்தில் தேவனுடைய ஆவியினை நாம் காணமுடிகிறதில்லை; காரணம் பாவம் ஆகும். தேவனுடைய ஆவியானது தேவதூதர்களில் வெளிப்படுவதை நாம் காணலாம். தேவனுடைய ஆவியானது பரிசுத்தவான்களில் வெகுவாய் வெளிப்படுவதையும் நாம் காணலாம்; இவர்கள் தங்களில் கர்த்தருக்கொத்த குணலட்சணத்தின் சாயலைக் கொண்டவர்களாய் இருப்பார்கள். கர்த்தருடைய ஜனங்களில் வெளிப்படுகிறதான ஆவியின் கிருபைகளானது, பரிசுத்த ஆவியினுடைய கனிகளாகக் கருதப்படலாம்; ஏனெனில் இக்கனிகளை உடையவர்கள் புதுச்சிருஷ்டிகளாகியுள்ளனர்; பரம அழைப்பினுடைய பந்தயப்பொருளுக்காய் ஓட்டப்பந்தயத்திற்குள் பிரவேசித்திருக்கிறார்கள். ஆவியினுடைய இந்தக் கனிகளையும், கிருபைகளையும் வளர்த்திடும் மற்றும் பூரணப்படுத்திடும் விஷயத்தில் பரிசுத்தவான்களில் சிலர், மற்றப் பரிசுத்தவான்களைக் காட்டிலும், இயல்பான பண்பியல்புகளின் காரணமாய் மிக வேகமாய் முன்னேறக்கூடியவர்களாய் இருப்பார்கள்.

கர்த்தர் தரும் பலன் என்னவாக இருக்குமென்ற விருப்பங்கள் ஏதுமில்லாமல், கர்த்தருடைய ஜனங்கள் கிறிஸ்துவுக்கொத்த குணலட்சண வளர்ச்சியினை அடைய நாடிட வேண்டுமல்லவா? எனும் கேள்வி சிலசமயங்களில் எழும்புகின்றது. இல்லை என்று நாம் பதிலளிக்கின்றோம். "இனிவரும் பலன்மேல் நாம் நோக்கமாயிருக்க வேண்டும்." தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளதான பலன்கள்மேல் நோக்கமாயிருக்க வேண்டுமெனில், அவற்றைத் தொடர்ந்து நம்முன் நிறுத்திக்கொள்ள வேண்டும் மற்றும் பரிசினின்று கவனத்தை ஒருபோதும் மாற்றாமலும் காணப்பட வேண்டும்.

இப்படிப் பரிசை நோக்கியிருக்கும் காரியத்திற்கு நமது கர்த்தர் மறுப்புத் தெரிவிக்கிறதில்லை. பின்வரும் அவர் வார்த்தைகளைக் கவனியுங்கள்: "பிதாவே, உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்" (யோவான் 17:5). தம்முடைய கீழ்ப்படிதலுக்கான பலனைக்குறித்து அவர் பிதாவிடம் ஜெபித்தார். இப்படியாகவே நாமும் காணப்பட வேண்டும்; நம்முடைய பிரயாசங்களுக்குப்

பலன்கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திடுவதற்கு நாம் உரிமைப்பெற்றிருப்பதில்லை; மாறாக தேவனை அன்புகூருகிறவர்களுக்கு அவர் வாக்களித்துள்ளதான ஆசீர்வாதங்களை நாம் "மகாமேன்மையும், அருமையுமானவைகள்" என்று எண்ணிட வேண்டும். பெயர்ச்சபைகளில் காணப்படும் அநேகர் இக்காரியங்களைக் காண்கிறதில்லை.

குறிக்கோளை நாம் கண்களுக்கு முன்பாகத் தெளிவாய் நிறுத்திக்கொள்வோமாக. பரிசைப் பற்றின அறிவானது நாம் கட்டியெழுப்பப்படுவதற்கும் மற்றும் பலப்படுத்தப்படுவதற்கும் தூண்டுதலாய்க் காணப்படும்படிக்குக் கர்த்தர் நோக்கங்கொண்டுள்ளார் என்பதில் ஐயமில்லை. நாம் "மகிமை, கனம் மற்றும் அழியாமையை" நோக்கியிருக்கின்றோம் மற்றும் அவைகளை நாடுவது என்பது நமக்கடுத்த காரியமாகவே இருக்கின்றது. வேறுவிதமான மனநிலை என்பது போலியான தன்னடக்கமாகவே இருக்கும். பரம அழைப்பின் காரியங்களை விரும்புவது என்பது இறுமாப்பான காரியம் எனும் எண்ணம் நம் மனங்களில் ஏற்படுமாயின் - கர்த்தர் நமக்கு முன் வைத்துள்ளதான காரியங்களுக்காக நாம் பிரயாசம் எடுக்கத்தக்கதாக, "மகா அருமையான வாக்குத்தத்தங்களினால்" நாம் மிகவும் ஏவப்பட வேண்டும் என்று கர்த்தர் விரும்புகின்றார் என்பதையும், அவர் நமக்கு அருள விரும்புபவைகளை மறுப்பதே நம் சார்பிலான இறுமாப்பாயிருக்கும் என்பதையும் நினைவில்கொள்வோமாக.

## குணலட்சண வளர்ச்சியில், சுயாதீன அம்சம்

குணலட்சணமானது இரண்டு வேறுபட்ட கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கப்படலாம். ஆதாம் சிருஷ்டிக்கப்பட்டபோது, அவர் உயர்ந்த மற்றும் நல்ல குணலட்சணங்களை உடைய மனிதனாய் இருந்தார் - "மகிமையினாலும், கனத்தினாலும் முடிச்சூட்டப்பட்டிருந்தார்." அவர் பூரணராகவும், தேவனுடைய சாயலாகவும் காணப்பட்டார். இப்படியாகக் கொடுக்கப்பட்ட குணலட்சணத்திற்கும், சுயமாய்ச் சித்தத்தைச் செயல்படுத்துவதன் மூலம் வளர்க்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்ட குணலட்சணத்திற்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. நமது பரம பிதா தம்முடைய அறிவுள்ள சிருஷ்டிகள் தங்கள் சித்தங்களைச் செயல்படுத்திட வேண்டும் என்று விரும்புகின்றார். ஆகையால் சுயாதீனமான தெரிந்துகொள்ளுதல் எனும் அம்சத்தை விலக்கின விதத்தில் தம்முடைய குணலட்சணத்திற்கொத்த நிலைமையில் ஒரு பங்கை/பாகத்தை ஆதாமிற்குக் கொடுப்பதற்குப் பதிலாக, அவர் தம் குணலட்சணத்திற்கொத்த நிலையையும், கூடவே சுயாதீனத்தையும் கொடுப்பதற்கு முடிவெடுத்தார். "ஆகையால் தேவன் மனுஷனைத் தம்முடைய சாயலில் படைத்தார்." மனுஷன் விழுகைக்குள்ளாவான் என்பதையும், அது சம்பந்தப்பட்ட சூழ்நிலைகள் அனைத்தையும் தேவன் முன்னமே அறிந்திருந்தார். குறிப்பிட்ட காலம் தீமை அனுமதிக்கப்படுவதன் வாயிலாக, இறுதியில் அது அனைவருக்கும் ஆசீர்வாதமாய் அமையும் என்றும் அவர் அறிந்திருந்தார். ஒரு காலத்தில் வானத்திலும், பூமியிலுமுள்ள தம் சிருஷ்டிகள் யாவும் வேறு வாய்ப்பிருக்காது என்பதினால் மாத்திரமல்லாமல், மனமுவந்த நிலையில் தமக்குக் கீழ்ப்படியும் என்றும் தேவன் அறிந்திருந்தார்.

தேவனுடைய குணலட்சணங்களை உணர்ந்து புரிந்துகொள்பவர்கள், இந்தக் குணலட்சணத்திற்கு ஒத்த நிலைமையை அடைய விரும்பிட வேண்டும். அப்படியானவர்கள் மாத்திரமே ஆவிக்குரியவர்கள் அல்லது மனுஷர்கள் மத்தியில் நித்தியமான ஜீவனைப் பெற்றுக்கொள்வார்கள். இதன் அடிப்படையிலேயே, நித்தியமான ஜீவனுக்கான பரீட்சையில் காணப்படுபவர்களின் பாத்திரமான நிலைமையைத் தேவன் பரீட்சித்துக்கொண்டிருக்கின்றார். "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்" (யோவான் 4:23, 24).

## நாம் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திட வேண்டும்

குணலட்சணத்தினுடைய உருவாகுதலின் விஷயத்தில், கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் நாம் கற்கும் பாடங்கள் நமக்கு மிகவும் உதவிகரமாயுள்ளது என்று காண்கின்றோம். ஆதியில் மனுஷன் தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டான். எனினும் நம்மில் அந்தச் சாயல் மங்கிப்போய், தெளிவற்றுக் காணப்படுகின்றது. இப்பொழுது (இந்த யுகத்தில்) படிப்பினைகளைக் கற்றுக்கொண்டு, அவைகளை முழுமையாய் உள்வாங்கிகொள்பவர்களுக்கு மேலுமாகப் பரீட்சைகள் கொடுக்கப்படுகிறதில்லை. (இக்காலத்தில்) வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், இனிவரும் யுகத்தில் முழுமையான பரீட்சையைப் பெற்றுக்கொள்வார்கள். அக்காலத்தினுடைய பயிற்சிகள், சிட்சைகள் மற்றும் வெகுமானங்களின் கீழ், பாவத்தைவிட நீதி எவ்வளவு சிறந்தது என்றும், தப்பறையைவிடச் சத்தியம் எவ்வளவு சிறந்தது என்றும் அவர்கள் கற்றுக்கொள்வார்கள். ஆதாமினால் இழந்துபோகப்பட்ட தேவனுக்கொத்த குணலட்சணத்தை அவர்கள் வளர்த்திடுவார்கள் மற்றும் பாவத்தினுடைய மகா பாவகரமான நிலையினையும் கண்டுகொள்வார்கள். நீதியை விரும்பிடுவதற்கும், அதைச் செய்திடுவதற்கும் அவர்கள் கற்றுக்கொள்வார்கள். இந்தப் படிப்பினையைக் கற்றுக்கொள்ள தவறுபவர்கள் யாவரும் நித்திய ஜீவனுக்கு அபாத்திரர்களாய்க் கருதப்படுவார்கள்.

கீழ்ப்படிய வேண்டுமா அல்லது கீழ்ப்படியாமல் காணப்பட்டு, பாவத்தின் சந்தோஷங்களை அனுபவிக்க வேண்டுமா என்கிறதைத் தேவதூதர்கள் தாங்களே ஒருகாலத்தில் முடிவெடுத்தார்கள். தேவனிடத்தில் தயவு பெற்றவர்களாக இன்று காணப்படுகின்றதான தேவதூதர்கள் பரீட்சிக்கப்பட்டு, வெற்றியடைந்தவர்களாக இருக்கின்றனர். இவர்களது முன்மாதிரியானது நமக்குப் புரியவரும்போது, அதிகமதிகமாய் நமக்குப் படிப்பினையாய் அமையும். இந்த ஓர் அறிவின் விளைவாக, நம்முடைய சிருஷ்டிகரும், பிதாவுமானவர் தம்முடைய சிருஷ்டிகளைக் கையாளும் விஷயத்தில், அவரை இயக்கிடும் உணர்வுகளை நாம் அவரில் காண்கின்றோம்; மற்றும் நமக்கான அவர் சித்தத்தை நாம் நிறைவேற்ற முடிவெடுத்திருக்கின்றோம் என்பதில் மகிழ்வுறுகின்றோம்.

நம் சார்பிலுள்ள உண்மையான அன்பு என்பது கீழ்ப்படிதல் வாயிலாக வெளிப்படுகிறபடியால், கீழ்ப்படியாமை என்பது அன்பு இல்லாமைக்கான ஆதாரமாயும், கர்த்தருடைய பார்வையில் நேர்மையினின்று விலகிப்போனதாயும், பரீட்சைகளில் நிலைநிற்க தவறிப்போனதாகவும் இருக்கும் எனும் உண்மையினை இறுதியில் மனதில் நிறுத்திக்கொள்வது முக்கியமானதாகும். கர்த்தருடைய கண்ணோட்டம் நியாயமானதே என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஒருவேளை அறியாமையின் காரணமாக நாம் கீழ்ப்படியாமல் போயிருந்தால் என்ன செய்வது? என்று யாரேனும் கேட்பீர்களென்றால், நம்முடைய அறியாமை விஷயத்திற்காகக் கர்த்தர் ஏற்பாடுபண்ணியுள்ளார் என்பதே பதிலாகும்: முதலாவதாக "தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், (நன்கு தகவல் கொடுக்கப்பட்டவனாகவும்), எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகும்பொருட்டு" அவர் நமக்குச் சத்திய வார்த்தைகளைக் கொடுத்திருக்கின்றார்; மற்றும் இரண்டாவதாக அவர் பார்வைக்குப் பிரியமானதைச் செய்யத்தக்கவர்களாக நம்மை ஆக்கிடும் வண்ணமாய், அவரது வார்த்தைகளைப் புரிந்துகொள்வதற்கும், பரிசுத்தத்தின் ஆவியைப் பெற்றுக்கொள்வதற்கும் அத்தகைய உதவிகளை அருளுவதாக அவர் வாக்களித்துள்ளார் (2 தீமோத்தேயு 3:17; யோவான் 16:13, 14).

அன்பு சகல கிருபைகளுக்கும் கிரீடமாய், "நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய்" இருக்கின்றது. ஊக்கமுள்ள, ஜுவாலிக்கிற அன்பில்லாமல், நம்மால் கீழ்ப்படிதல் கொண்டிருக்கவோ அல்லது குணலட்சணம் வளருவதற்கும், உறுதியடைவதற்கும் வேண்டி திவ்விய அன்பினால் ஒழுங்குப்படுத்தப்பட்டுள்ள பரீட்சைகளில் நிலைநிற்கவோ முடியாது. தாம் பிதாவுக்குப் பிரியமுள்ள குமாரனென நமது கர்த்தர் நம்மிடம் கூறுகின்றார் மற்றும் "இவர் என் நேசகுமாரன்" என்று பிதா தாமும்

கூறியுள்ளார். நமது கர்த்தர் இயேசு ஏன் இவ்வளவாய் அன்புகூரப்பட்டார் என்பதை நம்மால் உடனே கண்டுகொள்ள முடிகின்றது; ஏனெனில் அவர் பிதாவின் அன்பினை முழுமையாய் வெளிப்படுத்தினவரானார். ஆனால் அதே அன்பானது பிதாவினால் நம் மீது பாராட்டப்படுகின்றது என்பதை அறிகையில், ஆச்சரியத்திற்குள்ளாகுகின்றோம்! "பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்" (1 யோவான் 3:1; யோவான் 16:27).

## அன்புடன்கூடிய கீழ்ப்படிதலானது சந்தோஷத்தையும், சமாதானத்தையும் கொண்டுவருகின்றது

அன்புக்குரியவர்களே, கர்த்தருடைய வார்த்தைத் தொடர்புடைய விஷயத்தில் நாம் அதிகமதிகமாய்க் கவனமாய் இருப்போமாக; கவனக்குறைவினால் அன்பில்லாமைக்கான சான்றுகளைப் பகராதிருப்போமாக. பிரியமுள்ள குமாரனென, பிதாவின் அன்பில் தாம் நிலைத்திருப்பதற்கான காரணம், பிதாவின் சித்தத்திற்கான தம்முடைய கீழ்ப்படிதலேயாகும் என்றும், நாம் அவர் அன்பில் நிலைத்திருந்து, அவரது சிங்காசனத்திலும், மகிமையிலும் பங்கடைய வேண்டுமெனில், நாமும் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என எதிர்ப்பார்ப்பார் என்றும் நமது கர்த்தர் சுட்டிக்காட்டுகின்றார் (யோவான் 15:10).

நம்மைப் பயமுறுத்துவதற்கான அல்லது நம் சந்தோஷத்தை எடுத்துப்போடுவதற்கான நோக்கத்தில் நமது கர்த்தருடைய அறிவுரைகளும், கட்டளைகளும் கொடுக்கப்படவில்லை. மாறாக, "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" என்றார் (யோவான் 15:11). கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதும், இன்னுமாக இதோடுகூட அவரிலும், அவரது வார்த்தைகளிலும் நிலைத்திருப்பதன் சிலாக்கியமும்தான், மாபெரும் சந்தோஷமென, அதாவது உலகம் அளிக்கும் அற்பத்தனமான இன்பங்கள் அனைத்திற்கும் அப்பாற்பட்ட சந்தோஷமென - கர்த்தருக்கு நெருக்கமாய் ஜீவிப்பவர்கள் என்பதற்கு உறுதியான சான்று பகருபவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். இந்தச் சந்தோஷமும், சமாதானமும் இருதயங்களை ஆளும் "எல்லாப் புத்திக்கும்மேலான தேவசமாதானமாய்" இருந்து, இதனோடு "இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும்" வாக்குத்தத்தத்தை மற்றும் உறுதியைக் கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது (1 தீமோத்தேயு 4:8).

---

R4050

## ஓட்டம், பரிசு, பந்தயசாலை

பரிசினைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓட்டம் ஓடும் கிறிஸ்தவனைக்குறித்துத் தன்னுடைய இரண்டு நிருபங்களில் சந்தேகத்திற்கிடமின்றி அப்போஸ்தலன் தெளிவாய் முன்வைக்கின்றார். அனைத்து உருவகங்கள் மற்றும் உவமைகள் விஷயத்தில் இவரது வார்த்தைகளுக்கான அர்த்தங்களைப் புரிந்துகொள்ளும் விஷயத்தில் அல்லது நம்மால் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டுள்ள உண்மைகளுக்கு இவரது அடையாள/உருவக வார்த்தைகளை எவ்வாறு பொருத்திப்பார்ப்பது எனும் விஷயத்தில் - சிறுசிறு வேறுபட்ட கண்ணோட்டங்கள் காணப்படுவதற்கு வாய்ப்பு உள்ளவே உள்ளது. உண்மைகளானது பரவலாய் மிகத் தெளிவாய்ப் பார்க்கப்பட்டுள்ளபடியால் நாம் மகிழ்வுறுகிறோம். இதுவே முக்கியமானதாகும்.

பரிசுத்த பவுல் அடிகளார் கொல்லப்படுவதற்கு முன்னதாக, "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது" (2 தீமோத்தேயு 4:7, 8) என்று எழுதியுள்ளார். ஒருவேளை அவர் மரிப்பதற்கு ஆறு மாதங்கள் முன்னதாக அல்லது ஒருமாதம் முன்னதாக அல்லது வெறும் ஆறு நாட்கள் முன்னதாக அவரால்

இவ்வார்த்தைகளானது எழுதப்பட்டிருந்தால், இதை எழுதின நாளின் முந்தின நாளில் அல்லது முந்தின வருஷத்தில் காரியங்கள் இப்படியாக பவுலுக்கு இருக்கவில்லை என்று நாம் புரிந்துகொள்ள வேண்டுமா? இல்லை என்றே நாம் எண்ணுகின்றோம். கொஞ்சம் காலங்களுக்கு முன்னதாக, ஜீவிப்பதா மற்றும் சாவதா என்பதைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில் "இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்" என்று எழுதின அதே அப்போஸ்தலன், மாபெரும் பரிசினைத் தனக்கு வென்று தரும் இலக்கில், தான் காணப்படுவதாக நிச்சயமுள்ளவராயும் இருந்திருப்பார் என்றும்கூட நாம் நம்பிட வேண்டும்.

இன்னுமாகப் பரிசினைத் தனக்கு வென்று தரும் இலக்கில் அப்போஸ்தலன் எப்போதுமே காணப்பட்டார் என்று நாம் அனுமானித்துக்கொள்ளக்கூடாது. அவரும் நம்மைப் போன்று முதலாவதாக ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டார் மற்றும் அடுத்து ஆவியினால் (quickening) உயிரூட்டப்பட்டார். ஆகையால் ஜெநிப்பிக்கப்படுதலுக்கும், உயிரூட்டப்படுதலுக்கும் (quickening) இடைப்பட்ட காலத்தில் அவரும் சரி, நாமும் சரி, பரிசிற்கான இலக்கில் காணப்படுவதில்லை.

ஆகையால் ஜெயங்கொள்பவர்களுக்கு அவசியமான குணலட்சண தரநிலை அல்லது இலக்கு என்ற ஒன்று உள்ளது மற்றும் இது ஓட்டத்தின் துவக்கத்தில் பெற்றிருக்கப்படுவதில்லை மற்றும் துவங்கின பிற்பாடும் கொஞ்சம் காலம் காணப்படுகிறதில்லை மற்றும் மரணத்திற்குக் குறிப்பிட்ட காலங்கள் முன்னதாகவே இலக்கு அல்லது குணலட்சண வளர்ச்சியானது காணப்பட வேண்டும். "அன்பு நியாயப்பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாய்" இருக்கின்றபடியால், அதை நாம் இலக்கு அல்லது அடைய வேண்டிய நிலை/தரநிலை என்று கருதுவது தகுதியாய் இருக்குமல்லவா? ஆகையால் நித்தியமான ஜீவன் தரப்படுவதற்குத் தேவன் நம்மில் அங்கீகரிக்கும் தரநிலை "பூரண அன்பு" என்றும், அந்தத் தரநிலையை எட்டுவதற்கு முன்னதாக மரித்தோமானால், பரிசினை நாம் இழக்க நேரிடும், காரணம் இந்த இலக்கினை அடைந்த பிற்பாடு மரணம் எப்போது சம்பவித்தாலும், அது நமக்கு ஜீவகிரீடத்தை உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கும் என்றும் நாம் கருதுகின்றோம்.

பூரண அன்பு என்பது, தேவனுக்கான அன்பையும், சகோதரருக்கான, நமக்கான, நமது அயலாருக்கான, நம்முடைய சத்துருக்களுக்கான அன்பையும் உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது மற்றும் பெரும்பான்மையான வேதவாக்கியங்களுடைய போதனைகளானது, இந்தப் பூரண அன்பைச் சுட்டிக்காட்டும் விதத்திலும், அதை அடையும் பொருட்டுத் தேவ ஜனங்களை ஊக்குவிக்கும் விதத்திலும் காணப்படுகின்றது; ஏனெனில் இந்தப் பூரணமான அன்பானது, திராட்சச்செடியின் கனிகளென வளர்க்கப்பட வேண்டிய ஆவியின் கனிகளை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. இக்கனிகளைப் பூரணத்திற்குக் கொண்டுவருவதற்கே கொடிகள் கிள்ளிவிடப்படுகின்றது; இல்லையேல் கொடியானது திராட்சச்செடியினின்று தறித்துப்போடப்படும்.

உண்மைதான் நாம் கிறிஸ்துவின் அங்கத்தினர்களானபோது, சில விஷயங்கள் நமக்குத் தரிப்பிக்கப்பட்டுள்ளது/சாற்றப்பட்டுள்ளது (impute); தூய்மையானது சாற்றப்படுகின்றது; ஆனால் திராட்சச்செடியின் கனியாகிய அன்பானது நமக்குச் சாற்றப்படுகிறதில்லை. இது வளர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஆகையால் இது ஒவ்வொரு கிறிஸ்தவனும், இந்த அங்கீகரிக்கப்பட்ட தரநிலையை அல்லது இலக்கையடைய ஓடும்படி, நாடும்படி ஊக்குவிக்கின்றதாய் இருக்கின்றது. இவைகள் அனைத்துமே - அப்போஸ்தலன் தன் மனதில் ஓட்டப்பந்தய உதாரணத்தைப் பெற்றிருந்தாலும் அல்லது பெற்றிராவிட்டாலும் நிச்சயமாய் உண்மையானவையாகும்.

"சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும்" என்று அப்போஸ்தலன் அறிவுறுத்தும்போது, இது ஓட்டம் ஓடப்பட்டுள்ளது என்பதையும், மரணத்திற்கு முன்னதாகத் தகுதியான குணலட்சணத்தின் இலக்கு அடையப்பட்டுள்ளது என்பதையும் குறிக்கின்றதாய் இருக்கும். இப்படித்தானே "ஜெயங்கொள்பவர்கள்" அனைவருடைய விஷயத்திலும் காணப்படுகின்றது! தேவனிடத்திலும்,

சகோதரரிடத்திலுமுள்ள கடமை-அன்புடன் மாத்திரம்தானே நம்முடைய கிறிஸ்தவ அனுபவத்தைத் துவக்கினோமல்லவா? "பூரணராகும்படிக்குக்" கடந்துபோய்க் கொண்டிருந்தோமல்லவா? - பூரண அன்பை நோக்கி நாம் முன்னேறிக்கொண்டிருந்தோமல்லவா? "நான் அடைந்தாயிற்று அல்லது முற்றும் தேறினவனானேன்/நிறைவு எய்திவிட்டேன் (பூரணமடைந்துவிட்டேன்) என்று எண்ணாமல்" என்று அப்போஸ்தலன் கூறுகின்றார் மற்றும் நாமும் அவரோடுகூடச் சேர்ந்து உண்மையான பூரணத்தை அடையவில்லை என்று சொல்லலாம். ஆனால் பூரண அன்பின் இலக்கினை அவர் தன் இருதயத்தில் அடைந்தது முதற்கொண்டு, நியாயப்பிரமாணத்தின் நீதி அல்லது பூரணமானது அவருக்கானதாக எண்ணப்படுகின்றது அல்லது கருதப்படுகின்றது. ஆகையாலேயே "நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்" என்றும் அவர் கூறியுள்ளார் (பிலிப்பியர் 3:12, 15).

பூரண அன்பின் இந்த இலக்கினை அடைபவர்களிடத்தில் ஏதேனும் எதிர்பார்க்கப்படுமா? ஆம்! ஆதிகமாய் எதிர்பார்க்கப்படுகின்றது! அவர்கள் இலக்கினை அடைந்த பிற்பாடே அவர்கள் இலக்கிலேயே முழுக்க முழுக்க, இயேசுவின் அடிச்சுவடில் நடக்கத் துவங்குகின்றனர். நமது கர்த்தர் உண்மையிலேயே பூரணராய் இருந்தபடியால், அவர் இலக்கை நோக்கி ஓட வேண்டிய அவசியமிருக்கவில்லை; ஏனெனில் அவர் ஏற்கெனவே அங்கேதான் நின்றுகொண்டிருந்தார்; பூரண மனுஷனாகவும் அவர் அங்கேதான் நின்றுகொண்டிருந்தார். "சகலத்தையும் செய்து முடித்த" பின்னர் நாம் அவரில் முழுமையாய் நிற்க வேண்டும் என்று நமக்குப் புத்திமதி கூறப்பட்டுள்ளதுபோன்று, அவரும் அந்த "இலக்கில் உறுதியாயும், நிலையாயும் "நிற்க" வேண்டியிருந்தது. இலக்கில் இப்படி நிற்பதே உண்மையான சோதனையாகும், உண்மையான பரீட்சையாகும். இப்படி நிற்பது என்பது, உலகம், மாம்சம் மற்றும் பிசாசை ஜெயங்கொள்வதாகும். இலக்கை அடைவதற்குப் பெரும்பாலும் நீண்ட காலமும், கால தாமதமும் ஆகுகின்றது; ஆனால் இப்படியாக இருக்கக்கூடாது. அது ஒரு மனநிலையாக இருப்பதினால், விரைவாய் அடையப்பட வேண்டும்; ஆனால் வைராக்கிய குறைவின் காரணமாய் அநேகர் இலக்கை அடைவதற்குப் பல வருடங்கள் எடுத்துக்கொள்கின்றனர் மற்றும் சிலர் அதை ஒருபோதும் அடையாமலும் காணப்படுகின்றனர் - இவர்கள் ஒருபோதும் உயிரூட்டப்படாதவர்களாக (quickened) இருக்கின்றனர் மற்றும் இதனால் இவர்கள் ஆவியில் பிறப்பதுமில்லை.

பூரண அன்பு எனும் இலக்கினை அடைந்த பிற்பாடே, நாம் நமது கர்த்தர் போன்று, தீங்கநுபவித்து, நல்ல போராட்டத்தைப் போராடிட வேண்டும். இராஜாவுக்கான ஊழியத்தில் விசேஷித்த துணிவை வெளிப்படுத்துபவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ளதான "மகா மேன்மையும், மிகவும் அதிகமான நித்திய கனமகிமையுமே" - ஊக்குவிக்கிற காரியமாய் நமக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

"ஒருவன் மல்யுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்" என்று அப்போஸ்தலன் கூறுகையில், ஒரு மனுஷனுடைய பிரயாசங்கள் தேவ பார்வையில் தகுதியானதாய் இருப்பதற்கு, அவன் (நியாயப்பிரமாணத்தினுடைய நிறைவாகிய) பூரண அன்பின் இலக்கில் காணப்பட வேண்டும் என்ற விதத்தில் கூறுகின்றார் (2 தீமோத்தேயு 2:5).

ஓட்டத்தைக்குறித்த மற்றுமொரு கண்ணோட்டத்தில், ஒரு கோடு/line போடப்பட்டிருக்கும் காரியத்தையும் எடுத்துக்கொள்ளலாம் மற்றும் இந்தக் கோடானது பூரண அன்பை அடையாளப்படுத்துகின்றதாய் இருக்கின்றது மற்றும் ஓடுகிற ஒவ்வொருவனும் ஜீவிதத்தின் இறுதி வரையிலும் அக்கோட்டிற்கு அருகாமையிலேயே காணப்படத்தக்கதாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஆனால் இந்தக் கண்ணோட்டமானது, பரிசுத்த பவுல் அடிகளார் தான் மரிப்பதற்கு முன்னதான பல வாரங்கள் அல்லது மாதங்களுக்கு முன்னதாகவே தன் ஓட்டத்தை நிறைவேற்றி முடித்த காரியத்தையோ அல்லது பல வருடங்களுக்கு முன்னதாகவே அவர் "அவ்விரண்டு காரியங்களினாலும் நெருக்கப்பட்டிருந்த" காரியத்தையோ விவரிக்கிறதில்லை (பிலிப்பியர் 1:23).

ஆகையால் எந்தெந்தக் கண்ணோட்டங்களானது உண்மைகளை, நம் மனங்களுக்கு நன்கு தெளிவுப்படுத்துகின்றதோ, அவைகளை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம் மற்றும் அவ்வுண்மைகளானது மிகத் தெளிவாயும், எளிமையாயும், விவாதத்திற்கு அப்பாற்பட்டதாயும் இருப்பதின் நிமித்தம் களிகூரவும் செய்யலாம்.

---

R4470

# இலக்கில் நின்றுகொண்டிருத்தல்

நாம் இன்னும் அதிகமாய் வலியுறுத்த விரும்புவதையே இங்கு முன்வைக்கின்றோம் . . . அதென்னவெனில் பரிசுத்தத்திற்கான, நீதிக்கான ஒரு திவ்விய தரநிலை அல்லது அளவுகோல் காணப்படுகின்றது மற்றும் இது ஒருவேளை அடையப்படவில்லையெனில், நாம் கர்த்தருடைய தெரிந்துகொள்ளப்பட்ட சபையின் அங்கத்தினர்களென அவரால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது; மேலும் எந்த ஒரு தளத்திலும் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு அபாத்திரர்களாகியும் விடுவோம் என்பதேயாகும். குணலட்சணத்திற்கான இந்தத் தரநிலை/அளவுகோலானது அல்லது பூரணத்திற்கான இலக்கானது நாம் சுட்டிக்காண்பித்துள்ளது போன்று, மாம்சீகப் பூரணத்திற்கான இலக்கு அல்லது அளவுகோலல்ல; காரணம் தம் அர்ப்பணிக்கப்பட்ட சீஷர்கள் மத்தியில் மனரீதியில், ஒழுக்க ரீதியில், சரீர ரீதியில் பல்வேறு அளவில் சீரழிவு அடைந்தவர்களைக் கர்த்தர் ஏற்றுக்கொண்டுள்ளார். அவர் அளிக்கின்றதான நீதிமானாக்கப்படுதலானது, ஒவ்வொருவருக்கான குறைவுகளை - அதாவது அதிகமான குறைவுகள் உள்ளவர்களுக்காகவும், குறைவான குறைவுகள் உள்ளவர்களுக்காகவும் ஈடுசெய்கின்றதாய் இருக்கின்றது. நமக்குத் தரிப்பிக்கப்படுகின்றதான/சாற்றப்படுகின்றதான அவரது நீதியின் வஸ்திரமானது, மிகவும் சீரழிந்த நிலையிலுள்ளோருக்கு அவசியமாயிருப்பது போன்று உயர்ப்பண்புகளுள்ளோருக்கும் அவசியமாயிருக்கின்றது மற்றும் அது உயர்ப்பண்புகளுள்ளோரையும், மிகவும் சீரழிந்த நிலையிலுள்ளோரையும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவர்களாக்குகின்றது.

இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், இருதயமே, புதிதாக்கப்பட்ட மனமே, புதிதாக்கப்பட்ட சித்தமே ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புதுச்சிருஷ்டியாகக் காணப்பட்டு, தேவன் முன்னிலையில் பரீட்சையில் காணப்படுகின்றது என்று அடையாளம் கண்டுகொள்ளப்படலாம். இந்தப் புதுச்சிருஷ்டியானது, நீதி செய்வதற்கும், பாவத்தை எதிர்ப்பதற்கும், பாவத்திற்கு முற்றிலும் மரித்துவிடுவதற்கும் முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளது மற்றும் அதனால் முடிந்தமட்டும் மாம்சத்தின் சித்தத்தை மரிக்கப்பண்ண, சாகப்பண்ண தீர்மானமாயுமுள்ளது. துவக்கம் முதல் இந்த நிலைமையானது, கர்த்தருக்குப் பிரியமாயும், அவரது அங்கீகரிப்பிற்குப் பாத்திரமாயும் காணப்படுகின்றது. எனினும் வேதவாக்கியங்களில் ஓர் உதாரணத்தின்படி, இது ஆரம்பத்தில் "குழந்தை" நிலைமை மாத்திரமே என்றும், வேறொரு உதாரணத்தின்படி அது "ஜெநிப்பிக்கப்பட்ட" நிலைமை மாத்திரமே என்றும் சித்தரிக்கப்பட்டுள்ளது. முன்னேற வேண்டும் . . . குணலட்சணம் வளர்க்கப்பட வேண்டும் மற்றும் பின்னர் அது பரீட்சிக்கப்பட வேண்டும். "கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதில்லை" (மத்தேயு 7:21). அர்ப்பணம் பண்ணியுள்ளதாகவும், புதிதான ஜீவனைப் பெற்றிருப்பதாகவும், சத்தியம் மற்றும் நீதியின் நிமித்தம் சுயத்தைப் பலிசெலுத்துவதாகவும் அறிக்கைப்பண்ணும் அனைவருமே, கிறிஸ்துவோடுகூட உடன்சுதந்தரர்களென ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. வளர்ச்சியடைவதற்கும், சோதித்து நிரூபிக்கப்படுவதற்கும் என்று காலம் கொடுக்கப்பட வேண்டும்.

தேவனுக்கான அன்பை இவர்கள் ஆரம்பம் துவங்கிப் பெற்றிருக்கின்றனர். ஆனால் இது உயர்வகையான அன்பல்ல. இது ஏற்கெனவே காண்பிக்கப்பட்டிருப்பதுபோல, முழுவதும் இல்லாவிட்டாலும், பெரும்பாலும் கடமை-அன்பாகவே இருக்கின்றது. கிறிஸ்துவுக்குள் "குழந்தையாயிருப்பவன்," தான் வளரத்தக்கதாக திருவசனமாகிய களங்கமில்லா ஞானப்பாலைப் பருகிட வேண்டும். ஆவிக்குரிய உணவு புசிக்கப்பட்டு, ஆவிக்குரிய பயிற்சி மேற்கொள்ளப்படும்போது, குணலட்சணம் பலமடைகின்றது . . . நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்கள் அதிகமதிகமாய்த் திறக்கின்றது . . . ஆரம்பத்தில் பார்க்க முடியாமல் காணப்பட்டதான திவ்விய குணலட்சணங்களுடைய நீளங்களும், அகலங்களும், உயரங்களும், ஆழங்களும் கண்டுணரப்படுகின்றது. இதுவே தேவனுக்கான ஓர் உயர்வகை அன்பினை - அவரது மகிமையான குணலட்சணம் மீதான அன்பினை நாம் கொண்டிருக்கத்தக்கதாக வழிநடத்துகின்றது.

இதற்கிடையில் ஆவிக்குரிய "குழந்தைகளிடத்தில்" உலகத்தாருக்கான ஓர் அனுதாபமான அன்பும்கூடப் படிப்படியாக வளர்கின்றதாய் இருக்கின்றது. திவ்விய குணலட்சணத்தின் கொள்கைகளைக் கண்டும், உணர்ந்தும் இருக்கையில், புதுச்சிருஷ்டியானது அவைகளை/அக்கொள்கைகளை ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களிலும் செயல்படுத்த துவங்குகின்றது மற்றும் இதனால் மனுஷர்மீதும், மிருகங்கள் மீதும், நண்பர்கள் மீதும், சத்துருக்கள் மீதுமான அனுதாப அன்பு அதிகரிக்கின்றது. அன்பின் இன்னொரு அம்சமும் பின்வருமாறு படிப்படியாய் அடையப்படுகின்றது: ஆரம்பத்தில் கிறிஸ்துவுக்குள்ளான "குழந்தையானவன் சகோதர சகோதரிகளில் சிலரை - அதாவது உயர் பண்புள்ளவர்களை, நற்குணசாலிகளை, நன்கு கல்வியறிவு உள்ளவர்கள் முதலானவர்களை - அன்புகூருகின்றான்; ஆனால் படிப்படியாகத் திவ்விய குணலட்சணமானது கண்டுணரப்படும் போது, திவ்விய அன்பானது நம்முடைய இருதயங்களில் பொழிகின்றது மற்றும் இந்த அன்பானது தேவனுடைய குடும்பத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினன் மீதும், விழுந்துபோன சந்ததியின் ஒவ்வொரு அங்கத்தினன் மீதும், ஆம் சத்துருக்கள் மீதும் கூடப் பாராட்டப்படும் அளவுக்குப் பரந்துவிரிகின்றது. இந்த வளர்ச்சியுடன்கூட, வேதவாக்கியங்களில் "உயிரூட்டப்படுதல்" (quickening) என்று அழைக்கப்படும் ஆவிக்குரிய கிரியைகளும் வருகின்றதாய் இருக்கின்றது - "உங்களை உயிர்ப்பித்தார்"; "And you hath he quickened" (எபேசியர் 2:1). இந்த உயிரூட்டப்படுதலானது (quickening) தேவனுக்கான ஊழியத்திலும், சகோதரருக்கான ஊழியத்திலும், ஈடுபடுவதைக் குறிக்கின்றதாய் இருக்கும் மற்றும் இதற்கும் அப்பால் ஒருவேளை வாய்ப்பு அமைகையில் நம்மால் முடிந்த உதவியனைத்தையும் தேவையிலுள்ளோர் அனைவருக்கும் செய்தலையும் குறிக்கின்றதாய் இருக்கும்.

இங்கு விவரிக்கப்பட்டுள்ளதான கிறிஸ்தவ ஜீவியமானது "கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென" துவங்கி, இப்பொழுது கிறிஸ்துவுக்குள்ளான பூரண புருஷனுக்குரிய நிலையினை அடைந்துள்ளது மற்றும் தேவனுக்கான, சகோதரருக்கான, அயலாருக்கான, சத்துருக்களுக்கான பூரண அன்பினுடைய இலக்கில் வந்துள்ளது. இந்த ஒரு கட்டத்தினை எட்டினாலேயே ஒருவர் பரலோகத்திற்குப் பாத்திரமாக அல்லது எந்த ஒரு தளத்திலும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரமாகக் கருதப்படக்கூடும்.

பரலோகத்தில் சென்று நாம் எந்த வளர்ச்சியும் வளரப்போவதில்லை, ஆகையால் குணலட்சணத்தில் பூரணம் என்பதைப் பரிசுத்தவான்கள், அவர்கள் மரிப்பதற்கு முன்னதாகவே அடைந்திட வேண்டும் எனும் காரியத்தினை நாம் மனதில் கொண்டிருக்க வேண்டும். இதுபோலவே ஆயிர வருட அரசாட்சியின்போது, உலகமும் திவ்விய வாக்குத்தத்தங்களுக்கு ஏற்ப மற்றும் அடைய வேண்டிய தரநிலைக்கு ஏற்ப நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குப் பாத்திரவான்களாகும்படிக்கு யுகத்தினுடைய முடிவிற்கு முன்னதாகவே இந்தப் பூரண வளர்ச்சி நிலையினை அடைந்தாக வேண்டும்.

இருதயத்தினுடைய பூரண அன்பின் இந்தத் தரநிலையானது எந்தமட்டும் மாம்சத்தில் வெளிப்படும் என்று கேட்கப்படலாம்? ஆயிர வருட யுகத்தின்போது, அது மாம்சத்தில் பூரணமாய் வெளிப்படும் என்று நாம் பதிலளிக்கின்றோம்; ஏனெனில் அப்போது உலகத்தார், தங்களது மாம்சத்தில் உண்மையாகவே அடையப்பெறும் காரியங்களின் அடிப்படையில் நியாயந்தீர்க்கப்படுபவர்களாய் இருப்பார்கள் மற்றும் திரும்பக்கொடுத்தலின்/சீர்பொருந்துதலின் வாயிலாகப் பூரணமடைவது என்பது சாத்தியமாகும் காரியமாய் மாத்திரமல்லாமல், அடையும்படிக்கு எதிர்ப்பார்க்கப்படுகின்ற காரியமாகவும் இருக்கின்றது. ஆனால் சுவிசேஷ யுகத்திலுள்ள நம்மைப் பொறுத்தமட்டில், அதாவது மாம்சத்தின்படியாக இல்லாமல், ஆவியின்படியாக நியாயந்தீர்க்கப்படுபவர்களாகிய நம்மைப் பொறுத்தமட்டில், பூரண அன்பினுடைய இலக்கில் காணப்படுகின்றதான புதிய மனம், புதிய சுபாவம் எவ்வளவாய் மாம்சத்தை ஆளவும், கட்டுப்படுத்தவும் கூடும்? அழியக்கூடிய சரீரமானது எவ்வளவாய் அபூரணங்களினால் பாதிக்கப்பட்டிருக்கின்றதோ, அதற்கேற்ப கட்டுப்பாட்டின் அளவுகள் பெரிதும் வித்தியாசப்படும் என்று நாம் பதிலளிக்கின்றோம்.

புதிய சுபாவமானது, புதிய மனமானது, புதிய சித்தமானது, அதன் அழிவுக்குரிய சரீரத்திலுள்ள ஏதேனும் தவறுகள் அல்லது அத்துமீறல்கள் நிமித்தம் மிகவும் துக்கிக்கும், மிகவும் வருந்தும் என்பதே நம்மால் முன்வைக்க முடிந்த ஒரே அளவுகோலாய் இருக்கின்றது. ஒவ்வொரு தவறினுடைய விஷயத்திலும் புதுச்சிருஷ்டி அடையும் வருத்தத்தினுடைய அளவிலிருந்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு ஆற்றலையும் மற்றும் ஒவ்வொரு சிந்தனைகளையும் கிறிஸ்துவுக்குள்ளாகத் தேவ சித்தத்திற்குக் கீழ்ப்படியப்பண்ணுவதில் புதுச்சிருஷ்டியினுடைய தொடர்ச்சியான, மீண்டும் மீண்டுமான பிரயாசங்களினுடைய அளவிலிருந்தும், அழிவுக்குரிய சரீரத்தைக் கட்டுப்படுத்திடுவதற்கான புதுச்சிருஷ்டியினுடைய பிரயாசத்தினைக் கர்த்தர் அறிந்துகொள்வார் (மற்றும் அநேகமாகச் சகோதர சகோதரிகளும் ஓரளவுக்கு அறிந்துகொள்வார்கள்). பாவத்துடனான எந்த ஓர் இணக்கமும், புதுச்சிருஷ்டியானது இலக்கில் இல்லை என்பதற்குச் சான்று பகர்கின்றதாய் இருக்கின்றது. பாவத்துடன் எந்த ஓர் இணக்கம் இல்லாமலும், நீதியின்பால் தொடர்ச்சியாய்ப் பிரயாசம் மேற்கொண்ட நிலையிலும் காணப்படுவது என்பது, புதுச்சிருஷ்டி இலக்கில் காணப்படுவதற்கான சான்றாகும்.

சிலர் இலக்கில் நீண்ட காலமாய்க் காணப்படலாம் மற்றும் சிலர் இலக்கில் சொற்ப காலம் காணப்படலாம். நமது கர்த்தர் தம்முடைய ஊழியத்தின் துவக்கம் முதல் இலக்கில் காணப்பட்டார் என்பது உறுதியே. அவர் அங்குக் காணப்படுகையில் - பூரண அன்பின் இலக்கில் அவர் காணப்படுகையில் சோதிக்கப்பட்டார். எதிராளியானவன் மற்றும் உலகத்தினுடைய சகல கண்ணிகளினாலும், அவரை அந்தப் பூரண அன்பின் நிலையினின்று தள்ளிவிட முடியவில்லை. அவர் அந்த இலக்கில் காணப்பட்டே தம் ஜீவனைக் கொடுத்தார். பரிசுத்த பவுல் அடிகளாரும்கூட அவர் உண்மையாய் மரிப்பதற்கு முன்னதாக, பல வருடங்களுக்கு முன்பே இந்த இலக்கில் காணப்பட்டார் என்பதில் உறுதியே. அவர் தொடர்ந்து சகோதரருக்காகத் தன் ஜீவனை ஒப்புக்கொடுத்துக் கொண்டிருந்தார் மற்றும் தொடர்ந்து தன் சத்துருக்களுக்காகவும் ஊழியஞ்செய்துகொண்டிருந்தார் மற்றும் அவர்களுக்காக ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தார்; மற்றும் அவர் தன் முழு வல்லமை மற்றும் தாலந்துகள் கொண்டு, தொடர்ச்சியாய்க் கர்த்தரை அன்புகூர்ந்தும், அவருக்கு ஊழியம் புரிந்தும் காணப்பட்டார் என்பதில் உறுதியே.

இலக்கை மிகவும் தாமதமாய் அடையும் விஷயத்தில் எந்தவொரு கிறிஸ்தவனும் திருப்தியடைந்திடக்கூடாது. திருவசனத்தின் பால்ஆகாரம் பருகப்பட வேண்டும், அதனால் உண்டாகும் பலம் உள்வாங்கப்பட வேண்டும்; ஆவிக்குரிய பார்வையும், ஆவிக்குரிய ஆற்றலும் உடனே தொடர்ந்துவர வேண்டும் மற்றும் திவ்விய சத்தியத்தின் பலமான ஆகாரமானது விரைவாய்க் கிறிஸ்தவ

குணலட்சணத்திற்கான முழுமையான முதிர்ச்சியினைக் கொண்டுவந்திட வேண்டும். அது அடையப்பட்ட பின்னர் அது எவ்விதத்திலும், நமக்கு எதிராய் எதிராளியானவனும், உலகமும், மாம்சமும் கொண்டுவரும்படிக்கு அனுமதிக்கப்படுகின்றதான சகல சோதனைகள் மற்றும் பிரச்சனைகள் மத்தியிலும் தக்கவைக்கப்பட வேண்டும். இலக்கை நாம் அடைந்த பிற்பாடே கடுமையான சோதனைகள் கடந்துவரும் - அதாவது தேவனுடைய ஊழியத்தில் பின்வாங்கிப் போவதற்கான சோதனைகள் கடந்துவரும்; நம்முடைய பலியினை முழுமையாய் ஏறெடுக்கவிடாத சோதனைகள் கடந்துவரும்; சகோதரரை அன்பற்ற விதத்தில், இரக்கமற்ற விதத்தில், பரிவற்ற விதத்தில் கையாளுவதற்கான அல்லது நம்முடைய அயலாரை அநியாயமான விதத்தில் கையாளுவதற்கான அல்லது நம்முடைய சத்துருக்களைக் கடினமாய்க் கையாளும் விதமான சோதனைகள் கடந்துவரும். நமக்கான நித்திய ஜீவனை நாம் மேன்மையாய்க் கருதுவதினாலும், நம்முடைய மீட்பருடன், அவருடைய இராஜ்யத்தில், அவரோடுகூட உடன்சுதந்தரத்துவமும், ஐக்கியமும் அடைவது குறித்த வாக்குத்தத்தங்களை நாம் மேன்மையாய்க் கருதுவதினாலும், நாம் மேற்கூறப்பட்டுள்ளதான சோதனைகள் அனைத்தையும் எதிர்த்திட வேண்டும்.

இந்தப் பாடத்தைத் தெளிவாய்க் காண்கிறவன் எவனும், தன்னுடைய உண்மையை, தன்னுடைய தைரியத்தை, தன்னுடைய வைராக்கியத்தை, தன்னுடைய அன்பை முற்றிலும் பரீட்சிக்கக்கூடிய காரியங்களை - ஒரு கிறிஸ்தவனெனத் தான் சந்திக்க வேண்டியிருக்கிறது என்று உணர்ந்துகொள்ள வேண்டும். இன்னும் ஜெயங்கொள்வதற்கு அவசியமாயுள்ள தேவையின் போதான கிருபை அவனுக்குக் கொடுக்கப்படும் என்றும், எதிராளியானவனின் தாக்குதல்களினால் அவனது திடமனமானது தளர்ந்துபோக வேண்டாம் என்றும் உள்ள கர்த்தருடைய ஆறுதலளிக்கும் வாக்குறுதிகளையும் அவன் நினைவில்கொள்வது அவசியமாகும்.

---

R5172 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# சீஷயத்துவத்திற்கான விலை

"எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம்." (1 கொரிந்தியர் 4:12)

தேவன் தாமே அன்பானவராக இருக்கின்றபடியால், அவர் தம் ஜனங்களுக்குக் கொடுத்துள்ளதான பூரணத்திற்குரிய மிக உயர்வான தரநிலை/கொள்கை, அன்பின் தரநிலையாகும்/கொள்கையாகும். இதைக்காட்டிலும் உயர்வான தரநிலையினை நம்மால் கற்பனை பண்ணிப்பார்க்கவும் முடியாது; இன்னுமாக அடைவதற்குக் கடினமானதாக இதைவிட வேறு ஒன்று இருப்பதுமில்லை. இந்த விசேஷித்த குணாதிசயம் இல்லாமல் ஒருவராலும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய பரம அழைப்பிற்கான பரிசினைப் பெற்றுக்கொள்ள முடியாது. பூரணத்திற்கான இந்த இலக்கானது, நம் கர்த்தரில் முத்திரிக்கப்பட்டது. அவர் எல்லா விதத்திலும் பிதாவின் சித்தத்தைச் செய்வதில், அதுவும் ஆதாமினுடைய பாவத்தின் காரணமாய் மரணத்தண்டனையின் கீழ்க்காணப்படுபவர்களுக்குத் தம் ஜீவனைக் கொடுக்குமளவுக்குப் பிதாவின் சித்தத்தைச் செய்வதில் பிரியம் கொண்டிருந்தார்.

ஆனாலும் பூரண அன்பிற்கான இந்த இலக்கை நோக்கி ஓடுவதற்கான அவசியம் நம் கர்த்தருக்கு இருக்கவில்லை; ஏனெனில் அவர் எப்போதும் பூரணமானவராய்க் காணப்பட்டார் - "பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவருமாய் இருந்தார்" (எபிரெயர் 7:26).

நேர்மாறாக சபையோ முன்னோர் வழியாய் அபூரணர்களாகவும், விழுந்துபோனவர்களாகவும் இயல்பாகவே காணப்பட்டனர்; ஆனாலும் நாம் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் எல்லாக் குற்றங்களின் கறைகளினின்று கழுவப்பட்டவர்களாய் இருக்கின்றோம். பூரண அன்பிற்கான இலக்கினை நாம் படிப்படியாகவே அடைவோம். முதலாவதாக நாம் இருதயத்தினுடைய நோக்கத்தில் பூரணத்தினை அடைகின்றோம் மற்றும் பிற்பாடு நீதியில் நம் குணநலன்களை உறுதிப்படுத்துகின்றதான அனுபவங்கள் வாயிலாக கடந்து செல்வோம். ஒருவேளை நம் மாம்ச சரீரம் பூரணமாயிருந்திருந்தால், நாம் எப்போதும் தேவனுடைய பரிசுத்த சித்தத்தைச் செய்திருந்திருப்போம் என்பதை இந்தப் பரீட்சைகள் மற்றும் பிரச்சனைகளில் நாம் நிரூபிக்க வேண்டும்.

அன்பு எனும் இப்பண்பை நமது கர்த்தர் இயேசுவில் நாம் காண்கையில், அதை நாம் மதிக்கிறோம் - அதாவது தேவன் எதிர்ப்பார்க்கும் தரத்திற்கு ஏற்ப நாம் காணப்படவில்லை என்றபோதிலும், இயேசுவில் இப்பண்பை நாம் காண்கையில், அதை நாம் மதிக்கிறோம். எனினும் எல்லா விஷயத்திலும் தேவனுடைய சித்தத்திற்கு இசைவாகப் பூரண அன்பு கொண்டிருக்க வேண்டும் என்ற பெரிதான வாஞ்சை நம்முடையதாய் இருக்கின்றது. இருதயத்தினுடைய நோக்கத்தில் பூரணத்தை நாம் அடைந்த பிற்பாடு, நமக்கான சோதனையானது - இலக்கை அடைகிற காரியத்திற்காய் இராமல், மாறாக நம்முடைய குணலட்சணம் உறுதியடைவது வரையிலும் நாம் இலக்கில் தொடர்ந்து காணப்படுவதற்கானதாகும். அப்போஸ்தலன் பவுல் கூறுவதுபோன்று "சகலத்தையும் செய்து முடித்தவர்களாக நிற்க" வேண்டும் (எபேசியர் 6:13). நாம் பூரண அன்பைத் தாண்டி முன்னேறுகிறதில்லை; ஏனெனில் ஒருவன் தன்னில் தேவனுடைய சித்தம் நிறைவேற வேண்டும் என்றுள்ள வாஞ்சையினை முழுமையாய்ப் பெற்றிருப்பதைக் காட்டிலும், அதிகமான வேறு எதையும் யார் ஒருவராலும் செய்திட முடியாது. அவன் இன்னும் ஐந்து வருடங்களோ அல்லது ஐம்பது வருடங்களோ ஜீவித்தாலும்கூட, அவனால் அதிகமாய் எதையேனும் செய்துவிட முடியாது. அவன் ஓர் இலக்கை நோக்கி ஓடினான், அது பூரண அன்பாகும் மற்றும் இதைவிட உயர்வான தரநிலையை அவனால் அடைய முடியாது.

ஒருவன் அன்பின் இலக்கில் நிற்கையில், பரீட்சைகள் கடுமையாகுகின்றது. பெரும்பாலும் சாதாரணமானதும் - நாம் பொறாமை, கோபம், குரோதம், வாது (சண்டை) கொள்ளத்தக்கதாக நம்மைச் சோதிக்கின்றதுமான அனுபவங்கள் வாயிலாய்க் கடந்து செல்வோம். ஒருவேளை நாம் இந்தப் பரீட்சைகளினால் மேற்கொள்ளப்பட்டு, பூரண அன்பினுடைய நிலைமையினின்று விழுந்துபோவோமானால், நாம் எந்தப் பரிசிற்காக ஓடிக்கொண்டிருக்கின்றோமோ, அந்தப் பரிசினை நாம் இழந்து போவோம் (பிலிப்பியர் 3:14). இப்படியாக விழுந்து போகின்றவர்கள், வளர்ச்சியடையத்தக்கதாகத் திரள்கூட்டத்தினர் ஆவார்கள்; ஆனால் ஒருவேளை அவன் அனைத்து அன்பையும் இழந்துபோவானானால், அவன் இரண்டாம் மரணத்திற்குள் போவான். ஒருவன் திரள்கூட்டத்திற்குள் அல்லது இரண்டாம் மரணத்திற்குள் செல்பவனாக இருப்பானானால், இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அவன் - இராஜ்யத்தில் காணப்படுவதற்கு வாஞ்சிப்பவர்களுக்கும், தேவனைப் பிரதானமாய் அன்புகூருகிறவர்களுக்குத் தேவன் வைத்து வைத்துள்ளதான மகிமையான காரியங்களில் பங்கடைவதற்கு வாஞ்சிப்பவர்களுக்கும் முன்வைக்கப்பட்டுள்ள ஒரே தரநிலையாகிய பூரண அன்பின் இலக்கினின்று விலகியுள்ளவனாய் இருப்பான்.

---

R4346 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி]

# ஏன் ஒருவர் மரணத்தில் எடுக்கப்பட்டார் மற்றும் மற்றவர் உயிரோடு விடப்பட்டார்

அப்போஸ்தலனாகிய யாக்கோபைக் கொல்ல ஏரோது ஏன் அனுமதிக்கப்பட்டார் என்றும், ஏன் அவர் அப்போஸ்தலனாகிய பேதுருவைக் கொல்ல அனுமதிக்கப்படவில்லை என்றும் உள்ள கேள்விகள் எழும்பவே செய்கின்றது. சுவிசேஷ வேலையில் இன்னும் ஏதேனும் பங்காற்றுவதற்குப் பரிசுத்த யாக்கோபு அடிகளார் தகுதியற்றவராய் இருந்தாரா? அல்லது அப்போஸ்தலனாகிய பேதுருவைக் காட்டிலும் தகுதியில் குறைவானவராய் இருந்தாரா? அனைவருக்கும் போதுமான அளவுக்கு வேலை இருக்கவில்லையா? அல்லது பரிசுத்த யாக்கோபு அடிகளார் மரிப்பதற்கு ஆயத்தமாய் இருந்தபடியாலும், அவர் ஓட்டத்தை முடித்துவிட்டபடியாலும்தான் அவர் மரித்துப்போக அனுமதிக்கப்பட்டாரா? பரிசுத்த பேதுரு அடிகளார் தன் ஓட்டத்தை முடிக்காத காரணத்தினால்தான் அத்தருணத்தில் அவர் உயிரோடு இருக்கும்படியாகக் காக்கப்பட்டாரா? இந்த யோசனைகள் எதுவும் சரியானதாகத் தோன்றுகிறதில்லை. மாறாக இரண்டு அப்போஸ்தலர்களும் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாகவும், அவரால் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவர்களாகவும் காணப்பட்டார்கள் என்றும், இராஜ்யத்திற்குத் தகுதியாக்கிடும் பூரண அன்பிற்கான இலக்கிலே காணப்பட்டார்கள் என்றும் கருதுவோமாக. தமக்காகப் பேதுருவைக்கொண்டு செய்யும்படிக்கு ஒரு விசேஷித்த வேலையைப் பெற்றிருந்தபடியால், கர்த்தர் பேதுருவைப் பாதுகாத்து வைத்தார் என்றும், பரிசுத்த யாக்கோபு அடிகளார் செய்வதற்கு எதுவும் இல்லை என்பதினால் இல்லாமல், மாறாக அவர் அத்தகைய சமயத்தில், அடைந்த அத்தகைய மரணத்தின் மூலம் அதிகமான காரியத்தைச் செய்ய முடியும் என்பதினாலேயே - அதாவது வேறொரு தருணத்திலோ அல்லது வேறொருவருடைய மரணத்தின் மூலமோ செய்யப்பட முடியாததை, அத்தருணத்தில், அத்தகைய அவருடைய மரணமானது சிறப்பாய்ச் செய்யும் என்பதினாலேயே அவர் சிரச்சேதம் பண்ணப்படுவதற்குக் கர்த்தர் அனுமதித்தார் என்றும் நாம் கருத வேண்டும். பரிசுத்த யாக்கோபு அடிகளார் அப்போஸ்தலர்கள் மத்தியில் வழிநடத்துபவராகக் காணப்பட்டார் மற்றும் அவரது மரணமானது மகா அதிர்ச்சியை உண்டுபண்ணி, சத்தியத்தைப் பறைசாற்றும் விஷயத்தில் புதுப்பெலனும், வைராக்கியமும் கொள்ளத்தக்கதாகக் கர்த்தருடைய பின்னடியார்களை விழித்தெழப் பண்ணினதாய் இருந்தது. இச்சம்பவம் ஜனங்கள் அப்போஸ்தலர்கள் மீது கொண்டுள்ள மதிப்புணர்வை அதிகரிக்கச் செய்தது மற்றும் அவர்களது போதனைகளுக்கு இன்னும் ஊக்கமாய்ச் செவிக்கொடுக்கச் செய்தது மற்றும் கர்த்தருடைய நோக்கங்களானது, சபையினுடைய "பன்னிரண்டு அப்போஸ்தலர்கள்" மீது எவ்வாறு பெரிதும் சார்ந்துள்ளது என்பதை அவர்கள் உணரச் செய்தது (வெளிப்படுத்தல் 21:14).

---

R2877 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# இறுதியாக, நீங்கள் எல்லாரும் ஒருமனப்பட்டிருங்கள்

"மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப்பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மனஉருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்குத் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள்." (1 பேதுரு 3:8, 9)

ஒருமனப்பட்டிருத்தல்/இசைவாய் இருந்தல் என்பது, ஒன்றுபோல் இருத்தலைக் குறிப்பதில்லை; மாறாக அது வேற்றுமை இருந்தபோதிலும் ஒற்றுமையாய் இருத்தலைக் குறிக்கின்றதாக இருக்கும்; மேலும்

இதுவே இவ்வசனத்தில், "ஒருமனம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் அர்த்தமாய்க் காணப்படுகின்றது. கர்த்தர் தம்முடைய ஜனங்களின் விஷயத்தில், அவர்களின் தனித்துவங்களையும், தனிச்சிறப்புகளையும் புறக்கணித்தவராக முற்றிலும் ஒன்றுபோல் காணப்பட வேண்டுமெனக் கவனமாய்ப் பார்ப்பவரல்ல; மாறாக முற்றிலும் ஒன்றுபோல் இருப்பதைக்காட்டிலும், வித்தியாசம் இருந்தும் இணக்கமாய் இருப்பதே மிகவும் விரும்பப்படுகின்றது; உதாரணத்திற்கு வானவில்லினுடைய ஏழு நிறங்கள் இசைவாய் ஒன்றுபட்டுக் காணப்படுவதே அதன் அழகாய் இருக்கின்றது. இசையின் விஷயத்திலும்கூட, ஒருவர் பியானோவின் (piano) நரம்பை/தந்தியை (chord) மீட்டும்போது, இதன் விளைவாக ஒற்றுமையைப் பார்க்கலாம், அதாவது பல்வேறு சுரங்கள் சேர்ந்து இனிய கீதத்தைக் கொடுக்கின்றது; இந்த ஒரு கீதமானது, இந்தப் பல்வேறு சுரங்களிலுள்ள ஒன்றினால், கொடுக்கப்பட முடியாது அல்லது சுரங்கள் அனைத்தும் ஒரே அளவில் காணப்பட்டாலும், கொடுக்கப்பட முடியாது. இந்த ஒரு கருத்தைத்தான், தேவனுடைய ஜனங்கள் தொடர்புடைய விஷயத்தில் அப்போஸ்தலரின் வார்த்தைகள் நமக்குக் கொடுக்கின்றது; தேவனுடைய ஜனங்கள் என்பவர்கள் பல்வேறு மனப்பான்மைகளையும், பண்புகளையும், தனிச்சிறப்புகளையும்/தனித்துவங்களையும் உடையவர்கள் ஆவர் மற்றும் மனித மனதை ஆவிக்குரிய மனதென, பழைய மனதை புதிய மனதென இப்படியாக இயல்பை மாற்றின தெய்வீக வேதியியலானது, குணலட்சணத்தின் மற்றும் பண்புகளின் அம்சங்களை முற்றிலுமாய் அழித்துப்போட்டுவிடுவதில்லை; அழித்துப்போடுவதற்குரிய நோக்கத்தையும் கொண்டிருக்கவில்லை; ஆனால் இந்தத் தெய்வீக வேதியியலானது ஒவ்வொருவரிடமிருந்து, பூரணமின்மைகளையும், தூய்மையற்றவைகளையும், முரண்படுகிறவைகளையும் எடுத்துப்போட்டு, இவ்வாறாக இறுதியில் அனைவரையும் ஒன்றுபட வைத்து, ஒருமனப்பாட்டை அடையப்பண்ணுவதற்கு நோக்கம் கொண்டுள்ளது.

ஒருமனப்பட்டிருக்கும் இந்நிலையைக் கர்த்தர், தம்முடைய ஜனங்கள் எல்லோரும் அர்ப்பணம் பண்ணின மாத்திரத்திலேயே அடைந்துவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பதில்லை. மாறாக வசனத்தில், அப்போஸ்தலர் நமக்குச் சுட்டிக்காட்டியுள்ளது போன்று ஒருமனப்பட்டிருக்கும் இந்நிலை என்பது இறுதியான விஷயமாகவே இருக்கின்றது; அப்போஸ்தலர் இதைக் கர்த்தருடைய ஜனங்களிடத்திலுள்ள கிருபையின் கிரியைக்கான/ work of grace ஆரம்பமாகக் குறிப்பிடாமல், அப்போஸ்தலர் "இறுதியில்" என்ற வார்த்தையையே பயன்படுத்துகின்றார்; ஆரம்பத்தில் இல்லை; இறுதியிலேயே நாம் அனைவரும் ஒருமனப்பட்டவர்களாய்க் காணப்பட வேண்டும். கிறிஸ்துவின் சீஷர்கள் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்ந்து, நம்முடைய ஆதார வசனத்தில் குறிப்பிடப்படும் "இறுதியில்" உள்ள மகிமையான நிலையை அடைவதற்கு, பொதுவாக அவர்களுக்கு கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் அதிக காலங்கள் தேவைப்படுகின்றது.

இருதயத்தில், சித்தத்தில், கிறிஸ்துவிலுள்ள பூரணபுருஷனுக்குரிய வளர்ச்சியை அடைவதற்கென நாம் கிருபையிலும், அறிவிலும் மற்றும் அன்பிலும் தொடர்ந்து வளர வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் தெரிவிக்கின்றார். கிறிஸ்துவுக்குள் "குழந்தையாய்" இருப்பவருக்கு "புருஷனுக்குரிய" வளர்ச்சி இருப்பதில்லை மற்றும் இவருக்கு முதலாவதாகத் திருவசனமாகிய பால் தேவைப்படுகின்றது மற்றும் இன்னும் வளரத்தக்கதாக "பலமான ஆகாரம்" தேவைப்படுகின்றது, பிற்பாடு இவர் இறுதியிலேயே, நம்முடைய ஆதார வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சீரிய நிலையை அடைவார்; அதாவது கர்த்தருடனும், ஒவ்வொருவருடனும் ஒருமனப்பட்டிருக்கும் நிலையை அடைவார்; இந்நிலையானது இவரில், கிருபையின் கிரியையானது நன்கு தேறியுள்ளது என்றும், பூரண அன்பானது, ஒவ்வொரு வார்த்தையிலும், ஜீவியத்தின் ஒவ்வொரு கிரியையிலும் முழுமையாய் வெளிப்பட முடியாவிட்டாலும், பூரண அன்பிற்கான இலக்கானது இருதயத்தில் நன்கு அடையப்பட்டுள்ளது என்றுமுள்ளவைகளைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்

நம்முடைய சொந்த ஆவிகளையும், நம்முடைய சொந்த மனங்களையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதும் மற்றும் இவைகளைக் கர்த்தருக்கும், அவருக்கு இசைவாயிருக்கும் அவருடைய ஜனங்களுக்கும் முழு இசைவுடன் கொண்டுவருவது என்பதும் இறுதியில்தான் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டியதாயினும், நம்முடைய ஆதார வசனத்தில் அப்போஸ்தலனினால் புத்திமதி கூறப்பட்ட அந்த இறுதி மற்றும் பிரம்மாண்ட வளர்ச்சி நிலையை அடைவதற்கான நம்முடைய பிரயாசத்தை நாம் தள்ளிப்போட்டு, தாமதப்படுத்தாமல் இருப்போமாக. இதனை நாம் தொடர்ந்து, நம்முன் அளவுகோலாக, நியமமாக, இலட்சியமாக, குறிக்கோளாகக் கொண்டிருக்க வேண்டும்; சிலசமயம் இதில் நாம் தோல்வியடைவோம், ஆனால் ஒருவேளை நாம் சரியாய் இவ்விஷயத்தில் செயல்பட்டிருக்கும் பட்சத்தில், ஒவ்வொரு தோல்வியின் காரணமாக நாம் பலப்படுவோம்; ஏனெனில், விழுகையின் காரணமாயுள்ள நம்முடைய குணலட்சணங்களிலுள்ள பலவீனமான அம்சங்களை நாம் உணர்ந்துகொண்டிருந்ததைக் காட்டிலும், அவைகளை இந்த ஒவ்வொரு தோல்வியும் அதிக தெளிவாய் நமக்குக் காண்பித்துக் கொடுக்கின்றதாய் இருக்கும். மேலும் அந்தப் பலவீனமான அம்சங்கள் ஒவ்வொன்றையும் நாம் கவனமாய்க் கவனித்து, எதிர்காலத்தில் அதில் ஜாக்கிரதையாய் இருக்கும் பட்சத்தில் நாம் போகப்போக, தேவனுடைய கிருபையினால், நம்முடைய மாபெரும் போதகரின் வார்த்தைகள், மாதிரி மற்றும் வழிநடத்தல்கள் வாயிலான அவருடைய வழிகாட்டுதலின் கீழ், ஆதார வசனத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அந்த ஒருமனப்பட்ட நிலைமைக்கு, கீழ்ப்படுத்தப்பட்ட நிலைமைக்கு வந்திடுவோம். இப்படிப்பட்டவர்கள் கடந்துவந்த பாதையைத் திரும்பிப் பார்க்கும்போது, இவர்களது தோல்விகள் இவர்களை எதிராளியானவனுடைய தந்திரங்கள் மற்றும் மாம்சத்தின் பலவீனத்திற்கு எதிராக மிகவும் பலப்படுத்தியுள்ளது என்றும், கர்த்தரை அன்புகூருகின்றவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக மாற்றப்படும் எனும் கர்த்தருடைய ஆசீர்வாதத்தின்படி அனைத்தும் மாற்றப்பட்டுள்ளது என்றும் காண்பார்கள்.

நாம் இறுதியில் அதிகளவில் ஒருமனப்பட்ட நிலைமையை அடையும்போது - அதாவது சண்டையிடுவதற்கு ஏதுவான நம்முடைய இயல்பான சுபாவங்களை நாம் கீழ்ப்படுத்திவிடும்போது - அதாவது இந்தப் போராடும் தன்மையை நாம் கர்த்தருக்கும், அவருடைய வார்த்தைக்கும், அவருடைய ஆவிக்கும், அவருக்கு சொந்தமானவர்களாகவும், நீதிக்கு நேரான இந்த யுத்தத்தில் போர்ச்சேவகர்களாகவும் காணப்படுபவர்களுக்கும் இசைவாகப் படிப்படியாகக் கொண்டுவரும்போது - நாம் அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளதுபோன்று ஒருவருக்கொருவர் மன உருக்கம் கொள்கின்ற நிலைமையில் காணப்படுவோம். சுயத்தின் மீது ஜெயங்கொள்ளத்தக்கதாகச் சகோதரர்கள் முயற்சி செய்துகொண்டிருப்பதை நாம் கண்டு, அனுதாபம் மற்றும் மன உருக்கம் கொள்பவர்களாகச் சகோதரர்களிடத்தில் காணப்படுவோம்; ஆகையால் அவர்கள் மாம்சத்தின் பலவீனம் காரணமாக தவறு செய்யும்பொழுது, நாமும் இப்படியாக, சோதனைக்குட்பட்டோம் என்பதை நினைவில் கொண்டவர்களாக, இப்படியானவர்களைச் சாந்தமான ஆவியுடன் சீர்பொருத்த/சீர்தூக்கிவிட மகிழ்ச்சியாய்க் காணப்படுவோம் (கலாத்தியர் 6:1). நாம் அவர்களை இருதயப்பூர்வமாக, முழுமையாக அன்புகூருவோம், அதாவது பாவத்தை மேற்கொண்டு, கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளரும் விஷயத்தில் ஆவிக்குரிய உதவியை நம்மால் முடிந்தமட்டும் அளிப்பதற்கும் மற்றும் வாய்ப்பு இருக்கும் பட்சத்தில் பூமிக்குரிய காரியங்களில் உதவி அளிப்பதற்கும் ஏதுவான அனைத்தையும் நாம் செய்யத்தக்கதாக நம்மை வழிநடத்தக்கூடிய அப்படிப்பட்ட ஓர் அன்பையும், அப்படிப்பட்ட ஓர் அனுதாபத்தையும், அப்படிப்பட்ட ஒரு மனதுருக்கத்தையும் சகோதரர்களிடத்தில் கொண்டிருப்போம்.

பூமிக்குரிய விஷயங்களில், ஆவிக்குரிய சகோதரர்கள் மத்தியிலான இந்த மனதுருக்கம் மற்றும் சகோதர சிநேகம் என்பது உடன்பிறந்த சகோதரர்களிடத்தில் இருப்பதைக் காட்டிலும் குறைவாய்க் காணப்படக்கூடாது. ஆவிக்குரிய உறவு என்பது, உயர்வானதாகவும், மேன்மையானதாகவும், இரண்டிலும் (மாம்ச உறவு, ஆவிக்குரிய உறவு ஆகிய இரண்டிலும்) பெரியதாகவும் இருப்பதினால், மாம்ச உறவுகளுக்கான கடமைகள், பாசம் மற்றும் அன்பையும் புறக்கணிக்காத விதத்திலும், ஆவிக்குரிய உறவு மிகவும் பலமானதாய்க் காணப்படுவதினால், எந்த மாம்சத்திலுள்ள சகோதரனுக்குப் பூமிக்குரிய காரியங்களில் செய்கிறவைகளைக் காட்டிலும், கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனுக்கே அதிகமாய்ச் செய்ய நாம் அனைவரும் நாடுகின்றவர்களாய் இருப்போம். "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" (கலாத்தியர் 6:10).

இது நம்முடைய சொந்தக் குடும்பத்தையும், இவர்களுக்கான நம்முடைய விசேஷித்த கடமைகளையும் நாம் புறக்கணிக்க வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை, மாறாக இந்தப் பூமிக்குரிய கடமைகள் ஒரு பக்கமிருக்க, மற்றப்படி நம்முடைய இருதயங்களிலும், நம்முடைய அனுதாபங்களிலும், நம்முடைய அன்பிலும் மற்றும் நம்மால் பகிர்ந்துகொள்ள முடிகிற ஆவிக்குரிய, பூமிக்குரிய விஷயங்களிலும் -ஆவிக்குரிய சகோதரரே நமக்கு முதன்மையானவர்களாகக் காணப்பட வேண்டும். கர்த்தருடனும், அவருடைய கிருபையான திட்டத்துடனும், இந்த ஒருமனப்பட்ட நிலையை அடைகின்றவர்கள், இந்த ஒரு நிலைமைக்கு வருவதற்கு அப்படிப்பட்ட ஓர் அனுபவம் அடைந்திருப்பதினால், இதனிமித்தம் இவர்கள் மற்றவர்களிடத்தில் மனவுருக்கம்/பரிவுள்ளம் கொள்வார்கள்; மற்றவர்களுடைய சோதனைகளிலும், பிரச்சனைகளிலும் அனுதாபம் கொள்வார்கள்; மற்றும் இவர்கள் அனைவரிடத்திலும் மரியாதையுடனும், தாழ்மையுடனும், சாந்தத்துடனும் நடந்துகொள்வார்கள்.

ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமெனில், வேதவாக்கியங்களினுடைய நியமத்தின்படி, கிறிஸ்துவின் சபை என்பவர்கள் உலகத்திலுள்ள ஜனங்கள் அனைவரிலும் மிகவும் மெருகூட்டப்பட்டவர்களாக, மிகவும் அடக்கமானவர்களாக, மிகவும் பெருந்தன்மையுடையவர்களாக, மிகவும் இரக்கமுள்ளவர்களாகக் காணப்பட வேண்டும்; இப்படியாக இவர்கள் உண்மையாய்க் காணப்பட வேண்டுமே ஒழிய, வெளித்தோற்றமாய், உலகத்தில் இருக்கிறபடி, அன்பு, சாந்தம் கொண்டவர்கள் போல் காட்சியளிக்கிறவர்களாகக் காணப்படக்கூடாது; இன்னுமாகக் கர்த்தருடைய ஆவியையும், சத்தியத்தின் ஆவியையும், அன்பின் ஆவியையும், நீதியின் ஆவியையும் உணர்ந்துகொள்ளுவதின் காரணத்தினால், இருதயத்திலிருந்து வரும் தாழ்மையாயும், சாந்தமாயும், இரக்கமாயும் இருக்க வேண்டும். நீதியாய் இருப்பதற்குக் கற்றுக்கொள்வது என்பதும், மற்றவர்கள் நமக்குச் செய்ய வேண்டுமென நாம் விரும்புபவைகளை, அனைத்து விஷயங்களிலும் நாம் மற்றவர்களுக்குச் செய்வது என்பதும் மாபெரும் காரியங்களாகும். உண்மைதான் தேவனுடைய பிரமாணம் என்பது, ஆச்சரியமான பிரமாணமாக இருப்பதும், கர்த்தரால் கற்பிக்கப்பட்டவர்களாகவும், தெய்வீகச் சித்தத்திற்கு இசைவாகப் பயிற்றுவிக்கப்பட்டவர்களாகவும் இருக்கும் அவருடைய ஜனங்கள் விசேஷித்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதும் உண்மையே.

போராடும் தன்மையுள்ள ஜனங்கள் (மாம்சத்தில் இருக்கும்பொழுது) பழிவாங்குவதற்கு நினைப்பார்கள்; ஆனால் சுயத்தைக் கட்டுப்படுத்தும் பாடத்தைக் கர்த்தரிடமிருந்து கற்றுக்கொண்டவர்கள் மற்றும் சாந்தத்தையும், சகோதர சிநேகத்தையும், பரிவுள்ளத்தையும்/மன

உருக்கத்தையும் வளர்த்துக்கொண்டவர்கள், நம்முடைய ஆதார வசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி தீமைக்குத் தீமை செய்யாமலும், பழிச்சொல்லுக்குப் பழிச்சொல் கூறாமலும் இருப்பதற்கு ஆயத்தப்பட்டிருப்பார்கள். இன்னுமாக இவர்கள் தங்கள் மாதிரியாகிய கர்த்தரை நோக்கி, "அவர் வையப்படும்போது பதில் வையாமல்" எப்படிக் காணப்பட்டார் என்று காண்பார்கள். அவரை வைவதற்கும், தீதாய்ப் பேசுவதற்கும் ஏதுவான ஏதோ ஒன்றை, அவருடைய சத்துருக்கள் அவரில் கண்ட காரணத்தினால் அவர் பதில் வையாமல் இருக்கவில்லை; இல்லையேல் அவரால் வையமுடியாத அளவுக்கும், தீதாய்ப் பேச முடியாத அளவுக்கும் அவருடைய சத்துருக்கள் பூரணமாய்க் காணப்பட்டதினால் அவர் பதில் வையாமல் இருக்கவில்லை, மாறாக அவர் தெய்வீகச் சித்தத்திற்கு முழுமையாய்த் தம்மைக் கீழ்ப்படுத்தி ஒப்புக்கொடுத்திருந்ததினாலேயே, அவரால் ஜனங்களின் பழிப்பேச்சுகளையும், கேலிப்பேச்சுகளையும் ஏற்றுக்கொள்ளவும், தாழ்மையுடனும், பொறுமையுடனும் இவைகளைச் சகிக்கவும் முடிந்தது மற்றும் இதற்காகவே தாம் அழைக்கப்பட்டுள்ளார் என்பதையும், தாம் பொறுமையுடன் சகித்து, படிப்பினைகளைக் கற்றுக்கொண்டு, தம்மை உண்மையுள்ளவர் என்று நிரூபித்து, தம்முடைய உண்மையான குணலட்சணத்தை வளர்த்து, அவைகளை வெளிப்படுத்த வேண்டும் என்பதையும், ஜனங்களினுடைய குருட்டுத்தனம் மற்றும் அறியாமையில், அவர்கள் மீது தம்முடைய பரிவுள்ளத்தையும், அவர்களுக்கான தம்முடைய அன்பையும் வெளிப்படுத்த வேண்டும் என்பதையும் அவரால் நினைவில் கொண்டிருக்கவும் முடிந்தது.

நம்முடைய கர்த்தருக்கு ஒத்த சாயலில் நாம் வளர்கையில், நம்மிடத்திலும் மேற்கூறியப்படியே காணப்பட வேண்டும். நம்மைப் பழிச்சொல் கூறுபவர்களை நாமும் பழிச்சொல் கூறுவதற்கும், நம்மை வைபவர்களை நாமும் பதில் வைவதற்கும் நாம் விரும்பாதவர்களாய்க் காணப்பட வேண்டும். அனைத்தையும் இழப்பதற்கு ஆயத்தமாகவும், மகிழ்ச்சியுடன் இழப்பதற்கும் ஆயத்தமாய்க் காணப்பட வேண்டும். ஆம், தற்காலத்தின் பாடுகள் மிக அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகின்றது என அப்போஸ்தலர் தெரிவித்துள்ளதை அறிந்தவர்களாக நாம் இந்தக் காலத்தின் பாடுகளிலும், பிரச்சனைகளிலும் களிகூருகின்றவர்களாய்க் காணப்பட வேண்டும். பேதுருவின் வார்த்தைகளுக்கு இசைவாக, நமது கர்த்தருடைய வார்த்தைகளும் காணப்படுகின்றதை நாம் இங்குக் கவனிக்கின்றோம். "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள்" மத்தேயு 5:44. (பிலிப்பியர் 3:8; 2 கொரிந்தியர் 4:17; ரோமர் 12:14). நாம் ஆசீர்வதிக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகின்றார். ஒருவேளை நமது சத்துருக்களை நாம் சிநேகித்து, அவர்களை ஆசீர்வதிப்பதற்கு ஆயத்தமாயும், அவர்களுக்கு உதவிட ஆவலாயும், அவர்களை இருளினின்றும், சீரழிவிலிருந்தும் தூக்கிவிடுவதற்கு ஆசையாகவும் காணப்படுவதும், தெய்வீகத் திட்டத்திற்கு இசைவாய் நம்மால் செய்ய முடிந்த அனைத்தையும் செய்வதும், செய்ய விரும்புவதுமாகிய பூரணமான அன்பின் இலக்கை, அதாவது ஓட்டத்தின் முடிவில் அடையப்பட வேண்டிய இந்த உயர்வான தரநிலையை நாம் இன்னமும் எட்டவில்லையெனில், நாம் சோர்ந்துபோய்விட வேண்டாம்; மாறாக பூரணமடைந்துள்ள குணலட்சணத்தின் இலக்காகிய இந்நிலையை நாம் அடையத்தக்கதாக, முடிந்தமட்டும் வேகமாய் அடைவதற்கு முன்னேறுவோமாக. ஏனெனில், அப்போஸ்தலர் கூறுவதுபோன்று, "ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்வதற்காகவே நாம் அழைக்கப்பட்டும் இருக்கின்றோம்."

R2755 [தெரிந்தெடுக்கப்பட்ட பக்திகள்]

# கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

"அன்பு நியாயப்பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாய் இருக்கின்றது" என்று தேவ ஏவுதலின் பேரில் அப்போஸ்தலன் குறிப்பிட்டதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை! எந்த அளவுக்கு அன்பானது இருதயத்தில் காணப்படுகின்றதோ, அவ்வளவாய் ஒருவரால் திவ்விய பிரமாணத்தினை நிறைவேற்றிட முடியும் என்பதை நம்மால் எளிமையாய்க் காணமுடிகின்றது. இது எந்தவிதத்திலும், "மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்" எனும் வேதவாக்கியம் அறிக்கைப்பண்ணும் காரியத்திற்கு முரண்படுகிறதில்லை. யூதர்களால் நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்ள முடியாததற்கான காரணம், அவர்கள் தங்கள் இருதயத்தில் பூரண அன்பைப் பெற்றிராதவர்களாய் இருந்தார்கள்; மேலும் இதே இடர்பாடானது - அதாவது ஒருவேளை நம்முடைய உடன்படிக்கையில் கிறிஸ்துவினுடைய விலையேறப்பெற்ற இரத்தத்தின் வாயிலாக நமக்கு அநுகூலமான ஏற்பாடு பண்ணப்படவில்லை என்றால், நம்முடைய மாம்ச இருதயங்களுக்குப் பதிலாக, புதுச்சிருஷ்டிகளென நம்முடைய நோக்கங்களானது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால் - புதிய உடன்படிக்கைக்குரியவர்களாகிய நம் வழியிலும் மேற்கூறிய இதே இடர்பாடானது தடங்கலாய் இருந்திருக்கும். இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படிக்குக் கிறிஸ்துவின் மூலமாய் தேவனுடன் ஓர் உடன்படிக்கை உறவிற்குள் பிரவேசித்தவர்கள் . . . ஒவ்வொரு சிந்தை மற்றும் வார்த்தைகள் விஷயத்திலும் அன்பு எனும் முழு அளவுகோலினுடைய/தரநிலையினுடைய முழுமையான அளவுக்கு நடக்க முடியாவிட்டாலும், அவர்கள் "ஆவியின்படி நடக்கின்றவர்களாக," அன்பின்படி நடக்கின்றவர்களாக இருக்கின்றனர். இவ்விதத்திலான அவர்களது பிரயாசங்களானது, அவர்கள் ஏதோ பூரணர்களாய் இருப்பதுபோன்று ஏற்றுக்கொள்ளப்படுகின்றது மற்றும் கர்த்தருடைய அறிவுரைகள், அவரது வார்த்தைகளினுடைய வழிக்காட்டுதல்கள், வழிநடத்துதல்கள் கீழ் - அவர்கள் நாளுக்குநாள், வாராவாரம், வருடாவருடம் . . . இந்த நல்ல வழியில் முன்னேற்றம் அடைந்து சென்றுகொண்டிருப்பார்கள் - கர்த்தருடைய வார்த்தையிலும், திட்டத்திலும், குணலட்சணத்திலும் அன்பானது வெளிப்படுகிறதை அவர்கள் காண்கையில், அன்பு என்றால் என்னவென்று அதிகமதிகமாய்க் கற்றுக்கொள்ளுகின்றனர் - மேலும் பிதாவின் சாயலாயுள்ள பூரண அன்பை உடைய தேவனுடைய நேச குமாரனின் சாயலை அடைவதற்கு அதிகமதிகமாய் நாடுகின்றனர் மற்றும் அதிகமதிகமாய் அதை அடைகின்றனர்.

நம் சித்தங்களானது (அதுவும் மாம்சத்தினுடைய அபூரணங்களின் காரணமாக வார்த்தைகளிலும், கிரியைகளிலும் நம் சித்தங்களை நாம் அபூரணமாய் வெளிப்படுத்துபவர்களாய் இருப்பினும், நம் சித்தங்களானது) இந்த இலக்கோடு முழு இசைவாய்க் காணப்படத்தக்கதாக - முன்பே சொல்லியுள்ளது போன்று, பூரண அன்பு எனும் இவ்விலக்கானது இருதயத்தில் அடையப்பட வேண்டியதாயிருக்கின்றது. தேவன் பேரிலான அன்பு எனும் இக்கிருபையில் வளருவதற்கு, மனுக்குலத்தின் மீதான அன்பிலும், அதிலும் விசேஷமாக நீதிக்கு இசைவாகவும், இணக்கமாகவும் காணப்படுபவர்கள் மீதான அன்பிலும் வளர்வதையும் அவசியமாக்குகின்றது (1 யோவான் 4:8, 20, 21; 5:1).

R4190 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை நிறைவேற்று

அன்புக்குரிய சகோதரன் மற்றும் பாஸ்டர் அவர்களே:--

சபையில் இருபாலினருக்கிடையிலான தகுதியான நடத்தைக்கடுத்த காரியத்தைக்குறித்துச் சில காலங்களாகவே உங்களுக்கு எழுத வேண்டுமென்றிருந்தேன். கடந்த சில மாத காலங்களுக்குள் சில விஷயங்கள் என் கவனத்திற்கு வந்தபடியால், அத்தலைப்பை/பாடப்பொருளை உங்கள் கவனத்திற்கு நினைப்பூட்டுவது என்னுடைய கடமை என்று உணர்ந்தேன். என் கவனத்திற்கு வந்த அந்தக் குறிப்பிட்ட சம்பவங்களை உங்களுக்குத் தெளிவாகவும், முழுமையாகவும் என்னால் எழுத முடியும் என்றாலும், அப்படி எழுதுவதற்கான சுயாதீனம் எனக்கடுத்ததல்ல; ஆனால் எதிராளியானவன் அனைத்து நாடுகளிலும் இப்படியான விஷயத்தின் அடிப்படையில் கடுமையான தாக்குதல்களை ஏறெடுத்துக் கொண்டிருக்கின்றான் - அதாவது மாம்சத்தில் உறவினர்களாயிராத/ உடன்பிறக்காதவர்களாயிருக்கும் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு இடையில் - கட்டிப்பிடிப்பது மற்றும் முத்தங்கள் கொடுப்பது மற்றும் அதிகப்படியான நேசமான வார்த்தைகளுள்ள கடிதங்கள் எழுதுவது முதலானவைகள் ஆவிக்குரிய பாசத்தின் தகுதியான வெளிப்படுத்தல்களாகவே இருக்கின்றன என்று [மாம்சத்திலும், ஆவியிலும் போதுமான அளவுக்கு வயதில் முதிர்ந்தவர்களாகிய] அருமையான சகோதரர்களில் சிலர் எண்ணிக்கொள்ளத்தக்கதாக, எதிராளியானவன் வஞ்சிக்கின்றான் என்று நான் நம்புமளவுக்கு நான் அச்சம்பவங்களைக் குறித்துக் கேள்விபட்டுமிருக்கின்றேன் மற்றும் கண்டும் இருக்கின்றேன்.

இத்தகைய மனப்பான்மையின் நிமித்தமான விளைவானது, நிச்சயமாகவே ஆவிக்குரியவற்றில் பெலவீனமடைதலாக இருக்கும்; இன்னுமாக ஊற்றி வழியப்படும் பாசத்திற்குப் பாத்திரமான வேறு சிலரைப் புறக்கணித்துவிடும் நிலைமையையும் மற்றும் இந்த வேறு சிலரிடம் அன்பற்றுக் காணப்படும் நிலைமையையும் சிலசமயங்கள் உண்டாக்கிவிடும். ஒருவேளை எதிராளியானவன் தன் திட்டத்தில் வெற்றியடைவானாகில், மிகுந்த ஒழுக்கக்கேடும், நாம் அன்புகூருகின்றதான தேவ நோக்கங்களுக்கு வெளியரங்கமான அவமானமும் நிச்சயமாய்க் கடந்துவரும். இப்படி வர வேண்டுமா? தேவன் தடுத்திடுவாராக! அவரால் முடியும் மற்றும் அவர் நம்மை விடுவிப்பார் என்று நான் நம்புகின்றேன். அந்த அருமையான சகோதரரின் இருதய நோக்கங்கள் தூய்மையானவையாய் இருக்குமானால் (தூய்மையானது என்றே நான் நம்புகின்றேன்), அப்படியானால் இவ்விஷயமானது நிச்சயமாகவே சாத்தானுடைய வஞ்சனையே ஆகும்.

இப்பொழுதும் அருமை சகோதரர் ரசல் அவர்களே, இக்கடிதத்தில் நான் கீழே மேற்கோளிட்டுக் காட்டியுள்ள ஆறாம் தொகுதியினுடைய 651, 652-ஆம் பக்கங்களில் விவரிக்கப்பட்டுள்ள காரியங்கள் தொடர்பாக, தாங்கள் தெளிவான மற்றும் அதேசமயம் மாற்றி அர்த்தம் எடுக்க முடியாத வார்த்தைகளில் வாட்ச் டவர் கட்டுரை ஒன்றை வெளியிட தங்களிடம் கேட்டுகொள்ள விரும்புகின்றேன். இவ்வகையான நடத்தையை விமர்சிக்க துணியும் எவரும், "தீமை பேசுகிறார்கள்" என்றெல்லாம் சொல்லிக் கடிந்துகொள்ளப்படுவதற்கு உங்களது எழுத்துகளையும், வேதவாக்கியங்களையும் சிலர் திரித்துப் பயன்படுத்துவதை நான் அறிந்துள்ளபடியால் நீங்கள் இப்படிச் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றேன்.

இக்காரியத்தை முன்வைத்ததில் நான் அதிகப்படியான துணிச்சல் காட்டியிருப்பேனாகில், அருமையான சகோதரனே, என்னை மன்னியுங்கள்; இவ்விஷயம் குறித்து நான் மிகவும் கவலைக்கொண்டுள்ளேன். மிகுந்த கிறிஸ்தவ அன்புடன், இராஜாவின் ஊழியத்தில் என்றென்றும் உங்கள், சகோ. Horace. E. Hollister.

## வரம்புமுறையற்ற சகவாசம் கூறப்படவில்லை

(தொகுதி - 6, பக்கம்: 651, 652; திருத்தம் செய்யப்பட்ட பத்திகள்)

அப்போஸ்தலர் மூலமாக, ஆண்டவர் தெளிவாகக் கற்றுக்கொடுக்கிற காரியங்களாவன: ஆண்டவருடைய கிருபையும், சிலாக்கியங்களும் எல்லாப் புதுச்சிருஷ்டிகளுக்கும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன; அது அவர்களுடைய வைராக்கியத்தைப் பொறுத்தும், அவர்கள் அவர்மேல் வைத்திருக்கிற அன்பைப் பொறுத்தும், அவருடைய காரியங்களின்மேல் வைக்கும் அன்பைப் பொறுத்தும் இருக்கிறது; மேலும் அழிவுக்குரிய சரீரத்தின் நிறம், பால், இனம் முதலானவை - அவர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பதிலும், அவர்களை மதிப்பீடு செய்வதிலும், இறுதியில் வெகுமதிகளை அளிப்பதிலும் எந்தவிதமான பாகுபாட்டையும் காட்டாது என்பதேயாகும். இந்த விஷயத்தில் பிதாவின் சித்தத்தை அறிந்து, புதுச்சிருஷ்டிகள் அனைவரும், இதே கருத்தைக் கொண்டிருக்கவேண்டும்; புதுச்சிருஷ்டிகள் அனைவரையும் கிறிஸ்துவுக்குள் "சகோதரர்" என்று மதிக்கவேண்டும்; எல்லாரிடமும் மிகவும் அன்பாய் இருப்பதோடு, எல்லாருக்கும் ஊழியம்செய்ய நாடவேண்டும்; ஆண்டவர் தம்முடைய காரியங்களுக்காக மிக அதிக அளவு வைராக்கியத்தைக் காட்டியவர்களுக்குத் தயவுபாராட்டி கனப்படுத்தினார் என்று அவர்தாமே காட்டியபடி தவிர, மற்றபடி சகோதரர்களிடையே பாகுபாடு நாம் காட்டக்கூடாது. இப்படி நிறம், பால், இனம் என்பவைகளை ஒதுக்கிவிட்டு பாகுபாடு பார்க்காமல் இருப்பது என்பது நம் புதுச்சிருஷ்டி விஷயத்திலேயே ஆகும்; ஆனாலும் இவை நம்முடைய அழிவுக்குரிய சரீரங்கள் விஷயத்திலும், உலகத்தோடு உள்ள உறவின் விஷயத்திலும், ஒருவரோடு ஒருவர் நாம் கொண்டுள்ள உறவின் விஷயத்திலும் முற்றிலும் புறக்கணிக்கப்படக்கூடாது; ஆகவே இருபாலருக்கும் இடையில் உள்ள உறவு மற்றும் நடத்தை விஷயத்தில் ஒழுக்கமானது புதுச்சிருஷ்டிகளால் காக்கப்பட வேண்டும்.

இவர்கள் தெளிந்த புத்தியின் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறபடியால், உண்மையிலேயே உலகத்தாரைக்காட்டிலும் அதிக அளவு ஞானமும், முன்யோசனையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஆகையால் தாங்கள் ஒரு புதுச்சிருஷ்டியாகக் காணப்பட்டு, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்க முற்படுகிறபடியால், தங்களுடைய மாம்ச பெலவீனங்களுடைய விஷயத்திலும், இருபாலருக்கும் இடையில் காணப்பட வேண்டிய சில தகுதியான நடத்தை, அடக்கம், கட்டுப்பாடு போன்றவைகளில் சில எல்லைகளை வரையறுக்கும் விஷயத்திலும், உலகத்தாரைக்காட்டிலும் இன்னும் அதிக ஜாக்கிரதை உள்ளவர்களாக இருப்பது அவர்களுக்கு நல்லது. புதுச்சிருஷ்டியானது எந்த அளவுக்கு ஆவிக்குரிய வாழ்க்கையை வாஞ்சிக்கிறதோ, புதுச்சிருஷ்டியின் நலனுக்கு எதிராக பாலிய இச்சைகள் யுத்தம் செய்கின்றன என்று எந்த அளவுக்கு உணருகின்றதோ, அவ்வளவாய் அவர்களுடைய பாதங்களுக்குச் செம்மையான பாதைகளை உண்டுபண்ணவும், அவர்களுக்கும், இச்சைகளுக்கும் இடையில் அதிகம் தடைகளை, உறுதியாக உண்டுபண்ணவும், புதுச்சிருஷ்டி உலகத்தாரைக்காட்டிலும் அதிகமாகச் செய்யவும் முயற்சிக்க வேண்டும்.

## சகோதரர் ரசல் அவர்களின் பதில்

மேலே இடம்பெற்றுள்ள கடிதத்தை அப்படியே வெளியிடுவது நமது கர்த்தருடைய சித்தமாக இருக்கும் என்று நாங்கள் நம்புகின்றோம். விசேஷமாய் உடன்படிக்கைப் பண்ணியுள்ள ஜனங்களாகிய நாம் எதிர்க்க வேண்டிய உலகளாவிய ஒரு போக்கினை - தீமையான நோக்கம் ஏதும் இல்லாமல் இக்கடிதமானது கவனத்திற்குக்கொண்டுவருகின்றதாய் இருக்கின்றது. அறுவடைக் காலத்தின் கடைசி

ஏழு வருட காலங்களில் எதிராளியானவன் பல்வேறு விதமான எதிர்க்கும்/தாக்கும் தந்திரங்களை முயற்சிப்பான் என்று எதிர்ப்பார்க்கலாம் என்றும், கர்த்தர் அவனுக்குச் சுதந்திரம் கொடுப்பார் என்றும் ஏற்கெனவே கவனத்திற்குக்கொண்டு வந்திருந்தோம். சோதனை காலமானது பூமியில் குடியிருப்பவர்கள் அனைவரையும் சோதித்திடும் (வெளிப்படுத்தல் 3:10) என்று நமக்குச் சொல்லப்பட்டிருப்பினும், அது விசேஷித்த ஆற்றலுடன் அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு, ஆலய வகுப்பாருக்கு அல்லது தேவனுடைய வீட்டாருக்கு (1 பேதுரு 4:17) எதிராய் வருமானால், அதில் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## எதிர் பாலினரிடமிருந்து சோதனைகள்

அர்ப்பணிக்கப்பட்டவர்களைப் பொறுத்தமட்டில், சோதனைகள் வேறுபடுகின்றன. பூரண அன்பானது அடையப்பட வேண்டிய மற்றும் அதிலே தொடர்ந்து நிற்க வேண்டிய இலக்காகவும் உள்ளது; இந்த இலக்கை நோக்கி செல்வதிலிருந்து நம்மைத் தவிர்க்க முடியாது என்று காணும் எதிராளியானவன், நம்மைத் தள்ளிவிடத் துவங்குகின்றான் - இலக்கினின்று, மேல் இடம்பெறும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதான பூமிக்குரிய அன்பிற்குள்ளாகத் தள்ளிவிடுகின்றான். இதைச் சற்றுச் சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு, ஆபத்து நன்கு விளங்கும். கர்த்தருடைய அங்கத்தினர்கள் மத்தியிலுள்ள ஆவிக்குரிய அன்பு என்பது தவிர்க்க முடியாத ஒன்று என்பதினால், அது தகுதியானதேயாகும். நம்முடைய இருதயங்களைக் கிறிஸ்தவ அன்பில் கட்டுகின்றதான கட்டானது, நாங்கள் அறிந்திருக்கிறவரை அருமையானதாகவும், பலமானதாகவும் உள்ளது. இந்த அன்போடுகூட, ஒருவர் இன்னொருவருடைய நோக்கத்திலுள்ள நாணயத்தின் மீது அடையும் நம்பிக்கையும் கூடவே கடந்துவருகின்றது; இதில் விழிப்பாய் இருக்கவில்லையெனில், அனுபவம் காரணமாய் உலகத்திற்கு அவசியமானது என்று சமுதாயம் கண்டுகொண்டுள்ளதான வரையறைகள் சிலவற்றைச் சிலர் தளர்த்திவிட நேரிட்டுவிடும். கர்த்தருடைய ஜனங்கள் உலகத்தாரைக் காட்டிலும் ஒழுக்கம் விஷயத்தில் குறைவான நெறிமுறைகளைக் கொண்டிருக்கின்றார்கள் என்று நாம் சொல்லவில்லை; மாறாக உயர்வான கொள்கைகளை உடையவர்களாய் இருப்பதினால், அவர்கள் மாம்சத்தில் இல்லாமல், மாறாக ஆவியில் ஒருவரில் ஒருவர் புதிய நம்பிக்கையினை அடைந்திருக்கின்றனர் என்றே நாம் சொல்கின்றோம். அப்போது அவர்கள் மாம்சம் குறித்த அனைத்தையும் மறந்துபோய்விடுகின்றனர் மற்றும் இந்த விஷயத்திலேயே எதிராளியானவன் பதுங்கியிருந்து, அவர்களைத் தாக்கிடும் அபாயத்திற்குள்ளாக்குவான்.

இன்னொரு பக்கத்தில் கசப்பை, பொறாமையை, சண்டைகளை எழுப்புவதன் மூலம் உண்மையுள்ளவர்களை "இலக்கிலிருந்து" தள்ளிவிடுவதற்கு முயன்றுகொண்டிருக்கின்றான். இத்தகைய மேற்கூறிய விதைகளானது தானாய் முளைத்தெழுகின்றது என்று அர்ப்பணிக்கப்பட்டவர்களின் இருதயங்களில் எண்ணம் ஏற்படத்தக்கதாய் அவன் மிகவும் தந்திரமாய்ச் செயல்படுகின்றான். நாங்கள் புரிந்திருக்கிறவரை, நீதி, தூய்மை மற்றும் சத்தியம் விருத்தியடைவது போன்ற தோற்றத்தில் தீமையின் விதைகளை விதைப்பதே எதிராளியானவனின் பிரயாசமாய் இருக்கின்றது. ஆ! அவன் தந்திரமுள்ள சத்துருவாவான் மற்றும் கண்ணியில் அகப்படுத்துவதற்கான அவனது அடுத்தக்கட்ட நடவடிக்கை என்னவாக இருக்கும் என்று நம்மால் யூகிக்க அவ்வளவாக முடியாவிட்டாலும், "அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே."

மேல் இடம்பெறும் கடிதத்தில் சகோ. Hollister அவர்கள், தான் யாருடைய நடத்தைகளை அங்கீகரியாமல் இருந்தாரோ, அவர்களைக் குறித்துத் தீமையாய் யூகம் பண்ணிடுவதற்கான சோதனைக்குள்ளானார்; ஆனால் அவர் கண்ணியிலிருந்து தப்பித்துக்கொள்வதில் ஜெயம் கொண்டார்; ஆகையால் மற்றவர்கள் தீய நோக்கமும், அசுத்தமான உள்நோக்கமும் கொண்டிருந்தனர் என்று நியாயந்தீர்க்காமல், அவர் எங்களைப் போன்று காரியத்தைக் கண்நோக்கினவராகவும் மற்றும் கர்த்தர்

எவ்வாறு கண்ணோக்குவார் என்று நாங்கள் நம்புவதுபோன்று கண்ணோக்கினவராகவும் இருக்கின்றார் - அதாவது அது எதிராளியானவனுடைய கண்ணி என்றும், அன்பில் சகோதர சகோதரிகளை எச்சரிப்பது நம்முடையதான கடமை என்றும் கண்நோக்கினவராக இருக்கின்றார்.

மத்தேயு 18:15-17-வரையிலான வசனங்களினுடைய அர்த்தத்தைக்குறித்தும், அதை எவ்வாறு சரியாய்ப் பொருத்திப்பார்ப்பது என்பதைக் குறித்தும் கற்றுக்கொள்வதற்குக் கர்த்தருடைய அருமையான பின்னடியார்கள் எத்தனை காலம்தான் எடுத்துக்கொள்வார்கள்! இந்தப் பிரமாணத்தைக் கவனிக்கவும், சரியாய்ப் பயன்படுத்தவும் தவறுவது என்பதே, எல்லாத் திசைகளிலும் சகோதரர்களுக்கிடையிலுள்ள கிட்டத்தட்ட ஒவ்வொரு பிரச்சனைக்குமான ஆணிவேராய் இருக்கின்றதென எங்களுக்குத் தோன்றுகின்றது. எங்களுக்குத் தெரிந்தவரை, இவ்விஷயத்தைக் குறித்து வேதாகம பாடங்களினுடைய ஆறாம் தொகுதியில் மிக எளிமையாய் விவரித்துள்ளோம்; எனினும் இது விஷயத்தில் கிறிஸ்துவின் அருமையான அங்கத்தினர்களிலுள்ள மிகவும் வளர்ச்சிப் பெற்றுள்ள சகோதரர்களில் சிலர் கண்மூடித்தனமாகத் தவறுவதைக் காண்பதில் எங்களுக்கு ஆச்சரியமும், மனவேதனையும் உண்டாகுகின்றது. இந்தத் திவ்விய பிரமாணத்தினை ஓரங்கட்டுவதற்குப் "பழைய மனுஷனால்" வழக்கமாய்ப் பயன்படுத்தப்படும் போலிவாதம் என்னவெனில்: "இப்பிரமாணத்தை இந்த ஒரு சம்பவத்திற்கு/விஷயத்திற்குப் பொருத்திட முடியாது;" அல்லது "தன் விஷயத்தில் இப்பிரமாணத்தினை எப்படிப் பொருத்திச் செயல்படுவது என்று தனக்குத் தெரியாது என்ற எண்ணம் கொண்டு, இதனால் மற்றவர்களுடைய ஆலோசனையைக் கேட்க வேண்டும்" என்று கூறுவதேயாகும்; "அவனிடத்தில் போய், நீயும், அவனும் தனித்திருக்கையில் அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து" எனும் கர்த்தருடைய வார்த்தைகள் எவற்றைத் தடைச்செய்துள்ளது என்று புரிந்துகொள்ள வேண்டும்.

இப்படிப்போய்ப் பேசுவது என்பது, தவறில் உள்ளவரைக் கடிந்துகொள்வதற்கோ அல்லது கண்டனம் பண்ணுவதற்கோ அல்லது அவமானப்படுத்துவதற்கோ அல்லது தண்டிப்பதற்கோ அல்ல என்பதை வெகு சிலரே புரிந்துகொண்டவர்களாய் இருக்கின்றனர். அப்படிச் செய்ய வேண்டியவற்றையெல்லாம் கர்த்தர் பார்த்துக்கொள்வார் - "கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார். நம்முடைய நோக்கமானது, தவற்றைத் தடுத்து நிறுத்துவதும் மற்றும் இவ்வாறாகச் "சகோதரனை ஆதாயப்படுத்துவதும்" என்பதாக மாத்திரம் காணப்பட வேண்டும். ஆகையால் "முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைப் பார்" என்ற நமது கர்த்தருடைய ஆலோசனையானது பரவலாய்த் தேவைப்படுகின்றது என்று எண்ணுவது சரியே. ஆகையால் மத்தேயு 18:15-17-வரையிலான வசனங்களைச் செயல்படுத்த முயற்சிப்பதற்கு முன்னதாக, முதல் கட்டப்பிரயாசம் எடுப்பதற்கு முன்னதாகத் தேவனுக்கு முன்பு முழங்கால்படியிடுவதும், நம்முடைய இருதயங்களை மிகவும் தாழ்மையான, அன்பான நிலைமைக்கும், கசப்பு முதலியவைகளற்ற நிலைமைக்கும் கொண்டுவருவதும் ஞானமான காரியமாய் இருக்கும். பின்னர் அவ்வேதவாக்கியங்களை (மத்தேயு 18:15-17) மீண்டுமாக வாசியுங்கள் மற்றும் வேதாகம பாடங்களின் ஆறாம் தொகுதியில் இடம்பெறும் விளக்கவுரைகளை வாசியுங்கள் மற்றும் "மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவர்" சம்பந்தப்பட்ட காரியத்தில், முறையின்றி நடந்துகொள்ளக்கூடாது என்னும் அச்சம் கொண்டு, மிகவும் கவனமாய்ச் செயல்படுங்கள்.

கிறிஸ்துவினுடைய "அங்கத்தினர்களிலுள்ள" யாரும் தங்கள் சொந்த ஆவிக்குரிய பாதங்களுக்கோ அல்லது மற்றவர்களுடைய ஆவிக்குரிய பாதங்களுக்கோ விரும்பின நிலையிலும், வேண்டுமென்றும் கண்ணிகளை ஏற்படுத்திக்கொள்ளமாட்டார்கள் என்ற சகோ. Hollister அவர்களின் கருத்தை நாங்களும் ஒத்துக்கொள்கின்றோம். அவர்களது நல்நோக்கங்களிலும், மாம்சத்தின் மீதான

தங்கள் கட்டுப்பாட்டின் மீதுள்ள அதிகபடியான அவர்களது நம்பிக்கையிலும் மற்றும் எதிராளியானவனுடைய தந்திரங்கள் குறித்துத் தெரிந்திருக்க, எதிராளியானவனுடைய தந்திரத்தைக்குறித்து அவர்கள் மறந்துபோனதிலும்தான், அவர்களுக்கான அபாயங்களானது பதுங்கியிருக்கின்றது எனும் கருத்தை நாங்கள் முற்றிலும் ஒப்புக்கொள்கின்றோம். தீமையாய் யூகம் பண்ணிடக்கூடாது என்று நாங்கள் வலியுறுத்திடும் அதே வேளையில், "கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளாய் இருங்கள்" (பிலிப்பியர் 2:15) எனும் அப்போஸ்தலனுடைய வார்த்தைகளையும்கூட வலியுறுத்துகின்றோம். சுயத்தை மேற்கொள்ளும் விஷயத்தில் நாம் நம்மைக்குறித்து ஒருவேளை நன்கு சுயக்கட்டுபாடு உடையவர்கள் என்றும், சோதனைக்குள் சிக்கவே மாட்டோம் என்றும் நம்பிக்கைக்கொண்டவர்களாக இருந்தாலும்கூட, நம்மால் எப்படி மற்றவர்களைக் கணிக்க முடியும் அல்லது நம்மை போன்றே அவர்களும் இருப்பார்கள் என்று சொல்ல முடியும்? அல்லது சத்தியத்திலுள்ள ஜனங்கள் அனைவரும் ஒவ்வொரு சிந்தைகளையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதன் மூலம், சிறைப்படுத்துவதன் மூலம் நன்கு வளர்ந்துள்ளார்கள் என்று வைத்துக்கொண்டாலும், அப்போதும் அவர்கள் மனுஷர்களுக்கு உதவும் வண்ணமாகவும், பரலோகத்தில் இருக்கும் தங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் வண்ணமாகவும் தங்கள் வெளிச்சத்தைத் தொடர்ந்து பிரகாசிப்பிக்க பண்ண வேண்டாமோ? "ஆதலால் போஜனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்காதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன்" (1 கொரிந்தியர் 8:13) எனும் அப்போஸ்தலனின் வார்த்தைகளைக் கவனியுங்கள். நம் மாம்சம் மரித்துப்போய்விட்டது என்று நாம் எண்ணிக்கொள்ளாதிருப்போமாக. இதற்கு மாறாக எண்ணிக்கொண்டிருப்பதுதான் பாதுகாப்பானதாகும்; நம்மையோ அல்லது மற்றவர்களையோ அகப்படுத்தும்படிக்கு எதிராளியானவனால் ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு கண்ணிக்கும் எதிராக நம்மைக் காத்துக்கொள்வதுதான் பாதுகாப்பானதாகும்.

---

R4662

# உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக

"உங்கள் மீது நாங்கள் கொண்ட அன்பு வளர்ந்து பெருகுவதுபோல, நீங்கள் ஒருவர் ஒருவருக்காகவும் எல்லாருக்காகவும் கொண்டுள்ள அன்பையும் ஆண்டவர் வளர்த்துப் பெருகச் செய்வாராக! இவ்வாறு நம் ஆண்டவர் இயேசு தம்முடைய தூயோர் அனைவரோடும் வரும்பொழுது, நம் தந்தையாம் கடவுள்முன் நீங்கள் குற்றமின்றித் தூய்மையாக இருக்குமாறு அவர் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக!" (1 தெசலோனிக்கேயர் 3:12, 13; திருவிவிலியம்)

இவ்வார்த்தைகள் பாவிகளுக்கு இல்லாமல், பரிசுத்தவான்களுக்கே பேசப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் ஆவி இல்லாதவர்களுக்கும், அன்பின் ஆவி இல்லாதவர்களுக்கும், அவருடையவர்கள் அல்லாதவர்களுக்கும், அப்போஸ்தலர் புத்திமதி கூறாமல், மாறாக அன்பின் பரிசுத்த ஆவியினால் ஏற்கெனவே ஜெநிப்பிக்கப்பட்டவர்களாகக் காணப்படுகிறவர்களுக்கே புத்திமதி கூறுகின்றார். அன்பில் வளர்ந்து பெருகுதல் என்பது, அன்பானது ஏற்கெனவே இருதயத்தில் ஓர் ஆதிக்கத்தை அடைந்துள்ளது மற்றும் இதன் காரணமாக அன்பானது இன்னமும் வளர்ந்து முழுமையாகச் சகல எண்ணங்களையும், ஜீவியத்தின் நடக்கைகள் அனைத்தையும் மேற்கொண்டு, கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டுவருவதைக்

குறிக்கின்றதாய் இருக்கின்றது. மேலும் தேவனுடைய ஜனங்களின் இருதயங்களில், அவர்கள் அன்பில் வளர/பெருக வேண்டும் என்ற இந்தக் கருத்தானது, நாம் கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர வேண்டும் என்றும், ஏற்ற காலத்தில் தேவன் பரிசு அளிப்பதற்குப் பிரியம்கொண்டு அவர் நமக்கு முன்வைத்துள்ள குணலட்சணத்திற்குரிய தரநிலையாகிய இலக்கை அதிகமதிகமாய் நெருங்கி, அந்த இலக்கை அடைந்து, அதைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்றும் உள்ள வேதவாக்கியங்களின் காரியங்களுக்கு முழுமையாய் இசைவாகவே இருக்கின்றது. அதாவது மறைவான ஊற்றுகளிலிருந்து, தொட்டியில் ஊற்றப்படும் சுத்தமான தண்ணீரானது நிரம்பி வழியத்தக்கதாக அதிகமதிகமாய் நிரம்பும்வரை ஊற்றப்படுவது போன்றதாகும். இப்படியாகவே அனைத்து எண்ணங்களிலும், வார்த்தைகளிலும், ஜீவியத்தின் நடக்கைகளிலும் அன்பு வழிந்தோடத்தக்கதாக, கர்த்தருடைய ஜனங்கள் அன்பில், தொடர்ந்து பெருகிக்கொண்டே இருக்க வேண்டும்; இந்த இவர்களுடைய அன்பானது இவர்களுடன் தொடர்புக்குள் வருகின்ற அனைவருக்கும் புத்துணர்வைக் கொடுக்கும் ஆசீர்வாதத்தைச் சுமந்து செல்வதோடல்லாமல், இவ்வாசீர்வாதங்களை அருளின தேவனுக்குத் துதியையும், மகிமையையும் அதிகரிப்பதற்கும் ஏதுவாகக் காணப்படும்.

அப்போஸ்தலர் இங்கு விசேஷமாகச் சகோதர சகோதரிகள் மீதும், மற்றவர்கள் அனைவர் மீதும் உள்ள வளர்ந்து பெருகிக் காணப்படும் அன்பை மாத்திரமே குறிப்பிடுகின்றார், ஆனால் இதிலிருந்து நாம் புரிந்துகொள்வது என்னவெனில், அன்பு முதலாவதாகப் பிதாவாகிய தேவனிடத்தில் காணப்பட வேண்டும் என்பதேயாகும். எந்த ஒரு மனுஷனும் தன்னுடைய சிருஷ்டிகரை அன்புகூரக் கற்றுக்கொள்ளாதது வரையிலும், அவரால் போதிக்கப்படாதது வரையிலும், ஒரு குறிப்பிட்ட அளவாகிலும் தேவனுடைய அருமை குமாரனுடைய சாயலை அடையாத வரையிலும் இங்குக் குறிப்பிட்டுள்ள அளவுக்குத்தக்கதாக தன்னுடைய . . . சக சிருஷ்டிகளை அன்புகூருவான் என்று எதிர்பார்க்க முடியாது. இவ்விஷயம் "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" (லூக்கா 10:27) என்ற நம்முடைய கர்த்தருடைய வார்த்தைகளுக்கு முழு இசைவாகவே உள்ளது. தேவன் பார்வையில், பிரியமாய் இருப்பவைகளைச் செய்ய விருப்பம் கொள்வதோடல்லாமல், செய்யவும் முயலும் அளவுக்கு, எந்த ஒரு மனிதனும், தன்னுடைய தேவனை முதலாவதாக அன்புகூராதது வரையிலும், தன்னுடைய அயலானை மேற்கூறப்பட்டுள்ள ஆவிக்குரிய கண்ணோட்டத்தில் அன்புகூர மாட்டான்; ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கின்றார் மற்றும் அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான்" (1 யோவான் 4:16).

தேவனுடைய ஜனங்கள் மத்தியில் அன்பானது வேகமாய்ப் பெருகாததற்கும், முழுமையாய் வழிந்தோடாததற்கும் உரிய காரணங்களில் ஒன்று, இவர்களில் அநேகர் தேவனுடைய உண்மையான குணலட்சணம் பற்றின விஷயத்திற்கு எதிராளியானவனால் குருடாக்கப்பட்டுள்ளனர் மற்றும் இவர்கள் அவருடைய குணலட்சணத்தைத் தவறாய்ப்புரிந்துகொண்டதின் காரணமாக, அவரை ஆவியிலும், உண்மையிலும் அன்புகூரவும், தொழுதுகொள்ளவும் முடியாமல் இருக்கின்றனர். இருளைச் சிதறடித்து, தேவனுடைய பிள்ளைகள், உண்மையான வெளிச்சத்திலும், அவருடைய மகிமையான குணலட்சணத்திலும், அவரைக் காணத்தக்கதாக, தேவன் அனுமதித்துக் கொண்டிருக்கும், தம்மைப்பற்றின அறிவின் வெளிச்சத்திற்காக, தேவனுக்கு நன்றி! எதிராளியானவனுடைய வஞ்சனைகளைப் புரிந்துகொள்ளத்தக்கதாக நம்முடைய புரிந்துகொள்ளுதலின் கண்களைத் திறந்திருப்பதற்காகத் தேவனுக்கு நன்றி! (வெளிப்படுத்தல் 20:3).

"நாங்கள் உங்களிடத்தில் வைக்கிற" என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகளுக்குள் ஆழமான அர்த்தங்களும், அழுத்தங்களும் காணப்படுகின்றது. பவுலும், அவருடன்கூட காணப்பட்ட உடன் ஊழியர்களும், தாங்கள் உணர்ந்துகொள்ளாததும், செயல்படுத்தாததுமான எந்த ஒரு சுவிசேஷத்தையும் போதிக்கவில்லை; மாறாக எங்குமுள்ள கர்த்தருடைய ஜனங்களுக்காக, அப்போஸ்தலர்கள், தங்களுடைய நலன்களையும், உரிமைகளையும், சிலாக்கியங்களையும் பலிசெலுத்துவதற்கு ஏதுவாக தங்களை வழிநடத்தின இந்த வழிந்தோடும் அன்பைத் தங்களின் ஜீவியத்தினுடைய அன்றாட நடக்கையில் மாதிரிகளாகக் காண்பித்தவர்களாய் இருந்தார்கள். சகோதர சகோதரிகளுக்கு எனத் தங்களுடைய ஜீவியங்களைத் தினந்தோறும் மற்றும் ஒவ்வொரு மணி நேரமும் ஒப்புக்கொடுத்தவர்களாய்க் காணப்பட்டனர்; இவர்கள் தங்களுடைய பூமிக்குரிய ஜீவியம் மற்றும் பூமிக்குரிய இன்பங்கள் தொடர்புடைய விஷயத்தில் உள்ள தங்களது சிலாக்கியங்கள், வாய்ப்புகள் முதலானவைகளை மற்றவர்களுக்கெனப் பலிசெலுத்தினவர்களாகக் காணப்பட்டனர். இப்படியாகச் சுயத்தைப் பலிசெலுத்தி, அன்புடன் கீழ்ப்படிதல் காண்பித்து இயேசுவைத் தாங்கள் பின்பற்றுவதுபோன்று, உடன் கிறிஸ்தவ பின்னடியார்களும் பின்பற்றும்படிக்கு அப்போஸ்தலர் புத்திமதி கூறினார். இப்படியாகவே நீதியையும், அன்பையும் பின்பற்றும்படிக்குப் புத்திமதி கூறுபவர்கள் அனைவரின் விஷயத்திலும் காணப்பட வேண்டும். மற்றவர்களுக்குப் புத்திமதி கூறுபவர்களின் வார்த்தைகள் அர்த்தமுடையதாகவும், ஆற்றல் மிக்கதாகவும் இருக்க வேண்டுமெனில் அவர்கள் முதலாவது, புத்திமதிகளைத் தங்களது ஜீவியத்தில் மாதிரிப்படுத்த வேண்டும். இவர்கள் பூரண அன்பின் இலக்கைச் சுட்டிக்காண்பிக்கையில், இவர்கள் அந்த இலக்கிற்குத் தங்களுடைய சொந்த அனுதின வாழ்க்கையில் ஒத்திருக்க வேண்டும் மற்றும் அவைகளைத் தங்களுடைய இருதயங்களிலும், தங்களுடைய சித்தங்களிலும், தங்களுடைய நோக்கங்களிலும் நிச்சயமாய்க் கொண்டிருக்க வேண்டும். ஆகையால் இவர்கள் மேடைகளில் நின்றுகொண்டோ அல்லது தங்களுடைய அனுதின வாழ்க்கையின் மூலமான செல்வாக்கின் வாயிலாகவோ - மற்றவர்களுக்குப் புத்திமதி கூறுவார்களானால், இவர்களுடன் தொடர்புக்குள் வரும் அனைவராலும் வாசிக்கப்படுவதற்கும், அறியப்படுவதற்கும் ஏதுவான உயிருள்ள நிருபங்களாய் இருப்பார்கள். இவர்களை இருளானது பகைக்கலாம், இவர்களுக்கு எதிராகத் தவறாய், சகல விதமான தீமைகளையும் பேசலாம், எனினும் "இவர்கள் இயேசுவுடன்கூடக் காணப்பட்டவர்கள்" என்றும், இயேசுவினால் போதிக்கப்பட்டவர்கள் என்றும், இவர்களுடைய மாம்ச சுபாவங்கள் எவ்வளவு குறைவுள்ளதாய் இருப்பினும், இவர்களிடத்தில் இயேசுவிடம் காணப்படும் அதே ஆவியும், அதே இருதயத்தின் தன்மையும் இருக்கின்றது என்றும் இருளில் இருப்பவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

## எவ்வாறு அன்பில் வளர்ந்து பெருகி, பொங்கி வழிய வேண்டும்

"அன்பில் வளர்ந்து பெருகுவதற்கும், அதை மற்றவர்கள் மீது வழிந்தோட பண்ணுவதற்கும் நான் கடந்த பல ஆண்டுகளாக வாஞ்சித்துக்கொண்டிருக்கின்றேன்; ஆனால் அதை எப்படி விருத்தியாக்குவது என்பது எனக்குத் தெரியவில்லை. பொங்கி வழிந்தோடக்கூடிய இந்த அன்பைக்கொண்டிருக்க, நான் என்ன செய்ய வேண்டும்?" என்று ஒருவர் கேட்கலாம். இக்கேள்விக்கு அப்போஸ்தலர் பதில் கூறுகின்றார் . . . இது நம்மால் செய்ய முடிகின்ற காரியமல்ல, மாறாக நம்மில் மற்றும் நமக்காக இது கர்த்தரால் செய்யப்படுகின்ற காரியமாய் இருக்கின்றது. "கர்த்தர் உங்களைப் பெருகவும், நிலைத்தோங்கவும் செய்து" என்பதாக அப்போஸ்தலனுடைய வார்த்தைகள் காணப்படுகின்றது. இது கர்த்தருடைய செய்கையாகும்; நம்மால் ஒன்றும் செய்ய முடியாது; இவ்விஷயத்தை நாம் எவ்வளவுக்குச் சீக்கிரமாகக் கற்றுக்கொள்கின்றோமோ, அவ்வளவுக்கு நலமாயிருக்கும். தேவனிடமிருந்து வரும் சத்தியம், கிருபை

மற்றும் அன்பின் மூல ஊற்றிலிருந்தே நம்முடைய அன்பின் ஊற்றுகள் வர வேண்டும்; ஏனெனில் "தேவன் அன்பாக இருக்கின்றார்." நாம் நம்மை அவருக்கென்று அர்ப்பணம் பண்ணி, மாம்சத்திற்காக இல்லாமல், அவருக்காக வாழ ஆரம்பித்தது முதல், இந்த அவருடைய அன்பின் ஆவியை நாம் பெற்றுக்கொள்ள ஆரம்பித்தோம். நம்முடைய அன்பைப் பெருகப்பண்ணுவதற்கும், அன்பை நம்மில் பொங்கப்பண்ணு வதற்கும், வழிந்தோடப்பண்ணுவதற்கும், நாம் எதிர்த்துப் போராட வேண்டிய மாம்சத்தின் இயல்பான சுயநலத்தைச் சுத்திகரிப்பதற்கும், தேவன் பல்வேறு வழிகளையும், வழிவகைகளையும் கொண்டிருக்கின்றார்.

கிருபைக்கான இந்த வழிவகைகள் வேதவாக்கியங்களில், பல்வேறு அடையாள வார்த்தைகளாக நமக்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த வழிவகைகள் அல்லது வழிகளில் ஒன்று தேவனுடைய வார்த்தைகள்; மற்றொன்று தெய்வீக வழிநடத்துதல்; மற்றொன்று கிறிஸ்துவின் சரீரமாகிய பரிசுத்தவான்களுடைய ஐக்கியம் ஆகும். நம்முடைய அன்பு வளர்ந்து பெருகி, வழிந்தோடுவதற்கு என்று இந்த அனைத்து வழிவகைகளையும் கர்த்தர் பயன்படுத்துகின்றார். முதலாவதாக நம்முடைய விசுவாசத்திற்கும், நம்பிக்கைகளுக்கும் அடித்தளமான அவருடைய வார்த்தையானது, நம்முடைய அன்பிற்கும்கூட அடித்தளமாக இருக்கின்றது; ஏனெனில் நாம் அவருடைய வார்த்தைகளுக்குச் செவிக்கொடுக்கும்போது, கர்த்தர் கிருபையுள்ளவர் என்றும், கர்த்தர் அன்புள்ளவர் என்றும் நம்மால் ருசித்துப்பார்க்க முடியும்; மேலும் எந்த அளவுக்கு இப்படியாக அவர் அன்பு வெளிப்படுவதைக் காண்கின்றோமோ மற்றும் அவரின் கிருபை நிறைந்த குணங்களை உய்த்துணர்கின்றோமோ, அவ்வளவாய் நாம் அடைந்தாக வேண்டும் என்று நோக்கம் கொண்டுள்ளதான மாதிரியை நமக்கு முன்பாகப் பெற்றிருப்போம்; நாம் முன்னேறிச் செல்வதற்குரிய தூண்டுதலாக அன்பும் காணப்படும்; "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்" என்பதாக நமது கர்த்தர் சொல்லியிருப்பது போன்றாகும். அவரே மாதிரி மற்றும் நம்மால் முடிந்த மட்டும் நம்முடைய அனுதின ஜீவியத்தில் நாம் அவரைப் பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும், அதிலும் விசேஷமாக இதை நம்முடைய சித்தங்கள் மற்றும் நம்முடைய மனங்களுக்கான அளவுகோலாகவும் கொண்டிருக்க வேண்டும்.

பாவம் மற்றும் சுயநலத்தின் அசுசிகளினின்று நம்மைச் சுத்திகரிக்கும் தண்ணீராக, தேவனுடைய வார்த்தைகளை அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றார்; மணவாட்டி "திருவசனம் எனும் தண்ணீர் முழுக்கினால்" சுத்திகரிக்கப்பட்டு, பரம மணவாளனுடன் உடன் சுதந்திரத்துவம் அடைய தகுதிப்படுத்தப்படுகின்றாள் (எபேசியர் 5:25-27). தெய்வீகப் பூரணத்திற்கு எதிர்மாறாய் நம்மிடத்தில் காணப்படும், நம்முடைய பூரணமற்ற தன்மைகளை நமக்குக் காண்பித்துக்கொடுத்து, சத்திய வார்த்தைகள் நம்முடைய இருதயங்களைச் சுத்திகரிக்கின்றது. இதற்கும் மேலாக, சத்திய வார்த்தைகளானது சில குறிப்பிட்ட வாக்குத்தத்தங்களைக் கொண்டு நம்மை உற்சாகமும் படுத்துகின்றது; இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு, "இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி, திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும்பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேதுரு1:4) என்று குறிப்பிடுகின்றார். இந்த வாக்குத்தத்தங்களும், இந்த நம்பிக்கைகளும் நமக்குக் கொடுக்கப்படவில்லையெனில், தற்காலத்தினுடைய பாவம் மற்றும் சுயநலத்தினுடைய எதிரிடையான தாக்கங்களின் முன்பாக அன்பைப் பெருக்குவதற்கும், வழிந்தோடப்பண்ணுவதற்குமான நம்முடைய முயற்சிகள் ஆற்றல் இழந்து போயிருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை; ஆனால் இந்த வாக்குத்தத்த வார்த்தைகள் மூலமாய் நாம் பரிசுக்காக உள்ள "இலக்கை நோக்கி" தொடர்வதற்கு ஏதுவாக துரிதப்பட கர்த்தர் ஊக்குவிக்கின்றார்.

"இலக்கை நோக்கி" நாம் முன்னேறுவதற்கும், அன்பு வளர்ந்து பெருகி, வழிந்தோடுவதற்கும் ஏதுவாக நமக்கு உதவி வழங்கிட, பல்வேறு தருணங்களில் தெய்வீக வழிநடத்துதல்களானது கடந்து வருகின்றது; ஒருவேளை இருதயத்தில் கர்த்தருக்கென்று முழுமையாய் அர்ப்பணம் பண்ணியுள்ள ஒருவர், வழியில் பின்தங்கிப்போய், ஜீவியத்தின் கவலைகளினால் அமிழ்த்தப்பட்டுப் போவாரானால், கர்த்தர் அதிகமான இரக்கத்தினாலும், அன்பினாலும், நமக்குச் சிட்சையாகவும், படிப்பினையாகவும், உதவியாகவும் இருக்கத்தக்கதாக ஏதோ விதமான உபத்திரவங்களை அல்லது இன்னல்களை அவர்மேல் வரப்பண்ணுவார் - "உமது கோலும் உமது தடியும் என்னைத் தேற்றும்" (சங்கீதம் 23:4). இப்படியான தேவனுடைய வழிநடத்துதல்களினால், நாம் படிப்பினைகள் கற்பிக்கப்படுகின்றோம்; இம்மாதிரியான படிப்பினைகளை நாம் அவருடைய வார்த்தைகளின் போதனைகளிலிருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ள முடியாது. நன்மை அடைவதற்கு ஏதுவாக இப்படிப்பினைகளானது நம்முடைய இருதயத்தின் பலகைகளில் பொறிக்கப்படுகின்றது.

பரிசுத்தவான்களுக்கெனக் கர்த்தரால் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டதும், பரிந்துரைக்கப் படுகின்றதும், "இலக்கினை" நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் விசுவாச வீட்டார் அனைவருக்கும் ஆசீர்வாதமாய் விளங்கியுள்ளதுமான ஆசீர்வாதம் மற்றும் அறிவுரைகள் வழங்குவதற்கான மற்றுமொரு வழிவகை/கால்வாய், "சகோதரர்கள்" வாயிலாக கர்த்தர் நமக்கு அளிக்கும் உதவியாகும். சிலசமயம் அது "ஏற்றவேளையில் பேசப்பட்ட வார்த்தையாக" இருக்கலாம்; அது எத்துணை அருமையாய் இருக்கும்! அநேகமாக ஆலோசனையின் வார்த்தைகளாக, அநேகமாகக் கடிந்துகொள்ளுதலின் வார்த்தைகளாக, அறிவுரைகளாக இருக்கலாம். அநேகமாக அது - நல்ல போர்ச்சேவகர்களென முறுமுறுக்காமல், பொறுமையாய்ச் சகித்துக்கொண்டு, தெய்வீக ஞானம் அனுமதிக்கும் யாவும், எதிர்கால நன்மைக்கு ஏதுவாக நடப்பித்துக்கொண்டிருக்கின்றது என்ற நிச்சயத்தினால் மகிழ்ச்சியுடனும், நன்றியுடனும், விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் ஏற்றுக்கொள்வதில் வெளிப்படும், சகோதர சகோதரிகளின் அனுதின ஜீவியத்தின் சாட்சியாககூட இருக்கலாம். இந்த ஓர் ஆசீர்வாத கால்வாயானது ஆரம்பத்தில் சகோதரர்களிடமிருந்து வருகின்றதாய்த் தோன்றினாலும், அது சகோதரர்கள் வாயிலாகக் கர்த்தரிடமிருந்து வருகின்ற ஒன்றேயாகும். ஏனெனில் இப்படியான உதவியை இடுக்கமான பாதையில் அளிக்கக்கூடிய சகோதர சகோதரிகளும், உண்மையில் உதவியைக் கர்த்தரிடத்திலிருந்துதான் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கின்றார்கள்; இப்படியாகவே ஆரம்பம் முதல் கடைசியானவர்கள் வரையிலான விஷயத்தில் காணப்படுகின்றது; மூத்த சகோதரர்களும், மற்ற அனைத்துச் சகோதரர்களும், கிறிஸ்துவின் சரீரத்தில் வளர்ச்சியில் முன்னேறுகிற சகோதரர்களாக ஆகும்போது, அவர்கள் சகோதரர்களுக்கெனத் தங்களது ஜீவியத்தை ஒப்புக்கொடுக்கும் அளவுக்கு, சந்தோஷத்துடன் உதவியளிப்பவர்கள் ஆகுகிறார்கள்; மேலும் இவையனைத்தும் தேவனுடைய கிரியையாகும், அவருடைய ஆவியின் செயல்பாடாகும். நாம் அன்பில் பெருகுவதற்கும், அன்பில் வழிந்தோடுவதற்கும் ஏதுவாக இந்தத் தம்முடைய பல்வேறு பிரதிநிதிகள் வாயிலாக, தேவன் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி, விருப்பத்தையும், செய்கையையும் நம்மில் உண்டுபண்ணுகிறவராக இருக்கின்றார்.

பாடத்தின் ஆதார வசனத்தில் இடம்பெறும் "உங்கள்" என்ற வார்த்தையை அப்போஸ்தலர் யாரைக்குறிக்கும் வண்ணமாகப் பேசியுள்ளார்? தேவன் அனைத்து மனுஷரிடத்திலும் அன்பைப் பெருகப்பண்ணி, வழிந்தோடப்பண்ணுவார் என்று அப்போஸ்தலர் குறிப்பிடுகின்றாரா? நிச்சயமாக இல்லை. இவ்வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவனுடைய அன்பு குறித்த அறிவு, பெரும்பான்மையான மனுஷர்களிடத்தில் இல்லை. பெரும்பாலும் அவர்கள் மாம்சத்தின்படியான அன்பை மாத்திரம் அறிந்திருப்பார்கள் மற்றும் மாம்ச அன்பைப் பற்றியும் குறைவாகவே அறிந்திருப்பார்கள். "அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும், நிலைத்தோங்கவும் (வழிந்தோடவும்) செய்து" என்று அப்போஸ்தலர்

கூறுகையில் அவர் சபையையே குறிப்பிடுகின்றார்; பெயர்ச்சபையின் அங்கத்தினர்களை அல்ல, "பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டுள்ள" உண்மையான சபையின் அங்கத்தினர்களை, கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின்மீது விசுவாசம் வைப்பவர்களை, தங்களைக் கர்த்தருக்கென்று முழுமையாய் அர்ப்பணித்துக் கொண்டவர்களை, அன்பின் பரிசுத்த ஆவியினால் மீண்டும் ஜெநிப்பிக்கப்பட்டவர்களைக் குறிப்பிடுகின்றார். இவர்களே மற்றும் இவர்களை மாத்திரமே அப்போஸ்தலன் குறிப்பிட்டுள்ளார். நாம் இந்த வகுப்பாராகத் தொடர்ந்து இருப்பது வரையிலும், பிதாவின் பயிற்றுவித்தலுக்கும், அறிவுரைகளுக்கும் கீழ்க்காணப்படுவோம். ஏனெனில் . . . "நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே" (எபிரெயர் 12:7, 8).

## தகுதி அறியும் தேர்விற்கு நாம் உட்படுத்தப்பட்ட நிலைமையிலேயே இன்று கிறிஸ்துவின் சரீரத்தில் . . . சபையில் சேர்ந்துள்ளோம்

நாம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினராக இருப்பது வரையிலும் இந்தச் சிட்சைகள், வழிநடத்துதல்கள், பயிற்றுவித்தல்கள், நீதியின் வார்த்தைகளில் உள்ள அறிவுரைகள், சகோதர சகோதரிகள் மூலமான உதவிகள் நமக்குக் கிடைக்கும்; இங்கு நாம் தற்போதைய ஜீவியத்தில் கரு நிலையில் காணப்படும் கிறிஸ்துவின் சரீரத்திற்கும், உயிர்த்தெழுதலில் பூரணமான நிலையில் இருக்கும் கிறிஸ்துவின் சரீரத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொள்ள வேண்டும். இப்பொழுது தகுதி அறியும் தேர்வுக்கு நாம் உட்படுத்தப்பட்ட நிலைமையிலேயே கிறிஸ்துவின் சரீரத்திற்குள் இணைந்திருக்கின்றோம்; அதாவது நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கும் பட்சத்தில், நாம் முழுமையாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு, மகிமையில் உள்ள கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கமாகுவோம் என்றும், ஒருவேளை நாம் நமது உடன்படிக்கைக்கும், வாக்குறுதிக்கும் உண்மையில்லாமல் போகும்போது, நாம் மகிமையடைந்த சபையின் அங்கத்தினராக முடியாது என்றும் உள்ள புரிந்துகொள்ளுதலுடன் இன்று கிறிஸ்துவின் சரீரத்தில் இணைந்துள்ளோம். நாம் கிறிஸ்துவின் பள்ளியில் மாணாக்கர்களாக இருக்கின்றோம், மேலும் பிதாவினால் நியமிக்கப்பட்டுள்ள பாடங்கள் அனைத்தையும் நாம் படிக்க முன்னேறுவது நமக்கு அவசியமானதாகும், இல்லையேல் நாம் தேர்ச்சி (graduate) பெற அனுமதிக்கப்பட மாட்டோம், அதாவது தேவன் தம்முடைய நேசகுமாரனுடைய சாயலுக்கு ஒத்த சாயலை அடைகின்றவர்களுக்கென வாக்களித்துள்ள பலன்கள் அனைத்திலும் பிரவேசிக்க நாம் அனுமதிக்கப்பட மாட்டோம்.

இதற்காகவே நம்முடைய இருதயங்களில் அன்பானது வழிந்தோடும் வரைக்கும் நாம் அன்பில் வளர்ந்து பெருக வேண்டும் என்று நமக்கு அறிவுரைக்கப்படுகின்றது. அன்பில் வளர்ந்துபெருகுவதற்கும், அன்பை வழிந்தோடப் பண்ணுவதற்கும் யார் ஒருவர் மறுக்கின்றாரோ, அவர் கிறிஸ்துவின் சரீரத்தில் என்ன ஒரு பாகம் வகித்திருந்தாலும், அவர் இந்தக் கிறிஸ்துவின் சரீரத்தினின்று துண்டிக்கப்பட்டு விடுவார். நமது கர்த்தர் திராட்சச்செடி மற்றும் அதன் கொடிகள் பற்றின அவருடைய உவமையில், அன்பின் ஆவியாகிய கனியைக் கொடுக்கும் கிறிஸ்துவின் ஒவ்வொரு கொடியும், ஒவ்வொரு தனிப்பட்ட அங்கமும், இந்த விலையேறப்பெற்ற கனியை இன்னும் அதிகமாய்க் கொடுக்கத்தக்கதாகப் பிதாவினால் கிள்ளிவிடப்படுவார்கள் என்றும், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அன்பின் கனியைக் கொடுக்கத் தவறுபவர்களாகிய ஒவ்வொரு கொடியும் தறித்துப் போடப்பட்டு, திராட்சச்செடியின் கொடியாக, சரீரத்தின் அங்கமாக அங்கீகரிக்கப்படுவதில்லை மற்றும் அழைப்பையும், தெரிந்துகொள்ளுதலையும்

உறுதிப்படுத்திக் கொள்பவர்களுக்குரிய மகிமைகளில் பங்குகொள்வதற்குரிய வாய்ப்பையும் இழந்துவிடுவர் என்றும் விவரித்துள்ளார்.

இவ்வசனத்தில் "உங்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ள வகுப்பாரில் நாம் அங்கமாகுவது மாத்திரமல்லாமல், நாம் இவ்வகுப்பாராய் இருப்பதைத் தொடர வேண்டும் என்பதும், கர்த்தருடைய வழிநடத்துதல் மற்றும் அறிவுரைகளின் கீழ் நாம் முன்னேறிக்கொண்டும், உண்மையாய் இருப்பதன் மூலமாயும் நமது தகுதியைத் தக்கவைத்துக்கொள்வதும் மிக முக்கியமானதாகும். நம்மையும், நமது சித்தங்களையும் முழுமையாய் ஒப்புக்கொடுப்பதும், தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி, விருப்பத்தையும், செய்கையையும் நம்மில் உண்டுபண்ணத்தக்கதாக, தேவனை நாம் அனுமதிப்பதும்தான் வேலையிலுள்ள நம்முடைய பங்கு என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். நமது சித்தங்களை ஒப்புக்கொடுப்பது என்பது அலட்சியமாய் இருப்பதைக் குறிக்கலாகாது; மாறாக நம்முடைய பாதைகளை வனைவதற்கென, அவ்வப்போது, கர்த்தருடைய வார்த்தைகள் மூலமாகவும், சகோதர சகோதரிகள் மூலமாகவும், அவருடைய வழிநடத்துதல்கள் மூலமாகவும் நமக்குக் கர்த்தர் கொடுத்துக்கொண்டிருக்கும் வழிக்காட்டுதல்களுக்கு நேராக நம்முடைய சக்திகளைச் செலுத்துவதாகும். அன்பில் வளர்ந்து பெருகுவதற்கும், அன்பில் வழிந்தோடுவதற்கும் என நமக்குத் தேவையான படிப்பினைகளையும், அனுபவங்களையும் கொடுப்பதற்குக் கர்த்தர் மறந்துவிடுவாரோ என நாம் அங்கலாய்க்க வேண்டியதில்லை. அவர் உண்மையுள்ளவர் என்றும், அவருடைய வழியில் நடப்பதற்குப் பலத்தையும், கிருபையையும் நாம் நாடிட வேண்டும் என்றும், ஒவ்வொரு அடியிலும் அவருடைய வழிநடத்துதலின்படி அவருடைய கிருபையும், பலமும் நமக்குச் சுட்டிக்காண்பிக்கப்படும் என்றும் நாம் நினைவில் கொண்டிருப்பதே நாம் செய்ய வேண்டிய காரியமாகும்."உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது"(சங்கீதம் 119:105).

## இப்படியானதொரு வளர்ச்சிக்கான நோக்கம் மற்றும் அவசியம்

நம்முடைய பாடத்தின் ஆதார வசனத்தில், ஏன் நாம் வளர வேண்டுவது அவசியம் என அப்போஸ்தலர் நமக்குக் கூறியுள்ளார். நம்முடைய இருதயங்கள் பரிசுத்தத்தில் நிலைவரப்படுத்தப்பட்டு, ஸ்திரப்படுத்தப்பட்டு, வேரூன்றப்பட்டு, உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற இந்த ஒரு காரணத்திற்காகவே அல்லது இந்த ஒரு நோக்கத்திற்காகவே ஆகும். அன்பைக்குறித்து ஏதாகிலும் நாம் கற்றுக்கொள்வதும், அன்பின் உணர்வுகளால் நம்முடைய இருதயங்கள் எழுச்சிக்கொள்வதும், பெருந்தன்மையான உணர்வுகளை அவ்வப்போது கொண்டிருப்பதும் - தெய்வீகக் கண்ணோட்டத்தின்படி போதுமானவைகள் அல்ல; நீதிக்கான அன்பில் முற்றும் முழுமையாக "ஸ்திரப்பட்டுள்ள விசேஷமான ஜனங்களை," "இராஜரிக ஆசாரியக் கூட்டத்தினரை" கர்த்தர் தேடிக்கொண்டிருக்கின்றார்; நீதிக்கான அன்பில் இவர்கள் ஸ்திரப்பட்டிருப்பதிநிமித்தம், இவர்களுக்கு சகல அநீதியும், சகல பாவங்களும், சகல நியாயக்கேடுகளும் அருவருப்பாய்க் காணப்படும். இவர்கள் அக்கிரமத்தை விரும்பாதது மாத்திரமல்லாமல், வேதவாக்கியங்கள் குறிப்பிடுவது போன்று இவர்கள் அக்கிரமத்தை வெறுக்கவும் செய்வார்கள். யாரெல்லாம் நீதியை உண்மையாய் விரும்புகின்றார்களோ, அவ்வளவாய் அக்கிரமத்தை வெறுக்கவும் வேண்டும். இது உறுதியான குணலட்சணத்தினால் உருவாகுவதாகும்; மேலும் குணலட்சணமானது மிகவும் உறுதிப்பட்டு நீதியினிடத்திலான அதன் உண்மையில் அசைவுறாமல், நிலைபெறுவதற்கு முன்னதாக காலமும், அனுபவமும், தேவனுடைய வார்த்தைகளிலிருந்தும், அனுபவம் எனும் புத்தகத்திலிருந்தும் படிப்பினைகள் அநேகமும் அவசியப்படும். இந்தக் காரணத்திற்காகத்தான், இந்தச் சுவிசேஷ யுகத்தில் உள்ள தம்முடைய ஜனங்களின் வழியை, ஜீவ வழியை, இராஜ்யத்திற்கான

வழியை, கர்த்தர் இடுக்கமான வழியாக்கினார்; இடர்பாடுகள் நிறைந்ததும், தேவன் அங்கீகரிக்கக்கூடிய குணலட்சணங்களை வளர்க்காதவர்களைப் புடைத்து எடுப்பதற்கு ஏதுவாய் பரீட்சைகளாகக் காணப்படும் சோதனைகள் நிறைந்ததுமான வழியாக்குகின்றார்; ஏனெனில் தேவனால் அங்கீகரிக்கப்படும் குணலட்சணங்களுக்கே அவர் கிறிஸ்துவுடன்கூட, அவருடைய இராஜ்யத்தில் பங்கு கொடுப்பதாக வாக்களித்துள்ளார்.

"அய்யோ! பூரணமானவராய் இருக்கும் தேவன் அங்கீகரிக்கும் குணலட்சணத்தினுடைய தரநிலையானது மிகவும் உயர்வானதாய் இருக்குமானால், என்னால் அதை எப்படி அடையக்கூடும்?" என்று சிலர் கூறலாம்; பூரணம் எனும் தரநிலையானது, மாம்சத்திற்குத் தரநிலையாக வைக்கப்படுமாயின், நாம் அனைவரும் மேற்கூறப்பட்ட கேள்வியையே கேட்பவர்களாக இருப்போம் மற்றும் "மாம்சத்தில் நன்மை (பூரணம்) வாசமாயிருக்கிறதில்லையென்று" நாம் அனைவரும் உணர்ந்து இருக்கின்றோம். மேலும் "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று வேதவாக்கியங்களும் தெரிவிக்கின்றது. ஆகவே தேவன் மாம்சத்தில் பூரணத்தை எதிர்பார்க்கவில்லை என்றும், ஒருவேளை அப்படி எதிர்ப்பார்ப்பாரானால், அவரால் அதைக் காணமுடியாது என்றும் உள்ள நிச்சயம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. நியாயமற்றதும், சாத்தியமாகாததுமான காரியத்தை அப்போஸ்தலர் போதிக்கவில்லை; மாறாக நியாயமானதையே போதிக்கின்றார்; அதாவது நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக, நம்முடைய இருதயங்கள் பரிசுத்தத்தில் ஸ்திரப்படவும், உறுதிப்படவுமே அப்போஸ்தலர் கூறுகின்றார். ஆ! ஆம்! இருதயத்தைக் (சித்தத்தை . . . நோக்கத்தை . . . எண்ணங்களை) குற்றமற்றதாய் வைத்திருப்பது என்பது மாம்சத்தைக் குற்றமற்றதாய் வைப்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு காரியமாகும். சித்தத்தை, நோக்கத்தை, வாஞ்சையைக் குறிக்கும் இருதயமானது, "புதிய சிருஷ்டியை" அடையாளப்படுத்துகின்றது. மாம்சமானது, மாம்சத்தையே குறிக்கின்றதாய் இருக்கின்றது. பூரணமின்மையிலும், பாவத்தின் அடிமையாகவும், ஊழியக்காரனாகவும் ஆறாயிரம் வருடங்களாகச் சீர்க்கெட்டுப்போன நிலைமையிலும், மாம்சமானது மிகவும் பூரணமற்றுப் போய்விட்டப்படியினால் - மாம்சத்தினால், தேவனுடைய பிரமாணத்திற்குப் பூரணமாய் ஊழியஞ்செய்வது என்பது கூடாத காரியமாகும்; மற்றும் அர்ப்பணிக்கப்பட்ட நம்முடைய இருதயங்களின் அனைத்து நல்வாஞ்சைகளுக்குக் குற்றம் சாட்ட முடியாத வண்ணம் கீழ்ப்படிவது என்பதும் மாம்சத்தினால் முடியாத ஒன்றாகும். பிதாவுக்கு முன்பாக குற்றம் சாட்டப்பட முடியாத நிலைக்குப் புதிய சிருஷ்டியே, புதிய மனமே வளர்ந்திட வேண்டும்.

இது அடையப்படக்கூடிய வளர்ச்சியாய் மாத்திரம் இராமல், மாறாக தேவனால் அங்கீகரிக்கப்படத்தக்கதான வேறு எந்த ஒரு நிலைமையையும் நம்முடைய அழைப்புக்கு இசைவாக, நம்மால் கற்பனைப் பண்ணிப் பார்க்கவும் முடியாது. நாம் கிறிஸ்துவின் சரீரத்தினுடைய அங்கங்களாக, பரலோக மணவாளனுடன் அவருடைய ஆயிர வருட இராஜ்யத்தில் பூமியின் குடிகள் அனைத்தையும் ஆசீர்வதிக்கும் மாபெரும் வேலைக்கென நம்மைத் தகுதிப்படுத்துவதற்கும், நம்மை ஆயத்தப்படுத்துவதற்கும் என, நம்மை அவருடைய சபையாகவும், அவருடைய இராஜரிக ஆசாரியக்கூட்டமாகவும் ஆக்குவதற்கென, நம்மைத் தேவன் அழைத்துள்ளார். நம்முடைய இருதயங்களும், நம்முடைய நோக்கங்களும், நீதியின் கொள்கைகளுக்கு இசைவாக இருக்க வேண்டும் என்பதையும் இந்த நீதியின் கொள்கைகளானது முடிந்த மட்டும், நம்முடைய அனுதின ஜீவியங்களை ஆள வேண்டும் என்பதையும், இவ்வாறாக நாம் மாம்சம் மற்றும் ஆவியின் சகல அசுசிகளையும் களைந்து போடவும், கர்த்தருக்கான பயபக்தியில் பூரண பரிசுத்தத்தை அடைய நாடவும் வேண்டும் என்பதையும், காட்டிலும் குறைவான எதையும் தேவனால் கேட்க முடியாது (2 கொரிந்தியர் 7:1). இந்த நல்வாஞ்சைகளுக்கும், பிரயாசங்களுக்கும் கீழான எதுவும், தேவனுடைய பார்வையில் பிரியமானதாக

ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை; மேலும் இவைகள் இல்லாமல் நாம் இறுதியில் உண்மையுள்ள சபையாக ஏற்றுக்கொள்ளப்படுவோம் என எதிர்பார்க்கவும் முடியாது. இந்த ஓர் ஏற்பாடு எவ்வளவு நியாயமானதாகக் காணப்படுகின்றது! தெய்வீகச் சித்தத்தை நாம் எவ்வளவு மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்! மாம்சத்தின் ஒவ்வொரு பூரணமின்மைகளும், குறைவுகளும் ஒழிக்கப்பட வேண்டும் என்றும், நம்முடைய புதிய மனங்களுக்கான பரீட்சைகளின் விளைவாக புதிய மனங்கள் முழுமையாய் நீதியில் ஸ்திரப்பட வேண்டும் என்றும் நாம் எவ்வளவாய் ஆசைப்படுகின்றோம்! "முதலாம் உயிர்த்தெழுதலில்" வாக்களிக்கப்பட்டுள்ள நமக்கான புதிய சரீரங்களுக்காக, அதாவது எவ்விதமான இடையூறும், எவ்விதமான தடையும் இல்லாமல், ஒவ்வொரு கிரியையிலும், வார்த்தைகளிலும், இருதயத்திலும், நோக்கங்களிலும் தேவனைப் புதிய மனமானது பூரணமாய் மகிமைப்படுத்துவதற்குரிய சரீரங்களுக்காக நாம் எவ்வளவாய் ஏங்குகின்றோம்! இந்த நல்வாஞ்சையும், பிரயாசமும் தேவன் அங்கீகரிக்கத்தக்க தானதாகும். இவைகளைக் கிறிஸ்துவினுடைய புண்ணியத்தின் மூலமாக, ஏதோ நாம் வார்த்தையிலும், கிரியையிலும் முற்றும் முழுமையாய்ப் பூரணமாய் இருப்பதுபோன்று கருதுகின்றார், ஏனெனில் பூரணமாய் இருக்க வேண்டும் என்பதே நம்முடைய இருதயங்களின், நம்முடைய சித்தங்களின் வாஞ்சையாக இருக்கின்றது; இப்பண்புகள் ஸ்திரப்படுவதற்கு, நிரந்தரமாகுவதற்கு மாத்திரமே அவர் காத்துக்கொண்டிருக்கின்றார்.

## நமது கர்த்தருடைய பிரசன்ன நாளில் நாம் ஸ்திரப்பட

இப்படிப்பினைகளானது இந்தச் சுவிசேஷயுகம் முழுவதிலும் உள்ள கர்த்தருடைய ஜனங்களுக்குப் பொருந்துவதாய் இருப்பினும், இது மனுஷகுமாரனுடைய பிரசன்ன நாளில், அறுவடை காலத்தில் இப்பொழுது வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கு விசேஷமாய்ப் பொருந்தக்கூடியதாகவும் இருக்கின்றது. அன்பின் ஆவியினுடைய இந்த அனைத்து வளர்ச்சிகளும், நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, அவருடைய பரிசுத்தவான்களுடன் பிரசன்னமாகும் பொழுது ஸ்திரப்படுவதாக என்ற அப்போஸ்தலரின் வார்த்தைகள் இவ்வசனத்தில் இடம்பெறுவதைக் கவனியுங்கள். நாம் அவருடைய இந்தப் பிரசன்ன நாளில் காணப்படுகின்றோம், மேலும் இது நாம் எந்த அளவுக்கு நீதியிலும், நீதியின் மீதான அன்பிலும் ஸ்திரப்பட்டிருக்கின்றோம் அல்லது எந்த அளவுக்கு நீதியின் பேரிலான நம்முடைய நேர்மை/உண்மையானது அசைவுற்றுக் கொண்டிருக்கின்றது என்று நாம் நம்முடைய இருதயங்களிடம் கவனமாய் விசாரிக்க வேண்டும் என்பதை எச்சரிக்கின்றதாயும் இருக்கின்றது.

நீதியில் ஸ்திரப்படும் இந்த நிலைமைக்கு விரைவாக வராத அனைவரும் பரீட்சிக்கப்பட்டு, புடைக்கப்பட்டுப் புறக்கணிப்படுவார்கள் என்பது நிச்சயமே, காரணம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் நிறைவேறுதலானது அண்மையில் காணப்படுகின்றது. "யார் நிலைநிற்கக்கூடும்? என்று அப்போஸ்தலர் கேட்கின்றார் (வெளிப்படுத்தல் 6:17). நிரூபிப்பதற்கு அவசியமான பரீட்சைகளிலும், சோதனைகளிலும், வெற்றியடையும் அளவுக்கு யார் அன்பில் முற்றும் முழுமையாக ஸ்திரப்பட்டிருக்கின்றார்கள்? என்பதே கேள்வியாகும். ஆகையால் இப்பொழுது பல்வேறு கடுமையான விசேஷித்தப் பரீட்சைகள் அனுமதிக்கப்படும்பொழுது, அதாவது கர்த்தரிடத்திலும், அன்பின் கொள்கையினிடத்திலுமான நம்முடைய உண்மையைப் பரீட்சித்து, நிரூபிக்கும் சோதனைகள் அனுமதிக்கப்படும் பொழுது நாம் வியக்கக்கூடாது. அதேசமயம் இந்தப் பரீட்சைக் குறித்த எண்ணத்தினால் நாம் சோர்வடையவும் வேண்டாம், மாறாக நம்முடைய இருதயங்களில் நற்கிரியைகளை ஆரம்பித்தவர், நாம் பாவிகளாக இருக்கையிலேயே, நமக்காக மாபெரும் ஈடுபலி கிரயத்தைக்கொடுத்து நற்கிரியையை ஆரம்பித்தார் என்பதையும், நாம் பாவிகளாக இருக்கும் போதே நம்மைக் கர்த்தர் நேசித்தாரானால் இப்பொழுது நாம் அவருடைய கிருபையை ஏற்றுக்கொண்டு, அவருடைய இரத்தத்தின் மீதான விசுவாசத்தினால்,

பாவங்களிலிருந்து நீதிமானாக்கப்பட்டு, இப்பொழுது அவருடைய அடிச்சுவடுகளில் நாம் நடப்பதற்கு நாடிக்கொண்டிருக்கையில் எவ்வளவு அதிகமாய் அன்புகூருவார் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். கர்த்தருடைய படிப்பினைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அப்படிப்பினைகள் மூலமாய் நன்மை அடைய வேண்டும் என்றும், அதிகமதிகமாய் இயேசுவின் சாயலை அடைய வேண்டும் என்றும் வாஞ்சிக்கிற அனைவரும் - இவைகள் அனைத்தும் தங்களுடைய பலத்தினால் இல்லாமல், கர்த்தருடைய பலத்தினாலேயே ஆகும் என்றும், தாங்கள் தங்களைக் கர்த்தரிடம் ஒப்படைக்கும்பொழுது, அவர் தங்களுக்குள் அவருடைய அன்பு, நீதி மற்றும் பரிசுத்தத்தின் ஆவியைப் பூரணப்படுத்துவார் என்றும், தாங்கள் "ஒளியில் உள்ள பரிசுத்தவான்களுக்குரிய சுதந்தரத்தில் பங்கடைவார்கள்" என்றும் உள்ள நிச்சயத்துடன் காணப்படுவார்கள்.

---

R4909 / R2790 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது

கிறிஸ்தவ குணலட்சணத்தில் சகிப்புத்தன்மையினுடைய முக்கியத்துவமானது, அப்போஸ்தலனாகிய பவுலினால் இவ்வார்த்தைப் பயன்படுத்தப்படுவதன் வாயிலாக முழுமையாய் வெளிக்கொணரப்பட்டுள்ளது; ஏனெனில் ஒரு முறைக்கும் அதிகமாக, அநேகம் முறைகள் அவர், நாம் ஓடிட வேண்டியதான குணலட்சணத்தினுடைய இலக்காகிய அன்பிற்கு மேலாகவும் - பரிசைப் பெற்றுத்தரும் இந்த இலக்கிற்கு மேலாகவும், உயர்வாகவும் பொறுமையை வைக்கின்றார் என்று பார்க்கின்றோம். உதாரணத்திற்கு அவர் தீத்துவுக்கு முதிர்ச்சியடையும் கிறிஸ்தவனுக்கான குணநலன்களை வரிசைப்படுத்தி எழுதுகையில், அவர் பின்வரும் வரிசை முறையில் கொடுத்துள்ளார்: "முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாயிருக்கும்படி புத்திசொல்லு" (தீத்து 2:2). நாம் மற்ற அனைத்துப் பண்புகளையும் பெற்றிருப்பினும், நாம் உண்மையுள்ளவர்களில் அங்கத்தினர்களெனக் கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முன்னதாக, பொறுமையாய் இருத்தல், சந்தோஷமாய்ச் சகித்தல் எனும் இந்த இறுதி பரீட்சையானது கடக்கப்பட வேண்டும்.

தீமோத்தேயுவுக்குத் தன்னைக்குறித்து எழுதும்போதும், மீண்டுமாக அப்போஸ்தலன் "நீயோ என் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும், விசுவாசத்தையும், நீடிய சாந்தத்தையும், அன்பையும், பொறுமையையும், . . . நன்றாய் அறிந்திருக்கிறாய்" (2 தீமோத்தேயு 3:10) என்று கூறி பொறுமையாய்ச் சகித்தல் எனும் இப்பண்பினை அவர் அன்பிற்கு மேலாக வைக்கின்றார் என்று பார்க்கின்றோம்.

## உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்

ஒருவேளை "அன்பே நியாயப்பிரமாணத்தினுடைய நிறைவேறுதலாகவும்," நம்முடைய பரம அழைப்பிற்கான பந்தயப்பொருளுக்குரிய இலக்காகவும் இருக்குமானால், பின்னர் எப்படிப் பொறுமையானது, அன்பைக்காட்டிலும் மேலானதாக முடியும்? என்று ஒருவர் கேட்கலாம். பதில் என்னவெனில் . . . பொறுமையோடு சகித்தல் என்பது நம்முடைய ஓட்டத்தினுடைய இறுதிப்பகுதியில்

மாத்திரம் வருகிற ஒன்றல்ல; மாறாக பந்தய சாலையின் வழி முழுவதிலும் அவசியமானதொன்றாகும். கிறிஸ்தவ ஜீவியப்பாதையினுடைய ஆரம்பக்கட்ட சோதனைகளிலிருந்தே நமக்கு இந்தச் சந்தோஷத்தோடே சகிக்கும் தன்மை அவசியமாயிருக்கின்றது; மேலும் நம்முடைய ஓட்டத்தில் நாம் இலக்கை நோக்கி விரைவாய் முன்னேறிக்கொண்டிருக்கையில், பிரயாணத்தினுடைய ஒவ்வொரு அடியெடுத்தல்களிலும் சந்தோஷத்தோடே சகிக்கும் ஆவியானது பலம்மேல் பலமடைந்துகொண்டிருக்க வேண்டும். சிலர் சில நாட்களுக்கு அல்லது சில மாதங்களுக்கு அல்லது சில வருடங்களுக்கு மாத்திரம் உண்மையாய் இருப்பதினால், கிறிஸ்துவினுடைய மாபெரும் இராஜ்யத்தின் ஆசீர்வாதத்திற்கு அபாத்திரராகிவிடுவர்.

விதைப்பவன் உவமையில் இந்த உண்மைக்கான உதாரணத்தினை நமது கர்த்தர் கொடுத்தார்; அவர் கூறினதாவது . . . சில விதைகள் கற்பாறையான நிலத்தில் விழுந்து, முளைத்தன; அது வளர்ந்தது; ஆனால் இறுதியில் உபத்திரவமாகிய எரியும் சூடு வந்தபோது, மென்மையான செடிகள் காய்ந்துபோயின. இராஜ்ய வகுப்பாரினுடைய அங்கத்தினர்களைத் தெரிந்துகொள்கையில், கர்த்தர் சகிப்பதற்குப் பொறுமையாய் இருக்கக்கூடிய ஆழமான நிலத்தை, ஆழமான குணலட்சணத்தை, ஆழமான இருதயத்தைத் தேடுகின்றார். எந்தவொரு தளத்திலுமுள்ள ஜீவிகளுக்கும், பொறுமையானது அவசியமான குணநலமாய் இருக்கின்றது; ஆனால் கிறிஸ்தவன் விஷயத்தில், அது ஓட்டத்தினுடைய துவக்கம் முதற்கொண்டு வளர்க்கப்படுவது விசேஷமாய் முக்கியமானதாய்க் காணப்படுகின்றது. அது நம்மோடு முதல் கால்-மைல் இலக்கில் காணப்பட வேண்டும் மற்றும் இரண்டாம் கால்-மைல் இலக்கிலும் மற்றும் மூன்றாம் கால்-மைல் இலக்கிலும் மற்றும் பரிசைப் பெற்றுத்தரும் இலக்காகிய - பூரண அன்பாகிய - நான்காம் கால்-மைல் இலக்கிலும் நம்மோடு காணப்பட வேண்டும்.

ஓட்டத்தினுடைய இந்த இலக்கை நாம் அடைகையில் - அதாவது நாம் நம்முடைய நண்பர்களை மாத்திரமல்லாமல், நம் சத்துருக்களைக்கூட அன்புகூரும் நிலையை அடைகையில் . . . அப்போதும்கூட நம் மீது வரத் தகுதியானது என்று கர்த்தர் கண்டு, அனுமதிக்கும் பரீட்சைகளை உண்மையோடும், சந்தோஷத்தோடும், பொறுமையோடும் சகித்து இலக்கில் காணப்பட வேண்டும் என்றும் நம்மில் எதிர்ப்பார்க்கப்படுகின்றதாய் இருக்கின்றது. தேவன் தம் ஜனங்களைச் சோதனைக்கு - நீண்டகால சோதனைக்கு - சிலசமயம் மாதக்கணக்கான மற்றும் வருடக்கணக்கான சோதனைகளுக்குக் கீழ்ப்படுத்துகின்றார்; "உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபாகமம் 13:3).

ஆகையால்தான் "சகலத்தையும் செய்து முடித்து நில்லுங்கள்" - சகியுங்கள் என்றும், "இலக்கை" அடைந்த பின்னர் . . . "பொறுமையானது பூரண கிரியைச் செய்யக்கடவது" அல்லது "பொறுமை அதன் கிரியையைப் பூரணப்படுத்தப்படக்கடவது" என்றும் அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு அறிவுறுத்துகின்றார். பரிசை அருளுவதற்கு ஓட்டத்தில் எதிர்ப்பார்க்கப்படுகின்றதான குணலட்சணத்தை, அதாவது அன்பு எனும் தகுதிகளைத் தாங்கள் பெற்றிருக்கின்றீர்கள் என்பதை மாத்திரமல்லாமல், எதிர்ப்புகளை உங்களால் சந்தோஷமாய்ச் சகிக்க முடிகிற அளவுக்குத் தாங்கள் அன்பை - ஆழமாய் வேரூன்றப்பட்ட, அசைவுறாத குணநல அம்சமாய்ப் பெற்றிருக்கின்றீர்கள் என்பதையும்கூட உங்களது "பொறுமையோடு சகித்திடும்" தன்மையானது நிரூபித்திடுவதாக."நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது" (எபிரெயர் 10:36) என்று பரிசுத்த பவுல் அடிகளார் நம்மிடம் கூறுகின்றார்.

R3776 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# என்னைக்குறித்தும், என் வார்த்தைகளைக் குறித்தும் வெட்கப்படுகிறவன்
## லூக்கா 9:26

கர்த்தர் இன்னமும் உலகில் மாம்சத்தில் - தம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட அங்கத்தினர்களுடைய மாம்சத்தில் காணப்படவே செய்கின்றார் மற்றும் முற்காலத்தில் செய்ததுபோலவே, இன்னமும் உலகமானது அவரை அசட்டைப் பண்ணிக்கொண்டிருக்கின்றது; மேலும் அவர் ஏற்கெனவே உரைத்ததுபோன்று, "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்து கொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது" (யோவான் 15:18, 19). உலகம் இன்னமும் கிறிஸ்துவைக்குறித்து வெட்கப்படுகின்றது. பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு முன்னதாக மாம்சீக இஸ்ரயேலர்கள் அவரைக்குறித்து வெட்கப்பட்டதுபோன்று, இன்றும் பெயரளவிலான கிறிஸ்தவர்களும், பெயரளவிலான ஆவிக்குரிய இஸ்ரயேலரும் அவரைக்குறித்து வெட்கப்படுகின்றார்கள். மாம்சத்திலுள்ள தம்முடைய அங்கத்தினர்கள் வாயிலாக நமது கர்த்தர் அடையாளப்படுத்தப்படுகின்றார் என்று நாம் கருதுகையில், அப்படியானால் சகோதர சகோதரிகளுக்கான அன்பு என்பது, கர்த்தருக்கான அன்பாய் இருக்கும் என்றும் நாம் காண்கின்றோம் மற்றும் அப்போஸ்தலன் சொல்வதுபோன்று, இதுவே அவருடனும், பிதாவுடனுமான நம்முடைய உறவிற்கான மகா பரீட்சைகளில் ஒன்றாயிருக்கும். "தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" (1 யோவான் 4:20). "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும்" என்பதே சீஷயத்துவத்திற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள பரீட்சையாகும்; ஆகையால் சகோதர சகோதரிகளைக் குறித்து வெட்கப்படுகிற ஒருவன், மூத்த சகோதரனைக் குறித்து வெட்கப்படுகிறவனாய் இருப்பான். அவர்: "உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான், உங்களை அசட்டைபண்ணுகிறவன் என்னை அசட்டைபண்ணுகிறான், என்னை அசட்டைபண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணுகிறான்" (லூக்கா 10:16) என்று கூறி தம் இளைய சகோதர சகோதரிகள் அனைவரையும் தம்மைப் போன்று கருதுவதாகத் தெரிவிக்கின்றார்.

சகோதர சகோதரிகளை அசட்டைபண்ணுவது என்பது கர்த்தரை அசட்டைபண்ணுகிறதாயிருக்கும் என்றும், சகோதர சகோதரிகளைக்குறித்து வெட்கப்படுதல் என்பது கர்த்தரைக்குறித்து வெட்கப்படுவதாயிருக்கும் என்றும் உள்ள கருத்துகளானது சிலருக்குப் புதிய கருத்துப்போன்று காணப்படலாம்; இப்படியாய் இவர்கள் தங்கள் மனம் மற்றும் நடத்தையில் காணப்பட்டிருந்த தவறான நிலையினை நிரூபிப்பவர்களாய் இருப்பார்கள்; இப்படியாய்த் தாங்கள் இராஜ்யத்திற்குத் தகுதியற்றிருப்பதை நிரூபிப்பவர்களாய் இருப்பார்கள்; பூரண அன்பிற்கான இலக்கினைத் தாங்கள் அடையவில்லை என்பதை நிரூபிப்பவர்களாய் இருப்பார்கள்; தங்கள் சத்துருக்களை அன்புகூர கற்றுக்கொள்ளவில்லை என்பதை மாத்திரமல்லாமல், ஆண்டவருடைய அடிச்சுவடுகளில் நடப்பதற்கு முயன்று கொண்டிருப்பவர்களாகிய - சகோதர சகோதரிகளை அன்புகூரவும் கற்றுக்கொள்ளவில்லை என்பதையும் நிரூபிப்பவர்களாய் இருப்பார்கள்.

R3544 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல

நாம் ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டுமென்று, கர்த்தர் கட்டளையிட்டது நம்மை வியப்படையச் செய்யவில்லை; ஆனால் "நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல" என்ற வார்த்தைகளில் அடங்கியிருக்கும் கருத்துதான் நம்மைத் திகைக்கவைக்கின்றது. கர்த்தர் நம் ஒவ்வொருவர் மீதும் கொண்டிருந்த அன்பைப்போன்று, எவ்வாறு நாம் ஒருவரையொருவர் அன்பு செய்ய முடியும்? என்பதுதான் நமது முதல் கேள்வி. ஆரம்பத்தில் இது சாத்தியம் அற்றதுதான். ஆனால் நாம் அதிகமதிகமாகக் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்படும்போது, அவருடையவர்களாய் இருக்கும் அனைவரிடத்திலும் பூரண அன்பினைக் காட்டிடும் இந்தத் தரநிலைக்கு/அளவுகோலுக்குக் கிட்ட அதிகமாய் நெருங்குவோம்; மற்றவருக்குப் பாதகம் செய்வதற்கு மறுக்கக்கூடிய அன்பாய் மாத்திரம் இராமல், சகோதரனுக்கு நன்மை செய்வதில் நம் சொந்த நேரத்தையும், சௌகரியத்தையும் தியாகம் பண்ணி நன்மை செய்வதில் சந்தோஷமடையக்கூடிய அன்பாகிய, பூரணமான அன்பின் இந்தத் தரநிலைக்கு அதிகமாய் நெருங்கிடுவோம். இப்படியாகவே, இயேசுவும் நம் அனைவரையும் அன்புகூர்ந்து, தம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை மீட்டுக்கொண்டார். மேலும், நாம் எந்தளவுக்கு அவரைப்பற்றின கிருபையிலும், அறிவிலும், அன்பிலும் வளர்கின்றோமோ, அந்தளவுக்கு நாம் கிறிஸ்துவைப்போல இருப்போம்; மற்றும் கிறிஸ்துவுக்கு ஒத்த அன்பைப் பெற்றிருப்போம். இந்த அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது. மேலும் சகோதர சகோதரிகளுக்காக இப்படிப்பட்ட அன்பைக் கொண்டிருப்பவர்கள், சந்தேகத்திற்கிடமின்றித் தவிக்கும் சர்வ சிருஷ்டியின் மீதும், அனுதாப அன்பை முழுமையாய்க் கொண்டிருப்பார்கள்; மற்றும் அவர்கள் சார்பில் இப்பொழுது உலகத்திற்குச் செய்ய முடிகின்ற சொற்பமானவைகளைச் செய்வதில் மகிழ்ச்சிக்கொள்வார்கள்; மற்றும் கர்த்தருடைய ஏற்ற வேளையில் ஆதாமின் சந்ததியிலுள்ள ஒவ்வொருவருக்கும், மாபெரும் அற்புதமான ஆசீர்வாதங்களைக் வைத்திருக்கின்றார் என்பதில் இரட்டிப்பான மகிழ்ச்சியும் கொள்வார்கள்.

இவைகளையெல்லாம் நாம் அறிந்திருப்பதும், கர்த்தருடைய திட்டங்களைப் புரிந்துகொள்வதும், அவருடைய வார்த்தைகளில் அடங்கியிருக்கும் கொள்கைகளைப் புரிந்துகொள்வதும், மிக முக்கியமானதுதான். ஆயினும் நமக்குச் சகல அறிவு இருந்தாலும், அதனை பயன்படுத்தாதது வரையிலும், நமக்கு நன்மை கிடைக்காது. கர்த்தருடைய கிருபையான ஏற்பாடுகளிலிருந்து நன்மையை எப்படி அடைய வேண்டும் என்பதைக் கற்றுக்கொள்வதன் மூலமாக மாத்திரம், அந்த ஏற்பாடுகளிலிருந்து நன்மையைப் பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணாதிருப்போமாக; மாறாக தேவையான படிகளை எடுத்து வைப்போமாக.......அதாவது நாம் முழுமையாய் அவருடையவர்களாக இருக்கத்தக்கதாகவும், நாம் அவரை நெருங்கி வாழத்தக்கதாகவும், நாம் கனிக்கொடுக்கின்றவர்களாக இருக்கத்தக்கதாகவும், அவருடைய அன்பிலும், பிதாவினுடைய அன்பிலும், அவர் இணைத்துள்ளவர்கள் மீதான அன்பிலும் நாம் நிலைத்திருக்கத்தக்கதாகவும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

R4400 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு

## 1 யோவான் 5:16

சபைக்கான பரீட்சையானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தெரிந்த நிலையிலும், அறிந்த நிலையிலும் தன்னை அர்ப்பணம் பண்ணி பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிப்பதன் மூலமாய் அந்த அர்ப்பணமானது கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க - இப்படி உள்ள ஒவ்வொரு நீதிமானாக்கப்பட்ட விசுவாசியும் - அப்படிப்பட்ட ஒவ்வொருவனும் - இப்பொழுது ஜீவன் அல்லது மரணத்திற்கான பரீட்சையில் காணப்படுகின்றான் மற்றும் அவனுக்கு எதிர்க்கால வாய்ப்பு என்ற எதுவும் இல்லை. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், திரும்பக்கொடுத்தலின் காலங்களில் எப்படி உலகத்திற்கான பரீட்சையானது மனுஷீகத் தளத்தில் நித்திய ஜீவனை அருளி அல்லது நித்திய மரணத்தை அருளி முடிவு பெறுகின்றதோ, அதுபோலவே இந்த யுகத்தில் ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டுக் காணப்படுபவர்களின் பரீட்சையும், ஆவிக்குரிய தளத்தில் நித்திய ஜீவனை அருளி அல்லது நித்திய மரணத்தினை அருளி முடிவு பெறுகின்றதாயிருக்கும்.

ஆயிர வருட அரசாட்சியின்போது இரட்சிக்கப்படுபவர்கள் அனைவரும் நித்திய ஜீவனை அடைய வேண்டுமெனில், நிஜமான பூரண நிலையையும், தேவனுக்கு முற்றும் முழுமையான இருதய நேர்மையையும், நீதியின் மீது முற்றும் முழுமையான அன்பையும், அக்கிரமத்தை வெறுத்த நிலையையும் அடைந்தாக வேண்டும். அப்படியானால் இந்த யுகத்திலுள்ள நீங்களும், நானுமாகிய ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் அனைவரும், ஒருவேளை நம்முடைய பரீட்சையின் காலப்பகுதியில், இருதய வளர்ச்சியினுடைய பூரணத்தை அடையவில்லையெனில், நாம் இரண்டாம் மரணம் அடைபவர்களாய் இருப்போம். நம்மிடத்தில் மாம்சத்தில் பூரணம் எதிர்ப்பார்க்கப்படாததற்காகத் தேவனுக்கு நன்றிச் செலுத்துகின்றோம்; ஏனெனில் அது நம்மால் கூடாத காரியமாகும்; மாறாக ஆவியின் பூரணமே, புதிய மனதின் பூரணமே, சித்தத்தின் பூரணமே எதிர்ப்பார்க்கப்படுகின்றது. ஆனால், ஓ! பூரண இருதயம் என்பது எத்தனை அதிகமான காரியங்களை உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது! "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்!" என்று நம் அருமை மீட்பர் சொல்லியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இருதயத்தில் ஏதேனும் அசுத்தம், நோக்கத்தில் ஏதேனும் அசுத்தம், எந்தளவிலான தீமையான வாதங்கள், கோபம், பகைமை, வாக்குவாதம், இருதயத்தில் கசப்பு என்பவை பூரண அன்பாகிய - திவ்விய நியமத்திற்கு நாம் மிகவும் குறைவுப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

நியாயந்தீர்க்க நாம் ஆற்றலற்றவர்களாவோம். சிலர் தங்கள் இருதயத்தில் பூரண அன்பை உடையவர்களாய்க் காணப்படலாம்; எனினும் தங்கள் மாம்சத்தினுடைய அபூரணங்கள் காரணமாய், பூரண அன்பைக் குறைவாய் வெளிப்படுத்திவிடுபவர்களாய் இருப்பார்கள். நம்முடைய அனுபவங்களை வைத்துப் பார்க்கையில் வெகு சிலரே தேவன் மீதும், சகோதர சகோதரிகள் மீதும், அயலார்கள் மீதும் தாங்கள் பூரண அன்பு கொண்டிருப்பதாக அறிக்கைப் பண்ண முடிகிறவர்களாக இருக்கின்றனர்.. இதில் சத்துருக்கள் மீதான அன்பைக் குறித்துச் சொல்லவேண்டியதேயில்லை. இம்மாதிரியான நிலைமையில் தங்கள் மரணத்தினுடைய தருவாயில் காணப்படும் ஆவியில் ஜெனிப்பிக்கப்பட்டவர்கள் அனைவரும், நித்தியமான ஜீவனுக்குப் பாத்திரமானவர்களாகக் கருதப்படுபவர்கள் மத்தியில் இடம்பெறுவதில்லை என்பதில் நமக்கு நிச்சயமே. இவர்களுக்கான ஒரே வழி இரண்டாம் மரணமேயாகும்.

இத்தகையவர்கள் "சிறுமந்தையினராய்" இருப்பதில்லை; காரணம் சிறுமந்தையினரின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் "தேவனுடைய நேச குமாரனுடைய சாயலாக" வேண்டும் என்று தேவன் முன்தீர்மானித்துள்ளார். "தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்" (உரோமர் 8:29). அப்படியானால் இத்தகையவர்கள் "திரள்கூட்டத்தினராக" முடியாதா? இல்லை என்றே நாம் பதிலளிக்கின்றோம். உபத்திரவத்தின் வாயிலாக "திரள்கூட்டத்தினராகும்" அனைவரும், நித்திய ஜீவனுக்குப் பாத்திரமானவர்களாகக் கருதப்படுவதற்கு - இருதய பூரணத்தை - அடைந்தாக வேண்டும். ஜெயங்கொள்பவர்களாகிய "திரள்கூட்டத்தினருக்கும்," முற்றிலும் ஜெயங்கொள்பவர்களாகிய "சிறுமந்தையினருக்கும்" இடையிலுள்ள வித்தியாசம் என்னவெனில், "திரள்கூட்டத்தினர்" பலவந்தத்திற்குள்ளாகுகையில், தீர்மானம் எடுப்பதற்கான நிர்ப்பந்தத்திற்குள்ளாகுகையில் உண்மையுள்ளவர்களாய் நிரூபிக்கப்படுவார்கள், ஆனால் "சிறுமந்தையினரோ" அதிகம் வைராக்கியம் உடையவர்களாய் இருப்பார்கள்; ஊழியம் செய்வதற்கும், பாடுபடுவதற்கும், சிறுமந்தையாகுவதற்கும் என்றும் சந்தோஷமாய்த் தொடர்ந்து ஓடுகின்றவர்களாய் இருப்பார்கள்; ஆனால் இந்த இரு வகுப்பாருமே - ஜெயங்கொள்பவர்களாகுவதற்கும், நித்தியமான ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கும், பூரண அன்பு எனும் இலக்கை அடைந்தாக வேண்டும்.

---

R4836

## இருதயங்களில் கிருபையினுடைய கிரியை

"கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது." (2 கொரிந்தியர் 5:14)

இவ்வசனத்தில், இடம்பெறும் நெருக்கி ஏவுகிறது என்பதற்கான ஆங்கில வார்த்தையாகிய "constrain" என்பது நெருக்கமாய் இருக்கின்றது என்றும், கட்டிவைக்கின்றது என்றும் இரு பொருளைக் கொடுக்கின்றதாய் இருக்கின்றது. அப்போஸ்தலன் கர்த்தருடைய ஊழியத்திலுள்ள தன்னுடைய செயல்களையெல்லாம் மீண்டுமாக எண்ணிப்பார்த்துக்கொண்டு, சிலருக்குத் தன்னுடைய இந்தப் போக்கானது, தன்னிலை மறந்துபோன மனநிலையில் தான் காணப்படுவதைச் சுட்டிக்காண்பிப்பதாக இருக்கின்றது என்று கூறுகின்றார். ஆனால் காரியங்கள் இப்படியாக இல்லை என்றும், தனக்கு முன்னிருந்ததைக் காட்டிலும், தெளிந்த மனமே இருக்கின்றது என்றும் விவரிக்கின்றார். தன்னைக் கிறிஸ்துவுக்குக் கட்டுப்பட்டவராகவும், கிறிஸ்துவின் அன்பானது, கிறிஸ்துவையும், தூய இருதயம் கொண்டுள்ள கிறிஸ்துவினுடையவர்கள் யாவரையும் அன்பு செய்யத்தக்கதாக தன்னை நெருக்கி ஏவுகின்றதாகவும் அவர் உணர்ந்தார்.

ஏன் இந்த அன்பானது நெருக்கி ஏவிட வேண்டும்? காரணம் என்னவெனில் . . . அனைவரும் மரித்தவர்களாக இருக்கின்றார்கள் என்று நாம் எண்ணுவோமானால், பின்னர் அனைவருக்கும் ஜீவன் அளிப்பவருடைய உதவி தேவையாய் இருப்பதை அறிவோம்; ஒருவேளை கிறிஸ்து அனைவருக்காகவும் மரித்தாரானால் மற்றும் நாம் அவர் மூலமாய், ஜீவனுக்குள் வந்திருக்கிறோமானால், இதுமுதல் நாம் மாம்சத்தின்படி ஜீவிக்கிறவர்களாய் இருக்கக்கூடாது. நாம் மாம்சமானவைகளை முற்றிலுமாக ஒப்புக்கொடுத்துவிட்டு, கிறிஸ்துவிடமிருந்து பெற்றுக்கொண்ட புதிய ஜீவியத்தை ஜீவிக்க வேண்டும் என்பதேயாகும். "நான் பைத்தியக்காரன் அல்ல; மாறாக கிறிஸ்து மற்றவர்களுக்காகக் கொண்டிருந்த

அதே அனுதாப அன்பை, நானும் பெற்றிருக்கத்தக்கதாக, நான் கிறிஸ்துவினிடத்தில் மிக நெருக்கமாய் இழுக்கப்படுகிறேன். அவர் சகோதரருக்காக எப்படித் தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தாரோ, அப்படியே நானும் செய்வேன்" என்ற விதத்தில் பரிசுத்தவானாகிய பவுல் கூறுகின்றார்.

நமது கர்த்தருடைய அன்பானது, அவருடைய சீஷர்களிடத்திலும், பிரதானமாய் மிகவும் வைராக்கியத்துடனும், வேகத்துடனும் காணப்பட்டவர்களிடத்தில், அதாவது பேதுரு, யாக்கோபு மற்றும் யோவானிடத்தில் விசேஷமாய் வெளிப்படுத்தப்பட்டது; இவர்கள் கர்த்தருடைய விசேஷித்த அன்பைப் பெற்றிருந்தார்கள். இப்படியாக இருக்க வேண்டும் எனச் சபையும் அறிவுரைக்கப்பட்டிருக்கின்றது. உலகத்திற்கான ஊழியத்தில் ஜீவனை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று எந்தப் புத்திமதியும் காணப்படாமல், மாறாக விசுவாச வீட்டாருக்கே விசேஷமாய் ஜீவனானது ஊழியத்திற்காக ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் என்றே புத்திமதி காணப்படுகின்றது. ஒட்டுமொத்த மனுக்குலத்தின், அதாவது ஆதாமினுடைய சந்ததியின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும், கிறிஸ்துவினுடைய பலியின் நன்மையானது கடந்து செல்லும் என்று நாம் பார்க்கின்றோம்.

கர்த்தரை யார் காட்டிக்கொடுப்பார் என்று அவருக்கு மிக ஆரம்பத்திலேயே தெரியும் என்று வைத்துக்கொள்ளுங்கள், இன்னுமாக யாரெல்லாம் இரண்டாம் மரணத்திற்குள் கடந்து போவார்கள் என்பதையும் தெய்வீக உய்த்துணர்வானது அறிந்துகொள்கின்றது என்றும் வைத்துக்கொள்ளுங்கள், இப்படியிருக்க இப்படிப்பட்டவர்களுக்காகக் கர்த்தர் ஏதாகிலும் செய்வார் என்று நாம் எண்ண முடியாது. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், தேவனுடைய ஆசீர்வாதமானது "உத்தம இஸ்ரயேலர்களுக்கு" மாத்திரமே உரியதாகும். அவருடன் இசைவிற்குள் வருகிறவர்கள் மாத்திரமே, கர்த்தருடைய ஆசீர்வாதம் மற்றும் கிருபையின் ஐசுவரியத்தைப் பெற்றுக்கொள்வார்கள். இவர்கள் தங்களுக்குள்ளாகப் பெற்றிருக்கும் ஏதோ ஒன்றினால் இல்லாமல், மாறாக ஏற்றுக்கொள்கின்றவர்கள் அனைவருக்கும் போதுமான அளவு பரந்ததாகவும், போதுமான அளவுக்கு ஆழமானதாகவும் காணப்படும் கர்த்தருடைய அன்பினாலேயே, இவர்கள் மீட்கும் பணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் தேவனால் பொல்லாங்கானவர்களை அன்புகூர முடியாது. இப்பொழுது அவருடைய பிள்ளைகளாக இருப்பவர்களுக்கு அல்லது, அவர் பிற்பாடு அருளவிருக்கும் சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்களின் கீழ் அவருடைய பிள்ளைகளாக அப்போது இருக்கப்போகிறவர்களுக்கு மாத்திரமே அவருடைய ஆசீர்வாதங்கள் உரியவைகளாகக் காணப்படுகின்றன. முடிந்தமட்டும், அனைவரையும் ஆசீர்வதிப்பது/ஆசீர்வாதத்திற்குள் கொண்டுவருவது நம்முடைய கடமையாக இருக்கின்றது.

## அன்பை வளர்த்துவதே, நம்மைப் பயிற்றுவிப்பதற்குரிய பிரதானமான நோக்கமாய் இருக்கின்றது

நம்முடைய சீரழிந்த குணலட்சணங்களை மறுரூபமாக்குவதும், அந்தக் குணலட்சணங்களைத் தெய்வீகக் குணலட்சணமாகிய அன்பிற்கு ஒப்பாக மீண்டும் புதிதாய்ச் சீர்ப்பொருத்துவதும்தான் இந்தச் சுவிசேஷ யுகத்தில், சபைக்கான கிருபையின் கிரியையாக இருக்கின்றது. எவன் ஒருவன் இந்த மறுரூபமாக்கப்படுதலை அடைய தவறுகின்றானோ, அவன் தன்னைக் குறித்ததான தேவனுடைய சித்தத்தை அடைய தவறிப்போனவனாகி, கண்டிப்பாகச் சுவிசேஷத்தில் நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள பரிசை வெல்ல தவறிப்போகிறவனாய் இருப்பான். நம்மிடத்தில் இருக்கும் மிகச் சீரழிந்த குணலட்சணங்களைத்தான், தேவனுடைய அருமையான குமாரனுக்கு ஒத்த சாயலாக நாம் மாற்ற வேண்டியுள்ளது. நாம் மற்றவர்களைப்போன்று, கோபாக்கினையின் பிள்ளைகளாகக் காணப்பட்டிருந்தோம் (எபேசியர் 2:3). தகப்பனாகிய ஆதாம் மீறுதலுக்கு உட்படுவதற்கு முன்னதாக,

அவரிடம் காணப்பட்ட ஆதி தேவனுடைய சாயலானது, கடந்த ஆறாயிரம் ஆண்டுகள் காலத்தில் கவலைக்கிடமாகத் தொலைந்துபோயுள்ளது. ஆகவே தெய்வீக அன்பின் சாயலுக்கு நாம் ஒத்தவர்களாகக் காணப்படுவதற்குப் பதிலாக, நாம் "துர்க்குணத்தில் உருவாகி, பாவத்தில் கர்ப்பந்தரித்தவர்களாக" காணப்படுகின்றோம்; இதனிமித்தம் அன்பானது நம்முடைய இயல்பான பண்பாகவும், நம்முடைய மற்றப் பண்புகளை ஆளும் கொள்கையாகவும் இருப்பதற்குப் பதிலாக, அநேகத் தருணங்களில் முற்றிலும் தடயம் இல்லாமலேயே போய்விட்டதாகக் காணப்படுகின்றது; ஆகவே நம்மிடத்தில் இருப்பதெல்லாம் பெரிதளவில் தீமையினால் அசுத்தப்படுத்தப்பட்டதாகவும், சுயநலமான அன்பாகவும், சிற்றின்ப அன்பாகவும், காணப்படுகின்றது; அதாவது தெய்வீகக் குணலட்சணத்தினுடைய சாரமாகிய - முற்றிலும் சுயநலமற்ற அன்பிற்கு எதிரானவைகளாக நம்முடைய அன்பு மாறியுள்ளது.

"ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3); அதாவது அன்பாகவே இருக்கும் தேவனை அறிவதே - நித்திய ஜீவன் ஆகும். தேவனை அறிந்துகொள்வது என்பது அவருடைய அன்பான திட்டம் மற்றும் குணலட்சணம் பற்றி எதையாகிலும் அறிந்துகொள்ளுதல் ஆகும்; அதாவது தனிப்பட்ட விதத்தில் அவரை அறிந்து கொள்ளுதலாகவும், அவருடைய குணலட்சணம் பற்றின அறிவுபூர்வமான உணர்ந்து கொள்ளுதலாகவும் இருப்பதே, தேவனை அறிந்துகொள்ளுதலாகும்; மேலும் தேவனுடைய ஆவியையும், பரிசுத்தத்தின் ஆவியையும், அன்பின் ஆவியையும் ஒருவன் பெற்றிராதது வரையிலும், இப்படியாகத் தேவனை அறிந்துகொள்வது முடியாது. மேலும் இந்தப் பரிசுத்தம் மற்றும் அன்பின் ஆவியானது, உடனடியாக அடையப்பெற முடியாது; இது ஒரு வளர்ச்சியாகும்; இதனை வளர்த்துவதே, பிரதான வேலையாகக் [பிரதான கவனமாக] காணப்பட வேண்டும் - அதாவது நித்திய ஜீவனைப் பலனாகக்கொடுக்கக்கூடிய தேவனைப் பற்றின அறிவை அடைய எதிர்நோக்கும் அனைவருடைய பிரதான வேலையாகக் காணப்பட வேண்டும்.

ஆனால் நம்முடைய மனதின் அல்லது சித்தத்தின் மறுரூபமாகுதலுடன், சரீரத்தின் மறுரூபமாகுதல் அல்லது சீர்ப்பொருந்துதல் நடைபெறாததினால், நாம் மாம்சத்தில் காணப்படுவது வரையிலும், மாம்சத்தினால் சுதந்தரிக்கப்பட்டுள்ள அதன் பெலவீனங்களுக்கு எதிராகவும், சுயநலம் மற்றும் பாவத்திற்கு நேரான அதன் போக்குகளுக்கு எதிராகவும் நாம் போராடிக்கொண்டே இருக்க வேண்டும். ஆனால் இந்தக் கடுமையான மற்றும் தொடர்ச்சியான போராட்டமானது, விசேஷித்த ஜெயங்கொள்ளும் வகுப்பாரை மாத்திரம் தெரிந்துகொள்ளாமல், இன்னுமாக விரும்பத்தக்கதான குணலட்சணங்களை இப்போது மிக விரைவாக வளர்ப்பதற்கு (ஆயிர வருட யுகத்தில் செயல்படுத்தப்படும் மிக எளிமையான முறைகளைக்காட்டிலும்) உதவியாய் இருக்கின்றது. இதன் விளைவாக உலகம் பூரணம் அடைவதற்குக் கிட்டத்தட்ட ஆயிரம் வருஷங்கள் தேவைப்படுகிறதாய் இருக்க, பரிசுத்தவான்கள் குணலட்சணத்தில் பூரணப்படுகிற காரியமானது, "சிறுமந்தையினருக்காக" வடிவமைக்கப்பட்டுள்ள கடுமையான ஒழுங்குபடுத்துதல்கள் மற்றும் விசேஷித்த அறிவுரை வகுப்புகளாகிய விசேஷித்த பயிற்சியின் கீழ், வெகுசில வருடங்களுக்குள்ளாகவே நிறைவடைகிறதாய் இருக்கின்றது. கொஞ்சம் வருடங்களோ (அ) அநேக வருடங்களோ, எதிர்ப்புகளினால் கொஞ்சம் துன்பமோ (அ) அதிகமான துன்பமோ, எப்படியிருப்பினும் குணலட்சணத்தினுடைய மறுரூபமாக்கப்படுதலிலும், மெருகூட்டப் படுதலிலும் நடைப்பெற்றிருக்க வேண்டும். நாம் நமது ஓட்டத்தைச் சந்தோஷத்துடன் முடித்து, நித்திய மகிமையை அடைய வேண்டுமானால், அன்பின் விஷயத்தில் நமது சித்தங்கள், தேவனுடைய சித்தத்திற்கு ஒத்திருக்கும் நிலைமையை அடைந்திட வேண்டும்.

## அன்பின் பாடத்தை நாம் முழுமையாய்க் கற்றுக்கொள்ள வேண்டும்

தேவனுடைய அன்பை நம்முடைய இருதயங்களில் நாம் பெற்றிருந்தோமானால், இந்த அன்பானது நம்முடைய ஜீவியத்தின் அனைத்துக் காரியங்களையும் ஆளுகிறதாய் இருந்து, எண்ணங்களிலும், கிரியைகளிலும், வார்த்தைகளிலும், நம்மைத் தேவனுக்கு ஒத்திருக்கச் செய்யும். கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் அன்பு பற்றின பாடமாகிய மாபெரும் பாடத்தையே நாளுக்கு நாள் ஆண்டவர் நமக்குக் கற்றுக்கொடுத்து வருகின்றார்; நாம் "நம்முடைய பரம அழைப்பின் பந்தய பொருளிற்கான இலக்கை" அடைய வேண்டுமெனில், இந்த அன்பு பற்றின பாடத்தை நாம் முழுமையாய்க் கற்றுக்கொள்ள வேண்டும்.

அன்பிற்கு இசைவாக நம்முடைய இருதயங்களை வளர்த்துவதற்கும், நம்முடைய நடத்தைகளை இயக்குவதற்குமே, கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் தெய்வீக வார்த்தைகள் மற்றும் வழிநடத்துதல்களின் அறிவுரைகள் அனைத்தும் நோக்கம் கொண்டுள்ளன. சாந்தம், பொறுமை முதலான கனிகளும், கிருபைகளும், ஆவியிருப்பதற்கான வெளிப்படுத்தல்களாக இருந்தாலும்கூட, இக்கனிகள் எல்லாம் வெளிப்படுவதற்கு முன்னதாகவே பரிசுத்த ஆவி நம்மிடத்தில் காணப்பட வேண்டும்; ஆவி பூரணமானதாக இருக்கும், ஆனால் அதன் வெளிப்படுத்தல்கள் குறைவுகளுடன் காணப்படலாம். திராட்சச்செடி நல்ல செடியாக இருக்கலாம், ஆனால் ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும், திராட்சப்பழங்கள் முதிர்ச்சியற்றவையாகவே இருக்கும். இப்படியாகவே ஆவியினுடைய கிருபைகளின்/பண்புகளின் விஷயத்திலும் காணப்படுகின்றன. இவைகள் இருதயத்தினுடைய உள்ளான நிலையினுடைய, வெளிப்புற வெளிப்படுத்தல்களாய் இருக்கின்றன; இந்தப்பண்புகள் பூரணமடைவதற்கு/முழுமையடைவதற்கு முன்னதாகவே இருதயத்தினுடைய உள்ளான நிலை பூரணமடையக் கூடியதாய் இருக்கின்றது. உண்மையைச் சொல்லப்போனால், இந்தப்பண்புகள் திரைக்கு இப்பக்கத்தில் ஒருபோதும் பூரணம் அடையப்போவதில்லை.

நாம் அர்ப்பணம் பண்ணின தருணத்தில், அதாவது ஆவியின் கனிகளை நாம் வளர்த்துக்கொள்வதற்கு முன்னதாக, நாம் பூரண அன்பாகிய இலக்கில் காணப்படவில்லை. அப்போது நாம் அர்ப்பணம் பண்ணினவர்களாகவும், நாம் அறிந்திருந்த வரையில் சரியான ஆவியை உடையவர்களாகவும் இருந்தோம். நம்மிடத்தில் என்ன எதிர்பார்க்கப்படுகின்றது என்பது பற்றின போதுமான அறிவு நமக்கு அப்போது இருக்கவில்லை. இதை அறிந்துகொள்வதற்கு, நாம் கொஞ்சம் வளர்ச்சியடைய வேண்டியிருந்தது, கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் கொஞ்சம் போதிக்கப்படவும் வேண்டியிருந்தது. கிறிஸ்துவைப் பின்பற்றுவது என்றால் என்ன என்பது பற்றின அறிவு படிப்படியாகவே நமக்கு வந்தது. ஒருவேளை சித்தமானது, அறிவினுடைய வேகத்திற்கு ஏற்ப காணப்பட்டிருந்திருக்குமாயின், ஒருவர் இருதயத்தில், பூரண அன்பினுடைய இலக்கினை அடைந்திருப்பார். இந்த ஓர் இருதய நிலையானது கொண்டுவரும் குணலட்சணத்தின் பண்புகளினுடைய வெளிப்படுத்தலானது, தற்காலத்தில் ஒருபோதும் முழுமையான பூரணத்தில் இருப்பதில்லை, மாறாக நாம் பரிபூரணமான சரீரங்களைப் பெற்றிருக்கும் போதே, பூரணமாய் இருக்கக்கூடும். இந்த ஒரு நிலையை அடைந்துள்ள இருதயமானது திரைக்கு அப்பக்கத்தில் கிடைக்கப்பெறும் நிலைகளுக்கு முழுக்க ஏற்ற ஒன்றாய் இருக்கும்.

## அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; எனினும் மாம்சத்தில் பூரணம் என்பது சாத்தியமற்ற ஒன்றாகும்

நாம் ஒருவருக்கொருவர் பண்ணுகின்ற நல்ல அறிக்கைகளினாலும், வெளிப்படுத்தப்படுகின்ற இந்த அறிக்கைகளுக்கான சாட்சியங்களினாலும், நாம் ஒருவரையொருவர் அடையாளங்கண்டு கொள்ளலாம். தோட்டக்காரன் தன்னுடைய திராட்சச்செடியினிடத்திற்குச் சென்று, திராட்சப்

பழங்களுக்காக அதன் பல கிளைகளை/கொடிகளை நோட்டமிடுவது போலவே, கனிகள் கொடுக்கத்தக்கதான சரியான நிலையில் இருதயம் காணப்படுகின்றதா என்று கர்த்தர் அறிவார். கர்த்தருக்கு ஒரு முழுமையான அர்ப்பணத்தைப் பண்ணியுள்ளதை வெளிப்படையாக அறிக்கைப் பண்ணியுள்ளவர்கள், அதாவது தாங்கள் அறிக்கைப் பண்ணினதற்கு எதிர்மாறாக வாழாதவர்கள் மற்றும் மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடப்பவர்கள் அனைவரும் நம்மால் அடையாளம் கண்டுகொள்ளப்படலாம் - அதாவது அவர்கள் நம்மை அடையாளம் கண்டுகொள்ளும் அதே விதத்தில், நாமும் அவர்களை அடையாளம் கண்டுகொள்ளலாம். "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்"--அதாவது அவர்களது வெளிப்புறமான கீழ்ப்படிதலை வைத்து அறிவீர்கள் - ஆனால் கனிகளின் முழுமையான வளர்ச்சியின்படி இல்லை. ஆகவே நாம் ஒருவரையொருவர் கனிகளின் முழுமையான வளர்ச்சியின்படி அறியாமல், கீழ்ப்படிதல் மற்றும் கர்த்தருக்குக் கீழ்ப்படிய முயற்சித்தல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அறிகிறவர்களாய் இருக்கின்றோம்.

முற்றும் முழுமையான பூரணம் என்பது எண்ணங்களிலும், வார்த்தைகளிலும், கிரியைகளிலுமான பூரணமாய் இருக்கின்றது, மேலும் இது தற்காலத்தினுடைய நம்முடைய நிலைமையும் அல்ல. நம்முடைய இருதயங்களில் அன்பில் பூரணத்தை மாத்திரம் இப்பொழுது நம்மால் பெற்றிருக்க முடிந்த காரியமாக இருக்கின்றது; அதாவது தேவனுக்காக, சத்தியத்திற்காக, சகோதர சகோதரிகளுக்காக ஒரு பூரண அன்பை நாம் இருதயத்தில் மாத்திரமே இப்பொழுது கொண்டிருக்க முடியும். பூரணமான அன்பு, பலிசெலுத்துவதற்கு வழிநடத்துகின்றது. "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்" (யோவான் 14:15). பூரண அன்பை உடையவர்கள், தங்களுடைய பலிகளை நிறைவேற்றுபவர்களாக இருப்பார்கள். ஆனால் எத்தருணத்திலும், இப்படியான பூரண அன்பின் நிலையிலிருந்து, எதிர்க்கிற நிலைக்கும், தூரமாய்ப் போகிற நிலைக்கும்கூட கடந்து செல்லக்கூடும். இப்படியாகப் போகிறவனுடைய இருதயத்தில், அவனுடைய அன்பின் அனல் தணிந்துபோய்விடும். படிப்படியாக அவன் தேவனிடமிருந்து பின்வாங்க ஆரம்பித்து, திரள்கூட்டத்தின் வகுப்பாரில் ஒருவனாக மாறுகிறவனாகலாம். ஒருவேளை மகா உபத்திரவக் காலத்தினுடைய சிட்சைகள், அவனிடம் முழுமையான சீர்த்திருத்தத்தைக் கொண்டுவரவில்லையெனில், அவன் இரண்டாம் மரணத்திற்குக் கடந்து போகிறவனாய் இருப்பான்.

அன்பினுடைய ஏற்பாடாக, தேவனுடைய ஆட்டுக்குட்டியானது, மனுக்குலம் அனைத்திற்குமான ஈடுபலி விலைக்கிரயமாக, ஒப்புக்கொடுக்கப்பட்ட பிற்பாடு, அவருடைய புண்ணியத்தின் பலனானது சபைக்குத் தரிப்பிக்கப்பட்ட பிற்பாடு, பாவங்களிலிருந்து நம்மை விடுவிப்பதற்காக எடுக்கப்படும் பல்வேறு படிகளானது - அன்பின் குணலட்சணத்திலும், தேவனுடைய குணலட்சணத்திலும் நம்மை வளர்த்துவதற்கே உள்ளது; இப்படியான தெய்வீகக் குணலட்சணத்திற்கு இசைவான குணலட்சணத்தினுடைய வளர்ச்சி மாத்திரமே, நம்மைப் பிதாவுக்கு முன்பாக அங்கீகரிப்பான நிலையில் நிற்க செய்து, நித்தியத்திற்குமான ஜீவனாகிய அவருடைய கிருபையினிடத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறதாய் இருக்கும். அப்படியானால், நாம் "தேவனால் போதிக்கப்பட்டிருப்பதும்," இந்தக் குணலட்சணத்தை வளர்த்துக்கொள்வதும் எவ்வளவு முக்கியமானதாக இருக்கின்றது!

ஆயிர வருட யுகத்தின்போதான கிருபையினுடைய கிரியையும்கூட, மனுக்குலம் முழுவதும் தேவனுடைய கிருபையான குணலட்சணத்தை அறிந்துகொள்வதற்கும், அனைவருக்குமான இரட்சிப்பிற்கு அவர் பண்ணியுள்ள ஏற்பாட்டை அறிந்துகொள்வதற்கும் ஏதுவாய் இருக்கும்; இன்னுமாக விருப்பம் உள்ளவர்கள் அனைவரையும் பாவத்தினுடைய சீர்க்கேட்டிலிருந்து, குணலட்சணத்தினுடைய

பூரணமாகிய அன்பின் நிலைக்கு மாற்றுவதற்கு ஏதுவாயும் இருக்கும்; அதாவது மீண்டுமாக மனுக்குலத்தைத் தேவனுடைய சாயலில் கொண்டுவருவதற்கு ஏதுவாய் இருக்கும். இப்படியாக அவர்களுடைய சித்தங்கள் மாற்றமடைவதும், கூடவே சரீரத்திலும் அவர்கள் படிப்படியாக மாற்றம் அடைவதும், பாவத்தினுடைய சகல கறைகளையும், சுதந்தரிக்கப்பட்ட சகல பெலவீனங்களையும் அகற்றிவிடுகிறதாய் இருந்து, அவர்களைத் தேவனுடைய சாயலில் கொண்டுவருகிறதாகவும், பாவம் மற்றும் அதின் தீமையான பின்விளைவுகளின் "விரும்பத்தகா நிலை" பற்றின ஞாபகார்த்தத்தையும் கொடுக்கிறதாயும் இருக்கும்.

---

R4444 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார்

ஒருமுகப்பட்ட பார்வையையும், ஒருமுகப்பட்ட இருதயத்தையும் உடையவர்களை அழைத்து, அவர்களுக்குப் போதித்து, அவர்களை வழிநடத்துவது மாத்திரமல்லாமல், அவர்களை சோதித்து, நிரூபிப்பதும் தெய்வீக நோக்கமாக இருக்கின்றது. "உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடும் உங்கள் முழு ஆத்துமாவோடும் அன்புகூருகிறீர்களோ இல்லையோ என்று அறியும்படிக்கு உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதிக்கிறார்" (உபாகமம் 13:3). தேவனுக்குப் பிரதானமாய் அன்பு பாராட்டுவதும், நம்மை நாம் நேசிப்பதுபோன்று நம்முடைய அயலானுக்கும் நியாயம் செய்வதும் - அயலானுக்கு முழுமையான நீதியைப் பாராட்டுதலுமாகிய தெய்வீக நியாயப்பிரமாணமானது, கீழ்ப்படிதலின் பரீட்சையாக இருக்கின்றது. இவைகளோடுகூட அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் மீட்பர் தங்களை அன்புகூர்ந்ததுபோன்று ஒருவரையொருவர் அன்பு செய்ய வேண்டும், அதுவும் ஒருவர் இன்னொருவருக்காகவும், ஒருவர் இன்னொருவருடைய நலன் மற்றும் உதவிக்காகவும் எதையும், எல்லாவற்றையும், ஒப்புக்கொடுத்து, பலிசெலுத்தும் அளவுக்கு அன்புசெய்ய வேண்டும் என்ற புதிய கட்டளையையும் பெற்றிருக்கின்றனர். ஒருவேளை இந்தப் பரீட்சையில் உண்மையாக நிலைத்து நின்றால், இது அந்த நபர், பூரண அன்பின் இலக்கினை எட்டியுள்ளதை மாத்திரம் குறிக்காமல், பரீட்சைகளில் நின்று நிலைத்துள்ளார் என்றும், தெய்வீக நிபந்தனைகளின் கீழ் நித்தியத்திற்குரிய ஜீவனுக்குத் தான் பாத்திரமாய் உள்ளதை நிரூபித்துள்ளார் என்றும் குறிக்கின்றதாயிருக்கும். ஆனால் ஒருவேளை இந்தப் பரீட்சைகளில் நிலைத்து நிற்கவில்லையெனில், இது அந்நபர் ஒளியினின்று தள்ளப்பட்டுள்ளார் என்பதையும், அந்நபர் ஒளியினின்று வெளியேறுவதால், இவருக்கு ஒருகாலத்தில் ஒளியாக இருந்தவைகள் இருளாகத் தோன்றும் மற்றும் இருளானவைகள் அனைத்தும் நீதியானதாகவும், நியாயமானதாகவும், சரியானதாகவும் தோன்றும் என்பதையும் குறிக்கின்றதாயிருக்கும்.

கர்த்தரால் அவசியமானது எனக் கூறப்படும் இந்தப் பரீட்சைகள் மற்றும் சோதனைகள் குறித்து முறையிடுவது நமக்கடுத்த காரியமல்ல; நம்மால் அன்புகூரப்படுபவர்கள் ஒளியில் தொடர்ந்து காணப்பட்டு, இறுதியில் இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று நாம் வற்புறுத்துவதும் நமக்கடுத்த காரியமல்ல. மாறாக தெய்வீக ஏற்பாடுகளையும், நியாயத்தீர்ப்புகளையும் ஒத்துக்கொள்வதின் மூலம், கர்த்தருக்கான நமது கீழ்ப்படிதலைக் காட்டுவதும் மற்றும் முழு இருதயத்தோடும், மனதோடும், ஆத்துமாவோடும், பலத்தோடும் அவர் மீதான நமது அன்பை விவரிப்பதும் நமக்கான காரியமாகும். கர்த்தர் மணவாட்டி வகுப்பாரின் அங்கங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டிருக்கின்றார். இந்த

வேலையில் நாம் கர்த்தரோடுகூட உடன் வேலையாட்களாக - அதாவது அவருடைய அறிவுரையின் அடிப்படையில் மாத்திரம் செயல்படும் உடன் வேலையாட்களாக இருப்பதற்கான சிலாக்கியத்தை அவர் நமக்கு அருளியுள்ளார். முடிவுகள் அவருடைய கரத்தில்தான் உள்ளது. ஒருவேளை இவர்கள் ஒருமுகப்பட்ட பார்வையையும், ஒருமுகப்பட்ட இருதயத்தையும், ஒருமுகப்பட்ட நோக்கத்தையும், தேவனுக்கும், நீதி, நியாயம் மற்றும் அன்பின் கொள்கைகளுக்கும் உள்ள உண்மையையும் தக்கவைத்துக்கொள்ளவில்லையெனில், இவர்களால் அவருடைய சீஷர்களாகத் தொடர்ந்து காணப்பட முடியாது; இவர்களால் ஒளியில் தொடர முடியாது; இவர்கள் "புறம்பான இருளுக்குள்" போயாக வேண்டும்.

ஒருவேளை எவரேனும் அன்பின் ஆவியில், பரிசுத்தத்தின் ஆவியில், தேவனுடைய ஆவியில் வளர்வதற்குத் தவறிப் போவார்களானால், இவர்கள் நிச்சயமாகப் பின்னுக்குப் போய்விடுவார்கள், மேலும் இவர்களுக்குள் இருந்த ஒளி, இருளாகிவிடும் . . . மாபெரும் இருளாகிவிடும். நமக்காக தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்துக் கர்த்தர் வெளிப்படுத்தின அன்பின் ஆவிக்குப் பதிலாக, பகைமையின், பொறாமையின், குரோதத்தின் ஆவி இவர்களுக்குள் கடந்து வருகின்றது; பிரமாணத்தினால் கண்டிக்கப்படும் வெளிப்படையான கொலையைச் செய்யத் தயங்குகிறதும், ஆனால் தங்களுக்கு யார் மேல் கசப்பு ஏற்பட்டிருக்கிறதோ, அந்நபரின் குணநலன்களைக் கொன்று போடுவதற்கும், சகலவிதமான பொல்லாதவைகளை அவர்களுக்கு எதிராக பேசுவதற்கும் தயக்கம் கொள்ளாததுமான கொலை பாதகத்தின் ஆவியானது இவர்களுக்குள் கடந்து வருகின்றது. அவர்களுடைய கனிகளினால் அவர்களை அறிந்துகொள்வீர்கள். இப்படிப்பட்ட முட்கள் திராட்சச்செடிகளிலும், அத்திமரங்களிலும் வளருவதில்லை.

இப்படிப்பட்டவர்களுடைய போக்கின் தத்துவமானது பின்வருமாறு: இவர்கள் கர்த்தருடைய ஆவியை, நீதி, அன்பு, இரக்கம் மற்றும் சத்தியத்தின் ஆவியை இழக்கும்போது, இவர்கள் கர்த்தருடைய மேற்பார்வையையும், வழிநடத்துதலையும், ஆளுகையையும் இழந்து போய்விடுவார்கள். இவர்கள் ஒளிக்குள் வந்தபோது, உலகத்தை ஆளும் சட்டங்களையும், செல்வாக்குகளையும் தூக்கி எறிந்துவிட்டபடியால், இப்பொழுது ஒளியையும் விட்டு வெளியே வந்திருக்க, இவர்கள் ஜீவியத்தின் விஷயத்தில் எவ்விதமான வழிகாட்டியோ, கட்டுபாடுகளோ இல்லாமல் காணப்படுகின்றனர். ஆகவே இவர்கள் தெய்வீக நியமத்திற்கு எதிராக செயல்படுபவர்களாய் மாத்திரம் இராமல், பொதுவான உலகம் பெற்றிருக்கும் வார்த்தை மற்றும் நடத்தை விஷயத்திலுள்ள ஒழுக்கமுறை மற்றும் நீதியின் கொள்கைகளுக்கும்கூட எதிராக செயல்படுகிறவர்களாய் இருப்பார்கள். இக்காரணத்தினால்தான், தற்கால சத்திய வெளிச்சத்தினின்று வெளியேறினவர்களால், உலகத்தாரால் செய்ய முடிகின்றதைக் காட்டிலும் மிகவும் இழிவான, வெறுப்பிற்கிடமான காரியங்களைச் செய்ய முடிகின்றது; அதாவது தங்களுடைய சக மனிதர்கள், தங்களுடைய ஜீவியத்தைப் பற்றி, தங்களுடைய வார்த்தைகள் மற்றும் நடத்தைகள் பற்றி என்ன நினைப்பார்கள் என்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொள்வதன் மூலம் ஒழுக்கமாக இருக்க முயற்சிக்கும் உலகத்தாரைக் காட்டிலும், இவர்களால் இழிவான காரியங்களைச் செய்ய முடிகின்றது.

## வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்துகொள்ளுங்கள்

ஒருமுறை பிரகாசிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டு, தேவனுடைய நல்வார்த்தைகளையும், இனிவரும் வல்லமைகளையும் குறித்து ருசிப்பார்த்துள்ளவர்கள் அனைவரும்

பக்தி வைராக்கியத்துடன் இருப்பதற்கும், தாங்கள் ஏற்கெனவே அடைந்துள்ள நிலையைத் தக்கவைத்துக்கொள்வதற்கும் நாம் வலியுறுத்துகின்றோம். இவர்கள் தேவனுடைய நேச குமாரனுக்கு ஒத்த சாயலை அடைவதற்கும், இவர்கள் அன்பில் பூரணப்படுவதற்கும், கோபம், குரோதம், பகை, பொறாமை, கசப்பு ஆகியவைகளைக் களைந்துபோடுவதற்கும் நாம் வலியுறுத்துகின்றோம்; ஒருவேளை கோபம், குரோதம் முதலியவைகளை இவர்கள் தங்களுக்குள் வைத்துக்கொண்டால், இவர்கள் குருடான நிலைக்கும், "புறம்பான இருளுக்கும்" போவதற்கு ஏதுவாகிவிடும். இன்னுமாக இவர்கள் கர்த்தருடைய ஆவியின் கனிகளாகிய சாந்தம், நற்குணம், பொறுமை, நீடிய பொறுமை, சகோதர சிநேகம், அன்பு ஆகியவற்றைத் தரித்துக்கொள்ளவும் வலியுறுத்துகின்றோம். கிறிஸ்துவின் மணவாட்டி வகுப்பாரில் அங்கங்களாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒவ்வொருவராலும் அடைய பெற்றிருக்க வேண்டும் எனத் தேவனால் முன் தீர்மானிக்கப்பட்டுள்ள மீட்பருக்கு ஒத்த சாயலை வளர்த்துவதற்கும், பெலப்படுத்துவதற்கும் இந்த ஆவியின் கனிகள் உதவுகின்றன; "ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேதுரு 1:10, 11).

---

R3759 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# அந்த நாளின் அக்கினி

எங்கெல்லாம் பூரணமான அன்பின் நிலை எட்டப்படவில்லையோ, அதை இந்த நாளின், "அக்கினியானது," இந்த நாளின் சோதனைகளானது வெளிப்படுத்திவிடும். அதாவது, குறைவு பெற்றவர்களைக் கர்த்தர் பிரித்துவிடுவார். இது துக்கத்தை உண்டு பண்ணுகிறதாய் இருக்கும். அதாவது, மாம்சீக உறவுகள் துண்டிக்கப்படும்போது, அருமையானவர்களிடத்தில் காணப்பட்ட நம்பிக்கைகள்/எதிர்பார்ப்புகள் அழிக்கப்பட்டுப் போகும்போது, நமக்குத் துக்கம் ஏற்படும் என்றாலும், இவ்விஷயம் தொடர்பாக, கர்த்தர் நமக்கு அளிக்கும் செய்தியானது, கர்த்தரால் கட்டளையிடப்படாத அந்நிய அக்கினியைச் செலுத்தின ஆரோனின் உடன் ஆசாரியர்கள் மரித்தபோது, அவர்களினிமித்தம் ஆரோனுக்கும், அவருடைய மற்றக் குமாரருக்கும் கொடுக்கப்பட்ட கட்டளையில் நிழலாகக் காணப்படுகின்றது. (லேவியராகமம் 10:1, 6). உயிரோடிருக்கிற மீதமுள்ள ஆசாரியர்கள், கர்த்தரால் அறுப்புண்டுப்போகப் பண்ணினவர்களுக்காகத் துக்கம் அனுசரிக்கவோ (அ) புலம்பவோ கூடாது என்று கர்த்தருடைய வாயாக இருந்த மோசே அறிவித்தார். மேலும் அவர்கள் ஒருவேளை துக்கம் அனுசரிப்பார்களானால், அது அவர்களை, கர்த்தருக்கு முன்பு உண்மையற்றவர்களாகவும், இவ்விஷயத்தில் விளங்கும் தேவனுடைய ஞானம், நீதி மற்றும் அன்பை அங்கீகரிப்பதில் தவறிப் போகிறவர்களாகவும் காண்பித்துவிடும்.

"கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கும்" அளவு நம்முடைய நாட்களில் உள்ள "சோதனைகள்" காணப்படும், அதாவது கர்த்தருக்கும், அவருடைய தெய்வீக ஏற்பாடுகளுக்கும் நாம் கொண்டிருக்கும் நம்முடைய அன்பையும், நம்முடைய உண்மையையும் நிரூபிக்கும் அளவு சோதனைகள் கடுமையாக, அதாவது விசாரணை செய்யும் விதத்திலுள்ள சோதனைகளாகக் காணப்படும் என்று மிகத் தெளிவாகக் கர்த்தர் தம்முடைய தீர்க்கத்தரிசனத்தில் வெளிப்படுத்தியுள்ளார்

(மத்தேயு 24:24). உண்மையுள்ளவர்கள் வஞ்சிக்கப்பட்டுப் போவதற்கு வாய்ப்பில்லை. ஏனெனில் இவர்களுடைய மகிமையான தலை இவர்களுக்கான ஆதரவாளராக நிற்கின்றார். இவர்கள் அவருடைய பின்னடியார்கள் ஆவார்கள். இவர்கள் அவருக்கென்று நிச்சயிக்கப்பட்டவர்களும், அவருடைய அங்கங்களும் ஆவார்கள். அவர் இவர்களுடைய தலையாகவும், பிரதிநிதியாகவும், ஸ்தானாபதியாகவும் காணப்படுகின்றார். மேலுமாக, அவர் இவர்களுக்காக, பரிந்துபேசுகின்றார். இவர்களுக்காக விண்ணப்பமும், ஜெபமும் ஏறெடுக்கின்றார். மேலுமாக, இவர்களுடைய விசுவாசம் ஒழிந்துபோவதில்லை; ஏனெனில் இவர்கள் அவருக்குச் சொந்தமானவர்கள் ஆவார்கள்; ஏனெனில் இவர்கள் எவ்வளவுதான் மாம்சத்தில் பெலவீனர்களாக இருந்தாலும், இருதயத்தில் இவர்கள் பூரணர்களாகவும், அவருக்கும் மற்றும் அவருடைய நோக்கத்திற்கும் மற்றும் தங்களுடைய உடன் அங்கங்களுக்கும் முற்றிலும் உண்மையானவர்களாகக் காணப்படுகின்றார்கள் என்பதினாலேயேயாகும்.

ஆகவே, வருடத்தின் இக்காலக்கட்டத்தில், எப்போதும் கூறுவதுபோன்று மீண்டுமாக, "சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து, ஜெபம் பண்ணுங்கள்" என்ற போதகரின் வார்த்தைகளைத் தொனிக்கப் பண்ணுகின்றோம். போதகரின் வார்த்தைகள் எப்படி இரு வகுப்பாருக்கு விழுந்ததோ, அப்படியே நம்முடைய வார்த்தைகளும் இரு வகுப்பார் காதுகளில் விழுகின்றது. அதாவது, சிலர் நம்முடைய இந்த எச்சரிப்பையும் பெரிதாகக் கருதிக்கொள்ளாமல், தங்களையே ஆபத்திற்குள் திணித்துக்கொள்வார்கள். வேறு சிலரோ போதகரின் சத்தத்தில் உள்ள எச்சரிப்புக்குச் செவிசாய்த்துக் கொள்வார்கள்; மேலும் இவர்களுக்கோ இது தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான தேவனுடைய வல்லமையின் ஒரு பாகமாகக் காணப்படும்.

---

R3071 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## வாயிலும், இருதயத்திலும் தேவ அன்பு
### உபாகமம் 11:20

இப்பொழுது சுவிசேஷ யுகத்தின் சபைக்குப் பொருந்துகின்றதும், பின்னர்ச் சீர்பொருந்தபோகும் இஸ்ரயேலருக்குப் பொருந்தப்போகின்றதும், ஆயிர வருட யுகத்தின் சாதகமான நிலைமைகளின் கீழ் ஆபிரகாமின் பிள்ளைகளென ஏற்றுக்கொள்ளப்படப் போகின்றவர்களுக்குப் பொருந்தப்போகின்றதுமான இந்தக் கற்பனையின் சாரம், அன்பின் பிரமாணமாகும். "இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உன் கடவுளாகிய ஆண்டவர்மீது அன்பு பாராட்டு. அவரைப் பின்பற்றி அவரது வழியில் நட. அவரது கட்டளைகளையும், நியமங்களையும், முறைமைகளையும் கடைப்பிடி. அப்போது நீ வாழ்வாய், நீ பலுகுவாய். நீ உடைமையாகக் கொள்ளப்போகும் நாட்டில் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கு ஆசிவழங்குவார்" (உபாகமம் 30:16; திருவிவிலியம்). தேவனுக்கான நமது அன்பானது அவர் விரும்புகிறதற்கும், அங்கீகரிக்கிறதற்கும் ஏதுவானதாய்க் காணப்பட வேண்டுமெனில், தேவனுக்கான அன்பானது இருதயத்திலிருந்து - மனமுவந்து தானாய்க் கடந்துவர வேண்டும் என்பதே சரியான கருத்தாகும். "தம்மை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்பவர்களைப்" பிதா நாடிக்கொண்டிருக்கின்றார். அப்படியானால் "நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்று ஏன் மோசே கூறுகின்கிறார்? கட்டளையின் பேரில் காண்பிக்கப்படும் அன்பானது, மனமுவந்து கடந்துவரும் அன்பின் அளவுக்கு/தரத்திற்கு ஏற்ப காணப்படாது என்றிருக்க, ஏன் தீர்க்கத்தரிசி வாயிலாகக் கர்த்தர் அன்புகூரக் கட்டளையிடுகின்றார்?

தேவன் அருளிடுவதற்குச் சித்தம் கொண்டுள்ளதான ஆசீர்வாதங்களை ஒருவேளை நாம் அனுபவிக்க வேண்டுமானால், நாம் அடைந்தாக வேண்டிய அன்பிற்கான அளவுகோலினை/நிலையை, தேவன் நம்முன் வைக்கின்றார் என்று நாம் பதிலளிக்கின்றோம். நித்திய ஜீவனுக்கான தம்முடைய இந்த நிபந்தனைகளைத் தெள்ளத் தெளிவாய் நம்முன் வைத்திடும் விதத்தில்தான் அவரது கட்டளையிடுதல் காணப்படுகின்றது. முன்னமே சுட்டிக்காண்பிக்கப்பட்டது போன்று அன்பு என்பது வளருகின்ற ஒரு காரியமாகும் மற்றும் அது கடமை-அன்பு வகையிலிருந்து துவங்குகின்றது; அது நாம் கிருபையிலும், அறிவிலும் வளருகையில் படிப்படியாக வளருகின்றதாய் இருக்கின்றது; பின்னர் நன்றியுணர்வாய் விரிவடைகின்றது; பின்னர் மதிப்பாய் மாறுகின்றது; பின்னர் இறுதியில் அதன் அசுசிகள், சுயநலங்கள் யாவற்றையும் மேற்கொண்டு தூய, ஊக்கமான அன்பாகுகின்றது. தம்முடைய குமாரனுடைய மரணத்தின் வாயிலாகத் தாம் திறந்து வைத்துள்ளதான ஜீவனுக்கான வழியினைச் சத்தியத்தில் அணுகுவதற்கான இவ்விதமான பிரயாசங்கள் நம் இருதயங்களில் காணப்பட்டதில், அவர் மகிழ்ச்சியடைந்தார். அவரது தயவினுடைய வெளிச்சத்தின் கீழ் நம்முடைய வளர்ச்சி மற்றும் விருத்தியைக் கண்டு அவர் மகிழ்ச்சியடைந்தார். கர்த்தர் இயேசுவினுடைய புண்ணியத்தின் மூடுதலை நமக்கு அருளிடுவதற்கும் அவர் சித்தமாய் இருந்தார் மற்றும் நம்மைப் பூரணர்களாக எண்ணிக்கொள்வதற்கும் சித்தமாய் இருந்தார் மற்றும் நம்முடைய அன்பு மற்றும் அர்ப்பணிப்பின் ஆரம்பம் துவங்கி நம்மைத் தத்தெடுத்துக்கொள்ளச் சித்தமாய் இருந்தார்; மேலும் நாம் நம் ஓட்டத்தை முடிக்கையில், இலக்கை நாம் அடைகையில், நமக்கு அவர் முன்வைத்திட்டதான - பூரண அன்பு - எனும் அளவுகோலை/தரநிலையை நாம் அடைகையில், அவர் நித்திய ஜீவனாகிய ஆசீர்வாதத்தினை நமக்கு அருளிடுவதற்குச் சித்தமாய் இருப்பார்; இதையல்லாமல் வேறு எந்த நிபந்தனையின் அடிப்படையிலும் அவரால் நித்திய ஜீவனை அருளிட முடியாது.

---

R4896 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# கீழ்ப்படிதல் எனும் பரீட்சை

இன்னொரு உதவிகரமான தேவ வார்த்தையானது 1 யோவான் 2:5-ஆம் வசனத்தில் காணப்படுகின்றது; "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்." இங்குப் புதுச்சிருஷ்டியென நம்முடைய வளர்ச்சியினைக் கண்டுகொள்வதற்கு நாம் பரீட்சை ஒன்றினைப் பெற்றிருக்கின்றோம். தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டவர்கள் மாத்திரமே அதைக் கைக்கொள்ள முடியும், அதைப் பின்பற்றிட முடியும் மற்றும் அது முன்வைக்கும் நிபந்தனைகளுக்கு இணங்கிட முடியும். ஆனால் அவ்வேதவசனமானது, தேவ வசனத்தைக் கைக்கொள்வது என்பது சிரமமான காரியம் என்று தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. கர்த்தருடைய வார்த்தையானது நமக்கு முன்வைக்கிறவைகளைவிட, ஏன் நாம் உலகத்தையும், மாம்சத்தையும் பற்றிக்கொண்டு பின்பற்றிடலாமே என்பதற்கான பல்வேறு காரணங்கள் அனைத்துத் திசைகளிலிருந்தும் நமக்குக் கூறப்படுவது நம் செவிகளுக்குக் கேட்கின்றது. "இடுக்கமான வழியினின்று" நம்மை மயக்கி திசைமாற்றிட பல்வேறு கவர்ச்சிகள் காணப்படுகின்றன. ஆகையால் தேவ வசனங்களைப் பற்றிக்கொண்டு காணப்படுபவர்கள் "ஜெயம்கொண்டவர்களாய்" இருக்கின்றனர்.

இந்தத் தற்காலத்தில் நீதியாயும், தேவபக்தியாயும் ஜீவிப்பதற்கு நாம் மிகவும் உபத்திரவப்பட வேண்டியிருக்கும் என்று வேதவாக்கியங்களானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. "அன்றியும்

கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோத்தேயு 3:12). தற்போதைய சூழ்நிலைகளின் கீழ் உண்மையாய் இருத்தல் என்பது, மரணபரியந்தம் உண்மையாய் இருத்தலாகும். கருத்து என்னவெனில் நம்மிடம் தேவனுக்கான அன்பு இல்லையெனில், நாம் அவர் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய பிரயாசம் எடுக்கமாட்டோம்; இப்படி அன்பு இல்லையெனில், நாம் தேவ வார்த்தைகளைப் பின்பற்றவும் முடியாது, அதற்கு இசைவாகக் காணப்படவும் முடியாது, மரணபரியந்தம் அதற்காய்ச் சேவிக்கவும் முடியாது.

"இதோ தேவனே உம் சித்தம் செய்ய வருகின்றேன்!" என்று நமது கர்த்தராம் இயேசு கூறினபோது, அவர் தேவ வார்த்தைக்கான பூரண கீழ்ப்படிதலைச் சித்தரித்துக் காட்டினவராய் இருந்தார். புஸ்தகச் சுருளில் எழுதப்பட்டிருந்த அனைத்தையும், தேவனுடைய சித்தமாய்க் காணப்பட்ட அனைத்தையும், எப்படியேனும் செய்திடுவதற்கு அவர் மகிழ்ச்சியாய் இருந்தார். பிதாவுக்காக நமது கர்த்தர் இயேசு அன்புகொண்டிருக்கவில்லையெனில், அவரால் திவ்விய சித்தத்திற்கு இப்படியான ஒரு கீழ்ப்படிதலின் அளவை அடைந்திருக்க முடியாது. இப்படியாகவே நம் விஷயத்திலும் உள்ளது. தேவனுக்காகவும், நீதியின் கொள்கைகளுக்காகவும் நாம் அன்பு கொண்டிராதது வரையிலும், நம்மால் இவ்வழியில் தொடர முடியாது.

ஆகையால் தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கென்று தங்கள் ஜீவியங்களைக் கையளிப்பவர்கள் மாத்திரமே, அவரது வார்த்தைகளைச் சரியாய்க் கைக்கொள்பவர்களாய் இருப்பார்கள். இந்த நிலையானது நாம் துவக்கத்தில் அர்ப்பணம் பண்ணினபோது நம்மால் அடையப்பட்டது என்று சொல்லலாம்; ஏனெனில் அர்ப்பணிப்பின்போது இருதயமானது அதன் சித்தத்தைத் துறந்து, கர்த்தருக்கு முழுமையாய்க் கையளித்திருந்ததாய் இருந்தது - இருதயமானது: "என் சித்தமல்ல, உம் சித்தமே ஆகக்கடவது" என்றது. சுயத்தைப் பலிச்செலுத்துவதின் நிபந்தனைகளுக்கு இணங்குபவர்கள் அனைவரும் பூரண அன்பு எனும் இலக்கினை அடைந்தவர்களாய் இருப்பார்கள். ஆம், உயிர்த்தெழுதலின் போது நாம் அடையப்போகும் இன்னொரு வகையான பூரணமும் இருக்கின்றதுதான். ஆனால் மரணபரியந்தமான உண்மையின் வாயிலாக தேவ வார்த்தைகளைக் கைக்கொள்பவர்கள் மாத்திரமே பரிசை அடைந்து, திவ்விய சுபாவத்துக்குப் பங்குகொள்பவர்கள் ஆவார்கள்.

கீழ்ப்படிதல் என்பதே பரீட்சையாய் இருக்கின்றது. எந்தளவுக்குக் கர்த்தருடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவோமோ, அவ்வளவாய் தேவ அன்பானது நம்மில் பூரணப்படுகின்றதாய் இருக்கும்; ஏனெனில் நாம் கிறிஸ்துவினுடைய மனதை, பரிசுத்த ஆவியை, தேவ ஆவியைப் பெற்றிருப்போமானால், இது நம்மால் முடிந்தமட்டும் தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி விரும்பவும், செய்யவும் நம்மை நடத்திடும். மேலும் "நம்மால் முடிந்தமட்டும்" என்பது வருடா வருடம் தொடர்ந்து பெருகிக்கொண்டே இருக்க வேண்டும்.

---

R4479 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# பல்வேறு அளவுகளில் அன்பு

"மரணத்துக்கு ஏதுவான பாவம் உண்டு" என்று சமீபத்தில் வெளிவந்த இந்த வெளியீட்டினுடைய கட்டுரையானது, நம்முடைய வாசகர்கள் அநேகரில் மிகவும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகின்றது. இதில் நாங்கள் மகிழ்ச்சியடைந்தோம்; "முன்னெச்சரிக்கப்படுவது என்பது முன்னேற்பாடாக இருத்தலாகும்." அந்தக் கட்டுரையின் மையக்கருத்து என்னவெனில், மாபெரும் நியாயாதிபதியினால் இரண்டாம் மரணத்திற்கு இறுதியில் தீர்க்கப்பட்டுப் போகிறவர்களின்

தொகையைக்குறித்து நாங்கள் கடந்த காலங்களில் குறைவாய் மதிப்பீடு செய்திருந்தோம் என்பதேயாகும். முதலாவதாகத் தேவனுக்கொத்த குணலட்சண சாயலை அடையாதது வரையிலும், யாரும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது மற்றும் நித்திய ஜீவனாகிய அவரது ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது என்பதான உண்மையினை அக்கட்டுரையானது கவனத்திற்குள் கொண்டுவந்ததாய் இருந்தது. "தேவன் அன்பாகவே" இருக்கின்றபடியால், இதுவே பூரண ஜீவன் நிலைமையுள்ள பரலோக தளத்திலோ அல்லது பூரண ஜீவன் நிலைமையுள்ள பூலோக தளத்திலோ தேவனுடைய பிள்ளைகளென அவர் அங்கீகரித்திடும் யாவருக்குமான தரநிலையாக/நியமமாக இருக்கின்றது. "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப்பலத்தோடும், உன் முழுச்சிந்தையோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக" எனும் திவ்விய பிரமாணமானது முழுமையாய் நிறைவேற்றப்பட வேண்டும் (லூக்கா 10:27). இந்தச் சுவிசேஷயுகத்தினுடைய சபையானவர்கள், தங்கள் மனங்களின், தங்கள் இருதயங்களின் ஆவியில் இந்த மகிமையான தரநிலையினை/அளவுகோலினை எட்டியாக வேண்டும்; இவர்களது மாம்சத்தின் அபூரணங்களானது, கிறிஸ்துவிலுள்ள இவர்களது விசுவாசத்தின் வாயிலாகத் தேவ கிருபையினால் மூடப்படுகின்றது. உலகமானது ஆயிர வருட யுகத்தின்போது அந்தப் பூரண பிரமாணத்தின் நியமத்தை நிஜமாகவே அடைந்தாக வேண்டும். இதற்கும் மேலாக, அதாவது தரநிலையானது அல்லது இலக்கானது அடையப்பெற்ற பிற்பாடு, இந்த நியமத்திற்கு இசைவான குணலட்சணமானது உறுதியடைந்திட வேண்டும் என்று கர்த்தர் எதிர்ப்பார்க்கின்றார். இது நிறைவேற்றப்படத்தக்கதாகச் சோதனைகள், பரீட்சைகள், இன்னல்கள் அனுமதிக்கப்படுகின்றது மற்றும் இந்தச் சோதனைகள் முதலானவைகள் இந்த இலக்கானது அடையப்பெற்ற பிற்பாடு விசேஷமாய்க் கடுமையானதாகவும், நெருக்கும் விதமாகவும் காணப்படும். "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரை உங்கள் முழு இருதயத்தோடு அன்புகூருகின்றீர்களா அல்லது இல்லையா என்று உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைச் சோதித்து அறிவார்."

இக்கருத்துகள் நியாயமானவை, வேதவாக்கியங்களின் அடிப்படையானவை மற்றும் காரணக்காரியத்திற்கு உட்பட்டவை என்று நம் வாசகர்கள் அடையாளம் கண்டுகொள்வார்கள். ஆகையால் குணலட்சணத்தினுடைய இந்தத் தரநிலையை/ அளவுகோலை அடைந்திடாத யாராலும், நமது கர்த்தராம் இயேசு கிறிஸ்துவின் வாயிலான நித்திய ஜீவன் எனும் தேவனுடைய ஈவை பெற்றுக்கொள்ள முடியாது. ஜீவனா அல்லது நித்திய மரணமா எனும் இப்பரீட்சையானது இப்பொழுது பொதுவான மனுக்குலத்தின் உலகத்தார் மீது காணப்படாமல், மாறாக இப்பொழுது சபை மீது மாத்திரமே காணப்படுகின்றது. இப்பரீட்சையானது பெயர்ச்சபை மீது காணப்படாமல், மாறாக தங்களை அர்ப்பணம் பண்ணி, பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளவர்களாகிய அந்த விசுவாசிகள் மீது மாத்திரமே காணப்படுகின்றது. ஒருவேளை இவர்கள் வீழ்ந்துபோவார்களானால், "பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்கதாக வேறொரு பலி இனி இல்லை" என்று அப்போஸ்தலன் தெரிவித்துள்ளார். நம்முடைய சகோதர சகோதரிகளுடைய இருதயங்களை நியாயந்தீர்ப்பது என்பது நமக்கடுத்த காரியமல்ல என்பதில் நாம் மகிழ்ச்சியடைவோமாக. நமக்குப் புலப்படுகின்றதான சகோதர சகோதரிகளுடைய குறைகள் மற்றும் அவர்களுக்குப் புலப்படுகின்றதான நம்முடைய குறைகள் அநேகவற்றை மன்னித்துவிடத்தக்கதாக மாபெரும் நியாயாதிபதி காரியங்களைக் காண்பார் என்று நம்பிக்கைக்கொள்வதிலும், அனைவருக்கும் நலமாய்க் காரியங்கள் முடியும் என்று வாழ்த்திச் சொல்வதிலும் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். கர்த்தர் இருதயத்தை நியாயந்தீர்ப்பார் என்றும், வெளிதோற்றத்தை வைத்து நியாயந்தீர்க்கமாட்டார் என்றும் வேதவாக்கியங்களானது தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. ஆகையால் சகோதர சகோதரிகளாய்

இருப்பவர்களிடத்தில், தீமையின் கனிகளை, அதாவது கர்த்தருடைய ஆவிக்கும், வார்த்தைக்கும் நிஜமாகவே எதிரானதாக உள்ள நடத்தை மற்றும் ஆவி எனும் கனிகளை நாம் பார்த்தால் ஒழிய, மற்றப்படி அனைத்தும் அநுகூலமாகவே இருக்கும் என்று எண்ணி, எதைக்குறித்தும் சந்தேகிக்காமல் நம்பிக்கைக்கொண்டிருப்போமாக. தீமையின் கனிகளைக் காணும்போதுகூட நாம் அவர்களுக்கு எதிராக இழிவாய்க் குற்றஞ்சாட்டாமல், அவர்களைக் கர்த்தருடைய கரங்களில் விட்டுவிடுவோமாக.

நாம் மிகவும் பெருந்தன்மையான எண்ணங்கள் கொண்டிருந்தபோதிலும், கர்த்தருடைய அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களெனத் தங்களைக்குறித்து அறிக்கைப் பண்ணிக்கொள்பவர்கள் மத்தியில் அநேகர் தேவன் மற்றும் தங்கள் சக சிருஷ்டிகள் மீதுள்ள பூரண அன்பின் இலக்கில் நிற்பதற்கான பலமான சான்றுகளைக் கொடுக்கவில்லை எனும் உண்மைக்கு நாம் குருடர்களாய் இருக்கவும் முடியாது. இத்தகையவர்களுக்காக நாம் அச்சம் கொள்ள வேண்டும் என்றும், நாம் நம்மைக்குறித்தும் அச்சம் கொள்ள வேண்டும் என்றும் அப்போஸ்தலன் சுட்டிக்காண்பிக்கின்றார். "ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்" (எபிரெயர் 4:1).

## நட்சத்திரத்திற்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது

இன்னொரு கேள்வி எழும்புகின்றது: எந்த ஒரு தளத்திலும் நித்திய ஜீவனை அடைவதற்கு அனைவரும் பூரண அன்பு எனும் தரநிலையை அடைய வேண்டும் என்பது தெளிவாய்த் தெரிகின்றபடியால், "மகிமையில் நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கும்" என்பதுபோல, சபையினுடைய உயிர்த்தெழுதலிலும் இருக்கும் என்று அப்போஸ்தலனால் கூறப்பட்டிருக்கின்றபடியால், எந்தப் பரீட்சையின் அடிப்படையில் வெவ்வேறு மகிமைகள் அருளப்படும்?

நித்திய ஜீவனுக்குள் அனுமதிக்கப்படும் மிகச் சிறியவர்கள்கூட பூரண அன்பு எனும் இலக்கினை அடைய வேண்டும் என்பதினால், இவர்கள் பூரண அன்பு எனும் அளவுகோலை அடைந்த பிற்பாடு, இவர்களுடைய வெவ்வேறு அளவிலுள்ள அன்புடன்கூடிய பக்திவைராக்கியத்தின் அடிப்படையிலேயே, இந்த வெவ்வேறு அளவிலான பலன்கள் இவர்களுக்கு அருளப்படும் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். உதாரணத்திற்குப் பரிசுத்த பவுல் அடிகளார் பரிசுத்த ஆவியினுடைய கனிகள் மற்றும் கிருபைகளை அடைவதற்கு மாத்திரமாக ஆவலாய் இருக்கவில்லை; கிறிஸ்துவோடுகூடப் பாடுபட மாத்திரம் அவர் விருப்பம் உள்ளவராய் இருக்கவில்லை; இதையும் தாண்டி, அவரது பக்திவைராக்கியமானது அவரை வழிநடத்தினதாய் இருந்தது - அது உபத்திரவங்களில் அவரை மேன்மைப் பாராட்டவும் செய்தது; அது தன் கர்த்தருடைய நோக்கங்களுக்காகப் பாடுபடுவதற்குப் பாத்திரமானவராகக் கருதப்பட்டதின் நிமித்தம் அவரைக் களிகூரச் செய்தது; அது சகோதரருக்காய்த் தன் ஜீவனைக் கொடுப்பதில் அவரைக் களிகூரப் பண்ணினது. கிறிஸ்துவின் பாடுகளில் ஐக்கியம் கொள்வதற்கும், அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுவதற்கும் அப்போஸ்தலன் மகிழ்ச்சிக்கொண்டது மாத்திரமல்லாமல், தன் பாகத்திற்கும் அதிகமாய், தன் பங்கிற்கும் அதிகமாய்ப் பாடுபடுவதற்குக் கிடைக்குமானால், அதிலும் களிகூருமளவுக்கு மிக அதிகமான அளவில் பக்திவைராக்கியம் கொண்டவராய் இருந்தார். ஊழியம் புரிவதற்கான வாய்ப்புகளுக்காய் அவர் விழிப்பாய் இருந்தார். மற்றவர்களுக்கு அவ்வாய்ப்புகள் கிடைத்தால், அதிலும் சந்தோஷம் கொண்டார். மற்றவர்களுடைய அன்பையும், பக்திவைராக்கியத்தையும் அனல்மூட்ட அவருக்கு வாய்ப்புக் கிடைத்ததானால், அதையும் நன்றாய்ச் செய்தார். ஒருவேளை தன்னால் செய்யப்பட

முடிகிற ஏதேனும் சில வேலையானது, செய்யப்படாமல் இருப்பதைக் காண்பாரானால், அதைச் செய்வதில் அவர் பிரியமாய் இருந்தார். நமது கர்த்தராம் இயேசுவைப் பின்பற்றுவதில் தன்னை முன்மாதிரியாய் எடுத்துக்கொள்ளும்படி அப்போஸ்தலன் சரியாகவே சொல்லியுள்ளார். இவர் பரலோக இராஜ்யத்தில் உள்ள பிரகாசமான நட்சத்திரங்களில் ஒருவராக இருப்பார் என்றும், இவருடைய முன்மாதிரியைப் பின்பற்றுவதில் நாமும் நமது கர்த்தருக்கு அதிகமதிகமாய்ப் பிரியத்திற்குரியவர்கள் ஆவோம் என்றும் உறுதிக்கொள்ளலாம் - இதைக் காற்றில் கடுமையாய்ச் சிலம்பம் பண்ணுவதன் மூலம் அல்ல, மாறாக நாம் கர்த்தருக்கும், அவரது சகோதரருக்கும், அவரது சத்தியத்திற்கும் உண்மையாய் இருக்கின்றோம் என்பதை நிரூபிக்கிறதும், அவர் பார்வைக்குப் பிரியமாய் இருக்கிறதுமானவைகள் என்று கர்த்தரால் சுட்டிக் காட்டப்படுகிற காரியங்களை ஞானத்தோடும், விவேகத்தோடும், உண்மையோடும் நிறைவேற்றுவதன் மூலம் செய்வோமாக.

---

R4153

# இலக்கில் உறுதியாய் நிலைநிற்றல்

மகிமையின் சபையினுடைய நிலைமைக்குப் போவதற்கென்று, திவ்விய பள்ளிக்கூடத்தில் ஓர் இலக்கு அல்லது தரநிலை/அளவுகோல் காணப்படுகின்றது என்பதில் ஐயமில்லை. நாம் முதலாவதாக நம்முடைய சித்தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தபோது, நம்முடைய அர்ப்பணமானது, கர்த்தருடைய சித்தத்திற்கு நம்முடைய சித்தங்களை முழுமையாய் அல்லது பூரணமாய்ப் பலிசெலுத்துவதாகக் காணப்படுவது அவசியமாகும்; ஆனால் நம்முடைய சித்தங்களானது அப்போது பூரண அன்பின் இலக்கில் அல்லது தரநிலையில் காணப்படவில்லை. ஒருவேளை நாம் அர்ப்பணம் பண்ணின மாத்திரத்திலேயே மரித்துவிட்டோம் என்று கற்பனை பண்ணிக்கொள்ளலாம் . . . இப்படி ஒருவேளை மரிப்போமானால், நாம் "இராஜ்யத்திற்குத் தகுதியானவர்கள்" என்று நம்மைக்குறித்து எண்ணிக்கொள்ள முடியாது; ஏனெனில் வெகுமதிகளானது அர்ப்பணம் பண்ணினவர்களுக்கென்று வாக்களிக்கப்படாமல், மாறாக "ஜெயங்கொள்பவர்களுக்கே" வாக்களிக்கப்பட்டுள்ளதாய் இருக்கின்றது. ஆகையால் ஆண்டவரின் விஷயத்தில் - நம்முடைய முன்னோடியின் விஷயத்தில், அவர் பாடுபட்டு, இப்படியாக மகிமைக்குள் பிரவேசிப்பதற்குப் பாத்திரமானவராகத் தம்மை நிரூபிப்பது அவசியமாய்க் காணப்பட்டது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், சிறுபிள்ளையானவன், பள்ளிக்குச் செல்லும் அன்றைய தினமே தேர்ச்சி/பட்டம் (graduation) பெற்றுக்கொள்ளாததுபோல, கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பிரவேசித்துள்ள நம் விஷயத்திலும் இப்படியேயாகும்.

பாடங்களைக் கற்றுக்கொள்வதிலுள்ள வேகமானது, நம்முடைய பக்திவைராக்கியம் மற்றும் நம்முடைய மனப்போக்கினைப் பெரிதும் சார்ந்துள்ளதாய் இருக்கின்றது. சிலர் ஒரு வருஷத்திலேயே அதிகம் வளர்ச்சிக் காண்பிக்கின்றனர்; சிலர் இருபது வருஷங்கள் எடுத்துக்கொள்கின்றனர்; மற்றும் அநேகர் ஒருபோதும் தேர்ச்சியே அடைகிறதில்லை - அதாவது தேவன் எதிர்ப்பார்க்கின்றதான பூரண அன்பின் இலக்கை அல்லது தரநிலையை ஒருபோதும் எட்டுகிறதில்லை. "அன்பு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாய் இருக்கின்றது" (உரோமர் 13:10); "கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே" (1 தீமோத்தேயு 1:5); "ஆகையால், நம்மில் (பூரண அன்பின் இலக்கில்) தேறினவர்கள் யாவரும் இந்தச்

சிந்தையாயிருக்கக்கடவோம்" (பிலிப்பியர் 3:15-17) என்று தேவ வசனமானது நமக்குத் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது.

"இவ்விதமாய்க் கிறிஸ்துவைக்குறித்துக் கற்றுக்கொண்டவர்களுக்கு" அவர் (1) தேவனுக்கான பூரண அன்பினுடைய அர்த்தத்தினைக் கற்றுக்கொடுத்துள்ளார் மற்றும் இந்த அன்பானது அவர்கள் தேவனுக்கான ஊழியத்தில் எதையேனும் செய்வதற்கும், செய்யத் துணிவதற்கும் அவர்களைத் தூண்டுகிறதாய் இருக்கும்; (2) சகோதரருக்கான பூரண அன்பினுடைய அர்த்தத்தினைக் கற்றுக்கொடுத்துள்ளார் மற்றும் இந்த அன்பானது சகோதரருக்கான ஊழியத்தில் ஜீவனைக் கையளிப்பதற்கு அவர்களைத் தூண்டுகிறதாய் இருக்கும்; (3) நம்மைப் பகைப்பவர்களுக்காகவும், நம்மை இழிவாய்ப் பேசுபவர்களுக்காகவும், நமக்கு எதிராய்ப் பலவிதமான தீமையான வார்த்தைகளைப் பேசுபவர்களுக்காகவும் நன்மை செய்வதற்கு நம்மைத் தூண்டுகின்றதான - உலகத்திற்கான, ஆம் சத்துருக்களுக்கான பூரண அன்பினுடைய அர்த்தத்தினை அவர் கற்றுக்கொடுத்துள்ளார்.

ஆனால் அந்தோ பரிதாபம்! அர்ப்பணிக்கப்பட்டவர்களில் அநேகர் இந்தத் தரநிலையினை அல்லது இலக்கினை அடைந்துவிட்டார்கள் என்று எண்ணிக்கொள்ள முடியாது; ஆகையால் சிலரே "இராஜ்யத்திற்குத் தகுதியானவர்களெனத்" தேர்ச்சியடைந்திருப்பார்கள் என்று நாம் எதிர்ப்பார்க்க முடியும்; ஆகையாலே நிர்ணயிக்கப்பட்ட தரநிலையை, இலக்கை அடைபவர்களாகிய ஜெயங்கொள்ளும் சிறுமந்தையினரோடு ஒப்பிட்டுப்பார்க்கையில், மீதியானவர்கள் - அதாவது தேர்ச்சியடையாதவர்கள் "திரள்கூட்டத்தினராய்" இருப்பார்கள் என்று வேதவாக்கியம் தெரிவிக்கின்றதாய் இருக்கின்றது. அன்பின் இந்த இலக்கானது அல்லது தரநிலையானது, மாம்சத்தில் இல்லாமல், மனதில் அல்லது இருதயத்தில் அடைய வேண்டிய ஒன்றாகும் என்பதை நினைவில் கொண்டிருப்பது நலமாயிருக்கும். அப்போஸ்தலன் கூறுவதுபோன்று "நாம் செய்ய விரும்புபவைகளை நாம் செய்ய முடியாதவர்களாய் இருக்கின்றோம்." மாம்சத்தின் பெலவீனங்களானது நம்மை இமைப்பொழுது இடறச்செய்து, அன்பற்ற வார்த்தையைக் கூறவோ அல்லது அன்பற்ற கிரியைச் செய்யவோ சிலசமயங்கள் வழிநடத்திடலாம்; ஒருவேளை அதற்காக நாம் மனம் வருந்துவோமானால், அது நமக்கு எதிரானதாகக் கருதவும்படாது மற்றும் நம்மை இலக்கினின்றும், இலக்கானது அடையாளப்படுத்துகின்ற நமது கர்த்தருடைய அங்கீகரிப்பினின்றும் தள்ளியும் விடாது.

## ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு

"ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" எனும் வார்த்தைகளானது விசேஷமாகப் பூரண அன்பு எனும் தரநிலையை அல்லது இலக்கை அடைந்தவர்களையே குறிப்பிடுகின்றதே ஒழிய, மாறாக அர்ப்பணிப்பு எனும் முதலாம் படியை எடுத்துவைத்து, கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பிரவேசித்தவர்களாய் மாத்திரம் இருப்பவர்களைக் குறித்துக் குறிப்பிடுகிறதில்லை என்பதாகத் தெரிகின்றது. "உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" எனும் வார்த்தைகளானது - முந்தின கால பிரயாசத்தையும், அடைந்துள்ள ஏதோ ஒரு நிலைமையையும் குறிக்கின்றதாய் இருக்கின்றது என்றும், அடைந்துள்ள அந்நிலைமையானது கிரீடத்திற்கான உரிமை சம்பந்தப்பட்டுள்ள ஏதோ ஒன்று என்றும், அடையப்பட்டுள்ள அந்நிலைமையானது இறுதியில் கிரீடம் அடையப்பட வேண்டுமெனில் தக்கவைத்துக்கொள்ளப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கின்றது. உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிருத்தல் என்பது, கடுமையான போராட்டத்தின் மூலமே ஆகும் என்றும் தெளிவாய்ச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது.

இக்காரியங்களானது, அர்ப்பணம் பண்ணினால் மாத்திரம் போதும் என்றோ அல்லது பூரண அன்பு என்னும் தரநிலையை, இலக்கை அடைவது என்பது போராட்டத்தின் முடிவாய் இருக்கும் என்றோ தவறாய்

எண்ணிக்கொண்டிருப்பவர்களுக்குப் புதியதும், அதிர்ச்சியளிக்கின்றதுமான கருத்தாய்த் தோன்றும். கடுமையான போராட்டங்கள், பரீட்சைகள், சோதனைகளானது, அந்த இலக்கில் காணப்படுபவர்களைத் தாக்குகின்றதாய் இருக்கும் மற்றும் நம்முடைய ஆண்டவருடைய வாக்குத்தத்தத்திற்கு இசைவாக "நம்முடைய திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்படுகிறதில்லை." இலக்கில் நிற்கும் வீரர்கள் அதிகமாய்ச் சகிக்க வேண்டும் மற்றும் அவர்கள் மிகக் கடுமையாய்ச் சோதிக்கப்படுவார்கள். "விழித்திருங்கள், விசுவாசத்திலே நிலைத்திருங்கள், புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்" (1 கொரிந்தியர் 16:13) எனும் இவர்களுக்கான புத்திமதியைக் கவனியுங்கள். "கிறிஸ்துவுக்குள்ளான குழந்தைகள்" போன்றல்ல, "சிறுபிள்ளைகள்" போன்றல்ல, மாறாக கர்த்தரில் பலம்கொண்டவர்களாகவும், தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக்கொண்டுள்ளவர்களாகவும், புருஷர்களாகவும் இருக்கும் இவர்களுக்கே இந்த விசேஷித்த பரீட்சைகள் உரியதாகும். "சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும்!" எனும் வார்த்தைகளை மீண்டுமாய்ச் செவிகொடுத்துக் கேளுங்கள். இந்த வார்த்தைகளானது, பள்ளிக்கூடத்தில் பிரவேசித்துள்ள அல்லது ஓட்டத்தில் பிரவேசித்துள்ள ஒருவனுக்குப் பொருந்தாது; இவ்வார்த்தைகளானது பூரண அன்பின் தரநிலையை அடைந்துள்ளவர்களுக்கே மிகவும் பொருத்தமானதாகும். "சகலத்தையும் செய்து முடித்தவர்களே," குணலட்சணத்தினுடைய இலக்கினை அடைந்து, "சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக் கொண்டவர்களே" . . . "உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" என்றும், "நில்லுங்கள்" என்றும், "நல்லப் போராட்டம் போராடுங்கள்" என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர், அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## யார் நிலைநிற்கக்கூடும்?

இந்த அடிப்படைச் சத்தியங்களானது, இந்தச் சுவிசேஷயுகம் முழுவதும் உள்ள கர்த்தருடைய ஜனங்களுக்கு உண்மையானவைகளாகவும், அவர்களுக்குப் பொருந்துகிறவைகளாகவும் காணப்படுகின்றது; ஆகையாலே வழி நெருக்கமானதாக உள்ளது மற்றும் அதைக் கண்டுபிடித்து, அதில் நடந்தவர்கள் சொற்பமானவர்களாக - சிறுமந்தையினராகக் காணப்படுகின்றனர். ஆனால் முன்பு ஒருபோதும் இல்லாத அளவுக்கு இப்பொழுது, இந்த எச்சரிப்பானது - அநேகமாகக் கடந்த காலங்களைவிட, இப்பொழுதுள்ள கர்த்தருடைய ஜனங்களில் அநேகருக்குப் பொருந்துகின்றதாய் இருக்கின்றது; ஏனெனில் முதிர்ந்த நிலையும், கூட்டிச்சேர்க்கப்படுகிற காரியமும் பிரதானமாய்க் காணப்படுகின்றதான "அறுவடையின்" காலத்தில் நாம் இருக்கின்றோம். இந்தக் காரணத்தினாலேயே சந்தேகத்திற்கிடமின்றி அநேக வேதவாக்கியங்களானது நாம் வாழும் காலப்பகுதியினை இந்த எச்சரிப்புகளுடன் சம்பந்தப்படுத்துகின்றது. உதாரணத்திற்கு, "ஆகையால் தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்" (எபேசியர் 6:13) என்று நாம் வாசிக்கின்றோம்.

நமக்கு முன்பு காணப்படுகின்றதான காலப்பகுதிகளில், சில வருடங்களுக்குள்ளாக . . . நமது அன்பிற்கான கடுமையான பரீட்சைகளும், மிகவும் நுணுக்கமான பரீட்சைகளும் கடந்துவரும்; அவை (1) தேவனுடைய சத்தியத்திற்காகவும், அவரது நாமத்திற்குக் கனம் சேர்ப்பதற்காகவும் உள்ள நம்முடைய அன்பில் வெளிப்படும் தேவன் மீதுள்ள நம் அன்பிற்கான பரீட்சைகள்; (2) கர்த்தருடைய சகோதரர்கள் மீதுள்ள நம்முடைய அன்பிற்கான பரீட்சைகள்; (3) நம்முடைய சத்துருக்கள் மீதுள்ள நம்முடைய அன்பிற்கான பரீட்சைகள். (நாம் அதிகம் எதிர்ப்பார்ப்புகள் வைக்கின்றதான) சகோதரர்கள் எப்போதெல்லாம் நம் சத்துருக்கள் ஆகுகின்றனரோ, அப்போதெல்லாம் நம்முடைய அன்பிற்கான

பரீட்சை கடுமையாய்க் காணப்படும். இப்படியான கண்ணோட்டங்களின்படி பார்க்கையில், "நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்?" சூழ்நிலையினுடைய விசேஷத்தை நாம் காண்கையில், நாம் எத்தனை "ஜாக்கிரதையுள்ளவர்களாக" இருக்க வேண்டும்! நம் ஒவ்வொரு கிரியையையும், வார்த்தையையும், சிந்தனையையும் எவ்வளவாய்ச் சோதித்தறிய வேண்டும்! மேலும் நம்முடைய சிந்தனைகளுக்கு நாம் விசேஷித்த கவனம் கொடுக்க வேண்டும்; ஏனெனில் இருதயத்தின் சிந்தனைகள் மற்றும் நோக்கங்களின் அடிப்படையிலேயே நாம் நியாயந்தீர்க்கப் படுகின்றோம். இதிலிருந்தே வார்த்தைகளும், கிரியைகளும் உண்டாகுகின்றது. எத்தனை தரம் பேராசையானது, அதன் இச்சகமான ஆசைகளை, கடமை எனும் போர்வையின் கீழ் மறைத்திருக்கின்றது! (பரிசுத்த உரோம சாம்ராஜ்யத்தின்) "பரிசுத்த போர்களினுடைய" எத்தனை நெருப்புகள் "கடமை" எனும் நெருப்புப் பந்தத்தினால் ஏற்றப்பட்டவையாய் இருந்திருக்கின்றன! நாம் கவனமாய் இருப்போமாக. மற்றவர்களையோ அல்லது நம்மையோ நாம் வஞ்சித்துக்கொள்ளலாம், ஆனால் தேவனை வஞ்சிக்க முடியாது; ஏனெனில், "மோசம் போகாதிருங்கள் தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; நீதியைச் செய்கிறவன் நீதியுள்ளவனாயிருக்கிறான் - மாறாக நீதிமான் என்று தன்னைக்குறித்து அறிக்கைப் பண்ணுகிறவனாய் மாத்திரம் இருப்பதில்லை" (1 யோவான் 3:7; கலாத்தியர் 6:7). சோதனையான சூழ்நிலைகளின்போது, யாருடைய கிரியைகளும், வார்த்தைகளும் அன்பானவையாகவும், சாந்தமானவையாகவும், இரக்கமானவையாகவும், பரிவுள்ளவையாகவும் இருக்கின்றதோ, அவன் அன்பின் தேவனால் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளான் என்பதற்கும், கிறிஸ்துவுக்கொத்த சாயலை அதிகம் வளர்த்துள்ளான் என்பதற்கும் சான்று பகருகின்றவனாய் இருப்பான்! "சிலுவையிலிருந்து இறங்கி வா!" என்று நமது கர்த்தர் வையப்பட்டபோது, தம் சத்துருக்களுக்காக அவர் கொண்டிருந்த அன்பையும், அவர்களிடத்தில் அவர் கொண்டிருந்த சகிப்பையும் கவனியுங்கள்! அவர் வையப்பட்டும், தூஷிக்கப்பட்டும் இருந்தபோது, அவர் பதிலுக்கு வையாமலும், தூஷிக்காமலும் இருந்ததைக் கவனியுங்கள்! துரோகியான யூதாசிற்கான அவரது கடிந்துகொள்ளுதலானது எவ்வளவு தயவோடு இருந்தது என்பதையும், பேதுரு அவரைச் சபித்து, மறுதலித்தபோது, அவர் எவ்வாறு கடிந்துகொள்ளுதலுக்கான சைகையை மாத்திரம் கொடுத்தார் என்பதையும் கவனியுங்கள்! அவர் விஷயத்தில் நிச்சயமாகவே அன்பானது சகல பாவங்களையும் மூடிப்போட்டிட ஆயத்தமாயிருந்தது. நாம் எளிதில் கோபம் கொள்ளாமலும், பகைமையின் ஆவியினால் ஆட்கொள்ளப்படாமலும் இருப்போமாக. நாம் தயவு மற்றும் மன்னிக்கும் ஆவியுடன், அப்போஸ்தலனோடுகூட: "இவைகள் எதுவும் என்னை - பூரண அன்பில் நான் நிற்பதிலிருந்து அசைத்துப்போடுவதில்லை" என்றும், அது பரீட்சிக்கப்படுகையில் அது நன்கு வேரூன்றி, உறுதியடைவதாக என்றும் சொல்லுவோமாக. மற்றவர்களுக்கு அருளப்பட்டுள்ளதான கனங்கள், சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் குறித்துப் பொறாமைகொள்ளும் ஆவிக்கு எதிராயும் நாம் நம்மைக் காத்துக்கொள்வோமாக. இவ்வாவிக்குப் பதிலாக, கர்த்தரில் களிகூரும் அனைவரோடும்கூட நம்மைக் களிகூரச் செய்திடும் மற்றும் துன்பத்தில் காணப்படும் யாவரோடும்கூட நம்மைத் துக்கப்படச் செய்திடும் அன்பின் ஆவியினை நாம் அதிகமதிகமாகப் பெற்றிருப்போமாக. ஒரு சகோதரனுடைய ஆசீர்வாதங்கள் தொடர்புடைய விஷயத்தில் பொறாமையின் உணர்வுகள் கொண்டிருப்பதோ அல்லது சகோதரனுடைய நலனில் அக்கறையற்ற உணர்வுகள் கொண்டிருப்பதோ - நாம் இலக்கினின்று சறுக்கியுள்ளோம் எனும் கடுமையான அபாயத்திற்கான அறிகுறியாகும். இது நம்மை விழித்தெழப்பண்ணி, மீண்டும் புத்துயிர் பெறுவதற்குப் பிரயாசம் எடுத்திட வழிநடத்திடும்.

# பாஸ்டர் ரசல் அவர்களின் பதில்கள்

**1. (Q455:2) இலக்கு அல்லது பந்தய சாலை - போராடுவதற்கு முன்னதாகவே முடித்தல்.**

கேள்வி (1908)-2- சபை போர்வீரர்களெனப் போராடத் துவங்குவதற்கு முன்னதாகவே தங்கள் ஓட்டத்தை நிறைவு செய்ய வேண்டும் என்று வேதவாக்கியங்கள் கூறுகின்றனவா அல்லது சந்தோஷத்தோடு முடிக்கத்தக்கதாக நாம் ஓட்டத்தை ஓடிக்கொண்டிருக்கையில், முடிவுவரை நாம் போராடிட வேண்டுமா?

பதில் - வெவ்வேறு கருத்துக்களை நம் மனங்களுக்கு முன்வைத்திடும் வெவ்வேறு வேதவாக்கியங்கள் காணப்படுகின்றன. இக்காரியத்திற்கு அநேகம் பக்கங்கள் இருக்கின்றன; எப்படி நாம் இங்கு இருக்கும் கட்டிடத்தை வெவ்வேறு கோணங்களில் படம் பிடிப்போமோ, அதுபோலவேயாகும். Nashville-இல் உள்ள அரங்கம் எப்படி இருக்கும் என்று நீங்கள் கேட்கலாம். இதோ அதை இங்கு நின்றும், இதோ அங்கு நின்றும் அதன் காட்சியினைப் படம் பிடிக்கலாம். அவைகள் வெவ்வேறு புகைப்படங்களாக இருப்பினும், அவை அனைத்துமே அந்த அரங்கத்தினுடைய படங்களாகவே இருக்கும். பின்னர் நீங்கள் கட்டிடத்திற்கு வெளியே போய் நின்று முன்பக்கத்தைப் படம் பிடிக்கலாம் மற்றும் பின்னர் அதன் பக்கங்களில் போய், பக்கவாட்டில் படம் பிடிக்கலாம் மற்றும் பின்புறம் போய், பின் புறத்தைப் படம் பிடிக்கலாம். இப்படியே கர்த்தரும், அப்போஸ்தலர்களும் நமக்குக் கொடுத்து இருக்கின்றனர் - தேவன் தம் பரிசுத்த ஆவியின் மூலம், இந்தப் பல்வேறு வழிகளின் வாயிலாகச் சத்தியத்தின் மற்றும் ஜீவியத்தினுடைய நமது அனுபவங்களின் காட்சிகளை/படங்களைப் பல்வேறு கண்ணோட்டங்களில் கொடுத்திருக்கின்றார். அவைகளில் ஒன்று நம்மை ஓட்டத்தில் ஓடுபவர்களெனச் சித்தரிக்கின்றது. நீங்கள் ஏதோ ஒன்றிற்காகவேதான் ஓடிட வேண்டும். நீங்கள் என்றென்றுமாய்த் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்து, பின்னர் ஓட்டத்தினுடைய இறுதி தருணத்தில் மரித்துப் போகிறதில்லை. சில இடங்களில் வேதவாக்கியங்களானது . . . நாம் தொடர்ந்து ஓடிட வேண்டும் என்றும், நம்முடைய கிறிஸ்தவ ஓட்டம் என்பது சில விஷயங்களில் ஓட்டப்பந்தயத்திற்கு ஒத்திருக்கிறது என்றும், அதில் சரியானவைகளைச் செய்திடுவதற்கான நம் பிரயாசத்தினை நாம் ஒருபோதும் நிறுத்திடக்கூடாது என்றும் முன்வைப்பது உண்மையாய் இருப்பினும், நாம் ஓர் இலக்கை நோக்கியே ஓடிட வேண்டும் எனும் மிகச் சரியான கருத்தை விவரிக்கும் மற்றுமொரு காட்சியும் உள்ளது. இதோ அங்கு இருக்கிற அந்த மேஜைதான் இலக்கு என்று வைத்துக்கொள்ளுங்கள். சரி, இலக்கு என்றால் என்ன? நாம் அடைய வேண்டும் எனும் விதத்தில் ஏன் அது இலக்காய் இருக்கின்றது? நான் அந்த இலக்கை நோக்கி ஓடுகின்றேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்;. நான் இங்கேயே, பாதித் தூரத்திலேயே நின்றுவிடுகின்றேன் என்று வைத்துக்கொள்ளுங்கள்; இந்தப் பாதித் தூரத்திற்குமேல் நான் வரவேயில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள்; அப்படியானால் நான் ஒருபோதும் இலக்கை அடையவில்லை என்பதாக இருக்கும். அநேகம் நல்ல ஜனங்கள் இலக்கை ஒருபோதுமே அடையவில்லை என்று நான் எண்ணுகின்றேன். இலக்கு என்பது எது என்று நாம் காண்பது முக்கியமாகும்; அப்போதுதான் நாம் ஞானமாய் ஓடுகிறவர்களாகவும், காற்றில் சிலம்பம் பண்ணுகிறவர்களாக மாத்திரம் காணப்படாதவர்களாகவும் இருக்க முடியும். உங்களால் எவ்வளவு பிரயாசம் எடுக்க முடியும் என்பதல்ல, மாறாக அந்தப் பிரயாசத்தை ஒரு நோக்கத்திற்காக வேண்டி நீங்கள் ஏறெடுக்க வேண்டும்; ஏதோ ஒன்று அடையப்பட வேண்டும்; ஏதோ ஒன்று பற்றிக்கொள்ளப்பட வேண்டும். குறிக்கோளின்றி ஓடுகிற நபர், ஏதோ ஒரு சாலையில் ஓடித்திரிகிறவராய் இருப்பார். "எங்கே போய்க்கொண்டிருக்கின்றாய்?" என்று அவனிடம் கேட்கப்பட்டால், "எனக்குத் தெரியாது" என்பது அவன் பதிலாயிருக்கும். அவனால் தொடர்ந்து

பலத்தோடு ஓடிக்கொண்டிருக்க முடியாது; ஆனால் ஒரு பாதையில் போக வேண்டும் என்று அவன் அறிவானானால், நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒரு குறிப்பிட்ட தொடங்குமிடத்திலிருந்து துவங்க வேண்டும் என்றும், ஓடுவதற்கு எத்தனை நிமிடங்கள் தேவையெனப் பார்க்க வேண்டும் என்றும் அவன் அறிவானானால், அப்போது அவன் தன் பார்வைக்கு முன் ஓர் இலக்கைப் பெற்றிருப்பான்; மனதிற்கு முன்பாக நோக்கம் ஒன்றினைப் பெற்றிருப்பான் மற்றும் இப்படி இருக்குமானால், அவனால் நன்கு ஓட முடியும். தேவன் நமக்கு முன்பு ஒரு குறிப்பிட்ட இலக்கை நிர்ணயித்திருக்கின்றார் மற்றும் அந்த இலக்கை நோக்கி நாம் ஓடிட வேண்டும். இலக்கை வந்து அடைந்துவிட்டோமெனில், நாம் என்ன செய்ய வேண்டும்? சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்க வேண்டும் - இலக்கில் நிற்க வேண்டும்; அதை விட்டு விலகி ஓடாதீர்கள். இலக்கிலேயே நிற்பது கடினமான காரியமா? ஆம்! நீங்கள் இலக்கை வந்தடைந்த பின்னர், அதினின்று உங்களை விலகச் செய்திடுவதற்கு அநேகமான பிரயாசங்கள் மேற்கொள்ளப்படும். இலக்கை அடைவதிலிருந்து உங்களைத் தடைப்பண்ணினதைக் காட்டிலும், இலக்கினின்று உங்களை விலகிபோகப் பண்ணுவதற்கே எதிராளியானவன் கடினமாய் முயற்சி செய்வான். நீங்கள் இலக்கை வந்து அடைந்த பின்னர், கடுமையான போராட்டமானது உங்கள் மீது கடந்துவரும். இலக்கை வந்து அடைவதற்கு முன்னதாக ஒரு குறிப்பிட்ட அளவிலான பாதுகாப்பு உங்களுக்குக் காணப்படும்; ஆனால் இலக்கை வந்தடைந்த பிற்பாடு, அங்குதானே நீங்கள் உங்களுக்கான கடுமையான பரீட்சைகளை அடைவீர்கள். "தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்பது இன்னொரு காட்சியாகும்/கோணமாகும். எங்கிருந்து சர்வாயுதவர்க்கம் கிடைக்கும்? தேவ வசனத்திலிருந்து ஆகும். நீங்கள் நிற்கத்தக்கதாக இந்த ஆயுதங்களை, தேவனுடைய சர்வாயுதவர்க்கங்களைத் தரித்துக்கொள்ளுங்கள். ஆயுதங்களைத் தரித்துக்கொண்டிருக்கையில், அதைத் தரித்துக்கொள்வதற்குப் போதுமான நேரம் கிடைப்பதற்கு முன்னதாகத் தாக்கப்பட்டுப் போகாதபடிக்கு, கர்ததர் ஒரு குறிப்பிட்ட அளவிலான கிருபை மற்றும் பாதுகாப்பைக் கொடுத்தருளுவார்; அதைத் தரித்துக்கொள்ளத்தக்கதாக நியாயமான காலப்பகுதியை அவர் தருகின்றார். திராணிக்கும் மேலாகத் தாக்கப்படுவதற்கு அவர் அனுமதிக்கிறதில்லை; ஆகையால் அதைத் தரித்துக்கொள்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் கிடைக்கப்பெறுகின்றது. ஆயுதவர்க்கங்களைத் தரித்தாயிற்று; அடுத்து என்ன? அடுத்து போர்ப்புரியுங்கள். நாம் ஓட வேண்டியதான இலக்கு என்ன என்று நீங்கள் கேட்கின்றீர்கள். என் அருமை நண்பர்களே அது என்னவெனில் . . . தேவன் அங்கீகரிக்கக்கூடிய குணலட்சணத்திற்கான ஒரு குறிப்பிட்ட இலக்கு இருக்கின்றது மற்றும் அதற்குக் குறைவான எதையும் அவர் அங்கீகரிக்கிறதில்லை மற்றும் நீங்கள் அந்தக் குணலட்சணத்தைப் பெற்றிருக்கவில்லையெனில், உங்களால் இராஜ்யத்தில் காணப்பட முடியாது. எவைகள் இருந்தாலும் பரவாயில்லை, தேவன் இராஜ்யத்திற்குள் ஏற்றுக்கொள்வார் என்ற காரியமே கிடையாது; அவர் ஒரு குறிப்பிட்ட தரநிலையை/அளவுகோலை நிர்ணயித்திருக்கின்றார் மற்றும் அந்தத் தரநிலையை அடைவதற்கு உங்களுக்கும், எனக்கும் அநுகூலம் பண்ணியிருக்கின்றார்; அவர் எல்லா உதவியும் பண்ணுவதாக வாக்களித்துள்ளார்; ஆனால் அந்தத் தரநிலையை அடையும் விஷயத்தில் நீங்களும், நானும் ஆர்வமும், பிரயாசமும், நாட்டமும், வெளிப்படுத்திட விரும்புகின்றார். நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள தரநிலை என்ன? அதில் எவ்வளவு குறைந்த பட்சம் செய்திடலாம் என்று கேட்கின்றீர்களா? இல்லை, இது கருத்தல்ல. நம்மால் முடிந்த அனைத்தையும் செய்திடுவதற்கும் மற்றும் அதிகமாய்ச் செய்திடுவதற்குமான வாஞ்சை நம்மிடம் இருக்க வேண்டும்; நாம் செய்து முடித்தவைகளில் ஒருபோதும் திருப்திக்கொள்ளக் கூடாது. ஒரு குறிப்பிட்ட தரநிலை இருப்பதையும், அதில் நீங்கள் குறைவுப்பட்டால் இராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது என்பதையும் நீங்கள் உடனே காணலாம்; ஏனெனில் தேவன் அதைக்குறித்துத் தீர்மானித்து வைத்திருக்கின்றார். உரோமருக்கு

எழுதின எட்டாம் அதிகாரத்தில் "தேவன் முன்குறித்துள்ளார்" என்னும் அப்போஸ்தலன் பவுலினுடைய உறுதியான வார்த்தைகள் உங்களுக்கு ஞாபகமிருக்கும் - "முன்குறித்திருக்கிறார்" என்பது பலமான வார்த்தையாகும். தேவன் எதை முன்குறித்தார்? சிறுமந்தையினராய் இருப்பவர்கள் யாவரும் தம்முடைய குமாரனுக்கொத்த சாயலில் காணப்பட வேண்டும் என்றும், அப்படித் தம் குமாரனுக்கொத்த சாயலில் இல்லாதவர்கள் இராஜ்யத்தில் காணப்பட முடியாது என்றும் முன்குறித்திருக்கிறார். தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலே, அந்த இலக்காய் இருக்கின்றது. தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலாய் இருக்கும் இலக்கை வந்தடையாததுவரை, நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்க முடியாது என்று தேவன் முன்தீர்மானித்துள்ளார்; மேலும் அந்த இலக்கை நீங்கள் வந்தடைந்து, அந்நிலைமையைத் தக்கவைத்துக்கொள்வீர்களானால், நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருப்பீர்கள். ஆகவே இலக்கு என்பது மிகவும் முக்கியமானதல்லவா? ஒரு காலத்தில் தெளிவற்ற நிலையில் வேதாகமத்தை வாசிப்பதினால், நாம் இலக்கையும் சரி, மற்றவைகளையும் சரி, பார்க்கவே இல்லை; கண்மூடிக்கொண்டு செயல்பட்டுக்கொண்டிருந்தோம். தேவன் என்ன சொல்லியிருக்கின்றார் என்பதை நாம் அறியாமல் இருந்தோம். தேவன் என்ன சொல்லியிருக்கின்றார் என்று நாம் போதுமான அளவுக்குக் கவனம் செலுத்தாமல் இருந்தோம். நாம் (கத்தோலிக்க வேத நூல்) கேட்டிகிஸங்களை (catechism) வாசித்திருந்தோம் மற்றும் அவைகளினால் குழம்பியிருந்தோம். தேவன் தம் வார்த்தைகளில் என்ன சொல்லியிருக்கின்றார் என்று காணும் ஒரு காலகட்டம் வந்தது மற்றும் தேவன் கிறிஸ்துவை மாதிரியாகவும், முன்மாதிரியாகவும் நமக்குக் கொடுத்திருக்கின்றார். நாம் அனைவரும் கிறிஸ்துவைப் போன்று காணப்பட வேண்டும் என்று நான் சொல்ல வருகின்றேனா என்று கேட்கின்றீர்களா? ஆம்! நாம் அனைவரும் கிறிஸ்துவுக்கு ஒத்திருக்க வேண்டும். ஆனால் கிறிஸ்து பூரணமானவராய் இருந்தார்; நாம் அனைவருமே பூரணர்களாக இருக்க வேண்டுமா என்று கேட்கின்றீர்களா? என் அருமை சகோதரனே மாம்சத்தின்படி கிறிஸ்துவைப் போன்று இருக்க வேண்டும் என்று நான் இக்கேள்வியில் சொல்லவில்லை; எந்த விதத்தில் கிறிஸ்துவைப் போன்று என்று நான் இதுவரையிலும் சொல்லவில்லை; அது பின்வரும் விதத்திலேயாகும்: நமது கர்த்தர் இயேசு பரிபூரணமாய்க் காணப்பட்டார் மற்றும் நீங்கள் அபூரணர்கள் மற்றும் நானும் அபூரணமானவன்; நம்மால் மாம்சத்தில் கிறிஸ்துவைப் போன்று ஒருபோதும் காணப்பட முடியாது; இப்படியான விதத்தில் கர்த்தர் நம்மைச் சோதிக்கிறதில்லை. அவர் பின்வருமாறு கூறுகின்றார்: "நீங்கள் மாம்சத்தில் இல்லை; மாறாக ஆவியில் காணப்படுகின்றீர்கள்; அப்படியானால் கிறிஸ்துவின் ஆவியானது உங்களில் வாசமாயிருக்கும்." அவர் உங்களை மாம்சத்தின்படியாக இல்லை, மாறாக ஆவியின்படியாகவே நியாயந்தீர்க்கின்றார். நம்முடைய மாம்சத்தின் காரியமென்ன? உங்கள் மாம்சமானது நீதிமானாக்கப்பட்டதாகக் கருதப்பட்டுள்ளது; கிறிஸ்துவின் புண்ணியமானது உங்களுக்கு மாம்சத்தின்படியாகச் சாற்றப்பட்டு, அந்தக் குறைகள், நிலைமைகள் அனைத்தையும் மூடுகின்றதாய் இருக்கின்றது; கிறிஸ்துவுக்கும் மற்றும் மாம்ச பூரண நிலைமைக்கும், மாம்சத்திலுள்ள உங்கள் அபூரண நிலைமைக்கும் இடையில், அவரது பலியின் புண்ணியமானது இந்தக் குறைவுகளை மூடத்தக்கதாக, உங்களுக்கும், எனக்கும் சாற்றப்பட்டுள்ளது. உங்கள் மாம்சமானது உண்மையில் அபூரணமாக இருக்க, உங்கள் மாம்சமானது பூரணப்படுத்தப்பட்டதாகக் கருதப்பட்டுள்ளதை உங்களால் காண முடியவில்லையா? நம்மை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்க முடிகிறவர்களாக நம்மை ஆக்குவதே, இப்போது நாம் தேவனால் பூரணர்களாகக் கருதப்படுவதற்கான நோக்கமாகும். கறைதிரை இல்லாததும், குறைவுகளற்றதுமான பலிகளை அல்லாமல், மற்றப்படி வேறெந்த பலிகளும் தேவனுடைய பலிபீடத்தில் வரக்கூடாது என்பதே தெய்வீகச் சித்தமாய் இருக்கின்றது. கறைதிரையற்றதும், குறைவற்றதுமான தேவாட்டுக்குட்டியாக நம் கர்த்தர் இயேசு காணப்பட்டார் மற்றும் அவர் அங்கீகரிக்கவும்பட்டார்.

உங்களுக்கும், எனக்கும் மாம்சத்தில் கறைதிரைகள் மற்றும் குறைவுகள் காணப்படுகின்றன மற்றும் இவற்றோடு நாம் பலிபீடத்தினிடத்திற்கு வரமுடியாது என்று கர்த்தர் சொல்கின்றார். நாம் என்ன செய்வது? நாம் அவைகளை ஒழிக்க வேண்டுமே. எப்படி? அவைகள் அனைத்தும் மூடப்பட வேண்டும். நமக்காக எது அவற்றை மூடிடும்? விசுவாசத்தின் வாயிலாய்க் கிறிஸ்துவினுடைய பலியின் புண்ணியமானது சாற்றப்படுகின்றது மற்றும் செயல்படுத்தப்படுகின்றது. இது அந்தக் குறைவுகள் அனைத்தையும் மூடிவிடும். இதனால்தான் நாம் தேவனுடைய பலிபீடத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றோமா என்று என்னிடம் கேட்கின்றீர்களா? அதுதான் முக்கிய கருத்து; என் அன்பு சகோதரர்களே இதைத்தான் அப்போஸ்தலன் பின்வருமாறு கூறுகின்றார்: "அப்படியிருக்க சகோதரரே, (அவர் உங்கள் பாவங்களை மன்னித்து, இந்த மூடலை உங்களுக்குக் கொடுத்துள்ளபடியால்) நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (உரோமர் 12:1). "பரிசுத்தமான" ஜீவபலியா என்று கேட்கின்றீர்களா?ஆம்! பரிசுத்தமான ஜீவிபலிதான். நம்மைப் பரிசுத்தமாக்கத்தக்கதாக நாம் என்ன செய்திருக்கின்றோம்? உங்களைப் பரிசுத்தமாக்கும் காரியத்தினைக் கிறிஸ்து செய்தார். "பரிசுத்தம்" எனும் வார்த்தையின் அர்த்தம் "முழுமை அல்லது நிறைவு ஆகும்". கிறிஸ்துவினால் தரிப்பிக்கப்படுகின்ற நீதியானது, நம்மைப் பாவத்திலிருந்து, குறைவுப்பட்ட நிலையிலிருந்து நம்மை முழுமையானவர்களாக, பூரணமானவர்களாகக் கருதப்படும் நிலைக்குக் கொண்டுவருகின்றது. ஆகவே அப்போஸ்தலன் இனிமேல் நீங்கள் மாம்சத்தின்படியானவர்கள் இல்லை, மாறாக நீங்கள் ஆவியின்படியானவர்களாக இருக்கின்றீர்கள் என்றும், மனித கண்ணோட்டத்தில் நீங்கள் இல்லை என்றும், கர்த்தருக்கான புத்தியுள்ள ஆராதனையென அந்த மனுஷீகத்தினை நீங்கள் பலிசெலுத்தியுள்ளீர்கள் என்றும்; இதுமுதற்கொண்டு பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்ட புதுச்சிருஷ்டிகளென நீங்கள் உங்களைக் கருதிக்கொள்ள வேண்டும் என்றும் கூறுகின்றார். இப்பொழுதோ கிறிஸ்து இயேசுவில் புதியதாய் ஜெநிப்பிக்கப்பட்டுள்ளதான புதுச்சிருஷ்டி, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினன், பழைய மனுஷனிடமிருந்து, முற்றிலும் வேறுபட்டவனாக இருக்கின்றான்; ஆகவே இந்தக் கண்ணோட்டத்திலிருந்து அப்போஸ்தலன் தன்னைக்குறித்து, "பழைய மனுஷனாகிய நான்" என்றும், "புதிய மனுஷனாகிய நான்" என்றும் பேச முடிகிறவராய் இருக்கின்றார். அவர் "நான்" என்று சொல்லுகின்றார், எனினும் "நானல்ல" என்றும் கூறுகின்றார். இங்குத்தான் பழையதும், புதியதும் காணப்படுகின்றது. இங்குத்தான் பழைய பவுலும், புதிய பவுலும் காணப்படுகின்றனர். மாம்சத்தின்படியான பழைய பவுல் மரித்துள்ளதாகக் கருதப்பட்டுள்ளார், ஆவியின்படியான புதிய பவுல் உயிரோடிருப்பதாகக் கருதப்படுகின்றார். ஆகவே நாம் நம்முடைய பலிகளை ஏறெடுக்க முடிகிறதும் மற்றும் புதுச்சிருஷ்டிகளென நாம் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கவர்களாய் இருக்கிறதும் மற்றும் நல்ல போராட்டம் போராடுகிறதும் மற்றும் ஜெயங்கொள்வதும் மற்றும் வழி முழுவதிலும் கர்த்தரினால் நாம் உதவப்படுவதுமே நம்முடைய மகிமையான நிலைமையாய் இருக்கின்றது. ஆனால் புதுச்சிருஷ்டிகளென நாம் இந்த நிலைக்கு வர வேண்டும்; நாம் நின்றுவிடக்கூடாது; தேவனுடைய பிரியமான குமாரனுக்கொத்த சாயலாகிய இலக்கு என்ற ஒன்று இருக்கின்றதெனத் தேவன் புதுச்சிருஷ்டிகளாகிய நம்மிடத்தில் கூறுகின்றார். நீங்கள் இலக்கினை வந்து அடைந்துவிட்டீர்களா? "என் மரணத்தருவாயின் போதே இலக்கை அடைவேன்; இதற்கு முன்னதாக அடைய நான் எதிர்ப்பார்க்கிறதில்லை" என்று ஒருவர் சொல்லலாம். "மரணமடைவதற்கு முந்தைய நாட்களைவிட, மரணத்தருவாயின்போதே நீங்கள் இலக்கை நெருங்கியிருப்பீர்கள் என்று எதன் அடிப்படையில் நீங்கள் எண்ணுகின்றீர்கள்? என்று கேள்வி கேட்கப்பட்டால் . . . பதில் இருப்பதில்லை. இந்த

இலக்கு என்பது, குணலட்சணத்திற்கான இலக்காய் இருக்கின்றது என்றும், குணலட்சணத்தின் விஷயத்தில் நீங்களும் நானும் அந்த இலக்கை வந்தடைய வேண்டும் என்றும் நான் கூறுகின்றேன். என்ன சொல்லுகின்றீர்கள்? என்று நீங்கள் கேட்கலாம். இதோ இவ்விதத்திலாகும்: கிறிஸ்துவின் குணலட்சணம் எது? எவ்விதத்தில் அவர் பலி ஒன்றை ஏறெடுத்தார்? பின்வரும் விதத்திலாகும்: "அப்பொழுது நான்: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன், புஸ்தகச்சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்" (எபிரெயர் 10:7). இதுவே அவர் நிலைப்பாடாகும் - பிதாவின் சித்தத்திற்கு முழுமையான அர்ப்பணிப்பாகும்; இதற்குக் குறைவானதல்ல. நீங்களும், நானும் இந்நிலைக்கு வர வேண்டுமா என்று கேட்கின்றீர்களா? ஆம்! என்று பதிலளிக்கின்றேன். சரி, பிதாவின் சித்தம் என்ன? நாம் இருதயத்தின்படி ஒத்திருக்க வேண்டும் என்பதும், கண்டிப்பாக மாம்சத்தின்படி ஒத்திருக்கவேண்டும் என்று இல்லை என்றாலும், நம்மால் முடிந்தமட்டும் மாம்சத்தின்படி ஒத்திருக்க முயற்சிக்க வேண்டும் என்பதும், இருதயத்தில் அவர் சித்தத்தைக் கைக்கொண்டிட வேண்டும் என்பதும் பிதாவின் சித்தமாகும்; உங்கள் தேவனாகிய கர்த்தரை உங்கள் முழு இருதயத்தோடும், முழு மனதோடும், முழு ஆன்மாவோடும், முழுப்பலத்தோடும் நீங்கள் அன்புகூர வேண்டும் என்பது அவர் சித்தமாய் இருக்கின்றது. இந்நிலைக்கு நாம் வரமுடியுமா என்று கேட்கின்றீர்களா? முடியும் என்று நான் எண்ணுகின்றேன். கர்த்தரும் இப்படியாகவே எண்ணுகின்றார். நம்முடைய மனங்களில் இந்நிலையினை நாம் அடைந்திட முடியும். "என் மனதில் தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு ஊழியஞ்செய்கின்றேன்; என் மாம்சத்தைக்கொண்டு கொஞ்சம் பாவப்பிரமாணத்துக்கு ஊழியஞ்செய்கின்றேன்; ஆனால் மாம்சம் மரித்ததாகக் கருதப்பட்டுள்ளது மற்றும் கர்த்தர் மாம்சத்தின்படி நியாயந்தீர்க்கிறதில்லை" என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார். நாம் கிறிஸ்துவினுடைய மனதை உடையவர்களாக இருப்போமானால், நாம் மாம்சத்தில் நம்மால் முடிந்ததைச் செய்வோம்; அதைக் கர்த்தருடைய சித்தத்திற்கு இசைவாய்க் கீழ்ப்படுத்தி வைப்பதற்கு முயன்று கொண்டிருப்போம். ஆனால் நாம் மாம்சத்தின்படியாக நியாயந்தீர்க்கப் படுகிறதில்லை; மாறாக ஆவியின்படி, மனதின்படி, புதுச்சிருஷ்டியின்படி நியாயந்தீர்க்கப்படுகின்றோம். ஆகையால் அருமையான நண்பர்களே: உங்கள் மனதைக்கொண்டு தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கு ஊழியஞ்செய்யுங்கள் - உங்கள் முழு இருதயத்தோடும், உங்கள் முழு மனதோடும், உங்கள் முழு ஆன்மாவோடும், உங்கள் முழுப்பெலத்தோடும் செய்யுங்கள். இப்படிச் செய்வீர்களானால், நீங்கள் இலக்கில் காணப்படுகின்றீர்கள். "உங்களை நீங்கள் அன்புகூருவதுபோன்று, உங்கள் அயலாரை அன்புகூருகின்றீர்களா?" என்று உங்களிடம் கேட்கப்பட்டால் . . . நீங்களோ: "ஆம்! நான் அனைவரையும் அன்புகூருகின்றேன் மற்றும் அனைவருக்கும் நன்மை செய்ய விரும்புகின்றேன் மற்றும் இதில் பிரியமாய் இருக்கின்றேன்" என்கிறீர்கள். "அப்படியானால் சகோதர சகோதரிகளை அன்புகூரும் நிலைக்கு உண்மையில் வந்துவிட்டீர்களா?" என்று உங்களிடம் கேட்கப்பட்டால், . . . நீங்களோ: "ஆம்!" என்கிறீர்கள். "தேவனை அன்புகூருகின்றீர்களா?" என்று உங்களிடம் கேட்கப்பட்டால் . . . "ஆம்!" என்கிறீர்கள். "முழு மனுக்குலத்தையும் அன்புகூருகின்றீர்களா?" என்று உங்களிடம் கேட்கப்பட்டால் . . . "ஆம்!" என்கிறீர்கள். "யாருக்கேனும் தீங்கு செய்ய வேண்டும் என்று தோன்றுகின்றதா?" என்று உங்களிடம் கேட்கப்பட்டால் . . . "இல்லை!" என்கிறீர்கள். "ஏதேனும் தவறு செய்ய உங்களுக்குத் தோன்றவில்லையா அல்லது தவற்றைப் பார்க்க வேண்டும் என்று தோன்றவில்லையா?" என்று கேட்கப்பட்டால் . . . "இல்லை!" என்கிறீர்கள். "நீங்கள் சகோதரரை அன்புகூருகின்றீர்களா? அவர்களுக்கு நன்மை செய்யப்படுவதைப் பார்க்க விரும்புகின்றீர்களா?" என்று உங்களிடம் கேட்கப்பட்டால் . . . நீங்கள் "ஆம்!" என்கிறீர்கள். நீங்கள் இலக்கில் இருக்கின்றீர்கள் என்று நான் எண்ணுகின்றேன். இதைத்தான் கர்த்தர் இலக்காக வைத்திருக்கின்றார். இதைத்தான் கிறிஸ்துவும் செய்தார். அவர் உலகத்தை அன்புகூர்ந்து,

அதற்காகத் தம்மையே கொடுத்துவிட்டார். அவர் பிதாவை அன்புகூர்ந்து, பிதாவின் சித்தத்தைச் செய்வதில் தம் ஜீவனையே கொடுத்துவிட்டார். அவர் சீஷர்களை அன்புகூர்ந்தார்; அவர்களைத் தம்முடையவர்களென அவர் அன்புகூர்ந்தபடியால், முடிவுபரியந்தம் அவர்களை அன்புகூர்ந்தார். ஆகையால் இப்படியே நம் ஆவியும் காணப்பட வேண்டும் மற்றும் அனைவரையும் அன்புகூருகிற நிலைமைக்கும், உங்கள் சத்துருக்களை அன்புகூருகிற நிலைமைக்கும் நீங்கள் வருகிற மாத்திரத்தில், நீங்கள் இலக்கில் வந்து நிற்கின்றீர்கள். உங்கள் சத்துருக்களை அன்புகூருவது என்பது கடினமான காரியமாகும், ஆனாலும் உங்கள் சத்துருக்களை நீங்கள் அன்புகூர வேண்டும்; "உங்களை இழிவாய் நடத்துகிறவர்களுக்கு, நன்மை செய்யுங்கள்" என்று கர்த்தர் சொல்லியிருக்கின்றார். உங்கள் சத்துருக்களை அன்புகூரும் நிலையினை நீங்கள் அடையவில்லையெனில், நீங்கள் பரிசை வென்றுதரும் இலக்கில் இல்லை; ஏனெனில் குறைவான தரநிலையை உடைய எவரும் தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரில் காணப்படுகிறதில்லை. இவர்கள் அனைவரும் தேவனுடைய பிரியமுள்ள குமாரனுக்கொத்த சாயலாக வேண்டும் மற்றும் இதுவே இலக்காகும். நீங்கள் இந்நிலைக்கு இன்னும் வரவில்லையெனில், ஓடுங்கள்; உங்களால் முடிந்தமட்டும் வேகமாய் வந்து சேருங்கள். ஜீவியத்தில் அனைத்தையும் விட்டுவிட்டு, அந்நிலைமைக்கு வந்துவிடுங்கள். "என்னால் ஒரே ஒரு நபரை அன்புகூர முடியவில்லை; அவன் சத்துருவாவான் மற்றும் அவன் என்னைக் குறித்து இன்னென்ன விதமாய்ப் பேசியிருக்கின்றான்" என்று நீங்கள் சொல்லலாம். அவன் பேசினதையோ அல்லது செய்ததையோ ஒருபோதும் பொருட்படுத்தாதீர்கள். நீங்கள் உங்களுக்காக ஜீவிக்கவில்லை, அப்படித்தானே? நீங்கள் கர்த்தருக்காய் ஜீவிக்கின்றீர்கள். "அனைத்துப் பொல்லாப்புகளையும், பொறாமைகளையும், தீயதாயுள்ள அனைத்தையும் உங்கள் இருதயத்தினின்று களைந்துபோடுங்கள்; சத்துருக்களை அன்புகூருகின்ற மற்றும் அவர்களுக்கு நன்மை செய்ய விரும்புகின்ற நிலைமைக்கு உங்கள் இருதயத்தைக்கொண்டு வந்துவிடுங்கள்" என்று கர்த்தர் கூறுகின்றார். இதுவே இலக்கை வந்தடைவதாகும். இலக்கை வந்து அடைந்த பின்னர், நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அதில் நில்லுங்கள்! "அங்கு நிற்க வேண்டுமா, அது சுலபம்தானே!" என்று எண்ணுகின்றீர்களா? கொஞ்சம் காத்திருங்கள்; அங்குக் கொஞ்சம் நின்றுகொண்டு, பின்னர்ப் பாருங்கள். பல்வேறு வழிகளில் உங்களை எதிராளியானவன் தாக்குவான் மற்றும் அவன் உங்களைப் பல்வேறு வழிகளில் தாக்குவதற்குக் கர்த்தர் அனுமதித்திடுவார். உங்கள் சத்துருக்களை அன்புகூருவதற்கும், கர்த்தரை அன்புகூருவதற்கும், சகோதரரை அன்புகூருவதற்கும், உலகத்தாரை அன்புகூருவதற்கும் எதிர்மாறாக நீங்கள் செய்யத்தக்கதாக, எதிராளியானவன் பல்வேறு காரியங்களைச் செய்வான். கிறிஸ்துவின் மகிமையான இந்தத் தரநிலையினின்று உங்கள் மனம் திசைமாறத்தக்கதாக அவனால் முடிந்த அனைத்தையும் செய்வான். இலக்கை நோக்கிப் போய்க்கொண்டிருந்தபோது இருந்த தாக்குதல்களைக் காட்டிலும், இலக்கை வந்து அடைந்த பிற்பாடே நீங்கள் பல்லாயிர விதங்களில் தாக்கப்படுவீர்கள்; ஏனெனில் இலக்கை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிற காலபகுதியில், கர்த்தர் உங்களைப் பாதுகாத்துக்கொண்டிருந்தார் மற்றும் "உங்கள் திராணிக்கு மேலாகச் சோதிக்கப்படுவதற்கு உங்களை நான் அனுமதிக்கிறதில்லை" என்று கூறியிருந்தார்; ஆனால் நீங்கள் இலக்கை வந்து அடைந்த பிற்பாடு, நீங்கள் நிற்க திராணியுடையவர்களாய் இருப்பீர்கள். உங்கள் திராணி என்னவென்று அவர் அறிவார் மற்றும் உங்கள் திராணியின் அளவுகேற்ப உங்களைச் சோதிக்க விரும்புகின்றார்; ஏனெனில் அந்தத் தெரிந்துகொள்ளப்பட்டு, மகிமைப்படுத்தபடும் வகுப்பாரில் காணப்படும் அனைவரும் முழுமையாய்ச் சோதிக்கப்படவேண்டும் மற்றும் நிரூபிக்கப்பட வேண்டும் மற்றும் அவர்கள் தேவனுக்கும், சகோதரருக்கும் நேர்மையாய் இருக்கின்றார்கள் எனவும், உயர்ந்த, சிறந்த விதத்திலான அன்பைப் பெற்றிருக்கின்றார்கள் எனவும் நிரூபிக்கப்பட வேண்டும்.

**2. (Q449:1) அன்பு - பூரண அன்பிற்கான இலக்கை அடைதல்.**

கேள்வி (1909)-1- பரம அழைப்பிற்கு அழைக்கப்பட்டவர்கள் அனைவரும், அன்பின் பூரண இலக்கினை அடைய வாய்ப்புள்ளதா மற்றும் அது எப்படி?

பதில் - ஒவ்வொரு மனுஷஜீவியினாலும் அந்த இலக்கினை அடைய முடியும் மற்றும் சிறுமந்தையிலோ அல்லது திரள்கூட்டத்திலோ அல்லது திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதம் பெறும் வகுப்பாரிலோ உள்ள அங்கத்தினனென நித்திய ஜீவனை அடையும் ஒவ்வொருவனும், எந்த ஒரு ஜீவதளத்திலும் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் யார் ஒருவரும் . . . பூரண அன்பின் இலக்கிற்கு அல்லது இந்நிலைக்கு வந்தாக வேண்டும்; ஏனெனில் இப்படி இல்லாத யாருக்கும் தேவன் நித்திய ஜீவனைக் கொடுக்கிறதில்லை. அன்பின் பிரமாணம் என்பது தேவனால் அங்கீகரிக்கப்படும் மிக அடிப்படையான காரியமாகும். ஆவியின்படி நீங்கள் பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாக இருக்கின்றீர்கள் மற்றும் யூதன் மாம்சத்தில் செய்ய வேண்டியவைகள் அனைத்தையும் நீங்கள் ஆவியில் செய்து ஜீவிக்கும்படிக்குக் கடமைப்பட்டிருக்கின்றீர்கள். "உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், உள்ளத்தோடும், ஆத்துமாவோடும் மற்றும் பலத்தோடும் அன்புகூருவாயாக" என்று எழுதப்பட்டிருப்பது உங்களுக்கு ஞாபகமிருக்கும். "இதைவிடக் குறைவாய்ச் செய்தால் போதாதா?" என்று நீங்கள் கேட்கலாம். இல்லை என்பதே பதில். "ஓ! ஆனால் எனக்கு மாம்சத்தின் பெலவீனங்கள் காணப்படுகின்றன மற்றும் நான் செய்ய வேண்டுமென்றிருப்பவைகளை என்னால் செய்ய இயலவில்லை" என்று நீங்கள் சொல்லலாம். நம்மைக் கர்த்தர் இப்பொழுது நம்முடைய மாம்சத்தின்படி நியாயந்தீர்க்காமல், நம்முடைய இருதயத்தினுடைய உணர்வுகளின் அடிப்படையில் நியாயந்தீர்த்துக் கொண்டிருக்கின்றார் என்று அப்போஸ்தலன் கூறியுள்ளார். ஒருவேளை உங்கள் முழு ஆன்மாவோடும், மனதோடும், பலத்தோடுமுள்ள கர்த்தருக்கான அன்பினால் உங்கள் இருதயம் நிறைந்து காணப்படுமானால் . . . அப்போது நீங்கள் பூரண இலக்கினுடைய அந்த அம்சத்தை எட்டியிருக்கின்றீர்கள். நீங்கள் விரும்பினாலும், இதைக்காட்டிலும் அதிகமாய்ச் செய்ய முடியாது மற்றும் குறைவாயும் நீங்கள் செய்யக்கூடாது. உங்கள் இருதயம் இப்படியாக இல்லையெனில், நீங்கள் சிறுமந்தையின் அல்லது திரள்கூட்டத்தின் அங்கத்தினராய் இருப்பதில்லை; மாறாக இத்தகையவர்கள் இரண்டாம் மரணத்திற்குள் செல்கின்றவர்களாய் இருப்பார்கள். அனைவருமே இந்தத் தரநிலையினைத் தங்கள் இருதயங்களில் எட்டிட வேண்டும்; இல்லையேல் அவர்கள் இரண்டாம் மரணத்தில் மரித்துப் போகின்றவர்களாய் இருப்பார்கள்.

"உன்னை நீ அன்புகூருவதுபோன்று, உன் அயலானையும் அன்புகூருவாயாக" எனும் இரண்டாம் கற்பனையைக் குறித்து என்ன சொல்வது? இது மனுக்குலம் தொடர்புடையதாகும். எவ்வாறு? வியாபாரத்தில் அயலானிடமிருந்து இலாபம் ஈட்டிக்கொள்ள வேண்டுமா அல்லது அவனைச் சாதகமாய்ப் பயன்படுத்தி, இலாபம் ஈட்டிக்கொள்ள வேண்டுமா? இல்லை. அயலான் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று விரும்புவீர்களோ, அப்படியாகவே நீங்களும் அவனை நடத்த வேண்டும். ஆனால் அதற்கென்று நீங்கள் அயலானை நியாயந்தீர்க்க வேண்டும் என்றாகாது. ஒருவேளை உங்கள் அயலான் தன்னுடைய வயல், உங்கள் வயலைக் காட்டிலும் சிறந்தது என்று எண்ணுவானானால் மற்றும் நீங்களும் வியாபாரம் ஒன்றைச் செய்வீர்களானால், நீங்கள் இருவருமே உங்கள் கண்களைத் திறந்து வைத்து, காரியத்திற்குள் செயல்படுங்கள்; ஆனாலும் உங்கள் அயலானின் சூழ்நிலையை உங்களுக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திவிடுதல் என்பது அன்பான செய்கையாய் இராது. சபை இதைக்காட்டிலும் அதிகமாய்ச் செய்ய வேண்டும். எப்படி? அது பின்வருமாறு என் அன்பு சகோதரனே:- நியாயப்பிரமாணமானது உங்களிடத்தில் ஒருபோதும் பலியினை எதிர்ப்பார்க்கிறதில்லை; உங்களை நீங்கள் அன்புகூருவதுபோன்று உங்கள்

அயலானை நீங்கள் அன்புகூர மாத்திரமே எதிர்ப்பார்க்கின்றதாய் இருக்கின்றது; ஆனால் இதைக்காட்டிலும் அதிகமானதையே பிதாவானவர், கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களாய் இருப்பவர்களிடத்தில் எதிர்ப்பார்க்கின்றார்; அதாவது உங்கள் பூமிக்குரிய உரிமைகளை நீங்கள் பலிசெலுத்தவும், அவற்றைக் கையளித்துவிடவும் அவர் எதிர்ப்பார்க்கின்றார். இயேசு இப்படியே செய்தார் மற்றும் அவர் செய்த காரியமானது, நியாயப்பிரமாணம் எதிர்ப்பார்த்ததைக் காட்டிலும் அதிகமான செய்கையாய் இருந்தது. அவர் தம்முடைய பூமிக்குரிய உரிமைகளையும், அவரின் நலனுக்கடுத்தவைகளையும் பலியில் கொடுத்துவிட்டார். "நாங்கள் எங்கள் பூமிக்குரிய நலன்களைப் பலிசெலுத்துகின்றோம்; அவை விலையேறப்பெற்றவைகளென நாங்கள் கருதுகிறதில்லை" என்று நீங்கள் சொல்லலாம். அது சரிதான்; அவைகளை நீங்கள் பலிசெலுத்தியாக வேண்டும்.

**3. (Q50:1) குணலட்சணம் - கிரீடம் எப்போது நம்முடையதாகும்.**

கேள்வி (1910)-1- குணலட்சண வளர்ச்சியினுடைய எந்த ஒரு கட்டத்தில், கிரீடம் நம்முடையது என்றும், நாம் ஜெயம்கொண்டவர்களாய் இருக்கின்றோம் என்றும் சொல்லலாம்?

பதில் - பூரண அன்பினுடைய இலக்கை நாம் அடையும் போதே, நாம் இப்படியாய்ச் சொல்ல முடிகின்ற சரியான கட்டமாய் இருக்கும் என்று அருமை நண்பர்களே நான் கருதுகின்றேன். இதோ அதை விவரிக்கின்றேன்: நீங்கள் கர்த்தரிடத்திற்கு வந்தீர்கள் மற்றும் உங்களை அர்ப்பணம் பண்ணினீர்கள்; கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பிரவேசித்து, அவரைக் குறித்துக் கற்றுக்கொள்ளத் துவங்கினீர்கள். அப்போதுதான் உரிய, தகுதியினுடைய அளவின் விஷயத்தில் நீங்கள் எவ்வளவு குறைவுப்பட்டிருக் கின்றீர்கள் என்று கண்டுகொண்டீர்கள். உங்களில் கர்த்தர் எதையேனும் வளர்த்திட கூடுமோ? என்று எண்ணினீர்கள். கர்த்தரோ உங்களுடைய மனதின் அடிப்படையில் உங்களை அளவிடப்போகின்றார் மற்றும் பூரண குணலட்சணத்திற்கான தரநிலையாகிய பூரண அன்பு எனும் இலக்கை நீங்கள் அடையும்படிக்குக் கர்த்தர் காத்துக்கொண்டிருக்கின்றார்; ஏனெனில் இப்பொழுதும் சரி, ஆயிர வருட யுகத்திலும் சரி இந்த இலக்கை அடைபவர்களே தவிர, மற்றப்படி எவரும் இராஜ்யத்திற்கோ அல்லது நித்திய ஜீவனுக்கோ தகுதியானவர்களாய் இருக்க முடியாது. தன் மனதிலும், இருதயத்திலும் அந்தத் தரநிலையை/அளவுகோலை அடைந்தவனுக்கே தவிர, மற்றப்படி வேறு யாருக்கும் தேவன் எதையும் வைத்திருக்கிறதில்லை. ஒருவனிடம் பெலவீனங்கள் முதலியவைகள் இருக்கலாம் மற்றும் நீங்கள் பின்பு மனஸ்தாபம் அடையவும், மன்னிப்புக் கேட்க அவசியமாகும் அளவுக்கும் ஏதேனும் காரியங்களைப் பேசியிருந்திருக்கலாம்; ஆனால் உங்கள் இருதயமானது பூரண அன்பிற்கான இலக்கில் காணப்படுகின்றது என்று வைத்துக்கொள்ளுங்கள் - மேலும் பூரண அன்பின் இலக்கினை நீங்கள் அடைந்திருப்பதினால் நீங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று இருக்கின்றீர்கள். நீங்கள் தேவனையும், மனுக்குலம் முழுவதையும் அன்புகூருகின்றீர்கள் மற்றும் உங்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதற்கு ஏற்ப அனைவருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்று விரும்புகின்றீர்கள். தன் சத்துருக்களை மன்னிக்கக்கூடிய நிலைமைக்கு ஒருவன் வருவானானால், அவன் பூரண அன்பின் இலக்கில் காணப்படுபவனாய் இருப்பான். அவன் மாம்சத்தில் பூரணமாய் இருப்பதில்லை; ஏனெனில் இது இந்த யுகத்தில் கூடாத காரியமாகும். இன்னமும் அநேகர் தங்கள் நாவுகளுக்குக் கடிவாளம் போடவேண்டியவர்களாய் இருக்கின்றனர். நீங்கள் பழைய சுபாவத்தை அடக்கி வைக்க வேண்டும். இதை நான் எப்பொழுதும் - புதுச்சிருஷ்டிக்குக் கட்டுப்பட வேண்டியதான பழைய சுபாவத்தை ஒரு மோசமான நாயைக்கொண்டு அடையாளப்படுத்தி, உதாரணப்படுத்தி விவரிப்பதுண்டு. பழைய மனுஷனை நாம் அடக்கி வைக்க வேண்டும். சோதனையினுடைய அழுத்தமும், பரபரப்பும் தணிகையில், நம் இருதயமானது

நீதியின் கொள்கையினிடத்திற்குத் திரும்பி, பிதாவிடத்தில் மன்னிப்பைக் கேட்டுக்கொள்ளும் காரியத்திலிருந்து, நம்முடைய நோக்கங்கள் நல்லவைகளாகவே இருந்துள்ளது என்பது வெளியாகுகின்றது; செய்யப்பட்ட எதற்கும் மன்னிப்புக் கேட்பீர்கள். தவற்றைச் செய்யாமல் இருப்பதைவிட, செய்த தவற்றைச் சரிப்படுத்துவதே கடினமான காரியமாய் இருக்கின்றது என்று நீங்கள் சொல்லலாம். அது உண்மைதான். எனினும் உங்கள் இருதயம் நீதியின் மீது அன்பு கொண்டு இருக்கின்றது என்று கர்த்தரிடத்தில் நீங்கள் நிரூபிக்க விரும்புவீர்களானால், இப்படித்தான் நீங்கள் செய்ய வேண்டும்; நீங்கள் தவறு செய்துள்ளீர்கள் என்று காணும்போதெல்லாம், நீங்கள் அதைச் சரிசெய்ய வேண்டும். நீங்கள் இப்படியான நிலைமைக்கு வந்திருப்பீர்களானால், என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி தேவன் பேரிலும், மனுஷர் பேரிலும் பூரண அன்பு கொண்டிருக்கும் இலக்கில் நீங்கள் வந்துள்ளீர்கள். நீங்கள் அனைவருக்கும் நன்மை செய்ய வேண்டும் என்றும், யாருக்கும் தீமை செய்யக்கூடாது என்றும் விரும்புகின்றீர்கள். அதுமுதல் என்னுடைய புரிந்துகொள்ளுதலின்படி, நீங்கள் கிரீடம் கொடுக்கப்பட்டவராகக் கர்த்தரால் கருதப்படுவீர்கள். இது ஒரு காரியமாகவும், உன் கிரீடத்தை ஒருவனும் எடுத்துப் போடாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு என்பது இன்னொரு காரியமாகவும் இருக்கின்றது. கிரீடம் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட பின்னரும்கூட ஒருவேளை இலக்கினின்று விலகிப்போய்விடுவீர்களானால், பிரச்சனைகளின் நிமித்தம் இலக்கினின்று தள்ளிவிடுவீர்களானால் . . . நீங்கள் இப்பரீட்சையில் நிலைநிற்காதவர்களாய் இருப்பீர்கள் மற்றும் ஜெயம் கொண்டவராய் இருப்பதற்கு அபாத்திரராகிவிடுவீர்கள். ஆகவே குணலட்சணத்திற்கு ஓர் இலக்கு இருக்கின்றது என்பதைக் கவனியுங்கள் மற்றும் இதை அடையாமல் யாரும் ஆவிக்குரிய அல்லது பூமிக்குரிய இராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இப்பொழுது நம் அன்பையும், அர்ப்பணிப்பையும் நாம் நிரூபித்தாக வேண்டும் மற்றும் இதற்காகவே நாம் இன்றைக்கும், நாளைக்கும், கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்திற்குள் பிரவேசித்தது முதற்கொண்டுள்ள நம் கிறிஸ்தவ அனுபவ காலங்கள் முழுவதும் ஜீவித்துக்கொண்டு வருகின்றோம்; கூடுமானமட்டும் விரைவாக நாம் அவரிடம் கற்றுக்கொண்டு, அனைவர் மீதுமுள்ள பூரண அன்பிற்கான இலக்கில் வந்துவிட வேண்டும்.

**4. (Q305:2)** திரள்கூட்டத்தினர் - பூரண அன்பிற்கான இலக்கினின்று விழுந்துபோகுதல்.

கேள்வி (1910)-2- பூரண அன்பிற்கான இலக்கை அடைந்திட்ட யாரேனும் திரள்கூட்டத்தினராக விழுந்துபோகக்கூடுமா?

பதில் - கூடும் என்று நான் எண்ணுகின்றேன்; ஒருவன் இப்படித் திரள்கூட்டத்திற்குள்ளாக வீழ்ந்துபோவது மாத்திரமல்லாமல், அவன் முற்றிலுமாய் வீழ்ந்து போவதற்கும் வாய்ப்புள்ளது என்று நான் எண்ணுகின்றேன். ஒருவேளை ஒருவன் பூரண அன்பிற்கான இலக்கினை அடைந்தவனாகவும், அவன் மற்றவர்களுக்குப் போதிப்பவனாகவும் இருப்பானாகில், அவன் கர்த்தருடனான தன் உறவையும், கர்த்தருடைய அங்கீகரிப்பையும் தக்கவைத்து/காத்துக்கொள்ளவில்லையெனில், அவன் ஆகாதவனாய் வீழ்ந்துபோவான்.

**5. (Q454:1)** இலக்கு - திரள்கூட்டம் மற்றும் சிறுமந்தை.

கேள்வி (1910)-1- திரள்கூட்டத்தினரால் அடையப்பெறும் இலக்கிற்கும், சிறுமந்தையினரால் அடையப்பெறும் இலக்கிற்கும் இடையில் வித்தியாசம் உள்ளனவா?

பதில் - நீதி மற்றும் நியாயம் முன்வைத்திடும் காரியங்கள் அனைத்திற்கும் கீழ்ப்படிவதற்கு என்று மாத்திரம் சிறுமந்தையினர் அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் இராமல், இன்னுமாக தேவனுடைய சித்தத்தைத் தாங்கள்

செய்ய வேண்டும் என்று நீதியானது கட்டளையிட்டாலும் அல்லது இல்லாவிட்டாலும், எப்படியேனும் அவர் சித்தத்தைத் தாங்கள் செய்வதாகவும் இவர்கள் தேவனிடம் ஒப்புக்கொண்டுள்ளனர். நீதியானது கட்டளையிடுகின்ற அல்லது கட்டளையிட முடிகின்ற காரியத்திற்கும் அதிகமானதையே நீங்கள் பலிசெலுத்திட வேண்டும். இப்படியாகவே நமது கர்த்தர் இயேசு விஷயத்திலும் காணப்பட்டது. இயேசு நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்ள வேண்டும் என்று நீதியானது கட்டளையிடலாம், ஆனாலும் அவர் தம் ஜீவனைப் பலிசெலுத்திட வேண்டும் என்று நீதியினால் கட்டளையிட முடியாது. ஒவ்வொரு மனுஷரும் நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்ள வேண்டும் என்று தேவன் எதிர்ப்பார்க்கின்றார்; ஆனாலும் நாம் நம்முடைய சரீரங்களை ஜீவபலியாகச் செலுத்திட வேண்டும் என்று அவர் கட்டளை யிடுகிறதில்லை; அது ஓர் அழைப்பாகும். தம்முடைய பிரமாணத்தினைக் கைக்கொள்ளுவதற்கு அவர் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறதில்லை; நீங்கள் பிரமாணத்தினைக் கைக்கொள்ளவில்லையெனில், இன்னென்ன விளைவு உண்டாகும் என்றே அவர் கூறியுள்ளார்; இது என் நியமம் என்கிறார். நம் தேவனாகிய கர்த்தரை நம் முழு இருதயத்தோடும், மனதோடும், ஆன்மாவோடும், பலத்தோடும் அன்புகூர வேண்டும் என்றும், நம்மை நாம் அன்புகூருவதுபோன்று, நம் அயலானை அன்புகூர வேண்டும் என்றும் உள்ள இந்த நியமத்தினைத் தேவன் எனக்கும், உங்களுக்கும் முன்பாக வைத்துள்ளார். "நம்மால் நியாயப்பிரமாணத்தினைக் கைக்கொள்ள முடியாதே" என்று நீங்கள் சொல்லலாம். நம்முடைய மாம்சத்தைப் பொறுத்தமட்டில் கைக்கொள்ள முடியாததுதான்; ஆனால் நம் மனங்களிலும், இருதயங்களிலும் அதைக் கைக்கொண்டிடலாம். நாம் இப்படியாகச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதில் குறைவுபடுதல் என்பது, தேவனுடைய பிரமாணத்தினைக் கைக்கொள்வதில் குறைவுபடுதலாகும் மற்றும் எவ்வகையான நித்திய ஜீவனுக்கும் நாம் அபாத்திரர்களாகக் காணப்பட்டுவிடுவோம். இப்படியாகவே திரள்கூட்டத்தாரின் விஷயத்தில் காணப்பட வேண்டும். இவர்கள் தேவனுடைய பிரமாணமாகிய இந்த நியமத்தைக் கைக்கொள்வதில் குறைவுபட்டவர்களாய் இருக்கக்கூடாது. இதைக்காட்டிலும் அதிகமானவைகளைச் செய்திடுவதற்கு இவர்கள் ஒப்புக்கொண்டிருந்தனர் மற்றும் இவர்களும் அன்பு எனும் தரநிலையை, நியமத்தை எட்டியாக வேண்டும். இந்த நியமமே, அடுத்த யுகத்தில் உலகத்திற்கான நியமமாகும் மற்றும் அப்போது இந்த நியமத்தை/தரநிலையை அடைய அவர்கள் கடமைப்பட்டிருப்பார்கள். அவர்கள் ஆயிர வருட காலங்களில் அந்தத் தரநிலையை அடையவில்லையெனில், ஆயிர வருடங்களின் முடிவில் அவர்கள் நித்திய ஜீவனை அடையமாட்டார்கள். அருமை நண்பர்களே அப்போது உலகமானது நல்ல ஜனங்களைப் பெற்றிருக்கும். அவர்கள் நல்ல ஜனங்களாய் இருப்பார்கள் என்று நான் எண்ணுகின்றேன். இயேசு தம் வேலையை முடிக்கும்போது, அனைத்தும் நலமாய் இருக்கும் மற்றும் தேவனுடைய வல்லமையின் அருமையான வெளிப்பாடாய் மனுக்குலம் காணப்படும் மற்றும் மனுக்குலத்தார் தேவபக்தியுள்ளவர்களாய்க் காணப்படுவார்கள்.

### 6. (Q455:1) இலக்கினின்று விழுந்துபோய்த் திரள்கூட்டத்தினராகுதல்.

கேள்வி (1910)-1- பூரண அன்பின் இலக்கினை அடைந்துள்ளவர்களும், தப்பறையினால் தங்களையே குருடாக்கிக்கொண்டவர்களுமான சத்தியத்திலுள்ள ஜனங்களில் யாரேனும் திரள்கூட்டத்தினராகக் கூடுமா?

பதில் - நான் புரிந்திருக்கிறவரைத் தேவனுடைய ஜனங்களில் யாராய் இருப்பினும் சரி - அதாவது தற்கால சத்தியத்தில் இருப்பவர்கள் மாத்திரம் இல்லாமல், தேவனுடைய ஜனங்களில் யாராக இருப்பினும் சரி - பூரண அன்பின் இலக்கு என்று நாம் அழைக்கின்றதான குணலட்சண வளர்ச்சிக்கான இலக்கினை

அடைந்தவர்களாய் இருக்கையில், அவர்கள் பூரண அன்பின் இலக்கிலேயே தங்கள் நிலையைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்றும், இலக்கை அடைந்த பிற்பாடு அவர்களை அலைக்கழிக்கும் பிரச்சனைகளினாலும், சோதனைகளினாலும் இலக்கினின்று நகர்ந்து தள்ளிப் போய்விடாதபடிக்கு இருக்க வேண்டும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுகின்றது; நான் அறிந்திருக்கிறவரை இவர்களில் சிலர் தற்காலிகமாக இலக்கிலிருந்து நகர்ந்து விடுபவர்களாய் இருப்பார்கள் மற்றும் தேவனுடைய கிருபையினால் குணமடைபவர்களாய் இருந்து, இன்னமும் பரிசைப் பெறுவதற்குத் தகுதியானவர்களாகக் கர்த்தரால் கருதப்படும் பாத்திரங்களாய் இருப்பார்கள். ஆனால் சிலர் இலக்கினின்று முழுமையாய்த் தவறான மனநிலைக்கு அல்லது நடத்தைக்குள் விலகிப்போய், மரணத்திற்கு ஏதுவான பாவம் செய்து, எவ்விதமான எதிர்காலமும் இல்லாமல் போவதுமுண்டு. இன்னும் சிலர் பூரண அன்பின் இலக்கை அடைந்த பின்னர், உரிய வைராக்கியம் கொண்டிராமல் இருப்பார்கள்; மற்றும் இவர்கள் இலக்கை விட்டுவிலகாமல் இருப்பினும், கர்த்தருடைய வைராக்கியமுள்ள பின்னடியார்களெனத் தங்கள் நிலையைத் தக்கவைத்துக்கொள்ளத் தவறிப்போய், திரள்கூட்ட வகுப்பினராகக் கருதப்படுவார்கள்.

**7. (Q532:1) [தெரிந்தெடுக்கப்பட்ட பத்தி] ஆயிர வருட யுகத்தில் - பூரணம்.**

கேள்வி (1911)-1- ஆயிர வருட யுகம் நிறைவடைவதற்கு முன்னதாக யாரேனும் பரிபூரணத்தினை அடைவார்களா? ............................................. .............

பதில் - ஆம்! யுகம் முடிவடைவதற்கு முன்னதாகவே சிலர் பரிபூரண நிலைக்கு வருவார்கள் என்று நாம் பதிலளிக்கின்றோம். உதாரணத்திற்கு முற்பிதாக்கள் தங்களுடைய உயிர்த்தெழுதலின்போதே, உடனடியாகப் பரிபூரண நிலைக்கு வருவார்கள்; ஏனெனில் இவர்களின் சோதனையானது முடிவடைந்துவிட்டது; ஆகையால் முற்பிதாக்கள் இத்தகைய வகுப்பாராய் இருப்பார்கள். ஆனால் கேள்வி கேட்டவர் மீதமான மனுக்குலம் குறித்தே குறிப்பாய்க் கேட்டுள்ளார் என்று எண்ணுகின்றோம் மற்றும் அதற்கு எங்கள் பதில் என்னவெனில் . . . எந்தளவுக்கு ஒவ்வொருவனும் மேசியாவினுடைய இராஜ்யத்தின் சட்டத்திட்டங்கள், பிரமாணங்கள் மற்றும் விதிகளுக்குக் கீழ்ப்படிவதில் துரிதம் காட்டுவானோ, அவ்வளவாய் ஒருவன் பரிபூரணத்தை நோக்கி மிக வேகமாய் முன்னேறுகின்றவனாய் இருப்பான். இப்பொழுது எப்படி இருக்கின்றதோ, அப்படியே அப்போது இருக்கும்; இக்காலத்திலும் எந்தளவுக்கு நாம் முழு இருதயத்தோடு காணப்படுகிறவர்களாய் இருப்போமோ, அவ்வளவுக்கு வேகமாய் நாம் பூரண அன்பினுடைய இலக்கினை அடைகின்றவர்களாய் இருப்போம். தங்கள் சத்துருக்களை அன்புகூர முடிகிறவர்களாக ஆகும் நிலையினை சிலர் மிகத் தாமதமாய் அடைகின்றனர் மற்றும் சிலர் வேகமாய் இந்நிலைமையை அடைகின்றனர். மேலும் இப்படியே ஆயிர வருட ஆளுகையின்போது பரீட்சையில் காணப்படுபவர்கள் விஷயமும் காணப்படும்; இவர்கள் பரிபூரணமடைவதற்கான வாய்ப்பினை அக்காலத்தில் பெற்றுக்கொள்வார்கள்; இவர்கள் அனைவரும் பரிபூரண நிலைக்கு வந்தாக வேண்டும், இல்லையேல் இரண்டாம் மரணத்தில் மரித்துப்போவார்கள்; மேலும் இவர்கள் எந்தளவுக்கு வேகமாய்ச் செயல்படுகின்றார்களோ, அவ்வளவுக்கு வேகமாய் அந்தப் பரிபூரண நிலைமைக்கு வேகமாய் வருவார்கள். இவர்கள் எந்தளவுக்கு இராஜ்யத்தின் பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிதலுள்ளவர்களாய் இருப்பார்களோ, அவ்வளவாய் ஆசீர்வாதம் இவர்கள் மீது கடந்துவரும், இவர்களைப் பரிபூரண நிலைக்கு வரச் செய்திடும்.

**8. (Q556:1) உயிரூட்டப்படுதல் (Quickening) மற்றும் இலக்கு.**

கேள்வி (1907)-1- சமீபமாய் வெளிவந்த வாட்ச் டவர் கட்டுரையில், நாம் இலக்கை அடைவது வரையிலும் நாம் உயிரூட்டப்படுவதில்லை (quickening) என்றும், சிலர் ஒருபோதுமே உயிரூட்டப்படுவதில்லை என்றும் தாங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். அப்படியானால் இலக்கை அடையும் அர்ப்பணிக்கப்பட்டவர்கள் மாத்திரம், ஏதேனும் அளவில் அல்லது விதத்தில் உயிரூட்டப்படுவார்கள் என்று சொல்லுகின்றீர்களா?

பதில் - இலக்கானது அடையப்பெறுவது வரையிலும் உயிரூட்டப்படுதல் எதுவும் ஆரம்பிப்பதில்லை எனும் நிலைப்பாட்டினை எடுத்துக்கொள்ள நான் விரும்புகிறதில்லை. அப்போஸ்தலன் மாம்சத்தின்படியான பிறப்பை உதாரணமாகப் பயன்படுத்துகின்றார் . . . "முதலாவது ஜெநிப்பித்தல், அடுத்தது உயிரூட்டப்படுதல், அடுத்தது பிறத்தலாகும்." நாம் முதலாவதாகச் சத்திய வசனத்தினாலே ஜெநிப்பிக்கப்பட்டோம்; பின்னர் நாம் கர்த்தரோடுள்ள உறவில் தொடருவோமானால், உயிரூட்டப்படுவதற்கான, வலுவடைவதற்கான வேளை வரும்; பின்னர் இந்த வலுவடைதலானது தொடருமானால் மற்றும் நாம் கிருபையிலும், அறிவிலும் தொடர்ந்து வளருவோமானால், இறுதியில் நாம் முதலாம் உயிர்த்தெழுதலில் பிறப்போம். ஆனாலும் முதலாவதாக பூரண அன்பிற்கான இலக்கை அடைவது வரையிலும், கர்த்தருக்கான ஊழியத்தில் உயிரூட்டப்படுவதற்கான அல்லது வலுவடையப்பட்டதற்கான அறிகுறிகளை யாருமே வெளிப்படுத்தமாட்டார்கள் என்று சொல்ல நான் விரும்புகிறதில்லை; ஆனாலும் உயிரூட்டப்படாமல் யாராலும் பூரண அன்பிற்கான இலக்கினை அடைய முடியாது என்று சொல்வது நியாயமானதே என்று கருதுகின்றேன். ஒருவன் கர்த்தரை தன் முழு இருதயத்தோடு அன்புகூருகிற நிலைமைக்கும், தன் அயலானை அன்புகூரும் நிலைமைக்கும், தன் சத்துருக்களையும்கூட அன்புகூரும் நிலைமைக்கும் வருகையில், அவன் கர்த்தருக்கான ஊழியத்திலும், தன் அயலானுக்கான ஊழியத்திலும் உயிரூட்டப்பட்ட அல்லது வலுவூட்டப்பட்ட நிலைமைக்கு நிச்சயமாய் வந்துவிட்டவனாய் இருப்பான். இதையே நாம் வாட்ச் டவர் கட்டுரையில் சொல்லியிருக்கிறோம்.

# பாஸ்டர் ரசல் அவர்களின் கட்டுரை

2HG 413 [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

## அழியாத கிரீடத்தை நாடுதல்

### ஓட்டப்பந்தயம் குறித்த வெவ்வேறு கண்ணோட்டங்கள்

கிறிஸ்தவனுடைய ஓட்டப்பந்தயமானது வெவ்வேறு கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கப்படலாம். ஒரு கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில், அது கர்த்தருக்கு அர்ப்பணம் பண்ணினது முதற்கொண்டு, உயிர்த்தெழுதல் வரையிலான ஓர் ஓட்டமாக அல்லது நாடுதலாக இருக்கின்றது. இந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் ஓட்டத்தில் அநேகம் வித்தியாசங்கள் காணப்படும் - சிலசமயம் நல்ல ஓட்டம், சிலசமயம் மெதுவான ஓட்டம், சிலசமயம் நின்றுகொண்டிருத்தல் மற்றும் சிலசமயம் பின்னோக்கி திரும்புதலும் காணப்படும். இந்தக் கண்ணோட்டத்தின்படி, யார் ஓட்டத்தில் காணப்படுகின்றனர் என்பதையும், எந்தளவுக்கு அவர்கள் தாலந்துகள் மற்றும் வாய்ப்புகளில் உண்மையாய் இருக்கின்றனர் என்பதையும் கர்த்தர் தாமே அறிவார். இந்தக் கண்ணோட்டத்தின்படி நாம் ஒருவரையொருவர் நியாயந்தீர்த்திடக்கூடாது, மாறாக கர்த்தரே நியாயாதிபதி என்றும், அவருடைய முடிவானது இந்த யுகத்தின் முடிவில் வரும் என்றும், அது சிலருக்கு முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கையும், மற்றவர்களாகிய திரள்கூட்டத்தாருக்கு சற்றுக்குறைவான மாறுதலையும், ஆசீர்வாதத்தையும் அருளுவதன் மூலம் வெளிப்படுத்தப்படும். ஒவ்வொரு மனுஷனுடைய வேலைப்பாடும் வெளிப்படுத்தப்படும். மிகவும் மெதுவாக ஓடிக்கொண்டிருப்பவர்கள் போன்று நமக்குக் காணப்படும் சிலர், முன்னோர் வழி வந்த சாதகமற்ற அநுகூலமின்மைகளினுடைய பாரமான பிரச்சனைகளுக்கு எதிராய் உண்மையில் போராடிக் கொண்டிருப்பார்கள்; அதுபோல ஓட்டத்தில் வேகமாய் ஓடிக்கொண்டிருக் கின்றனர் என்று நாம் எண்ணிடும் சிலர், கர்த்தருடைய கண்ணோட்டத்தில் உயர்வாய் மதிக்கப்படாதவர்களாய்க் காணப்படலாம் அல்லது நல்ல இயல்பான பண்புகள் மற்றும் குணங்கள் காரணமாய்ப் பெரும்பான்மையான மற்ற ஜனங்களைக்காட்டிலும் எல்லா விதத்திலும் நல் அநுகூலங்களைப் பெற்றிருந்தவர்களாகக் காணப்படலாம். கர்த்தரைப் பிரியப்படுத்துவதற்கும் மற்றும் இப்பொழுது முன்வைக்கப்பட்டுள்ளதான பரம அழைப்பிற்கான மகிமையான பரிசை வெல்வதற்கும் என்று நாடி, இந்த ஓட்டப்பந்தயத்தில் ஏறெடுக்கப்படும் ஒவ்வொரு சுயத்தை வெறுத்தல்களுக்கும், ஒவ்வொரு உண்மையுள்ள பலிக்கும் அடையப்போகும் வெகுமானம் என்பது, தன் தகுதி நிலைக்கும் மிக அதிகமான மற்றும் மேன்மையான வெகுமானமாய் இருக்கும் என்று அறிந்த நிலையில் ஒவ்வொரு ஓட்டப்பந்தய வீரனும் தன்னால் முடிந்ததைச் செய்துவிட்டு, பலன்களுக்கடுத்த காரியங்கள் அனைத்தையும் கர்த்தரிடத்தில் விட்டுவிடுவானாக.

ஓட்டப்பந்தயத்தைக் குறித்த முற்றிலும் வேறுபட்ட, அதேசமயம் தேவ வார்த்தையினுடைய எழுத்திற்கும், ஆவிக்கும் இசைவான கண்ணோட்டம் என்னவெனில் . . . கிறிஸ்தவன் கர்த்தருக்கு ஒத்த குணலட்சண சாயலை அடைவதாகும். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அனைவரும் தேவனுடைய பிரியமான குமாரனின் சாயலாய் இருப்பார்கள் என்றும், கர்த்தருக்கான நமது அர்ப்பணமும் மற்றும் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில் பிரவேசித்தது முதற்கொண்டு துவங்கின அனுபவங்களும், குணலட்சணத்தின் வளர்ச்சியும் . . . கர்த்தருக்கொத்த குணலட்சணத்தின் சாயலை அடைவதில் நிறைவடைகின்றது என்றும் வேதவாக்கியங்களானது நமக்கு உறுதிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது. கிறிஸ்தவனுடைய இந்த அனுபவமும்கூட ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பிடப்படலாம். கிறிஸ்துவைத் தங்கள் மீட்பரென ஏற்றுக்கொண்டுள்ளவர்களும், தங்களுடைய அனைத்தையும் கர்த்தருக்கு அர்ப்பணம்

பண்ணியுள்ளவர்களுமானவர்கள் மாத்திரமே இந்தக் கிறிஸ்துவின் பள்ளிக்கூடத்தில், இந்த ஓட்டப்பந்தயத்தில் அனுமதிக்கப்படுகின்றனர். இப்படி முதலாவது பிரவேசிக்கையில், அவர்கள் மிகவும் குறைவுடன் இருந்தனர் - அறிவிலும், கிருபையிலும் தாங்கள் வளரத்தக்கதாக இங்குப் பிரவேசித்தவர்களாய் இருந்தனர். கர்த்தருடைய சித்தத்தைச் செய்வதற்கான இருதயத்தின் வாஞ்சையே துவக்கமாகும்; இந்தக் கற்றுக்கொள்ளுதலுக்கான அல்லது இந்த ஓட்டப்பந்தயத்திற்கான முடிவு என்பது, கர்த்தரால் அங்கீகரிக்கப்படுகின்ற அளவில் அறிவு மற்றும் அன்பை அடைதலாகும்; இதை அடையவில்லையெனில் நாம் இராஜ்யத்திற்கு அபாத்திரர்களாய் இருப்போம்.

ஒருவேளை பாடத்தைக் கற்றுக்கொள்வதிலிருந்து மாணவனை அல்லது பூரண அன்பு எனும் தன் இலக்கை அடைவதிலிருந்து ஓட்டப்பந்தய வீரனை மரணமானது குறுக்கிடுமானால், அப்போது அவனால் ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது; "ஜெயங்கொள்பவர்களுக்கு" என்று மாத்திரம் வாக்களிக்கப்பட்டுள்ளதான இராஜ்யத்திற்குத் தகுதியானவனாக அவன் கருதப்பட முடியாது (வெளிப்படுத்தல் 3:21). இந்த ஓட்டத்தில் ஓட்டப்பந்தய வீரரெனக் கர்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றவன், மிக முழுமையாய்த் திவ்விய மேற்பார்வை மற்றும் பராமரிப்பின் கீழ் வருகின்றபடியால், அவனது பூமிக்குரிய நலன்கள் மற்றும் ஜீவியம் அவனுக்குச் சாதகமாய்க் காணப்படும்படிக்குப் பார்த்துக்கொள்ளப்படும் என்றும், அவன் பாடங்களைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வான் என்றும், ஓட்டம் ஓடுவதற்கும், தன்னை ஜெயங்கொள்கிறவனாக நிரூபிப்பதற்குமான வாய்ப்பினைப் பெற்றுக்கொள்வான் என்றும் எங்கள் நம்பிக்கைக் காணப்படுகின்றது.

பூஜியத்திலிருந்து துவங்கும் நிலையில், இந்த ஓட்டப்பந்தயமானது, நான்கு கால்-மைல் இலக்குகளால் பிரிக்கப்படலாம். தேவனுக்கான ஒருவகை அன்பினைக்கொண்ட நிலையில் ஓட்டமானது துவங்குகின்றது - இவ்வன்பானது ஓட்டத்தின் இறுதியில் அடையப்படுகின்றதான பூரண அன்பாய் இருப்பதில்லை; எனினும் இது துவங்குவதற்கு அவசியமான அன்பாய் இருக்கின்றது. இதை நாம் கடமை அன்பு என்று அழைக்கலாம்; அப்போஸ்தலன் கூறுவதுபோன்று, கர்த்தருடைய சித்தம் செய்ய நாடுவதை நம் "புத்தியுள்ள ஆராதனை" என்று நாம் உணர்ந்துகொள்கின்றோம்; ஏனெனில் இயேசுவினுடைய மீட்பின் வேலையில், அவர் நமக்கு என்ன செய்துகொண்டு வருகின்றார் என்பதை நாம் உணர்ந்தவர்களானோம். முதல் கால்-மைல் இலக்காகிய இந்தக் கடமை அன்பானது ஒருபோதும் தொலைந்து போகிறதில்லை; இது எப்போதுமே ஓட்டப்பந்தய வீரனுடைய இருதயத்திலும், மனதிலும் உயர் மதிப்புடையதாய்க் காணப்படும். ஆனால் பந்தயசாலையில் அவன் இரண்டாம் கால்-மைலுக்கு முன்னேறுகையில், கடமை அன்பானது தன்னில், இன்னும் ஓர் அன்பின் உயர்பண்பை ஜெநிப்பித்துள்ளதைக் காண்பான். அவன் கடமை அன்பை இன்னமும் கொண்டிருக்கும் அதே வேளையில், இப்போதோ இன்னும் உயர்வானதொரு அன்பை, மதித்துணரும் அன்பை அல்லது பண்புகளைப் பார்த்து உருவாகும் ஓர் அன்பை உடையவனாய் இருக்கின்றான். தேவன் நம்மை முந்தி அன்புகூர்ந்ததினால் நாம் முதலில் தேவனை அன்புகூர்ந்து, அவருக்கு ஊழியம் புரியவும், அவரைப் பிரியப்படுத்தவும் விரும்பினது போல, கிறிஸ்தவ அனுபவத்தில் மற்றும் பந்தயசாலையில் நாம் இந்த இரண்டாம் கால்-மைல் தொலைவை அடைகையில், நாம் தேவனைக் கருணையானவர் என்பதினால் மாத்திரமல்லாமல், அவர் நல்லவராக இருப்பதினாலும், அவரது குணலட்சணங்களின் உயர் பண்புகளினாலும், அவரை மதித்திடும் கட்டத்திற்கு வந்தவர்களாய் இருப்போம்; அவரோடு பழகுகையில் அவரது சிங்காசனத்திற்கு ஆதாரமாய் நீதி உள்ளது என்பதையும், மனுக்குலத்திற்கான திவ்விய செய்கைகள் அனைத்தையும் அவரது ஞானம், அன்பு மற்றும் வல்லமையானது நிர்வகிக்கின்றது என்பதையும் நாம் கற்றுக்கொள்வதினாலும், அவரை மதித்திடும் கட்டத்திற்கு/நிலைக்கு வந்தவர்களாய் இருப்போம்.

நம்முடைய ஓட்டத்திலுள்ள இந்த இரண்டாம் கால்-மையிலில், நாம் நம் இருதயங்களைக் கர்த்தர் முன் சோதித்தறிவதற்கும், அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்வதற்கும் கற்றுக்கொள்கின்றோம்; ஏனெனில் அவர் நல்லவராகவும், தொழுதுகொள்வதற்குப் பாத்திரமானவராகவும் இருக்கின்றார். இப்படியாக இப்பொழுது நாம் கடமை அன்பை மாத்திரம் பெற்றிராமல், சிருஷ்டிகரை மதித்துணர்ந்திடும் அன்பையும் பெற்றவர்களாய் இருக்கின்றோம் மற்றும் நம்முடைய ஓட்டத்தில் மூன்றாம் கால்-மையிலை நோக்கி முன்னேறுகின்றோம் . . . இக்கட்டத்தில் இதே குணலட்சணத்தினுடைய அம்சங்களை - இவைகள் சபையாகிய, கிறிஸ்துவினுடைய மணவாட்டிகளில் அபூரணமாய் வெளிப்பட்டபோதிலும் - அவ்வம்சங்களை மதித்துணரத் துவங்குகின்றோம். பூரண அன்பிற்கான இலக்கினை நோக்கின ஓட்டத்தில் இந்த ஒரு நிலைமையினை எட்டுதல் என்பதை "சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்" (1 பேதுரு 1:22) என்றும், "நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்" (1 யோவான் 3:16) என்றும் அப்போஸ்தலர் கூறுகின்றார். இந்த மூன்றாம் கால்-மைல் இலக்கின் முடிவை நாம் நெருங்குகையில், இந்த ஓட்டத்திற்குள் பிரவேசித்த போது, முதலில் நம்மால் பாராட்ட முடியாமல் காணப்பட்டதான அனுதாபத்தினைப் புதுச்சிருஷ்டிகளென நாம் நமது சகோதர சகோதரிகள் தங்கள் மாம்சத்தினுடைய பெலவீனங்களின் போராட்டங்களில் போராடுகையில், அவர்களிடத்தில் பாராட்டிடுவதற்குக் கற்றுக்கொள்ளுமளவுக்கு, சகோதர சகோதரிகளுக்கான நம் அன்பானது மிக ஆழமாகுகின்றது மற்றும் பலமடைகின்றது. இந்த அளவிலுள்ள அன்பினை அடைந்துள்ளவர்கள் அதுமுதற்கொண்டு மாம்சத்தின்படியும், அதன் பெலவீனங்களின்படியும் ஒருவரையொருவர் அறியாதிருக்கிறார்கள்; மாம்சத்தின்படி அறிவதை இவர்கள் புறந்தள்ளி, ஒருவரையொருவர் ஆவியின்படியும், இருதய நோக்கங்கள் மற்றும் நாட்டங்களின்படியும், அதாவது கர்த்தர் எதன் அடிப்படையில் நம்மைப் பார்க்கின்றாரோ அதுபோலவே அறிந்தவர்களாய் இருக்கின்றனர். அறிவிலும், அன்பிலுமுள்ள இவர்களது வளர்ச்சியானது - இந்த ஓட்டத்தினுடைய துவக்கக் காலங்களில் இவர்கள் அறியாதிருந்த அன்பினுடைய ஆழங்களையும், நீளங்களையும், அகலங்களையும் மற்றும் உயரங்களையும் உணர்ந்துகொள்வதற்கு இவர்களை இப்படியாக வழிநடத்தியது மற்றும் இதனால் மனுக்குலத்திற்கு நம்பிக்கை அளிக்கிறதும், உண்மையாய் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்களை விசேஷமாய்ப் பராமரிக்கிறதுமான மகா தெய்வீகத் திட்டத்தினை அதிகமதிகமாய்ப் புரிந்துகொள்வதற்கு உதவப்படுகின்றனர். இப்படியாக இந்த ஓட்டப்பந்தயத்தினுடைய நான்காம் கால்-மைல் இலக்கினிடத்திற்கு, அதாவது இறுதி கட்டத்திற்கு வருகின்றோம். தேவனிடத்திலான கடமை அன்பானது, திவ்விய குணலட்சணத்தின் மீதான அன்பாக வளர்ந்தது மற்றும் இது சகோதர சகோதரிகளை அன்புகூர வழிநடத்தினது; ஏனெனில் பிதாவின் அதே ஆவியை, தேவனுக்கொத்த சாயலை நாம் அவர்களில் கண்டோம்; இது நம் இருதயத்தினுடைய அன்பை ஆழமாக்கிற்று மற்றும் நம் இருதயங்களிலிருந்து சுயநலத்தையும், உலக கண்ணோட்டங்களையும் காலி பண்ணிற்று; மனுக்குலத்தார் யாவர் மீதும் - மிகவும் இழிவானவர்கள் மீது கூட நாம் அனுதாபம் கொள்ளத்தக்கதாக, நாம் ஒட்டுமொத்த மனுக்குலத்தின் மீதும் அத்தகையதொரு பரந்த பார்வையினைப் பெற்றுக்கொள்ள வழிநடத்தியது.

நாம் இழிவான விஷயங்கள் மீதோ அல்லது அசுத்தமான விஷயங்கள் மீதோ அனுதாபம் கொள்கிறதில்லை; மாறாக முன்னோர் வழி வந்த பெலவீனங்கள் வாயிலாகவும், சூழ்ந்து நிற்கும் சோதனைகள் வாயிலாகவுமே மனுக்குலமானது இந்த அசுசிகளுக்குள்ளாயிற்று என்று நாம் உணர்ந்துகொள்கின்றோம்; மற்றும் நம்முடைய சொந்த மாம்சத்திலுள்ள இந்தக் கீழ்த்தரமான போக்குகளை மேற்கொள்வதற்கு அவசியமாயிருக்கும் தெய்வீகக் கிருபை மற்றும் பலம் குறித்துக் கொஞ்சம் நாம் அறிய வந்திருப்பதின் காரணத்தினால், பயங்கரமான குழியிலிருந்தும், உளையான

சேற்றிலுமிருந்தும் தூக்கிவிடும் சர்வ வல்லவரின் கரத்தைக் குறித்தும், கர்த்தரைக் குறித்தும் அறியாமலிருக்கின்ற பாவப்பட்ட மனுக்குலத்தின் மீது நமக்கு அனுதாபம் வளர்ந்து வருகின்றதாய் இருக்கின்றது. இந்தப் பரந்தக் கண்ணோட்டமானது, ஆரம்பத்தில் மங்கலாய்க் காணப்பட்ட திவ்விய வசனங்களின் பாகங்களை நாம் புரிந்துகொள்ள உதவுகின்றதாய் இருக்கின்றது; ஏனெனில் தேவனுடைய அனுதாப பார்வையினுடைய கண்ணோட்டத்தில் உலகத்தையும், அதிலுள்ள பாவத்தையும் கண்ணோக்குவதற்கு நாம் இப்பொழுது கற்றுக்கொண்டு வருகின்றோம்; மேலும் மனுக்குலத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் இறுதியில் கிடைக்கப்போகும் பாவம் மற்றும் மரணத்திலிருந்துள்ள விடுதலைக்கான வழியினை ஏற்பாடுபண்ணியுள்ளதான தேவனுடைய அன்பை உணர்ந்திட நாம் ஆயத்தமாகுகின்றோம்; ஆகையால் ஓட்டத்தினுடைய இந்த இறுதி கால்-மையிலில், அன்பிற்கான கர்த்தருடைய உயர்வான விளக்கத்தை நிறைவேற்ற முடிகிறவர்களாக - அதாவது நம் சத்துருக்களுக்காகவும், நம்மை இழிவாய் நடத்துபவர்களுக்காகவும் மற்றும் நம்மைத் துன்புறுத்துபவர்களுக்காகவும் நாம் அன்பு பாராட்டுகிறவர்களாக இருக்கத் துவங்குவோம். இப்படிச் செய்ய முடிவதற்கான காரணம் . . . நம் இருதயங்களில் தேவ அன்பு பூரணப்படுவதினாலும், அறிவு பூரணப்படுவதினாலும், உலகத்தினுடைய சீரழிவிற்கும், குருட்டுத்தனத்திற்குமாய் அனுதாபம் கொள்வதினாலுமேயாகும். இப்படியாய் நம் அன்பிற்கான உச்சநிலையை - சத்துருக்களுக்கான அன்பை - பூரண அன்பின் இலக்கை - இந்த ஓட்டப்பந்தயத்தினுடைய முடிவை நாம் அடைகின்றோம்.

## சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்க வேண்டும்

மீட்பர் மீது நாம் விசுவாசம் வைத்து, பாவத்திலிருந்து திரும்பி, நம்மைத் தேவனுக்கு அர்ப்பணித்தது முதற்கொண்டு, நாம் கிறிஸ்துவினுடைய நீதியின் புண்ணியத்தினால் மூடப்படுகின்றோம் மற்றும் கொஞ்சம் கிறிஸ்துவின் மனதைப் பெற்றுக்கொண்டவர்களாய் இருந்தோம் - அதாவது தேவ சித்தத்தைச் செய்வதற்கான மனதையும், விருப்பத்தையும் நாம் பெற்றவர்களாய் இருந்தோம் என்று சொல்லலாம் மற்றும் அந்தப் பாடங்களைக் கற்றுக்கொள்ளத்தக்கதாக நாம் கிறிஸ்துவினுடைய பள்ளிக்கூடத்தில் பிரவேசித்தோம் அல்லது ஓட்டப்பந்தய உருவகத்தின்படி, பூரண அன்பின் நிலையாகிய, தேவனால் அங்கீகரிக்கப்படும் ஒரே இருதய நிலைமையை அடையத்தக்கதாக நாம் ஓடும்படிக்கு, இந்த ஓட்டப்பந்தயத்தில் பிரவேசித்தோம். பூரண அன்பு எனும் இந்த உச்ச நிலையை நம் இருதயங்களில் அடைதல் என்பது, அழியும் சரீரமானது எப்போதுமே அன்பினுடைய இந்த உயர் தரத்தைப் பூரணமாய் வெளிப்படுத்திடும் அளவுக்கு நாம் நடத்தையில் பூரணத்தை அடைந்துவிட்டோம் என்பதாகாது. இந்தப் பிரம்மாண்டமான மற்றும் விரும்பத்தகுந்த நிலைமையினை நாம் உயிர்த்தெழுதலில் நமக்கான புதிய சரீரங்களைப் பெறுவது வரையிலும் அடையப்பட முடியாதுதான்; ஆனாலும் பூரண அன்பினை நம் இருதயங்களில் நாம் அடையப்பெற்றது முதற்கொண்டு, அது நிச்சயமாய் நம் வாயின் வார்த்தைகள் மீதும், நம் இருதயங்களினுடைய கணிப்புகள் மீதும் மாபெரும் தாக்கத்தையும்/ஆதிக்கத்தையும், கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கும். அது நிச்சயமாய்க் கர்த்தரிடத்திலுமான நம் நடத்தையிலும், சகோதர சகோதரிகளிடத்திலுமான நம் நடத்தையிலும், சத்துருக்களிடத்திலுமான நம் நடத்தையிலும் நிச்சயமாய்த் தாக்கத்தை ஓரளவிற்குத் தெரிகிற விதத்தில் கொண்டிருக்கும் மற்றும் இதனால் நாமும் அதைத் தெரிந்துகொள்ளலாம் மற்றும் நம் நண்பர்களுக்கும், அயலார்களுக்கும்கூடத் தெரியும். சகோதர சகோதரிகளுக்கான அல்லது சத்துருக்களுக்கான அன்பினால் இருதயம் நிறைந்திருந்தும், தன் அன்பை செயல்படுத்துவதிலும், காண்பிப்பதிலும் தான் ஞானமாக அல்லது விவேகமாக நடந்துகொள்ளவில்லை

என்றும், நன்மை செய்ய நோக்கம்கொண்டிருந்திருக்க, தவறே செய்துள்ளான் என்றும் புதுச்சிருஷ்டியானவன் அடிக்கடி காணுவான். மாம்சத்தினுடைய இந்த அபூரணங்களானது, புதுச்சிருஷ்டியினுடைய தவறு என்று சாற்றப்படாது என்றும், இருதயங்களை ஆராய்ந்து அறிகிற கர்த்தரானவர் நம் பூரண அன்பினைக் கருத்தில் எடுத்துக்கொண்டு, மாம்சத்தினுடைய குறைவுகள் யாவற்றையும் மீட்பருடைய பலியினுடைய புண்ணியத்தினால் மூடிடுவார் என்றும் வேதவாக்கியங்களானது நமக்கு உறுதிப்படுத்துகின்றது.

பூரண அன்பின் இலக்கினை எட்டின பிற்பாடு, நாம் என்ன செய்ய வேண்டும்? இப்போதுதான் நம் அனுபவங்களானது நம் மீட்பருடைய அனுபவங்களோடு மிக நெருக்கமாய் ஒத்திருக்கும் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம். அன்பின் வெவ்வேறு படிநிலைகளைக் கற்றுக்கொள்வதற்கும், பூரண அன்பினை அடைவதற்கும் வேண்டி நமது மீட்பருக்கு - அனுபவங்களின், பயிற்சியின் மற்றும் அறிவுரைகளின் பள்ளிக்கூடத்தின் வழியாய்ச் செல்வதற்கு அவசியமில்லாதிருந்தது. இந்த ஓட்டத்தை ஓடுவதற்கும், பூரண அன்பினுடைய இந்த இலக்கினை அடைவதற்கும் அவருக்கு அவசியமில்லாதிருந்தது; ஏனெனில் பூரணரான அவர் எப்போதுமே இந்நிலையிலேயே காணப்பட்டார்; மேலும் இந்நிலையினை நாம் எட்டுகையில், நமது ஆண்டவர் தம் ஊழியத்தினுடைய துவக்கத்தில் காணப்பட்ட நிலைமையினை நம் இருதயங்களில் அடைந்தவர்களாக மாத்திரமே காணப்படுகின்றோம். அதுமுதற்கொண்டு அந்த ஒரு நிலையிலிருந்துள்ள நமது எதிர்கால அனுபவங்களானது அப்போஸ்தலனால் . . . "சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நில்லுங்கள்" என்று விவரிக்கப்பட்டுள்ளது - பயத்தைப் புறந்தள்ளுகிறதும், தேவனை அவரது உண்மையான குணலட்சணத்தில் மதிக்கிறதும், அன்புகூருகிறதும், அவரை ஆவியிலும், உண்மையிலும் தொழுதுகொள்ளுகிறதும், சகோதர சகோதரிகளை அன்புகூருகிறதும், இவர்களுக்காய் ஊழியம்புரிவதில் ஜீவனையே ஒப்புக்கொடுக்கிறதும், சத்துருக்களை அன்புகூருகிறதும், இவர்களுக்கு நன்மை செய்ய பிரியப்படுகிறதுமான பூரண அன்பின் இந்நிலையை எட்டின பிற்பாடு - அதிலேயே நில்லுங்கள். இந்நிலையினை ஒருமுறை அடைந்திருக்க, இதினின்று நம்மை விலகிப்போகச் செய்வதற்கு என்ன இருக்கின்றன? இக்கட்டத்தில் நம்மைப் பரீட்சிப்பதற்கும், இக்கொள்கைகளுக்கான நம் நேர்மையினை நிரூபிப்பதற்கும் வேண்டி பல்வேறு விதங்களில் பரீட்சைகளும், பிரச்சனைகளும் நம் மீது வரத் தேவன் அனுமதிக்கின்றார் என்று நாங்கள் பதிலளிக்கின்றோம் மற்றும் இக்காலத்தில் நாம் இவைகளைத் தெளிவாய்ப் பார்க்கின்றோம். இப்படியாகவே நம் மீட்பர் விஷயத்திலும் காணப்பட்டது; அவர் இந்த அன்பைப் பெற்றிருந்தவராகவும், சூழ்நிலையைக் கண்டவராகவும், பூரண அன்பின் இந்த ஆவியினால் கட்டுப்படுத்தப்பட்டவராகவும் இருந்தார் மற்றும் இது மரண பரியந்தம் தம் பலியினை அவர் ஏறெடுக்க அவரை வழிநடத்தினதாய் இருந்தது. இப்படியாகவே அவர் சாயலாகும்படி நாடிக்கொண்டிருக்கும் அனைவரின் விஷயத்திலாகும்; பூரண அன்பின் இலக்கில் நிலைநிற்பதற்காக அவர்களுடைய பிரயாசமானது பல்வேறு வகையான பலிகளாகவும், சுயத்தை வெறுத்தல்களாகவும் இருக்கும் மற்றும் இவை அனைத்தும் அவர்களைக் கர்த்தரிலும், அவரது சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுத்துகின்றதாய் இருக்கும் மற்றும் அவர்களை அன்புகூர்ந்தவர் வாயிலாய் அவர்களை ஜெயம்கொண்டவர்களாகவும், முற்றிலும் ஜெயம்கொண்டவர்களாகவும் நிரூபித்திடும். சுயாதீனத்திலும், கிருபையிலும், தேவனுக்கான அன்பிலும், நமது கர்த்தராகிய இயேசுவுக்கான அன்பிலும் உறுதியாய் இருப்போமாக; இவைகளை நம்முடன் தொடர்புக்குள் வரும் யாவரிடத்திலும் முன்மாதிரிப்படுத்திடுவோமாக.

R1079

## பூரண அன்பு

ஓ! தேவனே! இவ்வன்பினை நான் எப்படியேனும்
அறிய வேண்டுமே; இதுவே எந்தன் மன்றாட்டாகுமே.
பரிசினை வெல்வதற்கு, கவலை, கஷ்டம், வலியின் வழியே
நான் செல்ல வேண்டியிருப்பினும், எந்தன் சுயத்தைச்
சாகடித்தே போவேனே! ஆமென்! போவேனே!

உறுதியடையட்டும், வேரூன்றட்டும்! ஆம், இதுவே
எந்தன் மன்றாட்டாகுமே! ஓ! காத்திருக்கும்
எந்தன் ஆன்மா இளைப்பாறட்டுமே!
கோலினால் தொடப்படாத வரையிலும் இந்தப்
பெருமையுள்ள இருதயம்தான் கரையாதோ?
இரக்கத்தோடு இருதயத்தைக் கையாளுமே
அது என்னைப் பூரணப்படுத்திடுமே!

உம்முன் தாழ்மையாய்ப் பணிகின்றேனே உம்
வேலையைத் துவங்கிச் செய்ய மன்றாடுகின்றேனே.
இதுவே எந்தன் ஆசையே. ஓ! தேவனே
இந்தப் பூரணத்தையே நான் அடைய வேண்டுமே;
மகா தூய்மைப்படுத்துபவர் என்னில் வாசம் பண்ண வேண்டுமே!

- E. N.

R4694

## பூரண அன்பு எனும் இலக்கு

ஓ! தேவனே பூரண அன்பின் இலக்கொன்றை
முன்வைத்ததற்கே உம்மை ஸ்தோத்தரிக்கிறோமே.
அதை அடையாவிட்டால், நாங்கள் பரத்தின்
அங்கீகரிப்பைப் பெற முடியாதே.

அந்த இலக்கை நோக்கியே ஓடுகையில்,
எங்களின் குணலட்சணம் கட்டப்படுதே,
நீர் கிறிஸ்துவினால், விடுவிக்கப்பட்டோர்
யாவரிடமும் இதையே எதிர்பார்க்கின்றீரே.

“இடுக்கமான வழிதனிலே” கர்த்தரைப் பின்தொடர
நாங்கள் எங்களை அர்ப்பணித்தோமே;
ஆகவே நாடுகின்றோமே ஜெயங்கொள்ளவே;
நாளுக்குநாள் வளர நாடுகின்றோமே.

"பூரண அன்பா" - அப்படி என்றால் என்ன?
அதை நாங்கள் அடைய வேண்டுமோ?
எங்கள் தேவனையும், சகோதரனையும் நிஜமாக,
பூரணமாக, உண்மையாக அன்புகூர வேண்டுமோ?

நம் பிதாவை முதலாவதாயும், பிரதானமாயும்
உண்மையில் அன்புகூர்ந்திட வேண்டுமே;
நம் "மூத்த சகோதரனில்" உண்மை இளைப்பாறுதலை
அடைவதால், அவரையும் அன்புகூர்ந்திட வேண்டுமே!

பின்னர் நம் சத்துருக்களையும் அன்புகூர்ந்திட வேண்டுமே;
அவர்களுக்கு நன்மைச் செய்ய நாடிட வேண்டுமே!
நம்மால் முடிந்தவைகளை அவர்களுக்குச் செய்யவே
எப்போதும் நாம் நாடிட வேண்டுமே.

ஆ! ஆம்! இந்த நிஜமான பூரண அன்பை
நாம் உண்மையில் அடைய வேண்டுமே;
அந்தோ பரிதாபம்! எத்தனை தரம் தவறுகின்றோம்!
சறுக்குதல் நமக்கு வலிதருகின்றதுவே.

தூய இவ்வன்பு பாவச்சரீரத்திலல்லோ நிலவுகின்றது!
ஆனாலும் அவர் நாமத்திற்குத் துதி உண்டாவதாகவே;
நமக்கான பரிந்துபேசுபவர் நமக்காய் அன்பாய்ப்
பரிந்து பேசுகிறார் அல்லவோ!

ஆகவே நாம் அவர் சாயலில் விழிக்கும் வரை -
அவர் போல் இருப்பதற்கு விழிக்கும் வரைக்கும்
நம் பூரண சித்தமும், பூரண அன்பும்
முடமானதாகவே இருக்கும் அல்லவோ! -F. A. R.

R2711

## கிறிஸ்தவனின் இலக்கு

பூரண அன்பு - இதுவே பரிசிற்கான இலக்காம்;
ஓ! கர்த்தாவே இதை எங்ஙனம் நான் அடைவது?
நீர் இடுக்கமான வழிதனில் நடந்துள்ளீரென- நாங்கள்
உம் விலையேறப்பெற்ற வார்த்தைகளில் அறிந்தோமே.
நாங்களும் அவ்வழிதனில் சந்தோஷத்தோடே எங்கள்
அன்பு தூய்மையானது என எண்ணியே
ஊக்கமாய்ப் பிரயாணிக்க துவங்கினோமே;

ஆனால் பூரணத்தை எதிர்ப்பார்க்கிற பிதாவே, பிதாவே
எங்களை அதிகமதிகமாய்ச் சுத்திகரித்தருளுமே.

வருத்தங்கள் மற்றும் கண்ணீர்கள்
அந்தக் கசப்பான வருடங்களைத் திரும்பிப்பார்க்க வைத்ததுவே.
எங்கள் இருதயங்கள் ஆழ்ந்த வேதனையோடே
"ஐயோ! நிர்ப்பந்தமான மனுஷன் நான்!" என்றதே;
எங்களிடத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை என்று அறிவோம்;
ஆனாலும் பிரியமானவர்களுக்குள்ளேயே நாம் நிலைநிற்கின்றோம்;
தம் கரங்களில் நம்மைத் தாங்கிப்பிடித்திருக்கிற
அவருக்கு மகிமையும், கனமும், துதியும் உண்டாவதாக!

பூரண அன்பா! பூரண அன்பா! ஓ! கர்த்தாவே
பாத்திரமற்றவனும், இயலாதவனுமான நான்
உம்மை நெருங்கிட முடியுமென முடிவில்லா
இரக்கமுள்ள நீர் கண்டுள்ளீரா? கண்டுள்ளீரா?
பூரண அன்பா! பூரண அன்பா! ஓ! கர்த்தாவே
பாவம் என்னில் பெருகுகையில் உம் கிருபை அதிகமாய்
பெருகிடும் அளவு நீர் என்னை மிகவும் அன்புகூர்ந்ததும்,
என்னைப் பராமரித்ததும் மெய் அல்லவோ!

பூரண அன்பெனும் - பரிசிற்கான இலக்குதனை
நீர் வானங்களுக்கு மேலாய் உயர வைத்துள்ளீரே!
ஓ! ஆம் என் அருமை கர்த்தாவே பொறுமையுடனே
ஓடிடுவோமே, உம்மீது மாத்திரமே கண்களைப் பதித்தே;
ஓடி வந்த பாதைதனையும், போராடிட்ட போர்களையும்,
அடைந்த வெற்றிகளையும் திரும்பிப்பார்க்காமலே ஓடுவோமே;
பின்னானவைகளை மறந்து, பரிசை நோக்கித் தொடருவோமே.

பூரண அன்புதனை - எங்கள் பாவப்பட்ட ஜீவனை மீட்டிட
தம் ஜீவனை தந்த அவரில் காண்கின்றோமே;
இதனாலேயே நெருங்குவோம் நம் பிதாவின் புத்திரர்களென!
இயேசுவில் அச்சங்கொள்ள ஏதுமில்லையே;
அவர் மகிமையின் முகப்பிரகாசம்தனில்
ஓட்டப்பந்தய சாலை முடிவுவரைத் தொடர்ந்து ஓடுவோமே;
நிலைத்து நிற்போமே அவர் நீதியில்;
அவர் மாத்திரமே நம் பூரண அங்கியாய் இருக்கின்றாரே. - திருமதி C. A. OWEN.

**ஆமென்!!**

"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்."

- பிலிப்பியர் 3:14

".....சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும்...."

- எபேசியர் 6:13

